இளங்குமரனார்

# தமிழ்வளம்

37



சிவ வாக்கியர்
குதம்பைச் சித்தர்
சிவஞானபோதம்

இளங்குமரனார்

# தமிழ்வளம்

37

1. சிவ வாக்கியர்

2. குதம்பைச் சித்தர்

3. சிவஞானபோதம்

ஆசிரியர் :

முது முனைவர் **இரா. இளங்குமரன்**

**வளவன் பதிப்பகம்**

சென்னை - 600 017.

## நூற் குறிப்பு

| | |
|---|---|
| நூற்பெயர் | : **இளங்குமரனார் - தமிழ்வளம் 37** |
| ஆசிரியர் | : இரா. இளங்குமரன் |
| பதிப்பாளர் | : கோ. இளவழகன் |
| பதிப்பு | : 2014 |
| தாள் | : 16 கி வெள்ளைத்தாள் |
| அளவு | : 1/8 தெம்மி |
| எழுத்து | : 11 புள்ளி |
| பக்கம் | : 16 + 256 = 272 |
| நூல் கட்டமைப்பு | : இயல்பு (சாதாரணம்) |
| விலை | : உருபா. **255/-** |
| படிகள் | : 1000 |
| நூலாக்கம் | : செவன்த்சென்ஸ் கம்யூனிகேசன்ஸ் |
| அட்டை ஓவியம் | : ஓவியர் மருது |
| அட்டை வடிவமைப்பு | : வ. மலர் |
| அச்சிட்டோர் | : ஸ்ரீ வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்சு இராயப்பேட்டை, சென்னை - 14. |

வெளியீடு

**வளவன் பதிப்பகம்**

எண் : 2 சிங்கார வேலர் தெரு,
தியாகராயர் நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24339030

# பதிப்புரை

*இலக்கிய இலக்கணச் செம்மல் முதுமுனைவர்* ***அய்யா இளங்குமரனார்*** *அவர்கள் எழுபத்தைந்து ஆண்டு நிறைவு எய்தியதைப் போற்றும் வகையில் தமிழ் இளையர்க்கென்று அவர் எழுதிய நூல்களையெல்லாம் சேர்த்து எழுபத்தைந்து நூல்கள் கடந்த 2005 - ஆம் ஆண்டு திருச்சித் திருநகரில் வெளியிட்டு எம் பதிப்புப் பணிக்குப் பெருமை சேர்த்துக் கொண்டோம்.*

*இப்பெருந்தமிழ் அறிஞர் எழுதிய படைப்புகளை 20 தொகுதிகளாக (1 முதல் 20 வரை) அவரின் 81-ஆம் ஆண்டு நிறைவையொட்டி கடந்த 2009 ஆம் ஆண்டில் வெளியிட்டுப் பெருமை சேர்த்தோம். பெருமைக்குப் பெருமை சேர்க்கும் வகையில் அவர் தம் அறிவு விளைச்சலை* ***21 முதல் 40 வரை*** *20 தொகுதிகளை 83-ஆம் ஆண்டு (2012) நிறைவையொட்டி தமிழுலகம் பயன்கொண்டு செழிக்கும் வகையில் வெளியிடுகிறோம். அவர் தம் அருந்தமிழ்ப் பணியை வணங்கி மகிழ்கிறோம்.*

*இப்பெருமகன் வாழும் காலத்திலேயே இவர் எழுதிய எழுத்துக்கள், பேசிய பேச்சுக்கள் அனைத்தையும் தொகுத்து வெளியிடுவது என்பது தமிழ்நூல் பதிப்பு வரலாற்றில் போற்றி மகிழ்வதற்கான, அனைவரும் பின்பற்றுவதற்கான அரும்பெரும் தமிழ்ப் பணியாகும்.*

*இவர் தந்நலம் கருதாமல் தமிழ் நலம் காத்து வருபவர். தம்மைமுன்னிறுத்தாது தமிழை முன்னிறுத்தும் பெருந்தமிழறிஞர். தமக்கென வாழாது தமிழ்க்கென வாழ்பவர். ஒருநாளின் முழுப் பொழுதும் தமிழாகவே வாழும் தமிழ்ப் போராளி. சங்கச் சான்றோர் வரிசையில் வைத்து எண்ணத்தக்க அருந்தமிழறிஞர். தமிழ் இலக்கண - இலக்கிய மரபைக் காத்து வரும் மரபு வழி அறிஞர். ஆரவாரம் மிகுந்த இன்றைய சூழ்நிலையில் படாடோபம் இன்றியும், விளம்பரப் போலிமை இன்றியும், தமிழ் மொழியின் ஆழ*

*அகலங்களை அகழ்ந்து காட்டும் தொல்தமிழறிஞர். மொழிநூல் கதிரவன் பாவாணரின் வேர்ச்சொல் ஆய்வில் அவர் காட்டிய வழியில் தம் தமிழாய்வைத் தொடர்பவர்.*

*தமிழாய்வுக் களத்தில் தம் ஆய்வுப்பயணத்தைத் தொடங்கும் தமிழ் ஆய்வாளர்களுக்கும், தமிழ் உணர்வாளர்களுக்கும், மாணவச் செல்வங்களுக்கும் தங்கத் தட்டில் வைத்துப் பொற் குவியலாகத் தந்துள்ளோம். எம் தமிழ் நூல் பதிப்புப் பயணத்தில், தமிழ்த்தென்றல் திரு.வி.க.வையும், தனித்தமிழியக்கத் தந்தை மறைமலையடிகளையும், மொழிநூல் கதிரவன் பாவாணரையும், தமிழ் மொழிக்காவலர் இலக்குவனாரையும் வழிகாட்டியாகக் கொண்டு தமிழ்நூல் பரப்பின் எல்லையைக் கண்டு காட்டும் சங்கத்தமிழ்ச் சான்றோராக விளங்கும்* ***ஐயா இளங்குமரனார்*** *வாழும் காலத்திலேயே அவர் எழுதிய நூல்களை வெளியிடுவதை யாம் பெற்ற பேறாகக் கருதுகிறோம். தமிழர் இல்லம்தோறும் இருக்கத்தக்க இவ்வருந்தமிழ்ச் செல்வங்களைத் தமிழ் இளம் தலைமுறைக்கு வைப்பாகக் கொடுத்துள்ளோம்.*

**“ சலுகை போனால் போகட்டும் - என்**
**அலுவல் போனால் போகட்டும்**
**தலைமுறை ஒருகோடி கண்ட - என்**
**தமிழ் விடுதலை ஆகட்டும்.”**

*பாவேந்தர் வரிகளை நினைவில் கொள்வோம்.*

***- பதிப்பாளர்.***

# பெறும் பேறு

***வளம்*** *எங்கே இருக்கிறது?*

*வளம் எங்கேயும் இருக்கிறது! அஃது இல்லாத இடமே இல்லை!*

*வளம் எங்கும் இருப்பதை எப்படி அறியலாம்?*

*வளத்தைத் தேடும்* ***உளம்*** *இருந்தால், வளம் எங்கேயும் இருப்பதை அறியலாம்?*

*வளத்தின் அளவு என்ன?*

***வளத்தின் அளவும் உளத்தின் அளவேயாம்!***

*உளத்தில் வளம் இல்லையானால், உள்ள வளமும் உடையவனுக்கும் உதவாது ஊருக்கும் உலகுக்கும் உதவாது!*

*வளத்தைத் தரும் உளத்தை ஒருவர் வாய்க்கப் பெற்றால் போதும்!*

**அவ்வளம் குன்றியளவானால் என்ன?**

**குன்றத்தனைய வளமானால் என்ன?**

**தினை அளவானால் என்ன?**

**பனை அளவானால் என்ன?**

**வளம் வளமே!**

*தேனீ வளம்? தினைத்தனை அளவுப் பூவில், தேனீ கொள்ளும் தேன் எவ்வளவு இருக்கும்?*

*கோத்தும்பி கொணரும் தேன் வளம் எவ்வளவு இருக்கும்?*

*கோத்தும்பி கொணர்வதே வளம், தேனீ கொணர்வது வளமில்லை என எவராவது கூறுவாரா?*

*வளம் வளமே! அவரவர் உழைப்பு, அறிவுத்திறம், உண்மையறிவு, பட்டறிவு, கால-இட-சூழல் கொடை- ஆகியவற்றைப் பொறுத்தது அது.*

**பொருள் மட்டுமா வளம்?**

**புலமை வளமில்லையா?**

*ஊக்குதல் உதவுதல் உறுதுணையாதல் ஒன்றுதல் ஆயவை - வளமில்லையா?*

*எல்லாம் வளமே! "மல்லல் வளனே" என்பது தொல்காப்பியம்.* ***(உரி.7)*** *உடலாலும் வளம்; உழைப்பாலும் வளம்; உணர்வாலும் வளம்; உரையாலும் வளம்; "**வளம் பட** வாழ" வேண்டாதார் எவர்? **வளம் பெற** வேண்டாதார் எவர்?*

**"வளந்தலை மயங்கிய வஞ்சி முற்றம்"**

*என்பது சிலம்பு! வளத்தின் அளவு, "**அளந்து கடை அறியாவளம்**" என்பது **(25:33-34)***

**"நாடென்ப நாடா வளத்தன"**

*என்பது நாட்டின் இலக்கணம்! **எளிமை, இனிமை, இறைமை, நிறைமை** என மக்கள் வாழ்ந்த நாள் இலக்கணம்! இன்றோ,*

**நானில வளங்களையும் நாடா நாடில்லை!**

**எந்த நாடு ஏற்றுமதி செய்யவில்லை?**

**எந்த நாடு இறக்குமதி செய்யவில்லை?**

*பாலைவளத்தை நாடிச்சோலை நிற்றல் வெளிப்படை என்றால், சொல்வானேன்?*

*நாடாவளத்தில் குப்பைக்கீரை சேராதா? குறுந்தூறு சேராதா?*

***வளத்தை வழங்குதல் தான் பிறவிக் கடனே யன்றி அளவிடும் பொறுப்பு வழங்குவார்க்கு இல்லை! பெறுவார் பொறுப்பு.*** *ஆனால்,*

*வளம் பெற்றுப் பெற்றுப் பெருகி வாழ்ந்தவர், அவ்வளத்தைத் தமக்கு வழங்கிய மண்ணுக்கு மறித்து வழங்கிப் 'பெற்ற கடனைத் தீர்க்காமல் போனால்' கடன்காரராகவே போவது மட்டுமன்றி, பிறவி அடையாளமே இல்லாமலும் போய்விடுவார்!*

*பெற்றவர் வழியாகக் கருவிலே பெற்ற திரு என்ன! கற்ற கல்வியால் பெற்ற வளம் என்ன! பட்டறிவால் - ஆழ்மன ஆய்வால் - தேடிக் கொண்ட வளங்கள் என்ன என்ன!* ***பிஞ்சுப் பருவ முதல் பெரும் பிரிவு வரை பெற்றவற்றை, அந்நிலைப்பருவத்தர்க்குப் பருவமழை போலப் பலப்பல வகையாலும் வழங்குதல் வாழ்வார் வாழ்வுச் சீர்மையாதல் வேண்டும்!***

*புரிவு தெரிந்த நாள் முதல் புலமை பெருகிவரும் அளவுக்குத் தகத்-தகத் தொல்காப்பியர் ஆணை வழி,*

> **"ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்**
> **ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்"**

*என்னும்* ***நால்நெறிக் கடன்களையும் நிறைவேற்றல் வேண்டும்! கூற்றையும் ஆடல் கொள்ளும் கொள்கை இதுவென உணர்வார் ஓயார், ஒழியார்; சாயார்; சரிந்தும் போகார்!***

*என் இளந்தைப் பருவமே, ஆசிரியப் பருவமாகிவிட்டது. அக்காலச் சூழல் அது.*

*பிறந்தநாள் :* ***30.01.1930***

*ஆசிரியப் பணி ஏற்ற நாள்:* ***08.04.1946***

*கால் சட்டை போடும் மாணவப்பருவத்தில் வேட்டி கட்டும் ஆசிரியனாகி விட்டேன்! "மூன்றாண்டு ஆசிரியப் பணி செய்தால் போதும்! புலவர் தேர்வைத் தனியாக எழுதலாம்" என்னும் வாய்ப்பு! அவ்வாய்ப்பைச் சிக்கெனப் பற்றியமையால்* ***1949, 1950, 1951*** *ஆகிய மூவாண்டுகளில் தொடர்ந்து நுழைவுத் தேர்வு, புலவர் இடைநிலைத் தேர்வு, புலவர் நிறை நிலைத் தேர்வு எனச் சிறப்புற வெற்றி வாய்ப்பு எய்தியது. உயர்பள்ளி, மேல்பள்ளி என்பவற்றிலும் பல்கலைக் கழகத் தமிழியல் ஆய்வுக் களத்திலுமாக ஏறத்தாழ* ***43***

ஆண்டுகள் தமிழ்வாழ்வாக வாழ வாய்த்தது. தமிழ்த்தொண்டும், தமிழ்நெறித் தொண்டும் என்றும் விடுதல் அறியா விருப்பொடு செய்து கொண்டிருத்தலே இயற்கையோடு இயைந்த வாழ்வாகி விட்டது!

புலமைத் தேர்வுக்குரிய பாடத்தளவிலோ, நூல்களின் அளவிலோ என் கல்வி நின்றது இல்லை! தொல்காப்பியம் முதல் இற்றைநாள் நூல்கள் வரை இயன்ற அளவால் தமிழ்வளம் பெறுதலை நோன்பாகக் கொண்டு கற்கும் பேறுபெற்றேன். பேராசிரியர் சி.இலக்குவனார், மொழிஞாயிறு பாவாணர், நாவலர் ச.சோ.பாரதியார், வரலாற்றுச் செம்மல் அரசமாணிக்கனார், பைந்தமிழ்ப் பாவலர் அ.கி.பரந்தாமனார், உரைவேந்தர் ஔவை சு.துரைசாமியார், மூதறிஞர் செம்மல் வ.சுப.மாணிக்கனார், தாமரைச் செல்வர் வ.சுப்பையனார், ஈரோடு வேலா, குழித்தலை மீ.சு. இளமுருகு பொற்செல்வி, பதிப்புச் செம்மல் மெய்யப்பனார், பாரதி சோ.சாமிநாதனார், தமிழ்ப்போராளி இளவழகனார், தமிழ் மீட்புக்குத் தலைநின்ற ஆனாரூனா, பாவாணர் அறக்கட்டளையர் கோவலங்கண்ணனார், மலையக மாரியப்பனார் இன்னர் நெருக்கத் தொடர்புகள் வாய்த்தன.

இளந்தைப் பருவத்திலேயே பாவேந்தர், ஓகி சுத்தானந்த பாரதியார், கவிமணியார், கவிராச பண்டித செகவீர பாண்டியனார், அறிஞர் மு.வ. ஆயோர் அரிய காட்சியும் சின்முறைச் சந்திப்புகளும் என்னுள் பசுமை நல்கின.

தமிழ்ப் பொழிவுகளும், ஆய்வுக் கட்டுரைகளும், குடும்பச் சடங்குகளும் என் மீட்டெடுப்புப் பணிகள் ஆயின!

எம் குடும்பக் கடமைகள் எம் பணியையோ தொண்டையோ கவர்ந்து கொள்ளா வகையில் இனிய துணையும் மக்களும் அமைந்தனர்.

அதனால், காலமெல்லாம் கற்கவும் கற்பிக்கவும் நூல் படைக்கவும் வாய்த்த வாய்ப்புப் பெரிதாயிற்று.

“அன்பும் அறிவும்” என்னும் நூல் தொடங்கிச் ‘செந்தமிழ்ச் சொற்பொருள் களஞ்சியம்’ எனத் தொடர்ந்து ஏறத்தாழ 400 நூல்கள் இயற்றவும் வெளியிடவும் வாய்த்தன.

குழந்தை நூல்கள், நூலக நூல்கள், ஆய்வு நூல்கள், அகராதிகள், உரைநூல்கள், பதிப்பு நூல்கள், பா நூல்கள், காப்பியங்கள், கதைகள், கட்டுரைகள், தொகுப்புகள் இலக்கண நூல்கள் எனப் பலப்பல திறத்தனவாய்ப் பால் வாய்ப் பருவத்தர் முதல் பல்கலைக் கழக ஆய்வர் வரைக்கும் பயன் கொள்ளும் வகையில் அவை அமைந்தன.

எதை எடுத்தாலும் பாடலாக்கல் ஒருகாலம்; கதையும் நாடகமும் ஆக்கல் ஒருகாலம்; பதிப்புப் பணியே ஒரு காலம்; உரை காணலே ஒரு காலம்; படிப்படியே சொல்லாய்வே வாழ்வென ஆகிவிட்ட காலம் என அமைந்தன.

இக் கொடைகள் வழங்கியவை பாரதி பதிப்பகம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், மணி பதிப்பகம், முருகன் பதிப்பகம், வேலா பதிப்பகம், மணிவாசகர் பதிப்பகம், வேமன் பதிப்பகம், மூவேந்தர் பதிப்பகம், பாவாணர் அறக்கட்டளை, சாகித்திய அகாதெமி, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தமிழ்மண் பதிப்பகம், அமிழ்தம் பதிப்பகம், வளவன் பதிப்பகம், மாணவர் பதிப்பகம், அமிழ்தமணி பதிப்பகம், திருவள்ளுவர் தவச்சாலை அறக்கட்டளை வெளியீடுகள் என விரிந்தன.

நூலுருப் பெற்று அச்சக வழியும் பதிப்பக வழியும் காணப்பெறாமலும் எதிர்பாரா மறைவுகளாலும் ஏறத்தாழச் சிறிதும் பெரிதுமாய் ஒழிந்தவை இருபதுக்கு மேல் ஆயின.

செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பாவை, குறள் நெறி, குறளியம், மலர்கள், ஆய்வரங்கங்கள் எனக் கட்டுரைகள் பெருகின. அச்சுக்கு வராதவையும் ஆகின! இவை என்றும் ஒருமுகமாய்க் கிடைக்க வாய்ப்பில்லை.

எம் நூல்கள் எம்மிடமே முப்பதுக்குமேல் இல்லாமல் மறைந்தன. எழுதியன எல்லாவற்றையும் ஒருமுகமாகப் பெறப் பலர் அவாவினார். தவத்திரு **ஆத்துமானந்த அடிகளார்** (ஆருயிர்க்கு அன்பர்) **அதில் தலைப்பட்டு நின்றார். ஆயர் ஆண்டகை சூசைமாணிக்கனார் சுடரேற்றினார்.** பாரதிதாசன் பல்கலைக்கழகம் மதிப்புறு முதுமுனைவர் பட்டம் வழங்கியது.

அதற்கு மகிழ்வுற்ற வகையால் பாவாணர் தமிழியக்கம் முதலாம் அமைப்புகளும், முனைவர் **திருமாறனார் முதலாம்** ஆர்வலர்களும் விழா ஒன்று எடுத்தனர். அவ்விழாத் தலைமையைத் திருத்தகு துணைவேந்தர் **பொன்னவைக்கோ** ஏற்றார். தவத்திரு ஆத்துமானந்த அடிகளார் வாழ்த்துரைத்தார். பொறிஞர் தமிழறிஞர் **பாலகங்காதரனார்** என் நூல்கள் சிலவற்றை ஒளிப்படியாக்கி உயரட்டைக் கட்டில் வழங்கி அவற்றை முழுதுறப் பெற மீளச்சிடுதல் வேண்டும் என்றார். தமிழாக்கப் பதிப்பே வாழ்வாக ஒன்றிய இளவழகனார் முழுதுற அச்சிட ஒப்பினார். அடிகளார் வெளியீட்டுப் பொறுப்பு ஏற்பதாகக் கூறினார். கிடைக்கும் நூல்கள் தவிர்த்துப் பிறவற்றையெல்லாம் அச்சிடும் திட்டம் கொண்டு ஏறத்தாழ இருபது, இருபது தொகுதிகளாக வெளியிடுவது என உறுதிப்படுத்தப் பட்டது. அவ்வகையில் வாய்ப்பதே, “**இளங்குமரனார் தமிழ்வளம்**” என்னும் இத் தொகை நூல்களாம்! இத் தொகையில் விடுபடும் நூல்கள் கட்டுரைகள், பாடல்கள் பலபல; தொகுக்க வாய்க்கா வகையில் கிட்டாவகையில் மறப்பு வகையில் விடுபாடுடையவை உள. எனினும் தொண்ணூறு விழுக்காடேனும் ஒரு முகமாகப் பெறும் பேறு வாய்க்கின்றது என்பது மகிழ்வூட்டுவதாம்!

மக்கள் வாழ்வு வளர்நிலையது! நூல்களும் வளர் நிலையவை! ஆதலால் ஒருவாழ்வுக் கொடை மட்டுமன்று ஈது; ஒருவாழ்வு பெறத் தக்க பல்பருவக் கொடையுமாம் எனல் சாலும்! இதன் அடிப்படையாம் எத்தேடலிலும் பெரிதும் தோயாமல் தமிழ்வளத் தேடலிலேயே காலமெல்லாம் சோம்பலைச் சுட்டெரித்து, இடுக்கணுக்கு இடுக்கண் ஆக்கி வாழ்ந்த வாழ்வுக் கொடையாம் இது!

இவ்வளத்தை முழுதுற எண்ணின் ஒன்று உறுதியாக வெளிப்படும். “நலவாழ்வு நல்வாழ்வு கருதாத - இயற்கை இறைமைப் பொதுமை கருதாத - எப்படைப்பும் எம்படைப்பில் இரா” என்பதேயாம். இவற்றைப் பயில்வார் பெறும் பேறும் அதுவாக அமையின் அப்பேறே யாம் **பெறும் பேறாம்.**

இவ்வளம் வெளிவர விரும்பினோர் உழைத்தோர் உதவினோர் ஆய அனைவர்க்கும் நன்றிக் கடப்பாடுடையேன்! வாழிய நலனே! வாழிய நிலனே!

"நெல்லுக்கு உமியுண்டு"

"நீருக்கு நுரையுண்டு"

"புல்லிதழ் பூவுக்கும் உண்டு"

"குறைகளைந்து நிறை பெய்து"

"கற்றல், கற்போர் கடனெனல் முந்தையர் முறை"

இன்ப அன்புடன்,

**இரா. இளங்குமரன்**

# உள்ளடக்கம்


பதிப்புரை ........ iii

பெறும் பேறு ........ vi


## நூல்

### தமிழ் மலை


1. குலிசை ........ 5
2. பள்ளி எழுச்சி ........ 10
3. தமிழ்த் தேனீ ........ 14
4. மணமலர் ........ 20
5. பூஞ்சோலை ........ 25
6. தென்றல் உலா ........ 40
7. தேனருவி ........ 70
8. உதிர்மலர் ........ 77
9. புகழ் மாலை ........ 81


### மறைமலையடிகள் ஆராய்ச்சித் திறன்


1. மறைமலையடிகள் ........ 101
2. ஆராய்ச்சி ........ 105
3. அடிகளார் பயின்ற நூல்களும் பயின்ற முறையும் ........ 108
4. அடிகளார் காட்டும் ஆய்வியல் நெறிமுறைகள் ........ 119
5. அடிகளார் இயற்றிய நூல்கள் ........ 126

6. அடிகளார் இலக்கிய ஆராய்ச்சித் திறன் .................................... 136

7. அடிகளார் சமய ஆராய்ச்சித் திறன் ................................................ 148

8. அடிகளார் அறிவியல் ஆராய்ச்சித் திறன் ....................................... 166

9. அடிகளார் சமய நோக்கு ................................................................ 179

# அன்பும் அறிவும்

# முன்னுரை

*சித்தர் பாடல்கள் சீர்திருத்தப் பெட்டகம்; பகுத்தறிவுப் பாசறை; உள்ளொளி உறையுள்; உயிருய்க்கும் ஒளிநெறி!*

*சித்தருள் சித்தர், சிவவாக்கியர்! அவர், சித்தர் உலகின் நக்கீரர்! 'குற்றம் குற்றமே' என்பதைக் குலையாமல் - குறையாமல் - உரைக்கும் கொள்கை வீரர்! "ஊனுடம்பு ஆலயத்தை" உள்ளவாறு உணர்ந்து, உலகுய்ய உணர்த்தும் உரவோர்! தொண்டின் உறைப்பிலே துடித்தெழும்பிய தூண்டாத் தொண்டர் பெருமகனார்! 'காற்றின் கணக்கறிந்து கூற்றை உதைக்கும்" நெறியறிந்த நேராளர்! அவரைப்பற்றிய மேலோட்ட ஆய்வு, முன்னை ஐம்பது பக்கங்கள்! அவர்தம் உள்ளோட்ட வழிவந்த பிழிவாம் பாடல்கள், பின்னை எழுபத்தாறு பக்கங்கள்!*

*சித்தர் நெறியை முற்றாக ஆய்ந்து பெருநூல் ஒன்று ஆக்குதல் வேண்டும். அது, இக்காலத்துச் சமயத்துள் புகுந்துள்ள புன்னோய்களுக்கு நன்மருந்தாகத் திகழும்!*

*சித்தரை எண்ணுதற்கு நிலைக்களம் வகுத்துத் தந்தவர்கள் சிங்கம்புணரி, சித்தர் வழிபாட்டுத் திருக்கூட்டத்தார். நூலுருத் தந்து தமிழுலா அருளியவர்கள் கழக ஆட்சியாளர் திரு. இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்; அவர்கள். இவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.*

*சித்தர் நெறி செந்நெறி! செந்தண்மை நெறி! பின்னைப் புன்மைகளைக் களைந்து முன்னைப் பெருமையை முடித்து வைக்க வல்லது! அந்நெறி தழைத்து உலகம் உய்வதாக!*

***தமிழ்ச் செல்வம்,***
***பாவாணர் ஆராய்ச்சி நூலகம்***
***திருநகர், மதுரை - 6.***

***தமிழ்த் தொண்டன்,***
***இரா. இளங்குமரன்***
***7-10-1984***

# சித்தர் (பொது நிலை)

*சித்தர் என்பவர் சித்தத்தை வென்றவர் என்பர். சித்து வேலை செய்தலில் தேர்ந்தவர் என்றும் கூறுவர்.*

*எந்தக் கட்டும் இல்லாமல், எதைப்பற்றியும் எவரைப் பற்றியும் எள்ளவும் கவலைப்படாமல் அலைபவனைச் "சித்தன் போக்கு சிவன் போக்கு" எனத் திரிகிறான் என்பது வழக்கு. இப்பழமொழி, சித்தராவார் எவர் என்பதை வெளிப்பட விளக்கும். இதே கருத்தில் சிவன், சடையாண்டி, பேயாண்டி, பூச்சாண்டி, மலையாண்டி, முனியாண்டி, கோவணாண்டி என்றெல்லாம் கூறப்படுதலை ஒப்பிட்டுச் சித்தர் தோற்றம் பற்றியும் ஓரளவு அறியலாம்.*

*"சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன்" எனவரும் திருவாசகம் சித்தர் தன்மை இன்னதெனத் தெரிவிக்கும். இதனைச், "சித்தம் சிவமாய் மலமூன்றும் செற்றவர், சுத்தம் சிவமாவர் தோயார் மலபந்தம், கத்தும் சிலுகும் கலகமும் கைகாணார்" என விளக்குவார் திருமூலர்.*

*மேலும், சித்தர் என்பார் இவர்; இவர் தன்மைகள் இவை என்பதை ஒரு பாடலில் விளக்குகிறார் திருமூலர்.*

"சித்தர் சிவத்தைக் கண்டவர்; சீருடன்
சுத்தாசுத் தத்துடன் தோய்ந்தும் தோயாதவர்;
முத்தர்அம் முத்திக்கு மூலத்தர் மூலத்துச்
சத்தர் சதாசிவத் தன்மையர் தாமன்றோ"

*என்பது அது.*

*அடுத்தவேளை உணவைப் பற்றி அக்கறைப்படுவது சித்தர் தன்மை இல்லை! அந்த வேளை உணவுக்கும் உண்கலம் கொள்ளலும், தேடிப்போய்ப் பெறுதலும் மேனிலைச் சித்தர் தன்மை இல்லை! கையில் ஓடு கொண்டிருப்பதும் கூட ஆசைக்கு*

வித்து என்று அறிந்து அறிவுறுத்தி நிலைபெறுத்துபவர் சித்தர்! தமக்கென உடைபற்றியோ உறைவிடம் பற்றியோ உறவு நிலை பற்றியோ ஒன்றும் கருதாமல், வெயிலோ மழையோ பனியோ காற்றோ இருளோ ஒளியோ காடோ மேடோ கருதாமல் தாம் கொண்ட போக்கிலே போய்க் கொண்டிருப்பது சித்தர் இயல்பு!

தாய்மையின் தனிப்பேரிரக்கம், குழந்தையின் கலங்கமிலா உள்ளம், வெள்ளை, நகை, வீரனுக்கும் வீரனாக வீறுகாட்டிச் செல்லும் விழுப்பம், தம்மைக் கண்டு நகைக்கும் உலகத்தின் அறியாமையைக் கண்டு நகைக்கும் தெளிவு, இன்பம் துன்பம் பசி நோய் புகழ் பழி விருப்பு வெறுப்பு இன்னவற்றையெல்லாம் ஒப்ப எண்ணும் ஒரு தகவு. அழுக்குடையை அவிழ்த்துப் போடுவது போலவும், உண்ட இலையை எடுத்தெறிவது போலவும், பருகிய பதனீர் மட்டையை வீசி எறிவது போலவும், உடலை உகுப்பதற்குத் துளியளவுதானும் அசையாத உரம், தம்மைத் தம் கட்டுக்குள் வைத்திருக்கும் தனிப் பேராண்மை இவற்றின் முழுத்த வடிவமே சித்தர் வடிவமாம்!

உலகப் பழக்க வழக்கங்கள், சாதி சமயப் பிளவுகள், செல்வம் செல்வாக்கு மாயை பதவி பட்டச் செருக்கு, மண் பொன் மதிப்பு, பால் வயப்படு பான்மை இன்னவெல்லாம் ஒன்றாத ஒரு திருவடிவம் சித்தர் வடிவம்! "ஈசனோடு ஆயினும் ஆசையற" வேண்டும் என்னும் பற்றற்ற சித்தர், 'ஓடும் செம்பொனும் ஒப்ப நோக்குதல்" பற்றியோ, 'வீடும் வேண்டா விறலில்' விளங்குதல் பற்றியோ விளம்ப வேண்டுவதில்லையாம்.

உலகப் பற்று அற்ற சித்தர்- தந்நலப் பற்று சற்றும் அற்ற சித்தர் - உலகத் துயர் கண்டு தனிப்பெருந் தாயாய்த் துடிக்கும் தகவாளர்! நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து, உயிர்கள் படும் துயரத்தை ஒழித்தலே கடமையாகத் தம் தலைமேல் அள்ளிப் போட்டுக் கொண்டு அலையாய் அலைந்து அரும்பணி செய்பவர்! பிணி தீர்க்கும் பணியில் அவர்கள் காட்டிய முழுத்திற முனைப்பே சித்த மருத்துவச் செல்வமாக இந்நாள் வரை திகழ்ந்து வருகின்றதாம்! தம் உடலையே கோயிலாக்கி, மூச்சையே வழிபாடாக்கி உயிர்கள் எய்தும் இன்பத்தையே தாமெய்தும் வீடுபேறாக்கி இறைமையே வாழ்வாகி என்றும் இருப்பவர் சித்தர்!

ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உள்ளும் புறமும் ஒத்த ஒளிப் பிழம்பாம் சித்தர், மூச்சுப் பயிற்சியால் நாடி நரம்புகளின் துடிப்புகளையும் தம் வயத்தில் வைத்துக்

*கொண்டிருப்பவர். வாழும் நாளை நீட்டித்து உயிர்தளிர்ப்பச் செய்தற்கும் வழிவகை அறிந்தவர். மூச்சை நிறுத்தி மூலநீரை வேண்டுமாற்றாண் ஏற்றவும் இறக்கவும் திறம்பெற்றதுடன் கட்டையாய் இருக்கவும், நீரில் கிடக்கவும், காற்றாய்ப் பறக்கவும் கூற்றைப் பிசையவும், கூடுவிட்டுக் கூடுபாயவும் திறம் பெற்றவர் என்னும் செய்திகள் அவர்தம் செயற்கரிய செய்கைகளின் விரிவுகளாம்.*

*மந்திர தந்திரங்களில் வல்லுநர் சித்தர் என்பதற்கு ஊரூர் தோறும் எத்தனை எத்தனை கதைகள்! கண்டவை என்றவை எத்தனை! கண்டதாய் உரைத்ததைக் கேட்ட கட்டுமானச் செய்திகள் எத்தனை! இரும்பு பித்தளை முதலியவற்றை வெள்ளியும் பொன்னுமாய்ச் செய்த விளையாடல் செய்திகள் எத்தனை! இவையெல்லாம் சித்தர் செல்வாக்கைச் சிற்றுணர் வோரும் ஒத்துக் கொள்ளுதற்கு வாய்த்தவை.*

*“சித்தர் கைபட்டால் தீராப்பிணியும் தீரும்! சித்தர் கண்பட்டால், கண்ணேறுகள் எல்லாம் கழியும்! அவர் மிச்சில் மிசைந்தார் விட்ட குறை தொட்ட குறை எதுவும் இல்லையாய் முற்று நிறைவாய்த் திகழ்வர்! ஏவல் செய்வினை முதலிய எல்லாமும் சித்தர் திருவடி பட்ட இடத்தே பொடியாய் ஒழியும்!” இவையெல்லாம் சித்தர்மேல் மக்களுக்கு எத்துணை நம்பிக்கை என்பதை எளிதாய் விளக்குவன.*

*சித்தர்கள் ஊர் பேர் உரைப்பது இல்லை; உறவும் இனமும் உரைப்பது இல்லை; ஓர் இடத்தின் உறவையும் நிலையாய்க் கொள்வது இல்லை; இலக்கிய இலக்கண ஆய்விலேயே காலங் கழிப்பதும் இல்லை; தேர்ந்த அறிவாளர் மையத்திலேயே வாழக்கருதியதும் இல்லை; உலக வாழ்வில் ஒட்டியும் ஒதுங்கியும், ஊடாடியும் அகன்றும் தாமரை இலைமேல் தண்ணீரென வாழ்ந்தனர்!*

*சிலர் பாவாகக் கருத்தைப் பொழிந்தனர்; சிலர் கைச் சைகையால் தெரிவித்தனர்; இன்னும் சிலரோ புன்முறுவல் ஒன்றே காட்டிப் போயினர்; நாளெல்லாம் பேசா நிலையில் பிறங்கினாரும் இருந்தனர். பாடியவர் கருத்து மட்டும் படிக்கக் கிடைத்துள்ளது! மற்றையோர் செய்திகள், கண்டவர் கேட்டவர் வழியே அங்கொன்றும் இங்கொன்றுமாகக் குறிப்புச் செய்தி களாய்க் கிடைத்துள.*

சித்தர் அடங்கிய இடங்கள் ஆங்காங்குண்டு. ஆங்காங்கு ஆணடுதோறும் நினைவு விழாக்கள் உண்டு. நாள் வழிபாடு கூட்டு வழிபாடு என்பவையும் உண்டு. படையலும் பொங்கலும் பாலிப்பதும் உண்டு! இக்கால முறைப்படி பொழிவுகளும் நிகழ்வது உண்டு. ஆயினும் சித்தர் நெறிகளை ஏற்றுப் போற்றுதல் பெரிதும் இல்லை! மற்றை வழிபாடுகள் போலவே நூற்றொடு நூற்றொன்றாய்ப் பூசை போடும் அளவில் புகழ்பாடும் அளவில் - அமைந்து விடுகின்றது.

சித்தர்கள் என்றும் இருந்துளர் எங்கும் இருந்துளர்; எவ்வெக் குடி வழிகளிலும் இருந்துளர். அவர்கள் இறைமையைத் தம்மிடத்துக் கொண்டவர்; வீட்டின்பத்தைத் தம் கூட்டகத் திலேயே கண்டவர்; மக்கள் அனைவரையும் உய்விக்க வழி காட்டியாக வந்தவர்; எல்லா அறிவு நிலைகளுக்கும், மெய்ப் பொருள் இயல்களுக்கும், சீர்திருத்தங்களுக்கும் புரட்சிகளுக்கும் அப்பாலுக்கு அப்பாலாய் நின்று அவற்றுக்கெல்லாம் மூல வைப்பகமாகத் திகழ்ந்தவர். அதனால்தான் இறைவனையும் சித்தராகக் கண்டது இந்த மண்! இறையருட்பேறாம் வீடு பேற்றையும் சித்த நிலை அல்லது சித்தியாகக் கண்டது இந்த மண்!

“சித்தர் நெறி நடைமுறையில் உள்ளதா? நடைமுறைப் படுத்தப்பட்டுவிட்டதா? நடைமுறைப் பட்டால் அங்கே, இங்கே காலூன்றிய சமயங்களுக்கு என்ன வேலை! வேற்றுச் சமய நாட்டத்திற்கு என்ன வேலை! சித்தர் நெறி இல்லை! பித்து நெறிகள் பெரும் பறை கொட்டுகின்றன” என்றார் ஒருண்மைக் கிறித்தவர்! அவர் பற்பல சமய உட்கிடைகளையும் உணர்ந்தவர்! காழ்ப்பற்ற பொதுநோக்கில் நோக்கி உண்மை உரைத்தார். ஆனால் கையிற் கிடைத்த கனிகளை விடுத்துக் காய் கவர்ந்து திரிதல் நமக்குக் கைவந்த கலையாயிற்றே!

சித்தர்கள் எத்தனை பேர்?

‘பதினெண் சித்தர்’ என்பதொரு கணக்கு. ஒரு காலத்தில் ஓரோர் எண்ணுக்கு மதிப்பு; செல்வாக்கு! ஏன்? காதல் என்று கூடச் சொல்லலாம்!

பதினெண் மேல் கணக்கு, பதினெண் கீழ்க்கணக்கு, பதினெண் புராணம், பதினெண் உபபுராணம், பதினெண் பாடை (மொழி). பதினெண் மிருதி, பதினெண் வேள்வி, பதினெண் கணம்! இப்படிப் பல பதினெட்டுகள்! அப்படி ஒன்று பதினெண் சித்தர்!

ஒரு காலத்தில் எவரோ ஒருவர் எண்ணிச் சொல்லிய எண்ணிக்கை! பின்னர் அப்படி அப்படியே வழிவழியாகப் போற்றி வரப் படுபவை.

பாம்பாட்டிச் சித்தர், இடைக்காட்டுச் சித்தர், அகப்பேய்ச் சித்தர், குதம்பைச் சித்தர், கடுவெளிச்சித்தர், அழுகணிச் சித்தர் என ஆறு பேர் பெயர்களில் மட்டும் சித்தர் என்னும் பெயர் ஒட்டிக் கொண்டுள்ளது. பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவையில் உள்ள பெயர்கள் இவை.

சித்த மருத்துவ நூல்களைக் கொண்டு ஆராய்ந்து சித்தர்கள் 18 பேர் என்று சொல்வார் உளர்.

சித்தர்களின் ஞானப் பாடல்களை வைத்துக் கொண்டு ஆராய்ந்து சித்தர்கள் 18 பேர் என்று சொல்வார் உளர். இவ்விருசார் பதினெண் சித்தர்களிலும் பதினெட்டு என்னும் எண்ணிக்கை உண்டே ஒழிய வெவ்வேறானவரே யாவர். மேலும் பதினெட்டு என்னும் எண்ணிக்கைக்கு இருமடங்கு மும்மடங்கு எண்ணிக்கையாளர் பெயர்களும் வரிசையில் உண்டு! ஆனால் பெயர் என்னவோ பதினெண் சித்தர் பாடல்கள் தாம்!

பதினெண் மேற்கணக்கில் மாற்றமில்லை; பதினெண் கீழ்க் கணக்கில் கூடச் சிக்கலிருந்தும் தெளிவாகிவிட்டது. பதினெண் புராணம் என்பதிலும் தெளிவு உண்டு. ஆனால் பதினெண் சித்தர் பெயரைத் திட்டப்படுத்துவதில் மட்டும் ஏன் தெளிவு பிறக்கவில்லை?

சித்தர்கள், புலமைத் தலைக்கோலைத் தூக்கிக் கொண்டு ஏடு எழுத்தாணி என்றே கட்டிப் பிடித்துக் கொண்டிருந்தவர்களைப் பற்றி அக்கறைப்படவில்லை! அடிமட்டத்தில் இருந்த மக்களுக்கும் கல்வியறிவறியா மக்களுக்கும் முன்னே நின்று பாடினர்! வெள்ளையாகப் பாடினர்! பொதுமக்கள் வழக்குச் சொற்களைக் கையாண்டு அவர்கள் கைக்கொண்ட இசையமைப்புகளில் எளிமையாகப் பாடினர். ஆய்ந்து பார்ப்பவர்க்கு அரும்பொருள் இருக்கவேண்டும் என்னும் உட்கிடை சித்தர்கள் உள்ளத்தில் இருந்தாலும், வெளிப்படையாகச் சொல்லி எளியவகையில் ஒரு பொருள் கண்டு மகிழ்தற்கும் இடமாக்கி வைத்திருந்தனர். ஆகலின் பழுத்த புலமையே புலமை என்னும் அழுத்தமுடைய புலவர்களுக்குச் சித்தர் பாடல்கள் வெள்ளைப் பாடல்களாகத் தோன்றின! கல்லார் பாடல்களாகக் காணப்பட்டன! அதனால் அவற்றை அரவணைத்துக் கொள்ள அவர்கள் கைகளை

நீட்டவில்லை! அரைகுறைப் படிப்பாளர்களும் போலித் துறவோர்களும், இசைபாடி இரந்து செல்லும் வாடிக்கையில் பாடி வந்தனர். அவற்றைத் தொகுத்து நூலாக்க விரும்பியவர்களும் சில்லறைக் கோவை, பெரிய கோவை என்று அகப்பட்டதை எல்லாம் அச்சாக்கி விட்டனர். ஒவ்வொரு பதிப்பிலும் புதுப்புதுச் சித்தர்கள்! புதுப்புதுப் பாடல்கள்! புதுப்புதுப் பாடங்கள்! புதிய புதிய புனைவுகள்! கூடிய அளவும் சித்தர்கள் பாடல்களுக்கு இதற்குமேல் சிதைவு செய்ய முடியாது என்ற அளவுக்குக் கொண்டு போய்விட்டனர்! அம்மட்டோ? இத்தனை ஏடுகளைத் தொகுத்து இத்தனை அறிஞர்கள் ஆராய்ந்து வெளியிட்டது என்றும் முத்திரை குத்தினர்! ஆனால் ஒரு பாடல் இருபாடலாகி இருக்கும், இரு பாடல் ஒரு பாடலாகியிருக்கும்; ஒரு பாடலின் ஓரடி மற்றொரு பாடலின் அடியாகியிருக்கும்; ஒரு பாடலுக்கு மிகையடி இருக்கும் இன்னொன்றில் சீர்விடுபாடு இருக்கும்; ஏன் அடிவிடுபாடும் அமையும்! ஆயினும் ‘திருந்திய பதிப்பாகவே’ இருந்தது! ஏன்? அவ்வளவு சிதைவுகள்.

இனிப் பொருள்பற்றியோ கேட்க வேண்டியது இல்லை. எல்லாம் புரிந்து கொள்ளும் பொருள்களா? சித்தர்கள் தாம் கண்ட - பழக்கத்தில் கொண்ட - மூச்சுப் பயிற்சி - ஒடுக்கநிலை - எழுச்சிநிலை - காட்சிநிலை - விடுதலைத் தன்மை இன்னவற்றை யெல்லாம் விளக்குகின்றனர். செயன்முறைக் குருவின் வழியே செவ்விதின் அறிந்து கொள்ள வேண்டிய பொருளைச் சொல்லால் முடிக்க முடியுமோ? ஆதலால் “குருடும் குருடும் குருட்டாட்ட மாடி, குருடும் குருடும் குழிவிழுமாறே” என்பதாகவே அமைந்தது. இப்பொழுதும் அந்நிலைமைதான். ஏனெனில், வண்டி சென்ற தடத்தை அறியலாம். வண்டு சென்ற தடத்தை எவரே அறிவார்? படைப்போன் உணர்ந்ததைப் படிப்பாளியும் அப்படியே உணரும் நிலை உண்டாகவேண்டுமே! அல்லது உண்டாக்க வல்லாரேனும் வேண்டுமே! அதுகாறும் சித்தர் பாடல்கள் செம்மைப்பட - செம்பொருள் புலப்பட - வெளிவருதற்கு இயலாதாம்! அந்நெறியில் தலைப்பட்ட திறம் வல்லார் திருநோக்கு, இதன் பால் வீழ்ந்து தெளிபொருள் விளக்கம் தருமாக!

# சிவ வாக்கியர்

*பதினெண் சித்தருள் ஒருவராக எண்ணப்படுபவர் சிவவாக்கியர். இவர் பாடலே சித்தர் பாடல் திரட்டில் முற்படி அமைக்கப் பெற்ற பேறும் உண்டு. சித்தர் பாடல்களுள் மிகுதியாக எண்ணிக்கை உடையது இவர் பாடல்களே. ஆனால் பதினெண் சித்தர் பெயர்களுள் இவர் பெயர் இடம் பெறாதுள்ளது.*

**சிவவாக்கியர் வரலாறு**

*இவரைப் பற்றி* ***அபிதான சிந்தாமணி*** *கூறும் செய்தி:*

*“இவர் வேதியர் குலத்திற் பிறந்து காசியாத்திரை சென்று இல்லறத்தில் ஆசை கொண்டு ஒரு ஞானியாகிய சக்கிலி, காசும் பேய்ச் சுரைக்காயும் கொடுக்கப் பெற்று அவன் உனக்கு எந்தப் பெண், மணலையும் இச்சுரைக்காயையும் சமைத்து இடுகின்றாளோ அவளே மனைவி என அவ்வாறு செய்த ஒரு குறப்பெண்ணை மணந்து இல்லறத்திருந்து மூங்கில் வெட்டுகையில் அது பொன் பொழீய நீத்து, ஒரு கீரையைப் பிடுங்குகையில் தன்னிலை நிற்கக் கொங்கணரால் திருந்தியவர். இவரைத் திருமழிசை ஆழ்வார் என்பர். இவர் தமிழில் தம் பெயரால் சிவவாக்கியம் என நூல் செய்தவர். இவர் வந்து பூமியில் பிறக்கையில் ‘சிவ’ என்று சொல்லிக் கொண்டு விழுந்தபடியால் இவர்க்கு இப்பெயர் இடப்பட்டது.”*

***தி.வி. சாம்பசிவம் பிள்ளை*** *தமிழ் - ஆங்கில மருத்துவ அகராதியில் சிவவாக்கியரைப் பற்றியுள்ள செய்தி:*

*“சிவவாக்கியர், ஓர் சித்தன். இவர் மல்லிகையார்ச் சுனத்தின் சுனையருகே கானாறு மத்தியில் இருக்கும் வாய்க்காலின் மண்டபத்தில் நெடுநாளாகத் தங்கியிருந்து அநேக சித்தர்களைத் தமக்குச் சீடராகக் கொண்டு, அவர்களுக்குக் காயாதி கற்பங்களைப் போதித்து, தேகத்தைக் கற்றூணாகச் செய்யும் வழிகளையும் காட்டினவர். இவர் சில காலம் சமாதியில் இருந்து பிறகு பூமிக்கு வெளியில் வந்து அநேகம் பேர் துதித்துக் கொண்டாடும்படி அநேகவித சித்துக்கள் ஆடினதாகவும் இந்த மாதிரி மூன்று தடவை சமாதி புகுந்து வெளியில் வந்து தம்முடைய சீசவர்க்கத்*

தாருக்கு அற்புத அதிசயங்களைக் காண்பித்து, மற்றும் உலகத்தார்கள் யாவரும் இவரைப் போல் சித்தர் ஒருவர் உண்டோ எனக் கொண்டாடும் படி புகழ் பெற்று, பின் கடைசியாகச் சமாதியடைந்து தேகத்தை மறந்தார். இவர் தை மாதம் மகத்தில் இரண்டாங் காலத்தில் திருமூலர் கூட்டத்தாரில் செம்படவ கன்னியின் வயிற்றிற் பிறந்தவர். இவர் செந்தமிழ் கற்ற ஒரு கவிவாணர். இவர் ஒரு காலத்தில் கிருத்தவ மதத்தையும், பௌத்த மதத்தையும் சில காலம் தழுவி நின்று, சைவ சமயத்திற்கு விரோதமாகச் சில நூல்கள் பாடியுள்ளார். இப்பாடல்களுக்குத் தான் சிவவாக்கியம் என்று பெயர். அச்சமயம் மதுரையை ஆண்டு வந்த அரசனால் இவர் கண்டிக்கப்பட்டுமுள்ளார். இவர் சில காலமாக நாத்திக சம்வாதத்தை அனுசரித்து மறுபடியும் சித்த மதத்தைத் தழுவினவர்.

**வரலாற்று ஆய்வு**

இவ்விருவர் செய்திகளுக்கும் இடையேயுள்ள ஒப்புமை ஒன்றே ஒன்றாகும். அது ‘சிவவாக்கியர் சிவவாக்கியம் என்பதை இயற்றினார்’ என்பதேயாம். இரண்டற்கும் செய்திகள் ஒவ்வா திருத்தல் மட்டுமல்லாமல் உண்மைக்கும் ஒவ்வாதவையாம். சிவவாக்கியர் பாடலைப் படித்துப் பார்த்தவர்கள் அவற்றைக் கொண்டு சில செய்திகளை உருவாக்கி வைத்து அவற்றொடு சில ஒட்டுகளை இணைத்து மனம்போல் புனைந்துள்ளனர். தொகுப்பாளர் இருவரும் தாம்தாம் கேட்ட செய்திகளைக் கேட்டவாறு குறித்து அமைந்தனர்! சிவவாக்கியரின் உண்மை வரலாறு என்ன? அதனை அறியவும் முடியுமோ? சிவவாக்கியர் வரலாறு சிவவாக்கியமே! அதிலுள்ள செய்திகளின் உட்கிடையே அவர்தம் வாழ்வியல் நோக்கு! அவர் இவ்வுலகுக்கு விடுக்கும் செய்தியும், வைத்த வைப்பு நிதியுமாம்! பிறவெல்லாம் எண்ணத் தக்கன அல்லவாம். சிவவாக்கியத்தைக் கற்பார், இப்புனைவு களுக்குத் தக்க மூல வித்துகள் அதில் முடங்கிக் கிடப்பதைக் காண்பர். ஒரு பொருளை எவ்வழிக்குப் பயன்படுத்த வேண்டுமோ அவ்வழியை விடுத்து எதிரிடை வழிக்குப் பயன்படுத்திப் பாழ் செய்யும் பக்குவமில்லாப் பான்மைக்கு இப் புனைவுகள் எடுத்துக் காட்டாம்.

சிவவாக்கியர் பாடல்களைக் கருதுவோம்;

**சிவவாக்கியர் - பெயர்**

சிவவாக்கியர் என்னும் பெயர் வந்தவகை சிவவாக்கியத்தில் கிடைக்கின்றது. காப்புச் செய்யுளில், "சொல்லுவேன் சிவ வாக்கியம்" என்கிறார். "சிவவாக்கியம் சொல்பவர்க்கு" என்ன பெயர் வைப்பது?" என்று பாடலைத் திரட்டியவர் எண்ணியிருக் கிறார். '**சிவ வாக்கியர்**' என்று சொல்லிவிட்டார்.

வள்ளலார் கூறவில்லையா? "என் வாக்கன்று; இறைவன் வாக்கு' என்று! அப்படியே இவர் சொல்கிறார். 'சிவவாக்கியம் சொல்வேன்' என்று! "யான் சொல்லும் செய்திகள் என் செய்திகள் அல்ல; இறைவன் அருளும் செய்திகள்" என்று! இயற்றியவர் பெயர் தெரியவில்லை. காப்பிலே வந்த தொடர், பெயரைத் தந்து காப்புச் செய்தது.

**சித்தரும் சிவவாக்கியமும்**

"சித்தர் சிவத்தை நினைந்து நினைந்து சிவமான வராதலால் அவர் நரை திரை மூப்பு சாக்காடு முதலியவற்றைப் பெறுவதில்லை. அவர் என்றும் ஒரு பெற்றியராய்ச் சிவந்த மேனியராய் என்றும் இளைஞராய் அழகராய் வாழ்பவர்" என்று சித்தர் இலக்கணம் பற்றித் **திரு.வி.க.** கூறுவதை எண்ணிச் சிவவாக்கியர் நிலையை உணரலாம். சிவவாக்கியர் வழியே சித்தர் நிலையைக் காண்பது மிகவும் தக்கதாம்.

சித்தர்கள், உலகோர்போல் இரார்; உலகோர் சித்தர் இயலைப் புரியார். இவ்விடைவெளியால் சித்தர்கள் உலகோரால் தொல்லைகட்கு ஆட்படுவர்; ஆனால், தொல்லையை அவர் பொருளாக எண்ணவும் மாட்டார்; அறிவறிந்தோர் சித்தரைப் போற்றிப் புகழவும் செய்வர்; அதனையும் பொருட்டாக எண்ணார் சித்தர்.

"வீதி போகும் ஞானியை விரைந்து கல் எறியும்" காட்சியைச் சொல்கிறார் சிவவாக்கியர். அவர் கூறும் ஞானிகள் 'சித்தரான ஞானிகள்' என்பதையும் தெளிவிக்கிறார். சித்தர்கள், "போதிக்கப் பெறாமல் தம்முள்ளே போதம் வரப் பெற்றவர்" என்றும் மொழிகிறார். சித்தர்கள் சிந்தையடக்கி - நினைவும் அற்ற - நிறை ஞானிகள் என்றும் விளக்குகிறார். கடல் கலங்குவதில்லை; சித்தர் உளமுங் கலங்குவதில்லை என உறுதிப்படுத்துகிறார்.

உலகவர் சித்தர்களை நோக்கும் முறையை யுரைத்து, அவர்கள் நோக்க வேண்டிய முறைகளையும் தெளிவாக்கிச் சித்தர் வழியால் உண்டாம் பயனையும் விளக்குகிறார் சிவவாக்கியர்.

சித்தர் என்றும் சிறியர் என்றும் அறியொ ணாத சீவர்காள்!
சித்தர் இங்கி ருந்த போது பித்தர் என்று எண்ணுவீர்!
சித்தர் இங்கி ருந்து மென்ன பித்தன் நாட்டி ருப்பரே!
அத்தன் நாடும் இந்த நாடும் அவர்க ளுக்கெ லாமொன்றே
"புத்த கங்க ளைச்சு மந்து பொய்க ளைப்பி தற்றுவீர்!
செத்தி டம்பி றந்தி டம்ம தெங்ஙன் என்றே யறிகிலீர்
அத்தன் அனைய சித்தனை அறிந்து நோக்க வல்லிரேல்
உத்த மத்துள் ஆய சோதி உணரும் போகம் ஆகுமே"

*என்பவை அவர் வாக்குகள்.*

*சித்தர் சிவவாக்கியர் சொல்கிறார்; "உலகவர், பெரியவர் எவர், சிறியவர் எவர் என்பதை அறிந்து கொள்ளவில்லையாம். சித்தர்கள் உலகில் வாழ்ந்து கொண்டிருந்த போது உலகவர் களால் பித்தர்கள் என்று பழிக்கவும் துயருறுத்தவும் பட்டனராம். சித்தர்கள் இங்கே இருந்தால்தான் என்ன? அவர்கள் இறைவர் திருநாட்டில் இருப்பதாக எண்ணுகின்றவராம்! அவர்களுக்கு இறைவன் நாடும் இந்நாடும் ஒப்பாகத் தோன்றுகின்றனவாம்! நிறைய நிறைய நீங்கள் படிக்கின்றீர்கள்! பொய்யும் புனைவும் புகல்கின்றீர்கள்! பிறந்து வந்த இடம் இறந்து செல்லும் இடம் எங்கே என்று அறியமாட்டீர்கள்! இறைவனாகவே இங்கே நடமாடும் சித்தனின் உண்மையை உணர்ந்து பார்ப்பீர் களேயானால் உள்ளொளி கூடிவரப் பெற்று இன்பநிலை இன்னதென் அறிந்து கொள்வீர்கள்" என்கிறார்.*

*உண்மைச் சித்தரை உலகவர் அறியாதிருந்தார் மட்டுமல்லர். போலிச் சித்தர்களைக் கண்டு போற்றிக் கொண்டும் திரிந்தனர். இதுவும் சிவவாக்கியர் உள்ளத்தில் உருத்தியது. அத்தகையரைப் பார்த்து வினாவுகின்றார்.*

"சித்தம் ஏது சிந்தை ஏது சீவன் ஏது சித்தரே!
சத்தி ஏது சம்பு ஏது சாதி பேத மற்றெது
முத்தி ஏது மூலம் ஏது மூல மந்தி ரம்மெது
வித்தி லாத வித்தி லேயீ தின்ன தென்றி யம்புமே"

**தன்னை அறிதல்**

*அறிய வேண்டியவற்றையெல்லாம் அறிதல் 'அறிவறிதல்' எனப்படும். அறிவறிதலில் தலையாயதும், அறிதற்கு அருமை யானதும் தன்னை அறிதல் என்பதாம். மெய்ப்பொருள் வல்ல*

மேதக்கோர்கள், தாம் தம்மையறிந்த அருமையை வியந்து கூறியுள்ளனர். மற்றையோரேல் அதைப்பற்றி என்ன கூறமுடியும்?

சித்தருள் தலையாய ஒருவர் திருமூலர். அவர்,

"என்னை அறிந்திலேன் இத்தனை காலமும்
என்னை அறிந்தபின் ஏதும் அறிந்திலேன்" (2366)

என்றும்

"தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்" (2355)

என்றும் கூறுகின்றார். மேலும்,.

"தன்னை யறிந்திடும் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனரு ளாலே"

என்கிறார். சிவவாக்கியரும் இதனை வலியுறுத்துகிறார்.

"என்னி லேயி ருந்த ஒன்றை யான றிந்த தில்லையே
என்னி லேயி ருந்த ஒன்றை யான றிந்து கொண்டபின்
என்னி லேயி ருந்த ஒன்றை யாவர் காண வல்லரே
என்னி லேயி ருந்திருந்து யாது ணர்ந்து கொண்டெனே"

என்பது அது.

**வழிபாடு**

சிவவாக்கியர் ஒருகாலத்தில் பற்பல மலர்களைப் பறித்தும் பறித்துத் தூவித் தூவி வழிபாடு செய்தாராம்! ஓயாமல் ஒழியாமல் மந்திரங்களைச் சொல்லிச் சொல்லி அயர்ந்தாராம்! குடம் குடமாக நீரள்ளிக் கொட்டி வழிபாடு செய்தாராம்! எண்ணிலாக் கோயில்களை நாடித் தேடி வழிபட்டாராம்! இறைவன் இருப்பிடம் ஈதென அறிந்த மெய்யறிவாளர் இயலைப் பின்னர் அறிந்து கொண்டாராம். கண்ட கோயில்களுக்கெல்லாம் சென்று கையெடுத்து வணங்குவதை விட்டு விட்டாராம்!

**உள்ளத்துள் உறையும் இறை:**

'கடவுள் இல்லவே இல்லை' என்னும் நம்பா மதத்தர் ஆய்விட்டாரா சிவவாக்கியர்? இல்லை! நம்பு மதத்தராகவே

இருந்தார்! ஆனால், நம்பு மதத்தவரும், இவர் 'நம்பாமதத்தர்' என்று எண்ணுமாறு மெய்யுணர்வில் ஓங்கி நின்றார்! தாயுமானவர் சொல்லவில்லையா? "இறைவா, நான் உனக்குப் பூசை செய்யேன்; உன்னை ஒரு வடிவாக நினைத்து வழிபடு வதற்காக மலரைப் பறிக்கச் சென்றால், அம்மலருள் நீயே இருக்கிறாய்! ஆதலால், நீ உறையும் பூவைப் பறித்து நின்னை வழிபட விரும்பாமல் அப்பூவைப் பறிக்காது விட்டேன். பூவில்லாமலே நின்னை வணங்கலாம் என நினைத்துக் கைம்மலரைக் குவிக்க எண்ணினேன். அப்பொழுது எனக்கு நாணுதல் உண்டாகியது! ஏனெனில், நீ என்னுள் இருக்கிறாய்? உள்ளே இருக்கும் உன்னைப் புறத்தே வழிபட்டு ஆவதென்ன என்னும் குறிப்புத் தோன்றியது; அன்றியும், நான் மட்டுமா இருக்கிறேன்; நீயும் என்னோடு தானே இருக்கிறாய்? நீயும் நானுமாக உள்ளே இருக்க, உன்னை நான் வணங்குவது முழுக் கும்பிடு ஆகாதே! அரைக் கும்பிடுதானே ஆகும்! ஆதலால் நின்னை வணங்குதல் தவிர்ந்தேன்" என்கிறாரே அவர்! இந் நிலையில் சிவவாக்கியர் சொல்கிறார்:

"அண்ணலாரும் எம்முளே அமர்ந்து வாழ்வ துண்மையே!"

என்றும்,

"எண்க லந்த ஓசனோ டிசைந் திருப்ப துண்மையே!"

என்றும் "எனக்குள் நீ உனக்குள் நான்" என்றும் இறைவன் தம் உள்ளகத்து அமர்ந்தும் இசைந்தும் இருப்பதைச் சொல்கிறார். அத்தகையருக்கு மலர் எதற்கு? மந்திரம் எதற்கு? கோயில் குளம் எதற்கு?

விண்ணில் நின்று மின்னல் எழுந்து அம் மின்னல் அங்கேயே ஒடுங்குவது போல உள்ளத்துள் இறைவன் தோன்றி அங்கேயே ஒடுங்கியுள்ளானாம்! கண்ணில் பட்டுக் கண்ணில் தோன்றும் காட்சியைக் கண், தானே அறிந்துகொள்ளாதது போல, என்னுள் நின்ற இறைவனை என்னை அறியுமுன் யானும் அறிந்திலேன் என மேலும் விளக்குகின்றார். அன்றியும், இறைவனை மட்டும் உள்ளகத்துக் காணவில்லையாம்! பூவும் நீரும் அவர் மனமாம்! பொருந்து கோயில் அவர் உளமாம்! உயிரே இறையுருவாம்; ஐம்புலன்களும் 'தூப தீபங் களாம்; அங்கே கூத்தன் அந்தி சந்தி இல்லாமல் ஆடிக் கொண்டிருக்கின்றானாம்! இத்தகைய அகவழி பாட்டுச் சிவவாக்கியர்க்குப் புறவழிபாட்டுக் கோலங்கள் என்ன வேண்டியிருக்கின்றன?

இதுவரை சிவவாக்கியர் வாக்குக் கொண்டு அவர் தம்மை உணர்ந்த வகையையும், தலைவனை உணர்ந்த வகையையும், அவர் கடைப்பிடித்த வழிபாட்டு முறையையும் அறிந்தோம். இனி அவர் வாக்காலேயே அவர் குறிப்பிட்டுரைக்கும் உடல் நல, உயிர் நல, உலக நலக் கருத்துகளை அறியலாம்.

**சிவவாக்கியர் வேண்டுதல்**

வேண்டுதல் வேண்டாமை அல்லது விருப்பு வெறுப்பு இல்லாதவன் இறைவன். மாந்தருக்கு விருப்பு வெறுப்பு உண்டு. அவை உண்டு எனினும் அவரவர் வளர்ந்த நிலைக்கு ஏற்ப அவ் விருப்பு வெறுப்புகள் அமைகின்றன. அவ்வகையில் சிவவாக்கியர் மிக வளர்ந்தவர்; உலகவர் பொதுவாக விரும்பும் விருப்பையும் வெறுப்பையும் கடந்தவர். அவர் வேண்டுதல், தெளிந்த சித்தர் ஒருவரின் வேண்டுதல் எத்தகையதாக இருக்கும் என்பதைக் காட்டுகின்றது.

"ஆடு காட்டி வேங்கையை அகப்ப டுத்து மாறு போல்
மாடு காட்டி என்னைநீ மதிம யக்கல் ஆகுமோ?
கோடு காட்டி யானையைக் கொன்று ரித்த கொற்றவா
வீடு காட்டி என்னைநீ வெளிப்ப டுத்த வேண்டுமே."

"செருக்கால் எவரையும் சீரழித்து வந்த யானை முக அசுரன் ஒருவனைக் கொன்று, அவன் தோலைப் போர்வையாகப் போர்த்துக் கொண்ட இறைவனே, வேட்டையாடுவார். ஆட்டைக் காட்டிப் புலியை வரச் செய்து அகப்படுத்திக் கொள்வதுபோல், என்னை மாடு - செல்வம் - முதலியவற்றைக் காட்டி மயங்கச் செய்வது சரியாமோ? எனக்கு நீ விடுதலை அருள வேண்டும்; இவ்வுலகியலில் இருந்து அப்பால்படுத்தி வைக்க வேண்டும்" என்று இப்பாடலில் வேண்டுகின்றார்.

**உடலியல்**

இவ்வேண்டுதலுக்கு அடிப்படை மெய்யுணர்வேயாம். அம்மெய்யுணர்வால் உடலியல் பற்றிக் கருத்துச் செலுத்து கின்றார்.

"மண்பாண்டம் கவிழ்ந்தால், அதனைக் கவிழா வகையில் போற்றி அடுக்கி வைப்பார்கள். வெண்கலப்பாண்டங்கள் கவிழ்ந்தால், அவை வேண்டத் தக்கவை ஆயினவே என்று பேணி வைத்துக் கொள்வார். ஆனால், உடல் என்னும் இக்கலம் கவிழ்ந்துபோனால் நாறும் என்று எடுத்துச் சென்று மண்ணுள்

அல்லது தீயுள் போடுவார்! இந்தப் பொய்யாம் உடலின் நிலைமையை என்னவென்று சொல்வது?'' என்கிறார். மேலும்,

''மாடு கன்று செல்வமும் மனைவி மைந்தர் மகிழவே
மாட மாளி கைப்புறத்தில் வாழு கின்ற நாளிலே
ஓடி வந்து காலதூதர் சடுதி யாக மோதவே
உடல்கி டந்து உயிர் கழன்ற உண்மை கண்டும் உணர்கிலீர்''

என்றும் உடலின் உண்மை நிலையை விளக்குகிறார்.

உடற் குறை இன்னதென உரைப்பது ஒப்பாரி வைப்பதற் காகவோ? நிலையாமையைக் கூறுவது நெட்டுயிர்த்து அழுவதற் கோ? இல்லை! உடலின் குறையையும் நிலையாமையையும் உணர்ந்து என்ன செய்யவேண்டுமோ அதை முன்னமே செய்து முடித்தற்குத் தூண்டவே யாம்!

**உடல் நலம் பேணல்**

உடலின் நிலையாமையைக் கூறிய சிவவாக்கியர் உடலைப் பேணிக்கொள்வது பற்றியும் உரைக்கிறார்;

"ஓடம் இருக்கும்போது தானே கடலில் ஓடி உலாவ முடியும்? அந்த ஓடம் இருக்கும்போதுதானே மீன் பிடிப்பார் பிடிக்கவும், முத்தெடுப்பார் எடுக்கவும், உலா வருவார் வரவும் முடியும்; ஓடம் உடைந்து போனால் எல்லையற்ற கடலில் துடுப்புத்தள்ளலும் இல்லை, துடுப்பும் இல்லை: துணைக்கும் யாரும் இல்லை!'' என்கிறார்.

ஆம்! உடல்தான் ஓடம்! வாழ்வுதான் கடல்! அந்த உடலாம் ஓடத்தைக் கொண்டுதான் வாழ்வாம் கடலில் பெற வேண்டுவன வெல்லாம் பெற்றாக வேண்டும். உடலாம் ஓடம் உடைந்தால் பொறியும் இல்லை; புலனும் இல்லை; பொருளும் சுற்றமும் பிறவும் இல்லை; ஆதலால் உடல் இருக்கும்போதே செய்ய வேண்டியவற்றைச் செய்து விட வேண்டும் என்று வலியுறுத்து கிறார் சிவவாக்கியர்.

**உழலும் உடல்**

உடல் என்னும் பெயரே உழலுதலுக்கு அல்லது துன்புறு தலுக்கு அமைந்தது; அழிவுக்கு உரியது என்பதை விளக்குவதாம். இதனைச் சிவவாக்கியர் அறியாதவர் அல்லர். இதனை விளக்க ஒரு செய்தியை இரண்டுமுறை இயம்புகிறார்.

"பருத்தி பட்ட பன்னிரண்டு பாடு தானும் படுவரே"
"பருத்தி பட்ட பாடுதான் பன்னி ரண்டும் பட்டதே"

என்பதாம்.

பருத்தி பட்ட பாடுகள் பன்னிரண்டு என்று எவற்றை எண்ணிச் சொன்னாரோ சிவவாக்கியர். ஆனால் "பஞ்சுபடாப் பாடு என்பாடு" என வருந்தியுரைப்பார் மிகப்பலர்! பஞ்சுக்கு மூலந்தானே பருத்தி? அதன் பாடுகளை எண்ணலாம்!

பருத்தி எடுத்தல் - காயப்போடல் - கொத்தை கழித்தல் - மணையிலிட்டு அரைத்தல் - பஞ்சு கொட்டல் - தக்கையாக்கல் - நூற்றல் - கண்டு சுற்றல் - கழியாக்கல் - பாவாற்றல் - நெய்தல் - சலவை செய்தல் எனப் பன்னிரண்டு பாடுகளை எண்ணலாம்! எத்தனை சவட்டு சவட்டப்படுகின்றது பருத்தி! அதனால் தானே 'சவளி' எனப் பெயர்பெற்றது துணி. சவட்டப்படும் பருத்தி போலச் சவட்டப்படுகிறது உடம்பு என்று சொல்லும் சிவவாக்கியர், உடலைப் பற்றிய தெளிவோடு தானே உரைத்தார்.

**பாலனாகி வாழ்தல்**

உடலின் உண்மை நிலையை உணர்ந்தறிந்த சிவவாக்கியர் உடலை இளமையாய் வைத்திருக்க வழிவகையும் கூறியுள்ளார். உடலைப் போற்றவேண்டும் என்றால் எப்படிப் போற்றவேண்டும் என்று எவரே வினவார்? சிவவாக்கியர் ஆணையிட்டுச் சொல்கிறார்:

"உருத்த ரித்த நாடியில் ஒடுங்கு கின்ற வாயுவைக்
கருத்தி னாலி ருத்தியே கபாலம் ஏற்ற வல்லிரேல்
விருத்தர் தாமும் பாலராவர் மேனி யுஞ்சி வந்திடும்
அருள்த ரித்த நாதர்பாதம் அம்மை பாதம் உண்மையே"

"மூலநாடி தன்னிலே முளைத்தெ ழுந்த சோதியை
நாலுநாழி உம்முளே நாடி யேயி ருந்தபின்
பால னாகி வாழலாம் பரப்பி ரம்மம் ஆகலாம்
ஆலம் உண்ட கண்டராணை அம்மை ஆணை உண்மையே'

"மூல மாம்கு ளத்திலே முளைத்தெ ழுந்த கோரையைக்
கால மேஎ ழுந்திருந்து நாலு கட்ட றுப்பிரேல்
பால னாகி வாழலாம் பரப்பி ரம்மம் ஆகலாம்
ஆலம் உண்ட கண்டர் பாதம் அம்மை பாதம் உண்மையே"

இப்படியே பல பாடல்களைச் சொல்கிறார்.

### மூச்சு நிலை

*மூலநாடியின் மூச்சை உச்சிக்கு ஏற்றும் திறம் பெற்றால் முதியரும் இளையராகலாம் என்றும், இளையராகி வாழ்வதுடன் தெய்வநிலையும் எய்தலாம் என்றும் குறிப்பிடுகிறார். ஓகநெறிப் பயிற்சியால் இது கைகூடும் என்பதைத், தாம் தம் பட்டறிவால் கண்டவாறு உரைக்கின்றார். அவ்வழி, கண்டு காட்டுவார் வழி ஆகலின் விண்டு காட்டுதல் வீணுரை யேயாம்! விளங்காததும் விளக்கமில்லாததுமாகிய உரையுமாம்!*

"சங்கி ரண்டு தாரை ஒன்று சன்னல்பின்னல் ஆகையால்
மங்கி மாளு தேஉலகில் மானி டங்கள் எத்தனை?
சங்கி ரண்டை யுந்தவிர்த்துத் தாரை ஊத வல்லிரேல்,
கொங்கை மங்கை பங்கரோடு கூடி வாழ்தல் ஆகுமே"

*என்பதுபோல 'வளநிலை' (மூச்சு)ப் பயிற்சிகளை இயல்பான ஓட்டத்தில் எண்ணற்ற பாடல்களில் பாடியுள்ளார் சிவவாக்கியர். ஓகநெறி வல்லார் உணர்ந்து கொள்ளும் அருமையுடையவை! நாம் "சொல்லால் முழக்கிலோ சுகமில்லை" என அமைதல் சாலும்!*

### காலனுக்குக் கலங்காமை

*இளமையாய் இருக்க வகைகண்ட சித்தர் காலனுக்கு அஞ்சுவரோ?*

"காலன் என்று சொல்லுவீர் கனவிலும் அதில்லையே"

*என்கிறார்! அவர் கனவிலும் கூட, காலனுக்கு அஞ்சாமை குறித்த குறிப்பு இது. ஆனால் பொதுமக்கள் எப்படி இருக்கின்றனர்? அஞ்சி அஞ்சிச் சாகின்றனரே! சாவு வந்திடும் என்னும் அச்சத்தால், தாமே விரைந்து சாவை வரவேற்று விடுகின்றனரே! இதனைக் கண்டு இரங்குகின்றார் சிவவாக்கியர்:*

*"நீளமான வீடுகளைக் கட்டுகிறீர்கள்; நெடிய கதவுகளை அமைத்துப் பூட்டுகிறீர்கள்; இவையெல்லாம் எதற்காக? மகிழ்வோடு வாழவேண்டும் என்பதற்காகத் தானே! ஆனால் நடப்பதென்ன? காலன் ஓலை வரும்போது என்ன ஆகின்றது? உமக்கு, அந்த நீள வீடும், நெடுங்கதவும் காவல் செய்தனவோ? அப்பாலுக்கு அப்பாலாய் உம்மை வெளியேற்றி விட்டனவே அவை! இறைவனறிய உண்மையில்லையா இது?" என்கிறார்.*

*"காலன் எப்பொழுது இல்லை! காலமெல்லாம் இருப்பவன் ஆதலால்தானே அவன் காலன்? அவனுக்குக் காலை என்ன?*

*மாலையென்ன? அவன் கலந்தே உள்ளான்! ஆம்; உம் காலமெல் லாம் கலந்தே உள்ளான்! காலை மாலை அற்ற வகையில் நீங்கள் கருத்தில் ஒடுங்கி விட்டால் என்ன ஆகும்? காலை மாலை ஆகிநின்ற காலன் இல்லை இல்லையே" என விளக்குகிறார்.*

**பேருறக்கம்**

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

*என்றார் வள்ளுவர். இறப்பை உறக்கம் (நித்திரை) என்றே சொல்லி விடுகிறார் சிவவாக்கியர். இறந்தபின் ஆகும் நிலைமை என்ன என்பதையும் சொல்கிறார் அவர்:*

"ஓதி வைத்த நூல்களும் உணர்ந்து கற்ற கல்வியும்
மாது மக்கள் சுற்றமும் மறக்க வந்த நித்திரை
ஏது புக்கொ ளித்ததோ? எங்கு மாகி நின்றதோ?
சோதி புக்கோ ளித்தமாயம் சொல்ல டாசு வாமியே"

*என்பது அது.*

**இறந்தவர் எழும்பார்**

*இறவாநிலை என்பது புகழுடலையே யன்றி இவ்வுடல் வாழ்வைக் குறித்ததன்று. என்றும் இறவாமல் இருக்கலாம் என்பது அறியார் உரை. பிறப்பதற் கெல்லாம் இறப்பு உண்டு; இறப்பது இல்லை என மகிழ்ந்து "உங்கள் சொத்து எங்கள் சொத்து நலம் பொலம்" எனத் திரியலாம். ஆடிப்பாடி மகிழலாம்; ஆனால் முடிவு என்ன? உடல் அழிந்தபோது உயிர் எப்படி உறவாடிக் கொண்டிருக்கும்? என்று வினவுகிறார்.*

*"பிரிந்துபோன உயிர் மீண்டும் உடலுள் புகுவது உண்டு", என்னும் ஒரு கருத்தும் உலகில் உண்டு. ஆதலால் உடலை எரித்தல் கூடாது என்பதும் உண்டு. இக்கருத்தை மறுக்கிறார் சிவவாக்கியர்.*

"கறந்த பால் காம்பில் மீண்டும் புகாது;
கடைந்தெடுத்த வெண்ணெய் மீண்டும் மோரில் புகாது;
உடைந்து போன சங்கில் ஓசை எழாது;
விரந்து வீழ்ந்த பூவும், உதிர்ந்த காயும் மீண்டும்
மரத்தில் புகா; அவ்வாறே பிரிந்துபோன உயிர்களும்
உடல்களில் புகமாட்டா"

*என்று சொல்லி,*

"இறந்தவர் பிறப்பதில்லை இல்லை இல்லை இல்லையே"

*என முடிக்கிறார்.*

**பிறப்பொழிந்தார்**

*இறந்தவர் எழுந்திரார் என்ற சிவவாக்கியர், எவருக்குப் பிறவி இல்லை என்பதையும் தெளிவிக்கிறார்:*

"அல்லல் வாசல் ஒன்பதும் அடைத்த டைந்த வாசலும்
சொல்லும் வாசல் ஓரைந்தும் சொம்மி விம்மி நின்றது
நல்ல வாச லைத்திறந்து ஞான வாசல் ஊடுபோய்
எல்லை வாசல் கண்டவர் இனிப்பி றப்ப தில்லையே"

*உயிரியல், உடலியல், இறையியல், உலகியல் என்பவையெல்லாம் சித்தர்கள் ஆய்ந்தவையே. அவர்கள் உலகியலில் ஒன்றாமல் இருந்தும் ஒன்றியவர்கள். அறியாத செய்திகளையும் நுண்மையாக அறிந்து வழிகாட்டுகின்றனர். மூலத்தை நாடி மூச்சை அவிழ்க்கின்றனர்.*

**பெண் ஆண் ஒப்பு**

*ஆண் பெண் பற்றிய உயர்வு தாழ்வு, பெருமை சிறுமை உலகில் பேசப்படுகின்றன. அதனால் 'பெண்ணின் பெருமை' பேசி நிலைநாட்ட வேண்டிய கடப்பாடும் சான்றோர்களுக்கு உண்டாயிற்று. தந்தையையும் தாயையும் உயர்வு தாழ்வாகப் பார்க்கும் கொடுமை தலையாய கொடுமை அல்லவோ! தெய்வ உருவாகத் திகழும் தாயைத் தாழ்வாக நினைப்பது தடிப்பேயன்றி வேறொன்றாமோ? உலகெல்லாம் இருக்கும் பெண்கள் நிலைமையை நினைத்துத் தானே.*

"பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டின்
மண்ணடிமை தீராது"

*என்று பாவேந்தர் பகர்ந்தார். இதோ சிவவாக்கியர் சொல்கிறார்; இறைவனை நோக்கி உலகத்தார் அறிய அறை கூவுகின்றார்:*

அண்ண லேஅ நாதியே அநாதி முன்அ நாதியே
பெண்ணும் ஆணும் ஒன்றலோ பிறப்ப தற்கு முன்னெலாம்
கண்ணி லாணின் சுக்கிலம் கருவில் ஓங்கும் நாளிலே
மண்ணு ளோரும் விண்ணுளோரும் வந்த வாறும் எங்ஙனே?

பிறப்பதற்கு முன்னே உயிர்நிலையில் பெண் ஆண் என என்ன வேற்றுமை கண்டார்? அவ்வேற்றுமை காண மாட்டாதார் பின்னே வேற்றுமை காட்டுதற்கு என்ன உண்டு? எனச் சிந்திக்க வைக்கிறார் சித்தர். இன்று புதுமைப் பெண்ணாக வந்து பேசும் பேச்சைச் சித்தர் அன்றே பேசுகின்றார்.

உலகோரைப் பற்றிச் சித்தர் அறியாமலும் போய்விட வில்லை. அவர்கள் விரும்புகிறார்கள் என்பதற்காக முறைகெட்ட ஒன்றைச் சொல்ல முடியுமா? ஏற்க முடியுமா?

**வாய் திறக்க அஞ்சல்**

பொய்யான ஒன்றைச் சொன்னால் அதுவே மெய்யென்று பொய்யர்கள் கொண்டாடுகின்றனர். சரி. மெய்யராவது இது மெய்யானது என்று மெய்யைப் போற்றுகின்றனரா! அவர்களிடம் அந்தத் துணிவு இல்லை. ஆதலால் இறைவனே, "வையத்தில் உண்மை தன்னை வாய் திறக்க அஞ்சினேன்; நைய வைத்த தென்கொலோ" என்கிறார்.

**சமயப் பொதுமை**

தென்னாட்டில் சிவனியம் (சைவம்) மாலியம் (வைணவம்) என்னும் இரு சமயங்களும் தொன்மையானவை. இம் மண்ணிலேயே தோன்றிச் செழித்தவை; சிவனடியார்களாகிய நாயன்மார்கள் முதலியவர்களாலும், மாலடியார்களாகிய ஆழ்வார்கள் முதலியவர்களாலும் போற்றி வளர்க்கப் பெற்றவை. ஒரு மரத்தின் இரு கவடுகள் போன்றவை இச் சமயங்கள் என்பதைப் பெருநிலை அடியார்கள் ஏற்றுக்கொண்டிருந்தாலும், மற்றையோர்களால் ஒப்பு மதிக்க மாட்டாமல் பகையும் காழ்ப்பும் வன்பும் துன்பும் வழக்கும் எதிர் வழக்குமாக அமைந்த சீர்கேடுகள் உண்டு; அது முற்றா இன்றும் தீர்ந்துவிட்டது என்பதற்கும் இல்லை! மாலியத்திலேயே தென்கலை - வடகலைப் போராட்டமும் முடிந்த பாடில்லை என்னும் போது 'இரு சமயமும் ஒரு சமயமே' என்னும் பொதுநிலை எப்படி உண்டாக முடியும்?

சமயச் சால்புணர்ந்த பெருமக்கள் இரு சமயப் பொதுமையை வலியுறுத்தி வந்தனர். அவ்வப்போது வெள்ளப் பெருக்குப்போல் மோதல்கள் கிளம்பும் - ஒருவகையான தீர்வு காணப்படும்! இந்நிலையில்தான் "அரியும்சிவனும் ஒண்ணு; அறியாதவன் வாயிலே மண்ணு" எனப் பொதுமக்கள் வாய்மொழி கிளர்ந்தது. சித்தர்கள் 'சிவன் மால்' என வேறுபாடற நின்ற

*தன்மையர். உருவங்கடந்த - பெயர் கடந்த - வழிபாட்டு முறை கடந்த - வழிபாட்டு முறையினர். ஆகலின், இரு சமயப் பிணக்கு களையும் தீர்க்க எவ்வளவோ முயன்றுளர்.அத்தகையருள், சிவவாக்கியர்க்கும் தனிப்பெரும் பங்குண்டு.*

*ஐந்தெழுத்து மந்திரத்தைப்பற்றி எவ்வளவு உரத்து உறுதியாய்க் கூறுகின்றாரோ, அதே அளவு உரத்து உறுதியாய் எட்டெழுத்து மந்திரத்தைக் கூறுகின்றார். 'சிவவாக்கியர்' என்னும் பெயர் பூண்டு, தம் வாக்கைச் சிவ வாக்காகவே மொழிந்தவர் 'சிவாயமே' என்று சொல்வதிலோ, 'நமசிவய' என்பதை விளக்குவதிலோ வியப்பு இல்லை. பலப்பல பாடல்களைச் சிவபெருமான்மேல் பாடும் அளவுக்கு 'இராம' மந்திரத்தை அழுத்திக் கூறுகின்றார். தில்லைப் பெருமானைச் சொல்லும் இடத்திலே திருவரங்கப் பெருமானையும் இணைத்தே கூறுகின்றார். செங்கண் மாலும் ஈசனும் என இணைக்கும் அவர் 'சங்கர நாராயணர்' இணைப்பையும் விட்டார் அல்லர். உவமையால் இருவர் இயைவையும் விளக்கவும் முற்படுகிறார். "தங்கம் ஒன்று; உருவம் வேறு; அதுபோல் செங்கண் மாலும் ஈசனும் சிறந்திருத்தலைச் சுட்டுகிறார். நாழி உப்பும் நாழி அப்பும் (நீரும்) நாழியானவாறுபோல் ஆழியோனும் ஈசனும் அமர்ந்து வாழ்வதைச் சுட்டி,*

"வேறுவேறு பேசுவார் வீழ்வர் வீணிலே நரகிலே"

*என்று வசை கூறுகின்றார்.*

"பல்லும் நாவும் உள்ளபேர் பகுந்து கூறி மகிழுவார்
வல்ல பங்கள் பேசுவார் வாய்ப்பு ழுத்து மாய்வரே"

*என்றும் பிளந்து பேசுவாரை எரிகிறார்! இனி இவ்விரு கடவுளர் அல்லர்; நான்முகனும் சரி; பிற கடவுளரும் சரி! ஒரு கடவுளரே என்பாராய்,*

"அறிவினோடு பாரும் இங்கும் அங்கும் எங்கும் ஒன்றதே"

*என்று தெளிவிக்கிறார். இன்னும் ஓங்கிச் சொல்கிறார்;*

"எங்கள் தேவர் உங்கள் தேவர் என்றி ரண்டு தேவரோ
இங்கும் அங்கு மாயிரண்டு தேவ ரேயி ருப்பரோ
அங்கும் இங்கும் ஆகி நின்ற ஆதி மூர்த்தி ஒன்றலோ
வங்க வாரம் சொன்ன பேர்கள் வாய்ப்பு ழுத்து மாள்வரே."

*என்பதும்,*

"எங்கும் உள்ள ஈசனார் எம்மு டல்பு குந்தபின்
பங்கு கூறு பேசுவார் பாடு சென்றே அணுகிலார்
எங்கள் தெய்வம் உங்கள் தெய்வம் என்றிரண்டு பேதமோ
உங்கள் பேதம் அன்றியே உண்மை இரண்டும் இல்லையே!

*என்பதும் கருதத்தக்கன.*

## இறையுண்மை

*சித்தர் சிவவாக்கியர், உயிர் உண்மையால் இறையுண்மையைத் தெளிவாக்குகிறார். வித்தில்லாத விளைவு ஒன்று இல்லை; தச்சு இல்லாத மாளிகை இல்லை; சித்தில்லாதபோது சிவன் இல்லை என மொழிகின்றார்.*

*"எங்கும் இறையாய் எல்லாம் இறையாய்க் காணும் சித்தர் இறையை ஒழித்து யான் ஒன்றையும் காணேன்; பற்றிலாத இறை பற்றில்லாத ஒன்றையே பற்றி நிற்கும்; கற்றதால் இறையைக் காண முடியுமோ? பெற்றோர்களைக் கேட்டு இதனைத் தெரிந்து கொள்க" என்கிறார்.*

## அறிந்து ஓதுதல்

*வெறுங் கல்வியால் மட்டும் இறைவனைக் காண முடியாது என்பது சிவவாக்கியர் அழுத்தமான கொள்கை! "இறைவனை அறிந்த பின்னே வேதம் என்ன? ஆகமம் என்ன? விளக்க நூல்கள் என்ன? இவையெல்லாம் கட்டி வைத்த சரக்குகள்! கதையாகச் சொல்லும் பிதற்றல்கள்" என்கிறார்?*

*இந்நூல்களை ஓதுவோரேனும் பொருளறிந்து ஓது கின்றனரா என்றால் அதுவும் இல்லையே என வருந்துகிறார் சிவவாக்கியர். அதனால்,*

"அஞ்செ ழுத்தி லேபிறந்த தஞ்செ ழுத்தி லேவளர்ந்
தஞ்செ ழுத்தை ஓதுகின்ற பஞ்ச பூத பாவிகாள்!
அஞ்செ ழுத்தில் ஓரெழுத்தை அறிந்து கூற வல்லிரேல்
அஞ்சல் அஞ்சல் என்றுநாதன் அம்ப லத்தில் ஆடுமே"

*என்கிறார்.*

*பொருளுணராது ஓதுவாரைப்,*

"பொத்த கத்தை மெத்த வைத்துப் போத மோதும் பொய்யர்"

*என்று பழிக்கிறார்.*

நூலறிவால் காண முடியாத இறைவனை எப்படிக் காண முடியும் என்பதையும் விளக்குகிறார் சிவவாக்கியர்.

“சாத்திரம் ஓதுகின்ற சட்ட நாதபட்டரே! வேர்த்து இரைப்பு வந்த பொழுதில் வேதம் வந்து உதவுமோ! ஒரு மாத்திரைப் பொழுதாவது உம் உள்ளே நோக்கைத் திருப்பி நோக்கத் தொடங்கினால் இரைப்பை நோய் உமக்கு இல்லை; சத்தியும் முத்தியும் சித்தியாகும்” என்கிறார்.

**வசையும் திட்டும்**

மிகமிகத் தெளிந்து இது பெரும்பயன் விளைவிக்கும் என்று சொல்லும் கருத்தைப் பொருட்டாக எண்ணாமல் போகின்ற பலரை வாழ்வில் காண்கிறார். அத்தகையரே மிகுதியாக இருக்கின்றனர் என்பதையும் காண்கிறார். ஒரு தாய் தன் மக்கள்மேல் கொண்ட பேரன்பால், அவர்கள் நல்வழி விடுத்து அல்வழியில் செல்லும்போது திட்டித் தீர்ப்பது இல்லையா? அத்திட்டு அழிவு நோக்கியது இல்லையே! ஆக்கம் நோக்கியது அல்லவோ! அது போல் சிவவாக்கியரும் செவியிருந்தும் கேளாது செல்வாரை நன்றாகத் திட்டுகிறார்; நேருக்கு நேர் திட்டுகிறார்: பாவிகாள்,பேதைகாள், பித்தர்காள், ஊமைகாள், பேயர்காள், தீனர்காள் என்கிறார். மூடர், பொய்யர் என்றும் சொல்கிறார். மட்டிப் பிணமாடு எனக் கொட்டித் தீர்க்கிறார். ‘வாய் புழுத்து மாய்வர்’ என்று வசையின் உச்ச நிலைக்குச் செல்கிறார். “அறுப்பனே செவியிரண்டும்” என்றும் வீறு மொழிகிறார். நல்ல வேளை! வாளால் அறுக்க முந்தாமல் ‘அஞ்செழுத்து வாளினால்’ அறுப்பதாகக் கூறுகிறார்!

பொய்யடிமைப்பட்டும், பொருளடிமைப்பட்டும் மெய்ப் பொருளைக் குழிதோண்டிப் புதைப்பதே கடப்பாடாகச் செய்யும் பூசகர்களை நினைக்கிறார் சிவவாக்கியர். அவர்கள் செய்கை அருவருப்பை ஆக்குகின்றது! வழிகாட்டியே, ஏமாற்று வஞ்சத்திற்கு வழிகாட்டியாக இருந்தால், வழிநடப்பவன் எப்படி இருப்பான் என ஏங்குகிறார். அதனால்,

“வேதம் ஓதும் வேதியா விளைந்த வாறு பேசடா”

என்கிறார். சாத்திரங்கள் ஓதுகின்ற சட்டநாத பட்டரையும் பட்டநாத பட்டரையும் சந்திக்கு இழுக்கிறார். மலமும் அழுக்கும் முடையுமே திரண்டு குருக்களாக வந்த கொடுமையைக் குத்திக் காட்டுகிறார்.

**வாய்திறத்தலும் திறவாமையும்**

*பாலுள் நெய் இருப்பதுபோல் அகத்துள் இறைவன் இருக்கிறான் என்றும், எள்ளகத்தில் எண்ணெய்போல எங்குமாகி எம்பிரான் உள்ளகத்திலே இருக்கிறான் என்றும், தென்னையில் இளநீர் சேர்ந்தது போல இறைவன் என்னுள்ளம் புகுந்து கோயில் கொண்டான் என்றும் உரைக்கிறார் சிவவாக்கியர். இந்நிலைமை ஏற்பட்டபின் தம் நிலையில் உண்டான ஒரு மாற்றத்தையும் சுட்டுகிறார் அவர்:*

"ஐயன் வந்தே என்னுளம் புகுந்து கோயில் கொண்டபின்
வைய கத்தில் மாந்தர் முன்னம் வாய்தி றப்ப தில்லையே"

*வாய் திறவாமை என்பது என்ன? நிறைநிலை ஏற்பட்ட பின் தருக்கம் செய்யவேண்டிய தென்ன இருக்கிறது? "நெஞ்சின் நிறைவில் வாய்பேசும்" என்பர். ஆனால் நெஞ்சின் நிறைவு இறைமையாகி விட்ட போது 'ஒடுக்கம்' தானே வந்துவிடும்!*

*ஆனால் ஓர் ஐயம் எழும். 'மாந்தர் முன்னம் வாய்திறப் பதில்லையே என்பவர் பாடிவைத்தது ஏன்?' என்பதே அவ்வையம். தருக்கம் செய்வோர் முன் பேசுவதில்லை; எதிரிட்டு வழக்காடுவ தில்லை என்பது தானே சிவவாக்கியர் கருத்து. ஆனால், அவர் கொண்ட தெளிவினை உலகமும் கொள்ளவேண்டும என்ற வேட்கை எழும்பியல்லவோ பாடுகின்றார்? பாடுவது உலகத்தை உய்விக்க உதவுதால் அதனைச் செய்கின்றார். தருக்கமிடுவதால் பயனில்லை என்பதைத் தெளிவாக்கிக் கொண்டதால் வாய்திறப் பதில்லை என்றார். இந்நிலை வேறு; அந்நிலை வேறு எனத் தெளிந்துகொள்க.*

**வினாவுதல்**

*கண்ணைத் தோண்டிவைத்தாலும் கண்கட்டு வித்தை என்று சொல்பவரைக் கண்டால் எவ்வளவு கொதிப்பு உண்டாகும்?*

*கண்மூடித்தனத்தைக் கட்டிப்பிடித்துக் கைகோத்துக் களிப்பதே கடவுள் வழிபாடு எனக் கொண்டு விட்டவர்களைப் பார்த்துச் சிவவாக்கியர் என்னென்ன வினாக்களைத் தொடுக் கிறார்? ஒன்றா இரண்டா?*

உடம்பு உயிர் எடுத்ததோ? உயிர் உடம்பு எடுத்ததோ?
உடம்பு உயிர் எடுத்த போது உருவம் ஏது?
உருத் தரிப்பதற்கு முன் உடல் கலந்தது எங்ஙனே?
கருத் தரிப்பதற்கு முன் காரணங்கள் எங்ஙனே?

அக்கரம் அனாதியோ? ஆத்துமம் அனாதியோ?
புக்கிருந்த பூதமும் புலன்களும் அனாதியோ?

உயிருந்த தெவ்விடம் உடம்பெடுப்ப தின்முனம்
உயிர தாவ தேதடா உடம்ப தாவ தேதடா
உயிரையும் உடம்பையும் ஒன்று விட்ட தேதடா
உயிரினால் உடம்பெடுத்த உண்மை ஞானி சொல்லடா?

*இப்படிப் பலப்பல வினாக்கள்! பலப்பல பாடல்களில் வினாக்கள்! வினாவைப்போல மெய்யுணர்வாளான் ஒருவன் உளனோ? ஒருவன் மெய்யுணர்வாளன் ஆயதே வினாவி அறிதலைக் குறிக்கோளாகக் கொண்டதால் தானே? அவ்வழியே செவ் வழியாகக் கொண்டு வினாவுதல் வழியாக விளைவுகாண முயல்கிறார் சிவவாக்கியர்.*

**சித்தரியற்கை**

*சித்தர் சிவத்தைக் கண்டவர்; சிவத்தைக் கொண்டவர்; சிவ மாயவர்; ஆதலால் அவருக்குப் பொதுமக்கள் வழிபடுதற்காக அமைத்த கோயிலைப் பற்றியோ, குளங்களைப் பற்றியோ, நீர்த் துறைகளைப் பற்றியோ, வடிவமைப்பு வழிபாட்டு நெறிகள் மந்திரங்கள் தந்திரங்கள் ஆகியவை பற்றியோ அக்கறை இல்லை. அதுவுமன்றிக் கோயில் முதலியவையும் வணிக நிலையங்கள், தொழில் கூடங்கள், சூதாட்டுக் கழகங்கள், சிறுமை ஆட்டச் செயலகங்கள் போல வீழ்ந்து பட்டுக்கிடக்குமானால் உயரத்தின் உயரத்தில் ஏறிப் பறக்கும் சித்தர்கள் பார்வையில் அவை எத்துணைத் தாழ்ந்து தோன்றும்! தோன்றும் உணர்வை எதற்காக அவர்கள் மறைத்துக் கூறவேண்டும்? நெஞ்சில் பட்டதை நேரில் கூறுவதுதானே சித்தர்கள் இயற்கை!*

*எவரைப் பசப்பிப் பேசியோ, இல்லாததைப் பொல்லாததைப் புனைந்து கூறியோ அவர்களுக்கு ஆவதென்ன? எவரிடமேனும் எதையேனும் எதிர்பார்த்து ஆகவேண்டிய நிலையிருந்தால் எத்தகைய தீமைகளையும், குறைகளையும் அரவணைத்துக் கொண்டுபோக நேரிடும். அரவணைக்க முடியாதுபோனாலும் குறைசொல்லாமல் கண்டுகொள்ளாதது போல் ஒதுங்கவேண்டி நேரும். இக்காலத்தில், பணம், பதவி, கட்சி, அரசு, பிழைப்பு, பெருமை இவற்றைக் கருதிக், கூடாத கூட்டுகள் கூடுவது இல்லையா? பாடாத பாட்டுப் பாடுவது இல்லையா? நெஞ்சைத் தொட்டுப் பார்த்துச் சொல்வார்களானால் அவர்கள் நடிப்பும்*

பரத்தைமையும் ஒவ்வொரு நாடித் துடிப்பு வழியாகவும் தோன்றும்! ஆனால் அவர்கள் நெஞ்சைத் தொட்டுப் பார்ப்பதே இல்லை. அதுமட்டுமில்லை! நெஞ்சம் ஒன்று இருப்பதாகவும் நினைப்பும் இல்லாதவர்கள் நெஞ்சை ஏன் தொட்டுப் பார்க்கிறார்கள்?

சித்தர்களுக்கு இச்சிறுநிலை இல்லையே! உள்ளத்தால் பொய்யா தொழுகும் சித்தர், உலகத்தாரைப்பற்றி - அவர்தம் நினைப்பைப் பற்றிப் பொருட்டாக எண்ணாமல் திட்டத் தெளிவாகக் கூறுகின்றனர்.

**புரட்சி**

சிவவாக்கியர் சித்தர்களுள் பெரும் புரட்சியாளர். இந்த இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலே - எல்லார்க்கும் ஒத்த உரிமை - எல்லார்க்கும் எல்லாம் - என்று மேடைதோறும் முழங்கும் நாளிலே - துணிந்து சொல்ல முடியாதவற்றை யெல்லாம் சொல்கிறார்! நேருக்கு நேர் பச்சையாகச் சொல்கிறார். அவர் சொல்வதைக் கடைப்பிடியாகப் பொதுமக்கள் கொண்டிருந்தால் சமயத்தில் இவ்வளவு அழுக்கு மூட்டைகள் தேங்கியிரா! தெய்வம் பூதம் என்று பொய்யும் புரட்டும் செய்வார் முகத்திரைகள் கிழிபட்டுப் போயிருக்கும். உண்மைச் சமயம் உயிர்த் தெழுந் திருக்கும்!

"கடவுள் இல்லவே இல்லை! கடவுளைக் கற்பித்தவன் காட்டு விலங்காண்டி!" என்றெல்லாம் கூறும் நம்பா மதம் வேண்டியிருந்திருக்காது! ஒரு மரத்தில் இருந்து மற்றொரு மதத்திற்குத் தாவும் இக்கட்டும், தாவிப் போகின்றாரே தம் சமயத்தை விடுத்து என்னும் தவிப்பும், எங்களை மதித்துப் போற்றாத மதத்தை நாங்கள் கட்டியழ வேண்டியது என்ன என்னும் கொதிப்பும் ஏற்பட்டிரா! இன்னும், குலப்பிரிவிலே கொடிகட்டி வாழமுடியும் என்னும் குள்ளமதிச் செயல் இரத்தத்தில் இரத்தமாக ஊறிப்போய்க் கிடக்கும் ஒருநிலை இல்லாதது ஒழிந்திருக்கும்! தொண்டு செய்யாத சமயத்தைக் கண்டு கொள்ள எவரும் மாட்டார் என்னும் தெளிவேனும் ஏற்பட்டுச், சோற்றுச் சமயமே சமயமாக இருக்கும் நிலைமாறி இருக்கும்! இந்நிலையில் ஏய்த்துவாழ்வோர் சித்தர் நெறியைப் போற்றவோ பரப்பவோ முன் வருவரோ? தன் அடிவயிற்றிலே இடியைக் கட்டிக் கொள்ள எவனே முந்துவான்! படித்த கூட்டம் மறைத்தது! பாழும் பத்திக் கூட்டம் பாராது ஒழிந்தது. சித்தர் நூல்கள் 'சிவமே' யாய்க் கிடந்தன! சித்தர் நெறியென ஒன்றைச்

சொல்லவும் முடியாததாய்ப் போயிற்று! நல்ல வேளையாகச் சித்தர்கள் தம் வாழ்வியல் தொண்டாகக் கொண்ட மருத்துவத் தொண்டாலும், மருத்துவ நூல்களாலும் இதுகால் உயிர்த்தெழுந்து உள்ளனர்! உலக உய்திக்குச் 'சித்த சமயம்' சீரிய சமயம் என்பது என்றோ ஒரு நாள் விளங்கும். அன்று திருவள்ளுவரும், திருமூலரும், வள்ளலாரும், சிவவாக்கியர் போல்வாரும் உலகோரால் தலைமேல் கொள்ளத் தக்கவர்களாக இருப்பர்.

இனிச் சிவவாக்கியர் புரட்சிமுறைகளை முறையே காணலாம்.

## கோயில் குளம்

கோயில் குளங்களைப் பற்றிச் சிவவாக்கியல் சொல்கிறார்:

"கோயி லாவ தேதடா குளங்க ளாவ தேதடா
கோயி லுங்கு ளங்களும் கும்பி டுங்கு லமாரே
கோயி லும்ம னத்துளே குளங்க ளும்ம னத்துளே
ஆவ தூவும் அழிவதூவும் இல்லை இல்லை இல்லையே!"

"கோயில் பள்ளி ஏதடா குறித்து நின்ற தேதடா
வாயி னால்தொ ழுதுநின்ற மந்தி ரங்கள் ஏதடா
ஞாய மான பள்ளியில் நன்மை யாய்வ ணங்கினால்
காய மான பள்ளியில் காண லாம்இ றையையே!"

என்கிறார். கோயிலில் வணங்குவதே வணக்கம்; தெப்பக் குளத்திலே குளிப்பதே குளிப்பு என்பவரை நோக்கிக் கூறுவன இவை. உள்ளத்தில் கோயிலும் குளமும் இல்லை யானால் புறத்தே தோன்றும் கோயிலும் குளமும் என்ன மதிப்புப் பெறும்! உள்ளத்தோடு வாராத வலஞ் சுற்றலுக்கும் செக்குமாடு சுற்றலுக்கும் என்ன வேற்றுமை! செக்கிரைச்சலுக்கும் ஓதுதலுக்கும் என்ன வேற்றுமை!

## கடவுள் வடிவம்

ஒருமுகப் படுத்துவதற்கு உருவம் வேண்டுவதாகலாம்; ஒளி விளக்கு வேண்டியதாகலாம்! ஆனால் அது முதல் நிலையே அன்றி, முடிநிலை இல்லை! முதல் நிலையே முடிநிலையாகவும் இருந்தால் பயன் என்ன? பாலர் பள்ளிப் பையன் படித்த புத்தகம், பட்டப் படிப்பு முடித்த பின்னரும் மாறாமல் இருந்தால் எந்தக் கிறுக்கனும் ஏற்றுக் கொள்வானோ? இந்நிலையில் இருக்கும் உலகியலை எண்ணிய சித்தர் கடவுள் உருவம் பற்றிக் கரைந்து கரைந்து பாடுகின்றார்:

"ஓசை உள்ள கல்லைநீர் உடைத்தி ரண்டாய்ச் செய்துமே
வாச லில்ப தித்தகல்லை மழுங்க வேமி திக்கிறீர்
பூச னைக்கு வைத்த கல்லில் பூவும் நீரும் சாத்துறீர்
ஈச னுக்கு கந்த கல் எந்தக் கல்லு சொல்லுமே"

*கல்லில்தான் இறைவன் இருக்கிறான் என்பதைக் கேட்டுச் சித்தருக்கு நகைப்பே வருகின்றதாம்:*

"சாவ தான் தத்துவச் சடங்கு செய்யும் ஊமைகாள்
தேவர் கல்லும் ஆவரோ சிரிப்ப தன்றி என்செய்வேன்
மூவ ராலும் அறியொணாத முக்க ணன்மு தற்கொழுந்து
காவ லாக உம்முளே கலந்தி ருப்பன் காணுமே!"

*கல்லில் மட்டுமா கடவுள் வடிவம்? எத்தனை எத்தனை வகை மாழை (உலோக) வடிவங்கள்:*

"கல்லு வெள்ளி செம்பிரும்பு காய்ந்தி டுந்த ராக்களில்
வல்ல தேவ ரூபபேதம் அங்க மைத்துப் போற்றிடில்
தொல்லை அற்றி டப்பெரும் சுகந்த ரும்மோ சொல்லுவீர்
இல்லை இல்லை இல்லை ஈசன் ஆணை இல்லையே!"

*புறக்கோலமே கோலமாகக் கொள்ளும் பொய்யடியார்களையும், போலியடியார்களையும், புனைவடியார்களையும் பார்க்கிறார் சிவவாக்கியர். மனம் புழுங்குகிறார். இவர்கள் சட்டியாகவும் சட்டுவமாகவும் இருக்கிறார்களே ஒழிய உணர்வுடையவர்களாக இவர்கள் இல்லையே! கறிச் சுவையைச் சட்டி அறியுமா? சட்டுவம் அறியுமா? அவற்றுக்கும் கறிக்கும் உள்ள தொடர்பென்ன? ஒட்டாத் தொடர்பு தானே! இவர்கள் நிலையும் அப்படித்தானே இருக்கிறது! இறைவன் தம் உள்ளே இருக்கிறான் என்னும் உண்மையை உணராமல் கைகட்டி வாய்பொத்தி, தலைகுட்டி நிலம்பட வீழ்ந்து பூவை எறிந்து நாவைத் திறந்து வழிபடுவதால் என்ன பயன் விளையப்போகிறது என்று எண்ணிப் பாடுகிறார்:*

"நட்ட கல்லைத் தெய்வ மென்று நாலு புட்பம் சாத்தியே
சுற்றி வந்து மொணமொ ணென்று சொல்லும் மந்த்ரம் ஏதடா
நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளி ருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சு வைய றியும்மோ?"

*நட்ட கல்லைத் தெய்வம் என்று கொள்ளக் கூடாது என்றவுடன் தெய்வமே இல்லை என்பவர் சிவவாக்கியர் என்னும் முடிவுக்குப் போய்விடுதல் முற்றிலும் முரண்பட்டதாம்! அவர் சொல்லலாம் - நட்ட கல்லைத் தெய்வம் அன்று என்று! ஏனெனில் அவர் "உள்ளே நாதன் இருக்கிறான் என்பவர் உள்ளேயே நாதன் இருக்கும்போது வெளியே தேடவேண்டியது என்ன? அது உள்ளே இருந்து பேசும் பேச்சைத் தாம் பேசுவதாக இருக்கும் போது 'நட்ட கல் பேசும்' என்று ஏன் எதிர்பார்க்க வேண்டும்? முற்ற முதிர்ந்த முழுநிறை நிலையில் ஒருவர் பேசும் பேச்சை அவர் நிலையில் முற்றவும் நெருங்காததுடன் முற்றிலும் மாறுபட்டுச் செல்பவர், வேண்டும் சொல்லை மட்டும் எடுத்துக்கொண்டு வேண்டுமாறு பொருள் செய்து கொள்வதால் தம் அறியாமையை அழுத்தமாகக் காட்ட முடியுமேயன்றி அறிவாளித் தன்மையை எள்ளத்தனையும் காட்டியதாகாதாம். அவர் எறிநின்ற படி எங்கே? இவர் வீழ்ந்து பட்ட சறுக்கல் எங்கே?*

**எங்கும் ஓர் இறை**

*இனிச் சிலர் "இந்தக் கோயில்தான் சிறந்தது; அந்தக் கோயில் தான் சிறந்தது; இந்தக் கோயில் தெய்வம்தான் துடியானது; கேட்டதைக் கேட்டபடி அருள்வது; கண்ணாரக் காட்சிதரும் தெய்வம் இந்தக் கோயிலில் உள்ளதுதான்" என்று அவரவர் மனம் வந்தவாறு கூறுவதுண்டு! அதற்காக அலைபாய்ந்து திரிவதும் உண்டு. "தெய்வம் ஒன்றென்றிரு! தெய்வம் உண்டென்றிரு" என்பவர்கள் அப்படி அலைந்து அலைக்கழிவரோ? எங்கும் உள்ள தெய்வம் அங்கும் உண்டு' என்று அமைவர். இடவேறுபாடு, தெய்வ ஆற்றல்வேறுபாடு காட்டித் திரிவாரை நோக்கிச் சித்தர் சிவவாக்கியர் சொல்கிறார்.*

"இந்த ஊரில் இல்லை என்று எங்கு நாடி ஓடுறீர்
அந்த ஊரில் ஈசனும் அமர்ந்து வாழ்வ தெங்ஙனே"

"எங்கும் எங்கும் ஒன்றலோ ஈரேழ் லோகம் ஒன்றலோ
அங்கும் இங்கும் ஒன்றலோ அனாதி யான தொன்றலோ
தங்கு தாப ரங்களும் தரிந்த வாற தொன்றலோ
உங்கள் எங்கள் பங்கினில் உதித்த தேசி வாயமே."

**வஞ்சவேடம்**

*வேட்டைக்குச் செல்பவர்கள் எந்தப் பறவையை அல்லது விலங்கை வேட்டையாட வேண்டுமோ, அதன் ஒலியைப்போல*

*ஒலிப்பர்; ஒலிகேட்டு இணைசேரும் விருப்பால் நெருங்கி வரும். உடனே அதனைத் தாக்கிப் பற்றிக்கொள்வர். அவ்வேடர் தன்மையைப் போலவே மந்திர வேடர்களும் உள்ளனர் என்பதை உரைக்கிறார் சிவவாக்கியர். திருவள்ளுவர், 'கூடா ஒழுக்கம்' என ஓர் அதிகாரம் வகுத்துள்ளார். அதில் பொய்த் துறவிகளின் புன்மைகளை யெல்லாம் வெளிப்படுத்தி யுரைக்கிறார். அவற்றுள் ஒன்று.*

> "தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
> வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று"

*என்பதாம்.*

*வஞ்ச நெஞ்சத்தார் ஊரை ஏமாற்றுவதற்காகச் சொல்லும் மந்திரம். மணிமாலை உருட்டல் முதலியவற்றின் சிறுமையைச் சுட்டுகிறார் சிவவாக்கியர்:*

> "கூட்டி மெள்ள வாய்பு தைத்துக் குணுகு ணுத்த மந்திரம்
> வேட்ட காரர் குசுகுசுப்பைக் கூப்பி டாக முடிந்ததே.
> "கைவ டங்கள் கொண்டுநீர் கண்சிமிட்டி நிற்கிறீர்
> எவ்வி டங்கள் கண்டுநீர் எண்ணி எண்ணிப் பார்க்கிறீர்
> பொய்யி றந்த சிந்தையைப் பொருந்தி நோக்க வல்லிரேல்
> மெய்க டந்த தும்முளே விரைந்து கூடல் ஆகுமே."

**மந்திரம் ஓதுதல்**

*மந்திரத்தின்மேல் மட்டற்ற ஆர்வம் கொண்டுளர். ஏன்? மோகமே கொண்டுளர்! மதுக்குடியில் எவ்வளவு வெறி வைத்துளரோ அவ்வளவு வெறிவைத்துளர்! மந்திரம் என்ன மரத்தில் ஊறிய கள்ளாகவோ உள்ளது? மந்திரம் என்பது மூலநாடியை முறைப்படி செலுத்தி நிலை பெறுத்துவதேயாம்! அந்த மந்திரத்தைக் கைவரப் பெற்றவர்க்கு உலகவரை மயக்கிப் போலித் தன்மையால் பெறவேண்டிய மானம் என ஒன்று இல்லை:*

> "மந்தி ரங்கள் உண்டுநீர் மயங்கு கின்ற மானிடீர்
> மந்தி ரங்கள் ஆவது மரத்தில் ஊறல் அன்றுகாண்
> மந்தி ரங்கள் ஆவது மதர்த்தெ ழுந்த வாயுவே!
> மந்தி ரத்தை உண்டபேர்க்கு மானம் ஏதும் இல்லையே."

## அழுக்கு

அறம் என்பது யாது? என்னும் வினாவுக்கு அடிமூலந் தொட்டு முறையுரைத்தார் திருவள்ளுவர். அது "மனத்துக்கண் மாசிலனாதல்" என்பது! 'மனமாசு' இல்லாமையே அறம் என்ற வள்ளுவர், மன மாசுகள் எவை என்பதையும் எண்ணிச் சொன்னார். "அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல்" என்னும் நான்கும் மனமாசுகள் எனத் தெளிவித்தார். மன மாசு அகலாதார் நாளைக்கு முப்பொழுது நறுநீர் ஆடினாலும் பயன் என்ன?

"புறத்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை வாய்மை யால் காணப்படும்" என்பது அறமாகப் புறநீர்மை விரும்பி விரும்பிச் செய்து, அகநீர்மையை அழிக்கும் செயலை அதனினும் விரும்பி விரும்பிச் செய்தால் அவர் கொள்ளும் நன்மையென்ன? பிறர் கொள்ளும் நன்மையென்ன? அழுக்குச் சேற்று நீரிலே வீழ்ந்து குளித்து வீதியில் போனால் அவனுக்கு மட்டுமோ நாற்றம்? வீதியையும் நாறவைக்கும் 'நோன்பு' மேற்கொண்டதாக வல்லவோ ஆய்விடும்?

அகத்தழுக்கு (மனமாசு) அகற்றுதலே, அகத்தழுக்கு அணுகாத இறையோடு அணுகி வாழ வகை செய்யும் என்று சிவவாக்கியர் கூறுகின்றார்.

"அழுக்க றத்தி னங்குளித் தழுக்க றாத மாந்தரே
அழுக்கி ருந்த தவ்விடம் அழுக்கி லாத தெவ்விடம்
அழுக்கி ருந்த அவ்விடத் தழுக்கறுக்க வல்லிரேல்
அழுக்கி லாத சோதியோ டணுகி வாழ லாகுமே."

## நீராட்டம்

நீராட்டால் மட்டும் நின்மலனை அடைய முடியாது என்பதை உவமையால் தெளிவிக்கிறார் சிவவாக்கியர். தவளை தண்ணீருள் தானே எப்பொழுதும் கிடக்கிறது? அதன் அழுக்குப் போய்விட்டதா? அழுக்கே போய்விட்டது என்றாலும் புற அழுக்குத் தானே போனது? அதற்கு மெய்யுணர்வுத் தலைப்பாடு உண்டாயிற்றில்லையே! அது நீரிலே எப்பொழுதும் கிடந்து, ஓயாமல் ஒலித்துக் கொண்டிருப்பதற்கும் மூன்றுவேளையும் நீராடி அழுக்கறாதவன் மந்திரம் முணுமுணுத்துக் கொண்டிருப் பதற்கும் என்ன வேற்றுமை?

"காலை மாலை நீரிலே முழுகும் அந்த மூடர்காள்
காலை மாலை நீரிலே கிடந்த தேரை என்பெறும்?
கால மேஎ ழுந்திருந்து கண்கள் மூன்றில் ஒன்றினால்
மூல மேநி னைப்பிராகில் முத்தி சித்தி ஆகுமே!"

இதனை,

"முகத்துக் கண் கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
அகத்துக் கண் கொண்டு காண்பதே ஆன ந்தம்"

என்பார் திருமூலர். சிவவாக்கியர் 'கண் மூன்றில் ஒன்றினால்' என்று அகக் கண்ணைச் சுட்டுகிறார். அகக் கண்ணாவது புருவ நடுவில் அமைந்த 'சுழிமுனை' அல்லது நெற்றிக் கண்ணாம்!

மெய்யுணர்வு இல்லாதார், மேனி அழுக்குப் போக்கி ஆகும் பயன் இல்லை என்றார். அழுக்குப் போக்காமல் நாறிக் கிடக்க வேண்டும்; அதுவே நண்பனை அடையும் வழி என்பதோ சிவவாக்கியர் கருத்து என எவரும் எண்ணார். அக அழுக்குப் போக்காமல் புற அழுக்கைப் போக்கிக் கொண்டிருத்தலால் பயனில்லை. ஈரழுக்குகளையும் போக்கி இன்பம் எய்துக என்பதே அவர் உரையாம். நல்லொழுக்கத்தில் தலையாயது நாட்காலை நீராடல் என்பது நம்மவர் கொள்கை! ஆனால் அஃதொன்றே என்று கொண்டு நீராடுதலை மட்டும் தவறாமல் செய்து நீர்மையில்லாச் செயல்களிலேயே சென்றால் நீராடு தலால் பயன் உண்டா? நீராடுதலே பிறரை ஏமாற்றுதற்குச் செய்யும் செயல் என்றாகி விடுமல்லவா!

**குடமுழுக்கு**

இனி, இறைவன் திருவுருவுக்கு நீராட்டுதலால் - குடம் குடமாக நீர் விட்டு - நீராட்டுதலால், பாலும் பழச்சாறும் பாகும் தேனும் பிறவும் விட்டு முழுக்காட்டுதலால் பயனுண்டோ? என்பதையும் சிவவாக்கியர் சொல்கிறார்.

சுமக்கமாட்டாத குடங்களில் நீர்எடுத்து, ஏற மாட்டாத உயரத்தில் இருக்கும் கோயிலுக்குக் கொண்டு சென்று குளிப்பாட்டுதல் இல்லையா! உடல்நலம், உளநலம், உயிர்நலம் எல்லாம் ஒருங்கே தரக்கூடிய அச்செய்கையும் உணர்வோடும் வாராக்கால் என்ன பயன்? மெய்ப்பொருள் உணர்வின்றிப் பொய்ச் செயலாக இருக்குமானால் அதனைச் செய்தால் என்ன? செய்யாமல் ஒழிந்தால் என்ன? இவை சிவவாக்கியர் சிந்தனை!

*தாம் குளிக்கும்போதே, குளிக்கும் அந்நீரை அள்ளியே இறைவனை எண்ணி நீரைத் தெளிப்பது ஒரு வழிபாடு! குளித்த பின்னர் ஈரவுடையுடன் நீர்க்குடம் தூக்கிச் சென்று முழுக் காட்டுதல் மற்றொரு வழிபாடு! இரண்டையும் பேசுகிறார் சிவவாக்கியர்.*

"நீரை அள்ளி நீரில்விட்டு நீர்நி னைந்த காரியம்
ஆரை உன்னி நீரெலாம் அவத்தி லேஇ றைக்கிறீர்?
வேரை உன்னி வித்தை உன்னி வித்தி லேமு ளைத்தெழுந்த
சீரை உன்ன வல்லிரேல் சிவப தங்கள் சேரலாம்"

"அள்ளி நீரை இட்டதேது அங்கை யில்கு ழைத்ததேது
மெள்ள வேமி ணமிணென்று விளம்பு கிற்கு மூடர்காள்
கள்ள வேடம் இட்டதேது கண்ணை மூடி விட்டதேது
மெள்ள வேகு ருக்களே விளம்பி டீர்வி ளம்பிடீர்"

**புனைகோலம்**

*நீராட்டம் வழிபாடு என்று போனாலும் எத்தனை எத்தனை அணிகலங்கள்! ஆடைகள்! பூச்சிகள்! புனைவுகள்! கொம்பை விட்டு வாலைப் பிடித்தல் போலக் கொள்கை இல்லாக் கொள்கைகள். இவற்றையும் சுட்டுகிறார் சித்தர்:*

"குண்ட லங்கள் பூண்டுநீர் குளங்கள் தோறும் மூழ்குறீர்
மண்டு கங்கள் போலநீர் மனத்தின் மாச றுக்கிலீர்
மண்டை ஏந்து கையரை மனத்தி ருத்த வல்லிரேல்
பண்டை மால்அ யன்தொழப் பணிந்து வாழ லாகுமே"

*வண்டின் எச்சிலாகிய தேனைப் பொழிந்து வழிபாடு செய்வதையும், மண்குடத்து நீரை மலைமேல் கொண்டு சென்று தலைமேல் கொட்டுவதையும் குறித்துக் கூறுகிறார்.*

"மாறு பட்ட மணிதுலக்கி வண்டின் எச்சில் கொண்டுபோய்
ஊறு பட்ட கல்லின்மீதே ஊற்று கின்ற மூடரே"

"மண்கி டார மேசுமந்து மலையுள் ஏறி மறுகிறீர்
எண்ப டாத காரியங்கள் இயலு மென்று கூறுநீர்
தம்பி ரானை நாள்தோறும் தரையி லேத லைபடக்
கும்பி டாத மாந்தரோடு கூடி வாழ்வ தெங்ஙனே?"

*தரையிலே தலைபட வழிபடல் என்பதென்ன? மண்ணை வணங்குதல்! மண் என்பது என்ன? மண்ணுலகத்து உயிர்களை யெல்லாம் மதித்துப் போற்றி இருத்தல். ஏன்? இறைவன் உயிரகத் தெல்லாம் உயிராக இருப்பவன் அல்லனோ? கண்கண்ட உயிர்களைப் போற்றி உதவியாக வாழாத ஒருவன் - உயிர்களின் நல்வாழ்வுக்காக உருகாத ஒருவன் - கண்ணீர் வடித்துக் கடமை புரியாத ஒருவன் - கடவுள் சிலைமேல் தண்ணீர் விட்டுக் கழுவியதால் பயன் என்ன? என்பாராய் இவ்வாறு சுட்டினார்.*

*சிவவாக்கியர் தாம் காணும் 'தீர்த்தம்' ஒன்றைக் குறிப்பிடுகிறார். அஃது அஞ்செழுத்துத் தீர்த்தமாம்.*

"தீர்த்தம் ஆட வேண்டுமென்று தேடு கின்ற தீனர்காள்
தீர்த்தம் ஆடல் எவ்விடம் தெளிந்து நீர் இயம்பிலீர்
தீர்த்த மாக உம்முளே தெளிந்து நீர்இ ருந்தபின்
தீர்த்த மாக உள்ளதும் சிவாய அஞ்செ ழுத்துமே!"

*மெய்ப்பொருள் நாயனாரைக் காண்பதற்கு முத்தநாதன் வந்தான். அவன் மனத்திலே கறுப்பு இருந்தது; உடையிலோ காவிச் சிவப்பு இருந்தது. திரிவிளக்கு எரியும்போது திரியை ஒட்டிக் கறுப்பும் அதன்மேல் சிவப்பும் தெரிவது இல்லையா! அதுபோல் அவன் தோன்றினான்! அவன் உடல் முழுவதும் திருநீறு; தலையில் சடை; கையில் சுவடியைப்போல் மறைத்து வைத்திருந்த வாள்; இதுதான் அவன் பொய்க்கோலம்! அக் கோலம் என்ன செய்தது? அடியார் கூட்டத்திற்கே அகலாப் பழியாய் என்றும் இருக்குமாறு மெய்ப்பொருள் நாயனாரைக் குத்திக் கொடும்பழி தேடிக்கொண்டது! பசுவாகவே தோன்றினால் குற்றமில்லை - உண்மை தெரியும்! புலியாகவே இருந்தாலும் குற்ற மில்லை - உண்மை தெரியும்! ஆனால் பசுத்தோல் போர்த்த புலியாக இருந்தால் எவ்வளவு கேடு? நம்பவைத்து நயமாகக் கேடு செய்துவிடுமல்லவா!*

*அடியார் கோலங்கொண்டு ஆகா வழியில் செல்வாரைச் சிவவாக்கியர் வன்மையாகக் கண்டிக்கிறார்; உள்ளொன்று வைத்துப் புறமொன்று காட்டுவாரை உள்ளார வெறுக்கிறார்.*

"பிறந்த போது கோவணம் இலங்கு நூல்கு டுமியும்
பிறந்து டன்பி றந்ததோ பிறங்குநாள் சடங்கெலாம்"

*என்கிறார்.*

"காவி யும்ச டைமுடி கமண்ட லங்கள் ஆசனம்
தாவு ருத்தி ராட்சம் யோகத் தண்டுகொண்ட மாடுகள்
தேவி யைஅ லைய விட்டுத் தேசம் எங்கும் சுற்றியே
பாவி யென்ன வீடெலாம் பருக்கை கேட்டு அலைவரே."

*மனைவி மக்களை அலைய விடுகிறார்களாம்! நாடு நாடாக அலைகிறார்களாம்; 'பாவி பாவி' என்று பலரும் திட்டப் பழிச்செயல் புரிகின்றார்களாம்; வீடுதோறும் பருக்கை (சோறு) கேட்டு அலைகின்றார்களாம்! இந்தப் பிழைப்பு என்ன பிழைப்பு என்று சுட்டுகிறார் சிவவாக்கியர்.*

**தேர்த்திருவிழா**

*அடியார் வேடமிட்டு அலைக்கழிவு செய்வதை மட்டும் சித்தர் சொல்லி நிற்கவில்லை! தேர்த்திருவிழா என்னும் பெயராலும், எழுந்திருத்து ஊர்வலம் என்னும் பெயராலும் எவ்வளவு வீண்கள்! வேடிக்கைகள்! இவற்றையும் தெளிவாக்கு கிறார்.*

"ஊரிலுள்ள மனிதர்காள் ஒரும னதாய்க் கூடியே
தேரி லேவ டத்தை விட்டுச் செம்பை வைத்தி ழுக்கிறீர்
ஆரி னாலும் அறியொணாத ஆதி சித்த நாதரை
பேதை யான மனிதர் பண்ணும் பிரளி பாரும் பாருமே!"

*பிரளியாவது பிரட்டு என்னும் புரட்டு! 'தலைப் பிரட்டு' என்பது இல்லையா? அதுபோல் இது சமயப் பிரட்டு என்க.*

**ஊனும் உணவும்**

*இன்னும் சிலர், உண்ணாநோன்பு கொள்வதால் இறையருள் எய்தலாம் என்றும், சருகு காய் கனி உண்பதால் இறையருளைப் பெறலாம் என்றும், புலவூண் கொள்ளாமையால் இறையருளை அடையலாம் என்றும் கருதியிருக்கின்றனர். இவற்றைப் பற்றிய தம் கருத்தைச் சிவவாக்கியர் தெளிவிக்கிறார்.*

"சருக ருந்தி நீர்குடித்துச் சாரல் வாழ்த வசிகாள்
சருக ருந்தில் தேகங்குன்றிச் சஞ்சலம் உண் டாகுமே!
வருவி ருந்தோ டுண்டுடுத்தி வளர்மனை சுகிப்பிரேல்
வருவி ருந்தோன் ஈசனாகி வாழ்வ ளிக்கும் சிவாயமே"

*"மலைகளிலும் காடுகளிலும் வாழ்ந்து சருகு முதலியவற்றை உண்டு நீர்குடித்து வாழும் துறவிகளே, சருகை உண்ணுதலால்*

உடல் வலுக்குறையும்; உடல்வலுக்குறைய உளநிலை குன்றும்; உளநிலை குன்ற உணர்வு நிலை மங்கும்; இவற்றால் கண்ட நலம் என்ன? ஆனால், மனைக்கண் இருந்து விருந்துகளைப் பேணிப் பிறருக்கும் உதவியாக நீவிர் வாழ்ந்தால் இறைவனே நும் விருந்தாளியாக வந்து சேர்வானே" என்கிறார்.

புலாலுண்ணாமையால் இறைவன் திருவருளைப் பெறலாம் என்பாரைப்பார்த்து,

"புலால்புலால் புலால்அ தென்று பேதமைகள் பேசுறீர்
புலாலை விட்டு எம்பிரான் பிரிந்தி ருந்த தெங்ஙனே;
புலாலு மாய்ப்பி தற்றுமாய்ப் பேருலாவும் தானுமாய்ப்
புலாலிலே முளைத்தெழுந்த பித்தன் காணும் அத்தனே"

என்கிறார்.

புலாலை விரும்பியுண்ணும் வேடனாய், புலாலைச் சுவைத்துச் சுவைத்துப் படைத்த திண்ணன் இறைவன் அருள் கூடலால் 'கண்ணப்பன்' ஆனானே! கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டு "அழுது ஆழுது அரனடி அடைந்த அடியாரும்" அவன் புகழ் பாடினரே! அவ்வாறாகப் புலாலுண்ணல் குற்றமாகிப், புலாலுண்ணாமை மேன்மையாகிவிடுமா? புலாலைக் கடந்து நிற்பது மெய்ப்பொருள் நாட்டம் எனக் கண்ணப்பர் வரலாற்றால் அறியலாம்.

ஆனால் சிவவாக்கியர் அந்த மேலோட்டச் சான்றில் தலைப்பட வில்லை. அவர் தம் வழக்கம் போல் மூலத்திற்குச் சென்று முடிச்சை அவிழ்த்து விளக்கம் காட்டுகிறார்.

புலால் என்பது என்ன? உடல் - ஆம்! உயிர் தங்குதற்கு இடமாம் உடல்! உயிர் உறையும் உடலாம் புலாலை விட்டு இறைவனை வேறு எங்கே தேடிக் காண்கிறீர்! புலாலை விட்டுப் பிரியாத இறைவனை அதனை ஒழித்து எங்கே உங்களால் காண முடியும்? அவனே புலாலில் முளைத்தெழுந்த பித்தன்! உங்கள் புலால் பேச்சை விடுங்கள் என்கிறார்.

அவ்வாறானால் புலால் உண்க என்கிறாரா? அவர் புலால் உண்டாரா? இல்லை! புலாலுண்ணாமை ஒன்றே இறையருளைப் பெறுதற்கு வழியென்று அதனைக் கடைப்பிடித்து மற்றை ஈவு இரக்கம் துணை தொண்டு எவற்றிலும் ஈடுபடாமல இருப்பார்க்கு அறிவு கொளுத்துதற்காகப், புலாலுண்ணாமையைப் போற்றும் நீங்கள் புலாலை இடமாகக் கொண்ட உயிர்களுக்கு எல்லாம்

*இரங்குங்கள்; அவ்வுடல்களிலெல்லாம் இறைவன் உள்ளான்; அவ்வுயிர்களுக்கு நலஞ் செய்வதே இறை வழிபாடு என்று கூறினாராம்.*

*இரத்தத்தில் இருந்து பிரிந்து வந்த பாலை உண்டு வளர்ந்தவர்கள் புலாலை உண்டதில்லை என்று சொல்லலாமா? என நகையாடுகிறார்:*

"உதிர மான பால்குடித் தொக்க நீர்வ ளர்ந்ததும்
இதர மாக இருந்த தொன்றி ரண்டு பட்ட தென்னலாம்
மதிர மாக விட்ட தேது மாமிசம் புலால்அதென்று
சதிர மாய்வளர்ந்த தேது சைவ ரான மூடரே!"

*"மீன் இறைச்சி தின்றதில்லை என்னும் வேதியர் மீன் இருக்கும் நீரிலே மூழ்குவதும் அதனைக் குடிப்பதும் இல்லையோ?*

*மான் இறைச்சி தின்றதில்லை என்னும் வேதியர் மான் தோலை அல்லவோ மார்பில் நூலாக அணிகின்றனர்!*

*ஆட்டிறைச்சி தின்றதில்லை என்பவர் வேள்வியில் படைப்பது ஆட்டிறைச்சி அல்லவோ!*

*மாட்டிறைச்சி தின்றதில்லை என்பவர் பயிர் வகைக்கு உரமாக இடுவது மாட்டிறைச்சி அல்லவோ!"*

*இப்படி அடுக்கடுக்காக வினாக்களை எழுப்பி விடையிறுத்து நகையாடுகிறார்.*

**பலியிடல்**

*நேர்த்திக்கடன் காரணமாக ஆடு கோழிகளைக் காவு தருவதைக் கண்டிருக்கிறார் சிவவாக்கியர்! நீங்கள் எந்தத் தெய்வம் அருள் செய்யும் என்று பலி தருகின்றீர்களோ; அதே தெய்வம் உங்களை உண்மையாக உருக்குலைக்கும்; மூஞ்சூராக உங்களைப் பிறக்க வைக்கும் என்று வசை மொழிகின்றனர்:*

"தங்கள் தேகம் நோய்பெறின் தனைப்பி டாரி கோயிலில்
பொங்கல் வைத்து ஆடுகோழிப் பூசைப் பலியை இட்டிட
நங்கச் சொல்லும் நலிமிகுந்து நாளும் தேய்ந்து மூஞ்சூராய்
உங்கள் குலதெய்வம் உங்கள் உருக்கு லைப்ப துண்மையே!"

**பேயும் பேயரும்**

*சிறு தெய்வப் பலியைக் கண்டிக்கும் சிவவாக்கியர் பேய் என்று பிதற்றுபவர் பேயர் என்கிறார். பேய் உங்களைப் பூசை*

கேட்டதா? பிடாரி உங்களைப் பூசை கேட்டதா? உங்கள் உடலுக்குள்ளேதான் பேய் உள்ளதேயன்றி வேறு எங்கே உள்ளது என்கிறார்.

"பேய்கள் பேய்கள் என்கிறீர் பிதற்று கின்ற பேயர்காள்
பேய்கள் பூசை கொள்ளுமோ பிடாரி பூசை கொள்ளுமோ
ஆதி பூசை கொள்ளுமோ அனாதி பூசை கொள்ளுமோ
காய மான பேயலோ கணக்க றிந்து கொண்டதே"

வழிபாட்டு நெறியில் புரட்சி காணும் சித்தர் சிவவாக்கியர் வாழ்வியல் நெறிபற்றியும் அழுத்தமாகவே சிந்திக்கிறார். சிந்தித்துக் கண்ட தெளிவைச் செவ்வையாக மக்கள் மையத்தில் வைக்கிறார்.

**குலப் பிரிவு**

மனித இனத்திற்குப் புற்றுநோய் போலப் புரையோடிக் கிடக்கும் கொடுமையானது சாதிப் பிரிவு! "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்றாலும், "ஒன்றே குலம்" என்றாலும், "நல்ல குலமென்றும் தீய குலமென்றும் சொல்லளவல்லால் பொருளில்லை" என்றாலும், "சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால், நீதி வழுவா நெறி முறையில் - மேதினியில், இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்" என்றாலும் ஆழப் படித்தவர்களும் விட்ட பாடில்லை; அறிவறிந்து படித்தவர்களும் அசைந்த பாடில்லை!

நந்தனாரையும் பாணாழ்வாரையும் கோயில்களிலே வழிபடத் தக்கவர்களாக வைத்துக் கொண்டும் அவ் வினத்தவர் களைத் தீண்டாதவர்களாக்கித் தங்களைத் தீட்டுப்படுத்திக் கொண்ட 'பெரியவர்கள்' நா அசைந்தால் நாடசையும் என்ற நிலை இருந்தது. இன்றும் அந்த நிலை மாறிற்றில்லை.

சாதிப் பிரிவு செய்வது சழக்கு என்று எண்ணாமல் சால்பு என்று எண்ணி அதனை "வருணாசிரம தருமம்" என்னும் முத்திரை குத்தி, அதனை விரித்துரைக்கும் நூலை "மனு தரும சாத்திரம்" என்றும் நாணமின்றித் தம்பட்டம் அடித்துக்கொண்டு இருந்தனர். இன்றும் அந்நிலை மாறாதும் இருக்கின்றனர்.

'உயிர்தொறும் ஒளித்து நின்ற வஞ்சக் கள்வன்' இறைவன் என்று சொல்லிக்கொண்டே உயிர்களில் தலையாய உயிராம் மாந்தருள் சிலரைத் தீண்டத்தகாதவர் என்று ஆக்கிக் கோயில் வழிபாட்டுக்கும் கூட உரிமையற்றவராகச் செய்த கொடுமை

இந்த நாட்டில் உண்டு. கண்படுதலும் தீட்டு என்னும் கயமையும் கால் கொண்டு செழித்ததுண்டு.

இந்நிலையில் சித்தர்களோ மாந்தர் அனைவரும் ஒத்தவர் களே; உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் என்று பிரித்தல் அறிவறியாத் தனமே அல்லது ஏய்த்துப் பிழைக்கும் நரித்தனமே எனக் கண்டு கடிந்தனர். அவ்வாறு கடிந்து கூறியவருள் தலையாயவர் சிவவாக்கியர் எனின் முற்றிலும் தகும். அவர், அவர்தம் வழக்கம் போலவே சாதிக் குறும்பின் ஆணி வேரை அசைத்துப் பிடுங்கி வெந்நீர் விட்டுப் பார்க்கிறார்! ஆனால், அவர் வாக்கையே கப்பென்று அடைத்து விடுதலில் கை தேர்ந்தவர்களாகத் தந்நலத்தார் இருந்ததால் பொதுமக்கள் காதுகளில் அவர் சொல் விழாமலே போயிற்று. அப்படியே விழுந்திருந்தாலும் மிதிபடுபவனே, மிதிப்பவன் செயல் ஆண்டவன் கட்டளை, அறத்தின் தீர்ப்பு, தலைவிதி என்று கொண்டுவிட்ட நாட்டிலே என்ன மாற்றத்தைக் கண்டுவிட முடியும்?

சிவவாக்கியர் பேசுகிறார்:

“சாதி யாவ தேதடா?” என்கிறார். ‘சாதி இல்லை’ என்பது எதனால் என்றால் விளக்குகிறார்: எல்லாரும் பிறப்பதுபோல் தானே தாழ்த்தப்பட்டவர்களும் பிறக்கின்றனர். அவர்கள் மட்டும் வேறு வகையிலா பிறக்கின்றனர்! அல்லது உயர்ந்தவர்கள் என்னும் இனத்தார், எவருக்கும் இல்லாத வியப்பானதொரு முறையில் பிறக்கின்றனரா?

எல்லாரும் சலம் திரண்ட நீரில்தாம் பிறக்கின்றனர்; எல்லார் பிறப்பு வாயிலும் ஒன்றுதான்; முறைமையும் ஒன்றுதான்!

காதில்போடும் வாளி உண்டு; காரை உண்டு; கம்பி உண்டு; காலில் போடும் பாடகம் சிலம்பு உண்டு; எல்லாமும் பொன்தானே! அவை வேறு அணிகலமாக இருந்தாலும், அவற்றின் மூலப் பொருள் பொன்தானே! இவற்றுள் உயர்வு தாழ்வு மேல் கீழ் சொல்ல முடியுமோ?

“காதில் வாளி காரை கம்பி பாடகம்பொன் ஒன்றலோ
சாதி பேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையே”

பறைச்சி என்று சிலரைத் தாழ்த்தி வைத்ததென்ன? பனத்தி (பார்ப்பனத்தி) என்று சிலரை உயர்த்தி வைத்ததென்ன?

இறைச்சி தோல் எலும்பு இவற்றில் இது பறைச்சிக்குரியது; இது பனத்திக்குரியது என அடையாளமேதும் உண்டோ?

*இன்னும் சொன்னால், பறைச்சியோடு கூடிக் கொஞ்சிக் குலாவுவது ஒருவகையோ? பனத்தியோடு கூடிக் கொஞ்சிக் குலாவுவது என்ன ஒரு தனிவகையோ? அறிவிருந்தால் இவற்றை எண்ணிப் பார்க்க வேண்டாவா? என்கிறார் சிவவாக்கியர்.*

"பறைச்சி யாவ தேதடா பனத்தி யாவ தேதடா
இறைச்சி தோல்எலும்பினும் இலக்க மிட்டி ருக்குதோ?
பறைச்சி போகம் வேறதோ? பனத்தி போகம் வேறதோ?
பறைச்சி யும்ப னத்தியும் பகுந்து பாரும் உம்முளே! "

*இவ்வளவு சொன்னதும் போதாது என்னும் எண்ணத்தால் மேலும் சொன்னார் சிவவாக்கியர்:*

*எருமையும் பசுவும் கூடிக் கலப்பதில்லை; ஏனெனில் வேறு வேறு இனமானவை அவை!*

*ஒருவேளை அவை கலந்தாலும் அவற்றின் கரு வேறு பாடான ஓர் உருவையே ஆக்கும். ஆனால், வேதியன் ஒருவனும் புலைச்சி ஒருத்தியும் கூடிக் கலந்தால் வேறுபாடாகக் குழந்தை பிறப்பதில்லையே; இதைக் கண்டேனும் சாதி சாதி என்று சாவும் சண்டாளர்க்கு அறிவு வரக்கூடாதா? என்று வருந்துகிறார்.*

"மேதி யோடும் ஆவுமே விரும்பி யேபு ணர்ந்திடில்
சாதி பேத மாய்உருத் தரிக்கு மாறு போலவே
வேதம் ஓது வானுடன் புலைச்சி சென்று மேவிடில்
பேத மாய்ப்பி றக்கிலாத வாற தென்ன பேசுமே."

*பகவன் என்னும் பார்ப்பனனும், ஆதி என்னும் புலைச்சியும் கூடிப் பெற்ற பிள்ளைகளே திருவள்ளுவர் ஔவையார் முதலியோர் என்னும் கதை விரித்தவர்களேனும் சாதி ஒழிப்புக் கொடியைத் தூக்கியிருக்க வேண்டுமே! எள்ளல் கதை சொல்லி இழிவாக்குவதற்கல்லவோ அவர்கள் உணர்வு பயன்பட்டுள்ளது. பயன்பாட்டு வழியில் சென்றிருந்தால் சாதியின் முடை நாற்றம் இன்றுவரை போகாதிருக்காதே!*

"சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்"

*என்று பாப்பாவுக்கும்,*

"இருட்டறையில் உள்ளதடா உலகம் சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின் றானே"

*என்று வளர்ந்தோர்க்கும் பறையறைந்த பின்னரும், வடக்கே காந்தியும், தெற்கே பெரியாரும் வரிந்து கட்டிக் கொண்டு பாடுபட்ட பின்னரும் வாண வேடிக்கை காட்டி வயப்படுத்திக் கொண்டிருக்கும் வல்லாண்மைச் சாதிக் குறும்பு, சிவவாக்கியர் வாயை மூடத்தானா வழிகாணத் திண்டாடி இருக்கும்?*

*ஆனால் ஒன்று. சிவவாக்கியர் தேர்ந்த மெய்யுணர்வாளர். அவர் வாக்கை வாழ்வாக்கிக் கொண்டால் வையகம் வாழும்! இல்லையேல் அதற்கு உய்வு அரிது! அவர் வாக்கென்ன வாக்கு பொய் வாக்கு இல்லாத மெய்வாக்குத்தானே அவர் வாக்கு!*

# சிவவாக்கியர் பாடல்

*சிவவாக்கியர் பாடலின் யாப்பமைதி "ஒரு கல்லில் மூன்று காய்" என்பது போன்றதாம், ஒரு பாடலை மூன்று வகைப் பாடலாகப் படிக்கத் தக்க வகையில் இயற்றியுள்ளார். ஆதலால், இசை வகுத்துப் பாடுவார்க்கு இனிய வாய்ப்புடையதாகப் பாடல்கள் அமைந்துள்ளன.*

*சிவவாக்கியர், தாம் பாடும் பாடல்கள் எல்லாவற்றையும் எழுசீர்ச் சந்த விருத்தத்தில் அமைத்துள்ளார்.*

"ஓடி ஓடி ஓடி ஓடி உட்க லந்த சோதியை
நாடி நாடி நாடி நாடி நாட்க ளுங்க ழிந்துபோய்
வாடி வாடி வாடி வாடி மாண்டு போன மாந்தர்கள்
கோடி கோடி கோடி கோடி எண்ணி றந்த கோடியே."

*முதல் ஆறு சீர்களும் மாச்சீராகவும் இறுதி ஒரு சீரும் விளச்சீராகவும், அடிதோறும் ஐந்தாம் சீர் முதற்சீர்க் கேற்ற மோனை அமைதி பெற்றதாகவும் அமைந்துள்ளது அறிக.*

*இனி இப்பாடல் ஆறுசீர்ச்சந்த விருத்தமாகவும் அமைகின்றது காண்க.*

"ஓடி ஓடி ஓடியோடி உட்க லந்த சோதியை
நாடி நாடி நாடிநாடி நாட்க ளுங்க ழிந்துபோய்
வாடி வாடிவாடி வாடி மாண்டு போன மாந்தர்கள்
கோடி கோடிகோடி கோடி எண்ணி றந்த கோடியே."

*இதில் மா மா காய் அல்லது விளம், மா மா விளம் அல்லது காய் என ஆறுசீர் வருதலும் நான்காம் சீர் மோனை பெற்று வருதலும் காண்க.*

*இனி இதே பாடல்,*

"ஓடியோடி ஓடியோடி உட்கலந்த சோதியை
நாடிநாடி நாடிநாடி நாட்கலுங்க ழிந்துபோய்
வாடிவாடி வாடிவாடி மாண்டுபோன மாந்தர்கள்
கோடிகோடி கோடிகோடி எண்ணிறந்த கோடியே"

எனத் தரவு கொச்சமாக வருகின்றதாம். காய், காய், காய் விளம் அல்லது காய் எனச் சீர்கள் வருதலும் மூன்றாம் சீர் மோனை பெற்று வருதலும் காண்க.

எழுசீர்ச் சந்த விருத்தங்களாகவே எல்லாப் பாடல் களையும் வைத்துக்கொண்டால் சீர்குறைதல், அசை குறைதல் ஆகிய இடர்கள் நேர்தல் பலபாடல்களில் உண்டு. ஆனால் ஆறுசீர்ச் சந்த விருத்தமாக்கிக் கொண்டால் அவ்விடர்ப்பாடு இல்லை.

"ஓடம் உள்ள போதலோ ஓடி யேயு லாவலாம்
ஓடம் உள்ள போதலோ உறுதி பண்ணிக் கொள்ளலாம்
ஓடம் உடைந்த போதிலே ஒப்பி லாத வெளியிலே
ஆடும் இல்லை கோலுமில்லை யாரும் இல்லை ஆனதே"

இப்பாடலில் முதல் மூன்று அடிகளும் திட்டவட்டமாக ஆறு சீர்களாகவே அமைந்துள. நான்காம் அடி ஒன்றை மட்டும் ஏழு சீராகக் கொள்ள வாய்ப்புள்ளது! ஆனால் அதனை ஆறுசீர் ஆக்கிக் கொள்வதில் இடரொன்றும் இல்லை இக் கருத்தாலேயே சிவ வாக்கியர் பாடல்களை ஆறுசீர்ச் சந்த விருத்தங்களாக யாப்பமைதி செய்தல் முறையாம்.

ஆனால் இடர்ப்பாடு இல்லாமல் படிக்கவும் பொருள் காணவும் தரவுகொச்சக அமைப்பே (மூன்றாவது அமைப்பே) பெருவாய்ப்பாக உள்ளதாம். இங்குச் சந்த வகையில் படித்தும் பாடியும் மகிழ்வதற்கு வாய்ப்பாக ஆறுசீர்ச் சந்த விருத்த அமைதி மேற்கொள்ளப்பட்டதாம்.

சிவவாக்கியர் பாடலில் அடுக்குச்சொற்கள் மிகுதி; அடிகள் அடுக்கிவருவதும் உண்டு. மீண்டும் மீண்டும் சொல்லோ தொடரோ அடுக்கிவருதலிலே சொற்சுவை பொருட்சுவை மிகுதலும், பொருள் விளக்கம் எளிமையாகப் பெறுதலும் கண்கூடு. இம்முறை திருமூலர் முதலிய பெருமக்கள் முன்னரே காட்டிய வழிமுறைப்பட்டதாம். அதில் சிவவாக்கியர் பேரீடுபாடு கொண்டுளார் என்பது வெளிப்படை.

எழுசீர்ப் பாடல்களை 14 சீர்ப் பாடல்களாக - இரட்டை ஆசிரிய விருத்தமாகச் செய்ததும் உண்டு. சந்தம் மாறாமல் சீர் எண்ணிக்கையை இரட்டிப்பு ஆக்கிக் கொள்ளுதல் இதன் அமைப்பு முறையாம். இம்முறையில் ஏழு பாடல்களைப் பாடியுள்ளார்.

*சில பாடல் செய்திகள் அப்படியே அமைந்துள. ஓரிரண்டு சீர்கள் அசைகள் மாற்றமன்றி வேறொன்றிலாத அமைப்பு ஒப்புமையும், பொருள் நிலையில் முழுதொப்புமையும் உண்டு. அப்பாடல்களுள் ஒன்றை விலக்குதல் தகும் எனினும், பாடவேறு பாடுபோல ஆய்வார்க்கு உதவும் என்னும் கருத்தால் விலக்கப் பட்டில. எடுத்துக்காட்டாக 203, 267 ஆம் பாடல்களையும், 159, 205 ஆம் பாடல்களையும் காண்க. பாடல் வேறாயினும் பொருள் மாறாதிருத்தலை 121, 256 ஆம் பாடல்களிலும் 308, 462ஆம் பாடல்களிலும் காண்க.*

*இவர் பாடல்களில் நின்ற பாடலின் இறுதி வரும் பாடலின் முதலாக வரும் ஈறுமுதல் அல்லது அந்தாதி நிலை சில இடங்களில் காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக 429 முதல் 452 வரையுள்ள பாடல்களைக் காண்க.*

*இவர் பாடல்களில் உவமைகள் உருவகங்கள் ஆகியவை அருமையாக அமைந்துள. இறந்தவர் பிறப்பதில்லை என்பதை ஐந்து உவமைகளால் தெளிவிக்கிறார். (46). மனத்து மாயை மனத்து மறைந்ததை நீர் ஆவியாகிப் போதலைக் கொண்டு விளக்குகிறார். (37), கடலில் திரியும் ஆமை, பச்சை மண் பதுப்புப் புழு முதலியவற்றை உவமைப்படுத்துகிறார் (95, 103).*

"மூலமாம் குளத்திலே முளைத்தெழுந்த கோரை" (150)

*என்றும்,*

"சாவல் நாலு குஞ்ச தஞ்சு தாயதான வாறுபோல்" (149)

*என்றும்,*

"துருத்தியுண்டு கொல்லனுண்டு
சொர்ணமான சோதியுண்டு" (189)

*என்றும்,*

"காயிலாத சோலையில் கனியுகந்த வண்டுகள்" (245)

*என்றும் உருவகங்களைப் பலப்பலவாறாகப் பயன்படுத்துகிறார்.*

"மனத்தகத் தழுக்கறாத மவுனஞான யோகிகள்
வனத்தகத் திருக்கினும் மனத்தகத் தழுக்கறார்;
மனத்தகத் தழுக்கறுத்த மவுனஞான யோகிகள்
முலைத்தடத் திருக்கினும் பிறப்பறுத் திருப்பரே"

*என்பது போலத் தம் கருத்தை எளிமையாய் விளக்கமாய் அறிய வைக்கிறார். அந்நிலைகளில் எதுகை மோனை முதலியவற்றைப் பார்க்கிலும் பொருள் தெளிவு, பொருள் விளக்கம் என்பனவே சிவவாக்கியரால் போற்றப்படுகின்றனவாம். சில பாடல்களில் ஒலி ஒப்புமையால் எதுகை அமைத்துக் கொள்கிறார் (70)(. சில பாடல்களில் இரண்டடிக்கு ஓர் எதுகை கொள்கிறார் (53). சில பாடல்களின் முடிநிலை ஒன்றாக அமைத்துக்கொள்கிறார்.*

"ஆலம் உண்ட கண்டர் ஆணை
அம்மை ஆணை உண்மையே" (120)

"ஆலம் உண்ட கண்டர் பாதம்
அம்மை பாதம் உண்மையே" (22, 150)

*கொச்சைவழக்கு சிதைவு முதலியவற்றையும் பாடல் ஓட்டத்திற்கு ஏற்ப ஏற்றுப் போற்றிக்கொள்கிறார்; ஒன்றல்லவோ என்பதை 'ஒன்றலோ' என்றும், பிதற்றுகிறீர் என்பதைப் 'பிதற்றுறீர்' என்றும், ஓதுகிறீர் என்பதை 'ஓதுறீர்' என்றும், வேண்டும் என்பதை 'வேணும்' என்றும் பயில வழங்குகிறார். ஐந்து என்பதைப் பெரும்பாலும் 'அஞ்சு' எனவே ஆள்கிறார்.*

*பற்றுமின்கள், நோக்கவல்லிரேல், ஓர்கிலீர், உணர்கிலீர், எங்ஙனே இன்னவாறாக அரிய இலக்கிய ஆட்சிகளையும் வழங்குகிறார்.*

*'அசங்குதல்' போன்ற அரிய ஆட்சியிலும் (42) தலைப் படுகிறார்.*

*சித்தர்கள் சொல்லாட்சிகள் சில கலைச் சொல்லாக்கத் திற்கு ஏற்றவையாகவும் ஏந்தானவையாகவும் உள்ளன. நாடிக்கலை மூச்சுக்கலை பயில்வார்க்கு மூல வைப்பகமாகத் திகழ்கின்றன. ஓவியர்க்கும் சித்தர் பாடல்கள் விருந்தாம் என்பது ஒரு பாடலால் வெளிப்படுகின்றது. அதனை ஓவியமாக நெடுங்காலத்திற்கு முன்னரே வரைந்து போற்றிக் கொண்டனர் என்பது குறிப்பிடத் தக்கது. அவ்வோவியப் பாட்டு:*

நவ்விரண்டும் காலதாய், நவின்றமவ் வயிறதாய்,
சிவ்விரண்டு தோளதாய், சிறந்தவவ்வு வாயதாய்,
யவ்விரண்ட கண்ணதாய், அமர்ந்துநின்ற நேர்மையில்
செவ்வையொத்து நின்றதே சிவாயமஞ் செழுத்துமே.

## நூல்

## காப்பும் அவையடக்கமும்

அரிய தோர்ந மச்சிவாயம் ஆதி யந்தம் ஆனதும்
ஆறி ரண்டு நூறுதேவர் அன்று ரைத்த மந்திரம்
கூரிய தோர்எ ழுத்தையுன்னிச் சொல்லு வேன்சிவ வாக்கியம்
தோட தோட பாவமாயை தூரத் தூர ஓடவே
கரிய தோர்மு கத்தையுற்ற கற்ப கத்தைக் கைதொழக்
கலைகள் நூல்கள் ஞானமும் கருத்தில் வந்து திக்கவே
பெரிய பேர்கள் சிறியபேர்கள் கற்று ணர்ந்த பேரெலாம்
பேய னாகி ஓதிடும் பிழைபொ றுக்க வேண்டுமே. 1

## எழுத்து நிலை

ஆன அஞ்செ ழுத்துளே அண்ட மும்ம கண்டமும்
ஆன அஞ்செ ழுத்துளே ஆதி யான மூவரும்
ஆன அஞ்செ ழுத்துளே அகார மும்ம காரமும்
ஆன அஞ்செ ழுத்துளே அடங்க லாவ துற்றவே. 2

ஓடி ஓடி ஓடியோடி உட்க லந்த சோதியை
நாடி நாடி நாடிநாடி நாட்க ளுங்க ழிந்துபோய்
வாடி வாடி வாடிவாடி மாண்டு போன மாந்தர்கள்
கோடி கோடி கோடிகோடி எண்ணி றந்த கோடியே. 3

உருத்த ரித்த நாடியில் ஒடுங்கு கின்ற வாயுவைக்
கருத்தி னாலி ருத்தியே கபாலம் ஏற்ற வல்லிரேல்
விருத்தர் தாமும் பாலராவர் மேனி யுஞ்சி வந்திடும்
அருள்த ரித்த நாதர்பாதம் அம்மை பாதம் உண்மையே. 4

வடிவு கண்டு கொண்டபெண்ணை மற்றொ ருவ்வன் நத்தினால்
விடுவ னோஅ வனைமுன்னர் வெட்ட வேண்டும் என்பனே
நடுவன் வந்த ழைத்தபோது நாறு மிந்த நல்லுடல்
சுடலை மட்டும் கொண்டுபோய்த் தோட்டி கைக்கொ டுப்பரே. 5

என்னி லேயி ருந்தவொன்றை யான றிந்த தில்லையே
என்னி லேயி ருந்தவொன்றை யான றிந்து கொண்டபின்
என்னி லேயி ருந்தவொன்றை யாவர் காண வல்லரோ
என்னி லேயி ருந்திருந்து யானு ணர்ந்து கொண்டெனே. 6

நினைப்ப தொன்று கண்டிலேன் நீய லாது வேறிலை
நினைப்பு மாய்ம றப்புமாய் நின்ற மாயை மாயையோ
அனைத்து மாய்அ கண்டமாய் அனாதி முன்ன னாதியாய்
எனக்குள் நீயு னக்குள்நான் இருக்கு மாற தெங்ஙனே. 7

மண்ணும் நீயவ் விண்ணும்நீ மறிக டல்கள் ஏழும்நீ
எண்ணும் நீயெ ழுத்தும்நீ இசைந்த பண்ணெ ழுத்தும்நீ
கண்ணும் நீம ணியும்நீ கண்ணு ளாடும் பாவைநீ
நண்ணு நீர்மை நின்றபாதம் நண்ணு மாற ருளிடாய். 8

அரியும் அல்ல அயனுமல்ல அப்பு றத்தில் அப்புறம்
கருமை செம்மை வெண்மையைக் கடந்து நின்ற காரணம்
பெரிய தல்ல சிறியதல்ல பற்று மின்கள் பற்றுமின்கள்
துரிய முங்க டந்துநின்ற தூரத் தூரத் தூரமே. 9

அந்தி மாலை உச்சிமூன்றும் ஆடு கின்ற தீர்த்தமும்
சந்தி தர்ப்ப ணங்களும் தபங்க ளுஞ்செ பங்களும்
சிந்தை மேவு ஞானமுந் தினஞ்செ பிக்கு மந்திரம்
எந்தை ராம ராமராம ராம என்னும் நாமமே. 10

கதாவு பஞ்ச பாதகங் களைத்து ரந்த மந்திரம்
இதாமி தாமி தல்லவென்றிங் கெய்த்து ழல்லும் ஏழைகாள்
சதாவி டாமல் ஓதுவார் தமக்கு நல்ல மந்திரம்
இதாமி தாமி ராமராம ராம என்னும் நாமமே. 11

நான தேது நீயதேது நடுவில் நின்ற தேதடா
கோன தேது குருவதேது கூறி டுங்கு லாமரே
ஆன தேத ழிவதேதே அப்பு றத்தில் அப்புறம்
ஈன தேதி ராமராம ராம என்னும் நாமமே. 12

சாத்தி ரங்கள் ஓதுகின்ற சட்ட நாத பட்டரே
வேர்த்தி ரைப்பு வந்தபோது வேதம் வந்தே உதவுமோ?
மாத்தி ரைப்போ தும்முளே மறித்து நோக்க வல்லிரேல்
சாத்தி ரப்பை நோய்க ளேது சத்தி முத்தி சித்தியே. 13

நாலு வேதம் ஓதுவீர் ஞான பாதம் அறிகிலீர்
பாலுள் நெய்க லந்தவாறு பாவி காள்நீர் அறிகிலீர்
ஆல முணட கண்டனார் அகத்து ளேயி ருக்கவே
காலன் என்று சொல்லுவீர் கனாவி லும்மஃ தில்லையே 14

வித்தில் லாத சம்ப்ரதாயம் மேலு மில்லை கீழுமில்லை
தச்சில் லாத மாளிகை சமைந்த வாறெ தெங்ஙனே
பெற்ற தாயை விற்றடிமை கொள்ளு கின்ற பேதைகாள்
சித்தில் லாத போதுசீவன் இல்லை இல்லை இல்லையே. 15

அஞ்சும் மூன்றும் எட்டதாகும் அநாதி யான மந்திரம்
நெஞ்சி லேநி னைந்துகொண்டு நூறு ருச்செ பிப்பிரேல்
பஞ்ச மான பாதகங்கள் நூறு கோடி செய்யினும்
பஞ்சு போலப் பறக்குமென்று நான்ம றைகள் பன்னுமே. 16

அண்ட வாசல் ஆயிரம் ப்ரசண்ட வாசல் ஆயிரம்
ஆறி ரண்டு நூறுகோடி ஆன வாசல் ஆயிரம்
இந்த வாசல் ஏழைவாசல் ஏக போக மானவாசல்
எம்பி ரானி ருக்கும்வாசல் யாவர் காண வல்லரே? 17

சாம நாலு வேதமும் சகல சாத்தி ரங்களும்
சேம மாக ஓதிலும் சிவனை நீவிர் அறிகிலீர்
காம நோயை விட்டுநீர் கருத்தி னுள்ளே உணர்ந்தபின்
ஊமை யான காயமாய் உள்ளி ருப்பன் ஈசனே. 18

சங்கி ரண்டு தாரையொன்று சன்னல் பின்னல் ஆகையால்
மங்கி மாளு தேயுலகில் மானி டங்கள் எத்தனை
சங்கி ரண்டை யுந்தவிர்த்துத் தாரை ஊத வல்லிரேல்
கொங்கை மங்கை பங்கரோடு கூடி வாழல் ஆகுமே. 19

அஞ்செ ழுத்தி லேபிறந் தஞ்செ ழுத்தி லேவளர்ந்
தஞ்செ ழுத்தை ஓதுகின்ற பஞ்ச பூத பாவிகாள்
அஞ்செ ழுத்தில் ஓரெழுத் தறிந்து கூற வல்லிரேல்
அஞ்ச லஞ்ச லென்றுநாதன் அம்ப லத்தில் ஆடுமே. 20

அஞ்சும் அஞ்சும் அஞ்சுமே அனாதி யான தஞ்சுமே
பிஞ்சு பிஞ்ச தல்லவோ பித்தர் காள்பி தற்றுறீர்
நெஞ்சில் அஞ்சு கொண்டுநூர் நின்றோ துகக வல்லிரேல்
அஞ்சும் இல்லை ஆறுமில்லை அனாதி யான தொன்றுமே. 21

நீள வீடு கட்டுறீர் நெடுங்க தவ்வு சாத்துறீர்
வாழ வேண்டும் என்றலோ மகிழ்ந்தி ருந்த மாந்தரே
காலன் ஓலை வந்தபோது கைய கன்று நிற்பிரே
ஆலம் உண்ட கண்டர்பாதம் அம்மை பாதம் உண்மையே. 22

ஓடம் உள்ள போதலோ ஓடி யேயு லாவலாம்
ஓடம் உள்ள போதலோ உறுதி பண்ணிக் கொள்ளலாம்
ஓடம் உடைந்த போதிலே ஒப்பி லாத வெளியிலே
ஆடும் இல்லை கோலுமில்லை யாரு மில்லை யானதே. 23

வீடெ டுத்து வேள்விசெய்து மெய்யி னோடு பொய்யுமாய்
மாடு மக்கள் பெண்டிர்சுற்றம் என்றி ருக்கும் மாந்தர்காள்
நாடு பெற்ற நடுவர்கையில் ஓலை வந்த ழைத்திடில்
ஓடு பெற்ற அவ்விலை ஒன்றும் பெறாதிவ் வுடலம்மே. 24

அண்ண லேஅ நாதியே அநாதி முன்ன நாதியே
பெண்ணும் ஆணும் ஒன்றலோ பிறப்பதற்கு முன்னெலாம்
கண்ணில் ஆணின் சுக்கிலம் கருவில் ஓங்கும் நாளிலே
மண்ணு ளோரும் விண்ணுளோரும் வந்த வாறும் எங்ஙனே. 25

பண்டு நான்ப றித்தெறிந்த பன்ம லர்கள் எத்தனை
பாழி லேசெ பித்துவிட்ட மந்தி ரங்கள் எத்தனை
மிண்ட னாய்த்தி ரிந்தபோது இரைத்த நீர்கள் எத்தனை
மீள வுஞ்சி வாலயங்கள் சூழ வந்த தெத்தனை
அண்டர் கோன்இ ருப்பிடம் அறிந்து ணர்ந்த ஞானிகள்
பண்ட றிந்த பான்மைதன்னை யாவர் அறிய வல்லரே
விண்ட வேதப் பொருளையன்றி வேறு கூற வகையிலாக்
கண்ட கோயில் தெய்வமென்று கையெ டுப்ப தில்லையே. 26

தூரம் தூரம் தூரமென்று சொல்லு வார்கள் சோம்பர்கள்
பாரும் விண்ணும் எங்குமாய்ப் பரந்த இப்ப ராபரம்
ஊரு நாடு காடுமோடி உழன்று தேடும் ஊமைகாள்!
நேர தாக உம்முளே அறிந்து ணர்ந்து கொள்ளுமே! 27

தங்கம் ஒன்று ரூபம்வேறு தன்மை யான வாறுபோல்
செங்கண் மாலும் ஈசனும் சிறந்தி ருந்த எம்முளே
விங்க ளங்கள் பேசுவார் விளங்கு கின்ற மாந்தரே!
எங்கும் ஆகி நின்றநாமம் நாமம் இந்த நாமமே! 28

நெருப்பை மூட்டி நெய்யைவிட்டு நித்த நித்தம் நீரிலே
விருப்ப மோடு நீர்குளிக்கும் வேத வாக்யம் கேளுமின்
நெருப்பும் நீரும் உம்முளே நினைந்து கூற வல்லிரேல்
சுருக்கம் அற்ற சோதியைத் தொடர்ந்து கூடல் ஆகுமே. 29

பாட்டி லாத பரமனைப் பரம லோக நாதனை
நாட்டி லாத நாதனை நாரி பங்கர் பாகனை
கூட்டி மெள்ள வாய்புதைத்துக் குணுகு ணுத்த மந்திரம்
வேட்ட காரர் குசுகுசுப்பைக் கூப்பி டாக முடிந்ததே. 30

செய்ய தெங்கி லேஇளநீர் சேர்ந்த கார ணங்கள்போல்
ஐயன் வந்திங் கென்னுளம் புகுந்து கோயில் கொண்டனன்
ஐயன் வந்திங் கென்னுளம் புகுந்து கோயில் கொண்டபின்
வைய கத்தில் மாந்தர்முன்னம் வாய்தி றப்ப தில்லையே. 31

மாறு பட்ட மணிதுலக்கி வண்டின் எச்சில் கொண்டுபோய்
ஊறு பட்ட கல்லின்மீதே ஊற்று கின்ற மூடரே
மாறு பட்ட தேவரும் மறிந்து நோக்கும் என்னையும்
கூறு பட்டுத் தீர்க்கவோ குருக்கள் பாதம் வைத்ததே. 32

கோயி லாவ தேதடா குளங்க ளாவ தேதடா
கோயி லுங்கு ளங்களும் கும்பி டுங்கு லாமரே
கோயி லும்ம னத்துளே குளங்க ளும்ம னத்துளே
ஆவ தூவும் அழிவதூவும் இல்லை இல்லை இல்லையே. 33

செங்க லுங்க ருங்கலும் சிவந்த சாதி லிங்கமும்
செம்பி லுந்த ராவிலும் சிவனி ருப்பன் என்கிறீர்
உம்ப தம்ம றிந்துநீர் உம்மை நீர றிந்தபின்
அம்ப லம்நி றைந்தநாதர் ஆடல் பாடல் ஆகுமே. 34

பூசை பூசை என்றுநீர் பூசை செய்யும் பேதைகாள்
பூசை யுள்ள தன்னிலே பூசை கொண்ட தெவ்விடம்
ஆதி பூசை கொண்டதோ அனாதி பூசை கொண்டதோ
ஏது பூசை கொண்டதோ இன்ன தென்றி யம்புமே. 35

இருக்கு நாலு வேதமும் எழுத்தை அறவே ஓதினும்
பெருக்க நீறு பூசினும் பிதற்றி னும்பி ரானிரான்
உருக்கி நெஞ்சை உட்கலந்திங் குண்மை கூற வல்லிரேல்
சுருக்கம் அற்ற சோதியைத் தொடர்ந்து கூட லாகுமே. 36

கலத்தில் வார்த்து வைத்தநீர் கடுத்த தீமு டுக்கினால்
கலத்தி லேக ரந்ததோ கடுத்த தீக்கு டித்ததோ
நிலத்தி லேக லந்ததோ நீள்வி சும்பு கொண்டதோ
மலத்தின் மாயை நீக்கியே மனத்து ளேக ரந்ததோ. 37

பறைச்சி யாவ தேதடா பனத்தி யாவ தேதடா
இறைச்சி தோலெ லும்பினும் இலக்க மிட்டி ருக்குதோ
பறைச்சி போகம் வேறதோ பனத்தி போகம் வேறதோ
பறைச்சி யும்ப னத்தியும் பகுந்து பாரும் உம்முளே. 38

வாயி லேகு தித்தநீரை எச்சில் என்று சொல்லுநீர்
வாயி லேகு தப்புவேதம் வேதம் என்னக் கடவதோ
வாயில் எச்சில் போகவென்று நீர தனைக்கு டிப்பீர்காள்
வாயில் எச்சில் போனவண்ணம் வந்தி ருந்து சொல்லுமே 39

ஓது கின்ற வேதமெச்சில் உள்ள மந்தி ரங்களெச்சில்
போத கங்க ளானவெச்சில் பூத லங்கள் ஏழுமெச்சில்
மாதி ருந்த விந்துமெச்சில் மதியு மெச்சில் ஒளியுமெச்சில்
ஏதில் எச்சில் இல்லையில்ல தில்லை இல்லை இல்லையே. 40

பிறப்ப தற்கு முன்னெலாம் இருக்கு மாற தெங்ஙனே
பிறந்து மண்ணிலி றந்துபோய் இருக்கு மாற தெங்ஙனே
குறித்து நீர்சொ லாவிடில் குறிப்பில் லாத மாந்தரே
அறுப்ப னேசெ வியிரண்டும் அஞ்செ ழுத்து வாளினால். 41

அம்ப லத்தை அம்புகொண்டு அசங்கென் றால சங்குமோ
கம்ப மற்ற பாற்கடல் கலங்கென் றால்க லங்குமோ
இன்ப மற்ற யோகியை இருளும் வந்த ணுகும்மோ
செம்பொன் அம்ப லத்துளே தெளிந்த தேசி வாயமே. 42

சித்தம் ஏது சிந்தையேது சீவன் ஏது சித்தரே
சத்தி ஏது சம்புவேது சாதி பேதம் அற்றது
முத்தி ஏது மூலமேது மூல மந்தி ரம்மெது
வித்தி லாத வித்திலே இன்ன தென்றி யம்புமே. 43

சித்த மற்றுச் சிந்தையற்றுச் சீவ னற்று நின்றிடம்
சத்தி யற்றுச் சம்புவற்றுச் சாதி பேத மற்றுநன்
முத்தி யற்று மூலமற்று மூல மந்தி ரங்களும்
வித்தை இத்தை ஈன்றவித்தில் விளைந்த தேசி வாயமே. 44

சாதி யாவ தேதடா சலந்தி ரண்ட நீரலோ
பூத வாசல் ஒன்றலோ பூதம் ஐந்தும் ஒன்றலோ
காதில் வாளி காரைகம்பி பாட கம்பொன் ஒன்றலோ
சாதி பேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையே. 45

கறந்த பால்மு லைப்புகா கடைந்த வெண்ணெய் மோர்புகா
துடைந்து போன சங்கினோசை உயிர்க ளும்மு டற்புகா
விரிந்த பூவு திர்ந்தகாயும் மீண்டும் போய்ம ரம்புகா
இறந்த வர்பி றப்பதில்லை இல்லை இல்லை இல்லையே. 46

தரையி னிற்கி டந்தபோ தன்று தூமை என்றிலீர்;
துறைய றிந்த நீர்குளித் தன்று தூமை என்றிலீர்;
பறைய றைந்து நீர்பிறந் தன்று தூமை என்றிலீர்;
புரையி லாத ஈசரோடு பொருந்து மாற தெங்ஙனே? 47

தூமை தூமை என்றுளே துவண்ட லையும் ஏழைகாள்
தூமை யான பெண்ணிருக்கத் தூமை போன தெவ்விடம்
ஆமை போல மூழ்கிவந் தநேக வேதம் ஓதுறீர்
தூமை யுந்தி ரண்டுருண்டு சொற்கு ருக்கள் ஆனதே. 48

சொற்கு ருக்கள் ஆனதும் சோதி மேனி ஆனதும்
மெய்க்கு ருக்கள் ஆனதும் வேண பூசை செய்வதும்
சற்கு ருக்கள் ஆனதும் சாத்தி ரங்கள் சொல்வதும்
செய்க்கு ருக்கள் ஆனதும் திரண்டு ருண்ட தூமையே. 49

கைவ டங்கள் கொண்டுநீர் கண்சி மிட்டி நிற்கிறீர்
எவ்வி டங்கள் கண்டுநீர் எண்ணி எண்ணிப் பார்க்கிறீர்
பொய்யி றந்த சிந்தையைப் பொருந்தி நோக்க வல்லிரேல்
மெய்கி டந்த தும்முளே விரைந்து கூடல் ஆகுமே. 50

ஆடு காட்டி வேங்கையை அகப்ப டுத்து மாறுபோல்
மாடு காட்டி என்னைநீ மதிம யக்கல் ஆகுமோ?
கோடு காட்டி யானையைக் கொன்று ரித்த கொற்றவா
வீடு காட்டி என்னைநீ வெளிப்ப டுத்த வேணுமே. 51

இடத்த துன்கண் சந்திரன் வலத்த துன்கண் சூரியன்
இடக்கை சங்கு சக்கரம் வலக்கை சூலம் மான்மழு
எடுத்த பாத நீள்முடி எண்தி சைக்கும் அப்புறம்
உடல்க லந்து நின்றமாயம் யாவர் காண வல்லரோ? 52

நாழி யுப்பும் நாழியப்பும் நாழி யான வாறுபோல்
ஆழி யோனும் ஈசனும் அமர்ந்து வாழ்ந்தி ருந்திடும்
ஏறில் ஏறும் இறையையும் இயங்கு சக்ர தரனையும்
வேறு வேறு பேசுவார் வீழ்வர் வீணில் நரகிலே. 53

தில்லை நாய கன்னவன் திருவ ரங்க னும்மவன்
எல்லை யான புவனமும் ஏக முத்தி யும்மவன்
பல்லும் நாவும் உள்ளபேர் பகுந்து கூறி மகிழுவார்
வல்ல பங்கன் பேசுவார் வாய்பு ழுத்து மாய்வரே. 54

எத்தி சைக்கும் எவ்வுயிர்க்கும் எங்கள் அப்பன் எம்பிரான்
மத்தி யான வித்துளே முளைத்தெ ழுந்த வச்சுடர்
சித்த முந்தெ ளிந்துவேத கோயி லுந்தி றந்தபின்
அத்தன் ஆடல் கண்டபின் அடங்கல் ஆடல் காணுமே. 55

உற்ற நூல்கள் உம்முளே உணர்ந்து ணர்ந்து பாடுவீர்
பற்ற றுத்து நின்றுநீர் பராப ரங்கள் எய்துவீர்
செற்ற மாவை உள்ளரைச் செருக்க றுத்தி ருத்திடில்
சுற்ற மாக உம்முளே சோதி என்றும் வாழுமே. 56

போத தாய்எ ழுந்ததும் புனல தாடி வந்ததும்
தாத தாய்ப்பு குந்ததும் தணல தாய்வி ளைந்ததும்
ஓத டாஅஞ் சும்மூன்றும் ஒன்ற தான அக்கரம்
ஓத டாநீ ராமராம ராம வென்னும் நாமமே. 57

அகாரம் என்ற அக்கரத்துள அவ்வு வந்து தித்ததோ
உகாரம் என்ற அக்கரத்தில் உவ்வு வந்து தித்ததோ
அகார மும்உ காரமும் சிகார மின்றி நின்றதோ
விகார மற்ற யோகிகாள் விரித்து ரைக்க வேணுமே. 58

அறத்தி றங்க ளுக்கும்நீ அகண்ட எண்தி சைக்கும்நீ
திறத்தி றங்க ளுக்கும்நீ தேடு வார்கள் சிந்தைநீ
உறக்கம் நீயு ணர்வும்நீ உட்க லந்த சோதிநீ
மறக்கொ ணாத நின்கழல் மறப்பி னும்நீ குடிகொளே. 59

அண்டம் நீஅ கண்டம்நீ ஆதி மூல மானோன்நீ
கண்டம் நீக ருத்தும்நீ காவி யங்கள் ஆனோன்நீ
புண்டரீக மன்றுளே புணரு கின்ற புண்ணியர்
கொண்ட கோல மானநேர்மை கூர்மை என்ன கூர்மையே. 60

மைய டர்ந்த கண்ணினார் மயக்கி டும்ம யக்கிலே
ஐயி றந்து கொண்டுநீங்கள் அல்லல் உற்றி ருப்பிர்காள்
மெய்ய டர்ந்த சிந்தையாய் விளங்கு ஞானம் எய்தினால்
உய்ய டர்ந்து கொண்டுநீங்கள் ஊழி காலம் வாழ்விரே. 61

கருவி ருந்து வாசலால் கலங்கு கின்ற ஊமைகாள்
குருவி ருந்து சொன்னவார்த்தை குறித்து நோக்க வல்லிரேல்
உருவி லங்கு மேனியாகி உம்ப ராகி நின்றநீர்
திருவி லங்கு மேனியாகிச் சென்று கூடல் ஆகுமே. 62

தீர்த்த மாட வேண்டுமென்று தேடு கின்ற தீனர்காள்
தீர்த்த மாடல் எவ்விடம் தெளிந்து நீரி யம்புவீர்
தீர்த்த மாக உம்முளே தெளிந்து நீரி ருந்தபின்
தீர்த்த மாக உள்ளதும் சிவாய அஞ்செ ழுத்துமே. 63

கழுத்தை யும்நி மிர்த்திநல்ல கண்ணை யும்வி ழித்துநீர்
பழுத்து வாய்வி ழுந்துபோன பாவம் என்ன பாவமே
அழுத்த மான வித்திலே அனாதி யாயி ருப்பதோர்
எழுத்தி லாஎ ழுத்திலே இருக்க லாமி ருத்துமே. 64

கண்டு நின்ற மாயையும் கலந்து நின்ற பூதமும்
உண்டு றங்கு மாறுநீர் உணர்ந்தி ருக்க வல்லிரேல்
பண்டை ஆறும் ஒன்றுமாய்ப் பயந்த வேத சுத்தராய்
அண்ட முத்தி ஆகிநின்ற ஆதி மூலம் ஆவிரே. 65

ஈன்ற வாச லுக்கிரங்கி எண்ணி றந்த போவிர்காள்
கான்ற வாழை மொட்டலர்ந்த கார ணம்நீர் அறிகிலீர்
நான்ற வாச லைத்திறந்து நாடி நோக்க வல்லிரேல்
தோன்று மாயை விட்டொழிந்து சோதி வந்து தோன்றுமே. 66

உழலும் வாச லுக்கிரங்கி ஊச லாடும் ஊமைகாள்
உழலும் வாச லைத்துறந்து உண்மை சேர எண்ணிலீர்
உழலும் வாச லைத்துறந்து உண்மை நீரு ணர்ந்தபின்
உழலும் வாச லுள்ளிருந்த உண்மை தானும்ஆவிரே. 67

மூல நாடி தன்னிலே முளைத்தெ ழுந்த சோதியை
நாலு நாழி உம்முளே நாடி யேயி ருந்தபின்
பால னாகி வாழலாம் பரப்பி ரம்மம் ஆகலாம்
ஆல முண்ட கண்டரானை அம்மை ஆணை உண்மையே. 68

இருக்க வேண்டும் என்றபோ திருக்க லாயி ருக்குமோ
மரிக்க வேண்டும் என்றலோ மண்ணு ளேப டைத்தனர்
சுருக்க மற்ற தம்பிரான் சொன்ன அஞ்செ ழுத்தையும்
மரிக்கு முன்வ ணங்கிடீர் மருந்தெ னப்ப தம்கெடீர். 69

அம்பத் தொன்றில் அக்கரம் அடக்கம் ஓரெ ழுத்துளோ
விண்ப ரந்த மந்திரம் வேதம் நான்கும் ஒன்றலோ
விண்ப ரந்த மூலஅஞ் செழுத்து ளேமு ளைத்ததே
அங்க லிங்க பீடமாய் அமர்ந்த தேசி வாயமே. 70

சிவாய மென்ற அக்கரம் சிவனி ருக்கும் அக்கரம்
உபாயம் என்று நம்புதற் குண்மை யான அக்கரம்
கபாடம் அற்ற வாசலைக் கடந்து போன வாயுவை
உபாயம் இட்ட ழைக்குமே சிவாய அஞ்செ ழுத்துமே. 71

உருவு மல்ல வெளியுமல்ல ஒன்றை மேவி நின்றதல்ல
மருவு மல்ல காதமல்ல மற்ற தல்ல அற்றதல்ல
பெரிய தல்ல சிறியதல்ல பேசும் ஆவி தானுமல்ல
அரிய தாகி நின்றதன்மை யாவர் காண வல்லரே. 72

ஆத்து மன்அ னாதியோ ஆத்து மாஅ னாதியோ
மீத்தி ருந்த ஐம்பொறி புலன்க ளும்ம னாதியோ
தாக்க மிக்க நூல்களும் சதாசி வமும்ம னாதியோ
வீக்க வந்த யோகிகாள் விரைந்து ரைக்க வேணுமே. 73

அறிவி லேபி றந்திருந்த ஆக மங்கள் ஓதுறீர்
நெறியி லேம யங்குகின்ற நேர்மை ஒன்றும் அறிகிலீர்
உறியி லேத யிரிருக்க ஊர்பு குந்து வெண்ணெய்தேடும்
அறிவி லாத மாந்தரோ டணுகு மாற தெங்ஙனே. 74

இருவ ரங்க மும்பொருந்தி என்பு ருகி நோக்கிலீர்
உருவ ரங்க மாகிநின்ற உண்மை ஒன்றை ஓர்கிலீர்
கருவ ரங்க மாகிநின்ற கற்ப னைக டந்துபின்
திருவ ரங்க மென்றுநீர் தெளிந்தி ருக்க வல்லிரே. 75

கருக்கு ழியில் ஆசையாகிக் காத லுற்று நிற்கிறீர்
குருக்கி டுக்கும் ஏழைகாள் குலாவு கின்ற பாவிகாள்
திருத்தி ருத்தி மெய்யினால் சிவந்த அஞ்செ ழுத்தையும்
உருக்க ழிக்கும் முன்னமே உரையு ணர்ந்து கொள்ளுமே. 76

மண்ணி லேபி றக்கவும் வழக்க லாது ரைக்கவும்
எண்ணி லாத கோடிதேவர் என்ன துன்ன தென்னவும்
கண்ணி லேயே மணியிருக்கக் கண்ம றைந்த வாறுபோல்
எண்ணில் கோடி தேவரும் இதன்க ணால்வி ழிப்பதே. 77

மண்க லங்க விழ்ந்தபோது வைத்து வைத்த டுக்குவார்
வெண்க லங்க விழ்ந்தபோது வேணு மென்று பேணுவார்
நங்க லங்க விழ்ந்தபோது நாறு மென்று போடுவார்
எண்க லந்து நின்றமாயம் என்ன மாயம் ஈசனே. 78

மிக்க செல்வம் நீர்ப டைத்த விறகு மேவிப் பாவிகாள்
விக்கு டன்கொ ளுத்தி மேனி வெந்து போவ தறிகிலீர்
மக்கள் பெண்டிர் சுற்றம் என்று மாயைகாணும் இவையெலாம்
மறலி வந்த ழைத்த போது வந்து கூட லாகுமோ
ஒக்க வந்து மாது டன்செ றிந்தி டத்தில் அழகியே
ஒருவ ராகி இருவ ராகி இளமை பெற்ற ஊரிலே
அக்க ணிந்து கொன்றை சூடி அம்ப லத்தில் ஆடுவார்
அஞ்செ ழுத்தை ஓதி டில்அ னேக பாவம் அகலுமே. 79

மாடு கன்று செல்வமும் மனைவி மைந்தர் மகிழவே
மாட மாளி கைப்பு றத்தில் வாழு கின்ற நாளிலே
ஓடி வந்து கால தூதர் சடுதி யாக மோதவே
உடல்கி டந்து யிர்க ழன்ற உண்மை கண்டும் உணர்கிலீர்
பாடு கின்ற உம்ப ருக்கே ஆடு பாதம் உன்னியே
பழுதி லாத கர்ம கூட்டம் இட்ட எங்கள் பரமனே
நீடு செம்பொன் அம் லத்துள் ஆடு கொண்ட அப்பனே
நீல கண்ட காள கண்ட நித்ய கல்லி யாணனே. 80

கான மற்ற காட்டகத்தில் வெந்தெ ழுந்த நீறுபோல்
ஞான முற்ற நெஞ்சகத்தில் வல்ல தேதும் இல்லையே
ஊன மற்ற சோதியோ டுணர்வு சேர்ந்த டக்கினால்
தேன கத்தின் ஊறல்போல் தெளிந்த தேசி வாயமே. 81

பருகி யோடி உம்முளே பறந்து வந்த வெளிதனை
நிரவி யேநி னைந்துபார்க்கில் நின்ம லம்ம தாகுமே
உருகி ஓடி எங்குமாய் ஓடும் சோதி தன்னுளே
கருது வீரு மக்குநல்ல கார ணம்ம தாகுமே. 82

சோதி யாதி யாகிநின்று சுத்த மும்ப லித்துவந்து
போதி யாத போதகத்தை ஓது கின்ற பூரணா
வீதி யாக ஓடிவந்து விண்ண டியின் ஊடுபோய்
ஆதி நாதன் நாதனென் றனந்த காலம் உள்ளதே. 83

இறைவ னாலெ டுத்தமாடத் தில்லை யம்ப லத்திலே
அறிவி னால டுத்தகாயம் அஞ்சி னால மைந்ததே
கருவு நாதம் உண்டுபோய்க் கழன்ற வாசல் ஒன்பதும்
ஒருவ ராயொ ருவர்கோடி உள்ளு ளேய மர்ந்ததே. 84

நெஞ்சி லேயி ருந்திருந்து நெருங்கி யோடும் வாயுவை
அன்பி னாலி ருந்துநீர் அருகி ருத்த வல்லிரேல்
அன்பர் கோயில் காணலாம் அகலும் எண்தி சைக்குளே
தும்பி ஓடி ஓடியே சொல்ல டாசு வாமியே. 85

தில்லை யைவ ணங்கிநின்ற தெண்ட னிட்ட வாயுவே
எல்லை யைக்க டந்துநின்ற ஏக போக மாய்கையே
எல்லை யைக்க டந்துநின்ற சொர்க்க லோக வெளியிலே
வெள்ளை யுஞ்சி வப்புமாகி மெய்க லந்து நின்றதே. 86

உடம்பு யிர்எ டுத்ததோ உயிரு டம்பெ டுத்ததோ
உடம்பு யிர்எ டுத்தபோ துருவம் ஏது செப்புவீர்
உடம்பு யிர்எ டுத்தபோ துயிரி றப்ப தில்லையே
உடம்பு மெய்ம றந்துகண் டுணர்ந்து ஞானம் ஓதுமே. 87

அவ்வெ னும்மெ ழுத்தினால் அண்ட மேழும் ஆக்கினாய்
உவ்வெ னும்மெ ழுத்தினால் உருத்த ரித்து நின்றனை
மவ்வெ னும்மெ ழுத்தினால் மயங்கி னார்கள் வையகம்
அவ்வும் உவ்வும் மவ்வுமாய் அமர்ந்த தேசி வாயமே. 88

மந்தி ரங்கள் உண்டுநீர் மயங்கு கின்ற மானிடீர்!
மந்தி ரங்கள் ஆவது மரத்தில் உறல் அன்றுகாண்
மந்தி ரங்கள் ஆவது மதர்த்தெ ழுந்த வாயுவே
மந்தி ரத்தை உண்டவர்க்கு மானம் ஏதும் இல்லையே. 89

என்ன வென்று சொல்லுவேன் இலக்க ணம்மி லாததை
பன்னு கின்ற செந்தமிழ்ப் பதங்க டந்த பண்பென
மின்ன கத்தில் மின்னொடுங்கி மின்ன தான வாறுபோல்
என்ன கத்துள் ஈசனும் யானும் அல்ல தில்லையே. 90

ஆல வித்தில் ஆலொடுங்கி ஆல மான வாறுபோல்
வேரும் வித்தும் இன்றியே விளைந்து போகம் எய்திடீர்
ஆரும் வித்தை ஓர்கிலீர் அறிவி லாத மாந்தரே
பாரும் இத்தை உம்முளே பரப்பி ரம்மம் ஆவிரே. 91

அவ்வு தித்த மந்திரம் அகார மாயு காரமாய்
எவ்வெ ழுத்த றிந்தவர்க் கெழுபி றப்ப திங்கிலை
சவ்வு தித்த மந்திரத்தைத் தற்ப ரத்தி ருத்தினால்
அவ்வும் உவ்வும் மவ்வுமாய் அமர்ந்த தேசி வாயமே. 92

நவ்வி ரண்டு காலதாய் நவின்ற மவ்வும் வயிறதாய்ச்
சிவ்வி ரண்டு தோளதாய்ச் சிறந்த வவ்வும் வாயதாய்
யவ்வி ரண்டு கண்ணதாய் அமர்ந்து நின்ற நேர்மையில்
செவ்வை யொத்து நின்றதே சிவாய அஞ்செ ழுத்துமே. 93

இரண்டும் ஒன்றும் மூலமாய் இயங்கு சக்க ரத்துளே
சுருண்டு மூன்று வளையமாய்ச் சுணங்கு போல்கி டந்ததீ
முரண்டெ ழுந்த சங்கினோசை மூல நாடி ஊடுபோய்
அரங்கன் பட்டணத்திலே அமர்ந்த தேசி வாயமே. 94

கடலி லேதி ரியுமாமை கரையில் ஏறி முட்டையிட்டுக்
கடலி லேதி ரிந்தபோது ரூப மான வாறுபோல்
மடலு ளேயி ருக்குமெங்கள் மணிய ரங்க சோதியை
உடலு ளேநி னைத்துநல்ல உண்மை யான துண்மையே. 95

மூன்று மண்ட லத்தினும் முட்டி நின்ற தூணிலும்
நான்ற பாம்பின் வாயிலும் நவின்றெ ழுந்த அட்சரம்
ஈன்ற தாயும் அப்பனும் எடுத்து ரைத்த மந்திரம்
தோன்றும் ஓரெ ழுத்துளே சொல்ல எங்கும் இல்லையே. 96

மூன்று மூன்று மூன்றுமே மூவர் தேவர் தேடிடும்
மூன்று மஞ்செ ழுத்துமாய் முழங்கு மவ்வெ ழுத்துளே
ஈன்ற தாயும் அப்பனும் இயங்கு கின்ற நாதமும்
தோன்றும் மண்ட லத்திலே சொல்ல எங்கும் இல்லையே. 97

சோறு கின்ற பூதம்போல் சுணங்கு போல்கி டந்தநீர்
நாறு கின்ற கும்பியில் நயந்தெ ழுந்த மூடரே
சீறு கின்ற ஐவரைச் சிணுக்க றுக்க வல்லிரேல்
ஆறு கோடி வேணியார் ஆறில் ஒன்றில் ஆவிரே. 98

வட்ட மென்று நும்முளே மயக்கி விட்ட திவ்வெளி
அட்ட அக்க ரத்துளே அடக்க மும்ஒ டுக்கமும்
எட்டும் எட்டும் எட்டுமாய் இயங்கு சக்க ரத்துளே
எட்டெ லாமு தித்ததே எம்பி ரானை அறிந்தபின். 99

பேசு வானும் ஈசனே பிரம ஞானம் உம்முளே
ஆசை யான ஐவரும் அலைத்த லைகள் செய்கிறார்
ஆசை யான ஐவரை அடக்கி ஓர்எ முத்திலே
பேசி டாதி ருப்பிரேல் நாதன் வந்து பேசுமே. 100

நமசி வாய அஞ்செழுத்தும் நல்கு மேல்நி லைகளும்
நமசி வாய அஞ்சிலஞ்சும் புராண மான மாயையும்
நமசி வாய அஞ்செழுத்தும் நம்மு ளேஇ ருக்கவே
நமசி வாய உண்மையை நன்கு ரைசெய் நாதனே. 101

பரமு னக்கே எனக்குவேறு பயமும் இல்லை பராபரா
கரமெ டுத்து நித்தலும் கைகு விக்கக் கடவதும்
சிரமு ருகி ஆர்த்தலும் சிவபி ரானே என்னலும்
உரமெ னக்கு நீயளித்த ஓம் நமச்சி வாயவே. 102

பச்சை மண்ப துப்பிலே பழுப்ப தித்த வேட்டுவன்
நிச்ச லும்நி னைந்திட நினைந்த வண்ணம் ஆயிடும்
பச்சை மண்ணி டிந்துபோய்ப் பறந்த தும்பி ஆயிடும்
பித்தர் காள்அ றிந்துகொள்க பிரானி ருந்த கோலமே. 103

ஒளிய தான காசிமீது வந்து தங்கு வோர்க்கெலாம்
வெளிய தான சோதிமேனி விசுவ நாத னானவன்
தெளியு மங்கை யுடனிருந்து செப்பு கின்ற தாரகம்
எளிய தோரி ராமராம ராம இந்த நாமமே. 104

விழியி னோடு புனல்விளைந்த வில்ல வில்லி யோனியும்
வெளியி லேபி தற்றலாம் விளைவு நின்ற தில்லையே
வெளிப ரந்த தேகமும் வெளிக்குள் மூல வித்தையும்
தெளியும் வல்ல ஞானிகள் தெளிந்தி ருத்தல் திண்ணமே. 105

ஓம்ந மச்சி வாயமே உணர்ந்து மெய்யு ணர்ந்தபின்
ஓம்ந மச்சி வாயமே உணர்ந்துமெய்தெ ளிந்தபின்
ஓம்ந மச்சி வாயமே உணர்ந்து மெய்யு ணர்ந்தபின்
ஓம்ந மச்சி வாயமே உட்க லந்து நிற்குமே. 106

அல்லல் வாசல் ஒன்பதும் அறுத்த டைத்த வாசலும்
சொல்லும் வாசல் ஓரைந்தும் சொம்மி விம்மி நின்றதும்
நல்ல வாச லைத்திறந்து ஞான வாசல் ஊடுபோய்
எல்லை வாசல் கண்டவர் இனிப்பி றப்ப தில்லையே. 107

ஆதி யான தொன்றுமே அநேக அநேக ரூபமாய்ச்
சாதி பேத மாய்எழுந்து சர்வ சீவன் ஆனபின்
ஆதி யோடி ருந்துமீண் டெழுந்து சென்மம் ஆனபின்
சோதி யான ஞானியாகிச் சுத்த மாயி ருப்பனே. 108

மலர்ந்த தாது மூலமாய் வைய கம்ம லர்ந்ததும்
மலர்ந்த பூம யக்கம்வந் தடுத்த தும்வி டுத்ததும்
புலன்கள் ஐந்தும் பொறிக லங்கி பூமிமேல்வி ழுந்ததும்
இலங்க லங்கி நின்றமாயம் என்ன மாயம் ஈசனே. 109

பார டங்க உள்ளதும் பரந்த வானம் உள்ளதும்
ஓரி டமும் இன்றியே ஒன்றி நின்ற ஒண்சுடர்
ஆரி டமும் இன்றியே அகத்து ளும்பு றத்துளும்
சீரி டங்கள் கண்டவன் சிவன்தெ ரிந்த ஞானியே. 110

மண்கி டார மேசுமந்து மலையுள் ஏறி மறுகுறீர்
எண்ப டாத காரியங்கள் இயலும் என்று கூறுறீர்
தம்பி ரானை நாள்தோறும் தரையி லேதலைபடக்
கும்பி டாத மாந்தரோடு கூடி வாழ்வ தெங்ஙனே. 111

## ஞான நிலை

நாவி னூல்அ ழிந்ததும் நலம்குலம்அ ழிந்ததும்
மேவு தேர்அ ழிந்ததும் விசார மும்கு றைந்ததும்
பாவி காள்இ தென்னமாயம் வாம நாடு பூசலாய்
ஆவி யார்அ டங்குநாளில் ஐவ ரும்அ டங்குவார். 112

இல்லைஇல்லை இல்லையென் றியம்பு கின்ற ஏழைகாள்
இல்லை என்று நின்றதொன்றை இல்லை என்ன லாகுமோ
இல்லை அல்ல ஒன்றுமல்ல இரண்டும் ஒன்றி நின்றதை
எல்லை கண்டு கொண்டபேர் இனிப்பி றப்ப தில்லையே. 113

கார கார காரகார காவல் ஊழி காவலன்
போர போர போரபோர போரில் நின்ற புண்ணியன்
மார மார மாரமார மரங்கள் ஏழும் எய்தசீ
ராம ராம ராமராம ராம என்னும் நாமமே. 114

நீடு பாரி லேபிறந்து நேய மான காயந்தான்
வீடு பேறி தென்றபோது வேண்டி இன்பம் வேண்டுமோ

பாடி நாலு வேதமும் பாரி லேப டர்ந்ததோ
நாடு ராம ராமராம ராம என்னும் நாமமே. 115

உயிரு நன்மை யால்உடல் எடுத்து வந்தி ருந்திடும்
உயிர்உ டம்பொ ழிந்தபோது ரூப ரூப மாயிடும்
உயிர்சி வத்தின் மாயைஆகி ஒன்றை ஒன்று கொன்றிடும்
உயிரும் சத்தி மாயைஆகி ஒன்றை ஒன்று தின்னுமே. 116

நெட்டெ முத்து வட்டமோ நிறைந்த பல்லி யோனியும்
நெட்டெ முத்தில் வட்டமொன்று நின்ற தொன்றும் கண்டிலேன்
குற்றெ ழுத்தில் உற்றதென்று கொம்பு கால்கு றித்திடில்
நெட்டெ ழுத்தின் வட்டம்ஒன்றில் நேர்படான்நம் ஈசனே. 117

விண்ணி லுள்ள தேவர்கள் அறியொ ணாத மெய்ப்பொருள்
கண்ணி லாணி யாகவே கலந்து நின்ற தெம்பிரான்
மண்ணி லாம்பி றப்பறுத்து மலர டிகள் வைத்தபின்
அண்ண லாரும் எம்முளே அமர்ந்து வாழ்வ துண்மையே. 118

விண்க டந்து நின்றசோதி மேலை வாச லைத்திறந்து
கண்க ளிக்க உள்ளுளே கலந்து புக்கி ருந்தபின்
மண்பி றந்த மாயமும் மயக்க மும்ம றந்துபோய்
எண்க லந்த ஈசனோ டிசைந்தி ருப்ப துண்மையே. 119

மூல மான மூச்சதில் மூச்ச றிந்து விட்டபின்
நாலு நாளு முன்னிலோரு நாட்ட மாகி நாட்டிடில்
பால னாகி நீடலாம் பரப்பி ரம்மம் ஆகலாம்
ஆலம் உண்ட கண்டர்ஆணை அம்மை ஆணை உண்மையே. 120

மின்எ ழுந்து மின்பரந்து மின்ஒ டுங்கு மாறுபோல்
என்னுள் நின்ற என்னுள்ஈசன் என்னு ளேஅ டங்குமே,
கண்ணுள் நின்ற கண்ணில்நேர்மை கண்அ றிவி லாமையால்
என்னுள் நின்ற என்னையன்றி யான்அ றிந்த தில்லையே. 121

இருக்க லாம்இ ருக்கலாம் அவனி யில்இ ருக்கலாம்
அரிக்கு மால்பி ரம்மனும் அகண்டம் ஏழ கற்றலாம்
கருக்கொ ளாத குழியிலே காலி டாத கண்ணிலே
நெருப்ப றைதி றந்தபின்பு நீயும் நானும் ஈசனே. 122

ஏக போகம் ஆகியே இருவ ரும்ஒ ருவராய்ப்
போக மும்பு ணர்ச்சியும் பொருந்து மாற தெங்ஙனே
ஆகி லும்அ ழிகிலும் அதன்கண் நேயம் ஆனபின்
சாகி லும்பி றக்கிலும் இல்லை இல்லை இல்லையே. 123

வேதம் நாலும் பூதமாய் விரவும் அங்கி நீரதாய்ப்
பாத மேஇ லிங்கமாய்ப் பரிந்து பூசை பண்ணினால்
காதி னின்று கடைதிறந்து கட்ட றுத்த ஞானிகள்
ஆதி அந்த மும்கடந் தரிய வீடு அடைவரே. 124

## ஞானநிலை

பருத்தி நூல்மு றுக்கிவிட்டுப் பஞ்சி ஓதும் மாந்தரே
துருத்தி நூல்மு றுக்கிவிட்டுத் துன்பம் நீங்க வல்லிரேல்
கருத்தில் நூல்க லைபடும் கால நூல்க ழிந்திடும்
திருத்தி நூல்க ரவறும் சிவாய அஞ்செ ழுத்துமே. 125

சாவ தான தத்துவச் சடங்கு செய்யும் ஊமைகாள்
தேவர் கல்லும் ஆவரோ சிரிப்பதன்றி என்செய்வேன்
மூவ ராலும் அறியொணாத முக்க ணன்மு தற்கொழுந்து
காவ லாக உம்முளே கலந்தி ருப்பன் காணுமே. 126

காலை மாலை நீரிலே முழுகும் அந்த மூடர்காள்
காலை மாலை நீரிலே கிடந்த தேரை என்பெறும்
கால மேஎ ழுந்திருந்து கண்கள் மூன்றில் ஒன்றினால்
மூல மேநி னைப்பிராகில் முத்தி சித்தி யாகுமே. 127

## மதவாதம் மறுத்தல்

எங்கள் தேவர் உங்கள்தேவர் என்றி ரண்டு தேவரோ
இங்கு மங்கு மாய்இரண்டு தேவ ரேஇ ருப்பரோ
அங்கும் இங்கும் ஆகிநின்ற ஆதி மூர்த்தி ஒன்றலோ
வங்க வாரம் சொன்னபேர்கள் வாய்பு ழுத்து மாய்வரே. 128

## அறிவுநிலை

அறைய றைஇ டைக்கிட அன்று தூமை என்கிறீர்
முறைஅ றிந்து பிறந்தபோதும் அன்று தூமை என்கிறீர்

துறைஅ றிந்து நீர்குளித்தால் அன்று தூமை என்கிறீர்
பொறைஇ லாத நீசரோடும் பொருந்து மாற தெங்ஙனே. 129

சத்தம் வந்த வெளியிலே சலமி ருந்து வந்ததும்
மத்த மாகி நீரிலே துவண்டு மூழ்கும் மூடரே
சுத்தம் ஏது கட்டதேது தூய்மை கண்டு நின்றதே
பித்தர் காயம் உற்றதேது பேதம் ஏது போதமே. 130

மாத மாதம் தூமைதான் மறந்துபோன தூமைதான்
மாதம் அற்று நின்றலோ வளர்ந்து ரூபம் ஆனது
நாதம் ஏது வேதம்ஏது நற்கு லங்கள் ஏதடா
வேதம் ஓதும் வேதியா விளைந்த வாறு பேசடா. 131

தூமை அற்று நின்றலோ சுதீப முற்று நின்றது
ஆண்மை அற்று நின்றலோ வழங்க மற்று நின்றது
தாண்மை அற்ற ஆண்மைஅற்றுச் சஞ்ச லங்கள் அற்றுநின்ற
தூமை தூமை அற்றகாலம் சொல்லும் அற்று நின்றதே. 132

ஊறி நின்ற தூமையை உறைந்து நின்ற சீவனை
வேறு பேசி மூடரே விளைந்த வாற தேதடா
நாறு கின்ற தூமையல்லோ நற்கு லங்கள் ஆவன
சீறு கின்ற மூடனேஅத் தூமை நின்ற கோலமே. 133

தூமை கண்டு நின்றபெண்ணின் தூமை தானும் ஊறியே
சீமை எங்கும் ஆணும்பெண்ணும் சேர்ந் துலகம் கண்டதே
தூமை தானும் ஆசையாய் துறந்தி ருந்த சீவனை
தூமை அற்றுக் கொண்டிருந்த தேசம் ஏது தேசமே. 134

வேணும் வேணும் என்றுநீர் வீண்உ ழன்று தேடுவீர்
வேணும் என்று தேடினாலும் உள்ள தல்ல தில்லையே
வேணும் என்று தேடுகின்ற வேட்டை யைத்தி றந்தபின்
வேணும் என்ற அப்பொருள் விரைந்து காணல் ஆகுமே. 135

சிட்டர் ஓது வேதமும் சிறந்த ஆக மங்களும்
நட்ட கார ணங்களும் நவின்ற மெய்மை நூல்களும்
கட்டி வைத்த போதகம் கதைக்கு கந்த பித்தெலாம்
பெட்ட தாய்மு டிந்ததே பிரானை யான்அ றிந்தபின் 136

நூறு கோடி ஆகமங்கள் நூறு கோடி மந்திரம்
நூறு கோடி நாள்இருந்தும் ஓதி னால்அ தன்பயன்
ஆறும் ஆறும் ஆறுமாய் அகத்தில் ஓர்எ ழுத்துமாய்
ஏறு சீர்எ ழுத்தைஓத ஈசன் வந்து பேசுமே .137

காலை மாலை தம்மிலே கலந்து நின்ற காலனார்
மாலை காலை யாய்ச்சிவந்த மாயம் ஏது செப்பிடீர்
காலை மாலை அற்றுநீர் கருத்தி லேஒ டுங்கினால்
காலை மாலை ஆகிநின்றகாலன் இல்லை இல்லையே. 138

எட்டு மண்ட லத்துளே இரண்டு மண்ட லம்வளைத்
திட்ட மண்ட லத்துளே எண்ணி ஆறு மண்டலம்
தொட்ட மண்ட லத்திலே தோன்றி மூன்று மண்டலம்
நட்ட மண்ட லத்துளே நாதன் ஆடி நின்றதே. 139

நாலி ரண்டு மண்டலத்துள் நாதன் நின்ற தெவ்விடம்
காலி ரண்டு மூலநாடி கண்ட தங்கு ருத்திரன்
சேலி ரண்டு கண்கலந்து திசைகள் எட்டு மூடியே
மேலி ரண்டு தான்கலந்து வீசி ஆடி நின்றதே. 140

அம்மை அப்பன் உப்புநீர் அறிந்த தேஅ றிகிலீர்
அம்மை அப்பன் உப்புநீர் அரிஅ யன்அ ரனுமாய்
அம்மை அப்பன் உப்புநீர் ஆதி யாதி ஆனபின்
அம்மை அப்பன் அன்னைஅன்றி யாரும்இல்லை ஆனதே. 141

உருத்த ரிப்ப தற்குமுன் உடல்க லந்த தெங்ஙனே
கருத்த ரிப்ப தற்குமுன் காரணங்கள் எங்ஙனே
பொருத்தி வைத்த போதமும் பொருந்து மாற தெங்ஙனே
குருத்தி ருத்தி வைத்தசொல் குறித்து ணர்ந்து கொள்ளுமே. 142

ஆதி உண்டு அந்தம்இல்லை அன்றி நாலு வேதம்இல்லை
சோதி உண்டு சொல்லும்இல்லை சொல்லி றந்த தேதும்இல்லை
ஆதி யான மூவரில் அமர்ந்தி ருந்த வாயுவும்
ஆதி யன்று தன்னையும் யார்அ றிவதிங் கண்ணலே. 143

புலால்பு லால்பு லால்அதென்று பேத மைகள் பேசுறீர்
புலாலை விட்டே எம்பிரான் பிரிந்தி ருந்த தெங்ஙனே

புலாலு மாய்ப்பி தற்றுமாய்ப் பேரு லாவும் தானுமாய்ப்
புலாலி லேமு ளைத்தெழுந்த பித்தன் காணும் அத்தனே. 144

உதிர மான பால்குடித் தொக்க நீர்வ ளர்ந்ததும்
இதர மாய்இ ருந்ததொன்றி ரண்டு பட்ட தென்னலாம்
மதிர மாக விட்டதேது மாமி சம்பு லால்அதென்று
சதிர மாய்வ ளர்ந்ததேது சைவ ரான மூடரே. 145

உண்ட கல்லை எச்சில்என்று உள்ளெ றிந்து போடுறீர்
கண்ட எச்சில் கையலோ கரும னுக்கும் வேறதோ
கண்ட எச்சில் கேளடா கலந்த பாணி அப்பிலே
கொண்ட சுத்தம் ஏதடா குறிப்பி லாத மூடனே. 146

ஓதி வைத்த நூல்களும் உணர்ந்து கற்ற கல்வியும்
மாது மக்கள் சுற்றமும் மறக்க வந்த நித்திரை
ஏது புக்கொ ளித்ததோ எங்கு மாகி நின்றதோ
சோதி புக்கொ ளித்தமாயம் சொல்ல டாசு வாமியே. 147

ஈனெ ருமை யின்கழுத்தில் இட்ட பொட்ட ணங்கள்போல்
மூணு நாலு சீலையில் முடிந்த விழ்க்கும் மூடர்காள்
மூணு நாலு லோகமும் முடிவி லாத மூர்த்தியை
ஊணி ஊணி நீர்முடிந்த உண்மை என்ன உண்மையே. 148

சாவல் நாலு குஞ்சதஞ்சு தாய தான வாறுபோல்
காய மான கூட்டிலே கலந்து சண்டை கொள்ளுதே
கூவ மான கிழநரிக் கூட்டி லேபு குந்தபின்
சாவல் நாலு குஞ்சதஞ்சும் தாம்இ றந்து போனவே. 149

மூல மாம்கு ளத்திலே முளைத்தெ ழுந்த கோரையை
கால மேஎ ழுந்திருந்து நாலு கட்ட றுப்பிரேல்
பால னாகி வாழலாம் பரப்பி ரம்மம் ஆகலாம்
ஆலம் உண்ட கண்டர்பாதம் அம்மை பாதம் உண்மையே. 150

செம்பி னில்க ளிம்புவந்த சீத கங்கள் போலவே
அம்பி னில்எ ழுதொணாத அணிய ரங்க சோதியை
வெம்பி வெம்பி வெம்பியே மெலிந்து மேல்க லந்திடச்
செம்பி னில்க ளிம்புவிட்ட சேதி ஏது காணுமே. 151

நாடி நாடி நம்முளே நயந்து காண வல்லிரேல்
ஓடி ஓடி மீளுவார் உம்மு ளேஅ டங்கிடும்
தேடி வந்த காலனும் திகைத்தி ருந்து போய்விடும்
கோடி கால மும்உகந் திருந்த வாற தெங்ஙனே. 152

பிணங்கு கின்ற தேதடா பிரஞ்ஞை கெட்ட மூடரே
பிணங்கி லாத பேரொளி பிராண னைஅ றிகிலீர்
பிணங்கும் ஓர்இ ருவினைப் பிணக்க றுக்க வல்லிரேல்
பிணங்கி லாத பெரியஇன்பம் பெற்றி ருக்க லாகுமே. 153

மீன்இ றைச்சி தின்றதில்லை அன்றும் இன்றும் வேதியர்
மீன்இ ருக்கும் நீரலோ மூழ்குவ தும்கு டிப்பதும்
மான்இ றைச்சி தின்றதில்லை அன்றும் இன்றும் வேதியர்
மான்உ ரித்த தோலலோ மார்பில் நூல்அ ணிவதும். 154

ஆட்டி றைச்சி தின்றதில்லை அன்றும் இன்றும் வேதியர்
ஆட்டி றைச்சி அல்லவோ யாகம் நீங்கள் ஆற்றலே
மாட்டி றைச்சி தின்றதில்லை அன்றும் இன்றும் வேதியர்
மாட்டி றைச்சி அல்லவோ மரக்க றிக்கி டுவதே. 155

ஆக்கி டீர்அ னைத்துயிர்க்கும் ஆதி யாகி நிற்பதும்
முக்கி டீர்உ மைப்பிடித்து முத்த ரித்து விட்டதும்
மைக்கி டீர்பி றந்துஇறந்து மாண்டு மாண்டு போவதும்
ஒக்கி டீர்உ மக்குநான் உணர்த்து வித்த துண்மையே. 156

ஐயன் வந்து மெய்யகம் புகுந்த வாற தெங்ஙனே
செய்ய தெங்கி ளங்குரும்பை நீர்பு குந்த வண்ணமே
ஐயன் வந்து மெய்யகம் புகுந்து கோயில் கொண்டபின்
வைய கத்தில் மாந்த ரோடு வாய்தி றப்ப தில்லையே. 157

நவ்வு மவ்வை யும்கடந்து நாடொ ணாத சியின்மேல்
வவ்வு யவ்வு ளும்சிறந்த வண்மை ஞான போதகம்
ஒவ்வு சுத்தி யுள்நிறைந் துச்சி யூடு ருவியே
இவ்வ கைஅ றிந்தபேர்கள் ஈசன் ஆணை ஈசனே. 158

அக்க ரம்அ னாதியோ ஆத்து மம்அ னாதியோ
புக்கி ருந்த பூதமும் புலன்க ளும்அ னாதியோ
தர்க்க மிக்க நூல்களும் சாத்தி ரம்அ னாதியோ
தற்ப ரத்தை ஊடறுத்த சற்கு ருஅ னாதியோ. 159

பார்த்த தேது பார்த்திடில் பார்வை யூட ழிந்திடும்
கூர்த்த தாய்இ ருப்பிரேல் குறிப்பில் அச்சி வம்அதாம்
பார்த்த பார்த்த போதெலாம் பார்வை யும்இ கந்துநீர்
பூத்த பூத்த காயுமாய் பொருந்து வீர்பி றப்பிலே. .160

நெற்றி பற்றி உழலுகின்ற நீல மாவி ளக்கினைப்
பற்றி ஒந்தி நின்றுநின்று பற்ற றுத்த தென்பலன்
உற்றி ருந்து பாரடா உள்ஒ ளிக்கு மேல்ஒளி
அத்த னார்அ மர்ந்திடம் அறிந்த வன்அ னாதியே. 161

நீரை அள்ளி நீரில்விட்டு நீர்நி னைந்த காரியம்
ஆரை உன்னி நீரெலாம் அவத்தி லேஇ றைக்கிறீர்
வேரை உன்னி வித்தை உன்னி வித்தி லேமு ளைத்தெழுந்த
சீரை உன்ன வல்லிரேல் சிவப தங்கள் சேரலாம். 162

நெற்றி யில்த யங்குகின்ற நீல மாவி ளக்கினை
உற்று ணர்ந்து பாரடா உள்ளி ருந்த சோதியைப்
பத்தி யில்தொ டர்ந்தவர் பரம யம்அ தானவர்
அத்த லத்தில் இருந்தபோர்கள் அவர்எ னக்கு நாதரே. 163

கருத்த ரிக்கு முனனெலாம் காயம் நின்ற தெவ்விடம்
உருத்த ரிக்கு முன்னெலாம் உயிர்ப்பு நின்ற தெவ்விடம்
அருள்த ரிக்கு முன்னெலாம் ஆசை நின்ற தெவ்விடம்
திருக்க றுத்துக் கொண்டதே சிவாயம் என்று கூறுவீர். 164

கருத்த ரிக்கு முன்னெலாம் காயம் நின்ற தேயுவில்
உருத்த ரிக்கு முன்னெலாம் உயிர்ப்பு நின்ற தப்புவில்
அருள்த ரிக்கு முன்னெலாம் ஆசை நின்ற வாயுவில்
திருக்க றுத்துக் கொண்டதே சிவாயம் என்று கூறுவீர். 165

தாத ரான தாதரும் தலத்தில் உள்ள சைவரும்
கூத ரைப்ப றைச்சிமக்கள் கூடிச் செய்த காரியம்
வீதி போகும் ஞானியை விரைந்து கல்எ றிந்ததும்
பாத கங்கள் ஆகவே பலித்த தேசி வாயமே. 166

ஓடி ஓடிப் பாவிழைத்து உள்ளங் கால்வெ ளுத்ததும்
பாவி யான பூனைவந்து பாவி லேகு தித்ததும்
பணிக்கன் வந்து பார்த்ததும் பாரம் இல்லை என்றதும்
இழைஅ றுந்து போனதும் என்ன மாயம் ஈசனே .167

சதுரம் நாலு மறையும்எட்டு தான தங்கி மூன்றுமே
எதிர தான வாயுஆறு எண்ணும் வட்ட மேவியே
உதிர தான வரைகள் எட்டும் எண்ணும் என்சி ரசின்மேல்
கதிர தான காயகத்தில் கலந்தெ ழுந்த நாதமே. 168

நாலொ டாறு பத்துமேல் நாலு மூன்றும் இட்டபின்
மேலு பத்து மாறுடன் மேதி ரண்ட தொன்றுமே
கோலி அஞ்செ ழுத்துளே குருவி ருந்து கூறிடில்
தோலு மேனி நாதமாய்த் தோற்றி நின்ற கோசமே. 169

கோச மாய்எ ழுந்ததும் கூடு முருவி நின்றதும்
தேச மாய்ப்பி றந்ததும் சிவாயம் அஞ்செ ழுத்துமே
ஈச னார்இ ருந்திடம் அனேக னேக மந்திரம்
ஆச னம்நி றைந்துநின்ற ஐம்பத் தோர்எ ழுத்துமே. 170

அங்க லிங்க பீடமாய் ஐயி ரண்டு எழுத்திலும்
பொங்கு தாம ரையிலும் பொருந்து வார்அ கத்தினும்
பங்கு கொண்ட சோதியும் பரந்த அஞ்செ ழுத்துமே
சிங்க நாத ஓசையும் சிவாயம் அல்ல தில்லையே. 171

உவமை யில்லாப் பேரொளிக்குள் உருவ மான தெவ்விடம்
உவமை யாகி அண்டத்தில் உருவி நின்ற தெவ்விடம்
தவம தான பரமனார் தரித்து நின்ற தெவ்விடம்
தற்ப ரத்தில் சலம்பி றந்து தாங்கி நின்ற தெவ்விடம்
சுகம தாக எருது மூன்று கன்றை ஈன்ற தெவ்விடம்
சொல்லு கீழு லோகம்ஏழும் நின்ற வாற தெவ்விடம்
அளவ தான மேருவும் அமைவ தான தெவ்விடம்
அவனும் அவளும் ஆடலால் அருஞ்சி வன்பி றந்ததே. 172

உதிக்க நின்ற தெவ்விடம் ஒடுங்கு கின்ற தெவ்விடம்
கதிக்க நின்ற தெவ்விடம் கன்று றக்கம் எவ்விடம்
மதிக்க நின்ற தெவ்விடம் மதிம யக்கம் எவ்விடம்
விதிக்க வல்ல ஞானிகாள் விரித்து ரைக்க வேணுமே. 173

திரும்பி ஆடு வாசல்எட்டு திறம்உ ரைத்த வாசல்எட்டு
மருங்கி லாத கோலம்எட்டு வன்னி யாடு வாசல்எட்டு
துரும்பி லாத கோலம்எட்டு சுற்றி வந்த மருளரே
அரும்பி லாத பூவும்உண்டு ஐயன் ஆணை உண்மையே. 174

தானி ருந்து மூலஅங்கி தணல்எ ழுப்பி வாயுவால்
தேனி ருந்து வரைதிறந்து தித்தி ஒன்றும் ஒத்தவே
வானி ருந்து மதியமூன்று மண்ட லம்பு குந்தபின்
ஊனி ருந்த தளவுகொண்ட யோகி நல்ல யோகியே .175

முத்த னாய்நி னைந்தபோது முடிந்த அண்டத் துச்சிமேல்
பத்த னாரும் அம்மையும் பரிந்த ஆடல் ஆடினார்
சித்த ரான ஞானிகாள் தில்லை ஆடல் என்பிர்காள்
அத்தன் ஆடல் உற்றபோ தடங்கள் ஆடல் உற்றவே. 176

ஒன்றும் ஒன்றும் ஒன்றுமே உலக னைத்தும் ஒன்றுமே
அன்றும் இன்றும் ஒன்றுமே அனாதி யான தொன்றுமே
கன்றல் நின்ற செம்பொனைக் களிம்ப றுத்து நாட்டினால்
அன்று தெய்வம் உம்முளே அறிந்த தேசி வாயமே. 177

நட்ட தாவ ரங்களும் நவின்ற சாத்தி ரங்களும்
இட்ட மான ஓமகுண்டம் இசைந்த நாலு வேதமும்
கட்டி வைத்த புத்தகம் கடும்பி தற்றி தற்கெலாம்
பெட்ட தாய்மு டிந்ததே பிரானை யான றியவே. 178

வட்ட மான கூட்டிலே வரைந்தெ ழுந்த அம்புலி
சட்டமீப டத்திலே சங்கு சக்க ரங்களாய்
விட்ட அஞ்சு வாசலில் கதவி னால்அ டைத்தபின்
முட்டை யில்எ ழுந்தசீவன் விட்ட வாற தெங்ஙனே. 179

கோயில் பள்ளி ஏதடா குறித்து நின்ற தேதடா
வாயி னால்தொ ழுதுநின்ற மந்தி ரங்கள் ஏதடா
ஞாய மான பள்ளியில் நன்மை யாக வணங்கினால்
காய மான பள்ளியில் காண லாம்இ றையையே. 180

நல்ல வெள்ளி ஆறதாய் நயந்த செம்பு நாலதாய்
கொல்லு நாகம் மூன்றதாக் குலாவு செம்பொன் இரண்டதாய்
வில்லின் ஓசை ஒன்றுடன் விளங்க ஊத வல்லிரேல்
எல்லை ஒத்த சோதியை எட்டு மாற தாகுமே. 181

மனத்த கத்த ழுக்கறாத மவுன ஞான யோகிகள்
வனத்த கத்து இருக்கினும் மனத்த கத்த ழுக்கறார்
மனத்த கத்த ழுக்கறுத்த மவுன ஞான யோகிகள்
பினத்த டத்தி ருக்கினும் பிறப்ப றுத்தி ருப்பரே. 182

உருவும் அல்ல ஒளியும்அல்ல ஒன்ற தாகி நின்றதே
மருவும் அல்ல கந்தம்அல்ல மந்த நாடி உற்றதல்ல
பெரிய தல்ல சிறியதல்ல பேசும் ஆவி தானும்அல்ல
அரிய தாக நின்றநேர்மை யாவர் காண வல்லரே. 183

ஒரெ முத்து உலகெலாம் உதித்த அட்ச ரத்துளே
ஈரெ முத்தி யம்புகின்ற இன்ப மேத றிகிலீர்
மூவெ ழுத்து மூவராய் மூண்டெ ழுந்த மூர்த்தியை
நாலெ ழுத்து நாவிலே நவின்ற தேசி வாயமே. 184

ஆதி அந்த மூலவிந்து நாதம் ஐந்து பூதமாய்
ஆதி அந்த மூலவிந்து நாதம் ஐந்து எழுத்துமாய்
ஆதி அந்த மூலவிந்து நாதம் மேவி நின்றதும்
ஆதி அந்த மூலவிந்து நாத மேசி வாயமே. 185

அன்னம் இட்ட பேரெலாம் அனேக கோடி வாழவே
சொன்னம் இட்ட பேரெலாம் துரைத்த னங்கள் பண்ணலாம்
வின்னம் இட்ட பேரெலாம் வீழ்வர் வெந்த ரகிலே
கன்னம் இட்ட பேரெலாம் கடந்து நின்ற தின்னமே. 186

ஓதொ ணாமல் நின்றநீர் உறக்கம் ஊணும் அற்றநீர்
சாதி பேதம் அற்ற நீர் சங்கை யின்றி நின்றநீர்
கோதி லாக அறிவிலே குறிப்பு ணர்ந்து நின்றநீர்
ஏதும் இன்றி நின்றநீர் இயங்கு மாறது எங்ஙனே. 187

பிறந்த போது கோவணம் இலங்கு நூல்கு டுமியும்
பிறந்து டன்பி றந்ததோ பிறங்கு நாள்ச டங்கெலாம்
மறந்த நாலு வேதமும் மனத்துளே உதித்ததோ
நிலம்பி ளந்து வான்இடிந்து நின்ற தென்ன வல்லிரே. 188

துருத்தி யுண்டு கொல்லன் உண்டு சொர்ணமான சோதியுண்டு
திருத்த மாய்ம னத்திலுன்னித் திகழ ஊத வல்லிரேல்
பெருத்த தூண்இ லங்கியே பிழம்ப தாய்வி ரிந்திடும்
நிருத்த மான சோதியும் நீயும் அல்ல தில்லையே. 189

வேடமிட்டு மணிதுலக்கி மிக்க தூப தீபமாய்
ஆட றுத்துக் கூறுபோட்ட அவர்கள் போலும் பண்ணுறீர்
தேடி வைத்த செம்பெலாம் திரள்ப டப்ப ரப்பியே
போடு கின்ற புட்பபூசை பூசை என்ன பூசையே. 190

முட்டுக் கண்ட தூமையின் முளைத்தெ ழுந்த சீவனை
கட்டிக் கொண்டு நின்றிடம் கடந்து நோக்க வல்லிரேல்
முட்டும் அற்றுக் கட்டும்அற்று முடியில் நின்ற நாதனை
எட்டுத் திக்கும் கையினால் இருந்த வீட தாகுமே. 191

அருக்க னோடு சோமனும் அதற்கும் அப்பு றத்திலே
நெருக்கி ஏறு தாரகை நெருங்கி நின்ற நேர்மையை
உருக்கி ஒர்எ ழுத்துளே ஒப்பி லாத வெளியிலே
இருக்க வல்ல பேரலோ இனிப்பி றப்ப தில்லையே. 192

மூல வட்டம் மீதிலே முளைத்த அஞ்செ ழுத்தின்மேல்
கோல வட்டம் மூன்றுமாய்க் குலைந்த லைந்து நின்றநீர்
ஞான வட்ட மன்றுளே நவின்ற ஞானம் ஆகிலோ
ஏல வட்டம் ஆகியே இருந்த தேசி வாயமே. 193

சுக்கி லத்தி சையுளே சுரோணி தத்தின் வாசலுள்
முச்ச துரம் எட்டுளே மூலா தார அறையிலே
அச்ச மற்ற சவ்வுளே அரிஅ ரன்அ யனுமாய்
உச்ச ரிக்கும் மந்திரம் உண்மை யேசி வாயமே. 194

பூவம் நீரும் என்மனம் பொருந்து கோயில் என்உளம்
ஆவி ஓடி லிங்கமாய் அகண்டம் எங்கும் ஆகினால்
மேவு கின்ற ஐவரும் விளங்கு தூப தீபமாய்
ஆடு கின்ற கூத்தனுக்கோர் அந்தி சந்தி இல்லையே. 195

உருக்க லந்த பின்னலோ உன்னை நான்அ றிந்ததும்
இருக்கில் என்ம றக்கில்என் நினைந்தி ருந்த போதெலாம்
உருக்க லந்து நின்றபோது நீயும் நானும் ஒன்றலோ
திருக்க லந்த போதலோ தெளிந்த தேசி வாயமே. 196

சிவாயம் அஞ்செ ழுத்திலே தெளிந்து தேவர் ஆகலாம்
சிவாயம் அஞ்செ ழுத்திலே தெளிந்து வானம் ஆளலாம்
சிவாயம் அஞ்செ ழுத்துளே தெளிந்து கொண்ட வான்பொருள்
சிவாயம் அஞ்செ ழுத்துளே தெளிந்து கொள்ளும் உண்மையே. 197

பொய்க்கு டத்தில் ஐந்தொதுங்கிப் போகம் வீசு மாறுபோல்
இச்ச டமும்இந் திரியமும் நீரு மேல்அ லைந்ததே
அக்கு டம்ச லத்தைமொண்டு அமர்ந்தி ருந்த வாறுபோல்
இச்ச டம்சி வத்தைமொண் டுகந்த மர்ந்தி ருப்பதே. 198

பட்ட முமக யிறுபோல் பறக்க நின்ற சீவனை
பார்வை யாலே பார்த்துநீ படுமுடிச்சுப் போடடா
திட்ட வும்ப டாதடா சீவ னைவி டாதடா
கட்ட டாநீ சிக்கெனக் களவ றிந்த கள்ளனை. 199

அல்லி றந்து பகலிறந்து அகம்பி ரமம்இ றந்துபோய்
அண்ட ரண்ட மும்கடந்த அனேக னேக ரூபமாய்ச்
சொல்லி றந்து மனமிறந்த சுகசொ ரூப உண்மையைச்
சொல்லி யாற என்னில்வேறு துணைவ ரில்லை ஆனதே. 200

ஐயி ரண்டு திங்களாய் அடங்கி நின்ற தூமைதான்
கையி ரண்டு காலிரண்டு கண்ணி ரண்டும் ஆகியே
மெய்தி ரண்டு சத்தமாய் விளங்கி ரச கந்தமும்
துய்ய காயம் ஆனதும் சொல்லு கின்ற தூமையே. 201

அங்க லிங்க பீடமும் அசவை மூன்றெ முத்தினும்
சங்க சக்க ரத்திலும் சகல வான கத்தினும்
பங்கு கொண்ட யோகிகள் பரம வாசல் அஞ்சினும்
சிங்க நாத ஓசையும் சிவாயம் அல்ல தில்லையே. 202

அஞ்செ முத்தும் மூன்றெழுத்தும் என்று ரைக்கும் அன்பர்கள்
அஞ்செ முத்தும் மூன்றெழுத்தும் அல்ல காணும் அப்பொருள்
அஞ்செ முத்து நெஞ்சழுத்தி அவ்வெ முத்த றிந்தபின்
அஞ்செ முத்தும் அவ்வின்வண்ணம் ஆன தேசி வாயமே. 203

ஆத ரித்த மந்திரம் அமைந்த ஆக மங்களும்
மாதர் மக்கள் சுற்றமும் மயக்க வந்த நித்திரை
ஏது புக்கொ ளித்ததோ எங்கும் ஆகி நின்றதோ
சோதி புக்கொ ளித்திடம் சொல்ல டாசு வாமியே. 204

அக்க ரம்அ னாதியோ ஆத்து மாஅ னாதியோ
புக்கி ருந்த பூதமும் புலன்க ளும்அ னாதியோ
தக்க மிக்க நூல்களும் சதாசி வம்அ னாதியோ
மிக்க வந்த யோகிகாள் விரைந்து ரைக்க வேணுமே. 205

ஒன்ப தான வாசல்தான் ஒழியு நாள்இ ருக்கையில்
ஒன்ப தாகும் ராமராம ராம என்னும் நாமமே
வன்ம மான பேர்கள்வாக்கில் வந்து நோய்அ டைப்பராம்
அன்ப ரான பேர்கள் வாக்கில் ஆய்ந்த மைந்தி ருப்பதே. 206

அள்ளி நீரை இட்டதேது அங்கை யில்கு ழைத்ததேது
மெள்ள வேமி ணமிணென்று விளம்பு கிற்கு மூடர்கள்
கள்ள வேடம் இட்டதேது கண்ணை மூடி விட்டதேது
மெள்ள வேகு ருக்களே விளம்பி டீர்வி ளம்பிடீர். 207

அன்னை கர்ப்பத் தூமையில் அவத ரித்த சுக்கிலம்
மின்னை யேத ரித்ததும் பனித்து ளிபோ லாகுமே
உன்னி தொக்கு ளழலும் தூமையுள் ளேஅ டங்கிடும்
பின்னை யேபி றப்பதும் தூமை காணும் பித்தரே. 208

அழுக்க றத்தி னங்குளித்த ழுக்க றாத மாந்தரே
அழுக்கி ருந்த தெவ்விடம் அழுக்கி லாத தெவ்விடம்
அழுக்கி ருந்த அவ்விடத் தழுக்க றுக்க வல்லிரேல்
அழுக்கி லாத சோதியோ டணுகி வாழ லாகுமே. 209

அனுத்தி ரண்ட கண்டமாய் அனைத்து பல்லி யோனியாய்
மனுப்பி றந்தோ திவைத்த நூலி லேம யங்குறீர்
சனிப்ப தேது சாவதேது தாப ரத்தின் ஊடுபோய்
நினைப்ப தேது நிற்பதேது நீர்நி னைந்து பாருமே. 210

ஆதி யாகி அண்டரண்டம் அப்பு றத்தும் அப்புறம்
சோதி யாகி நின்றிலங்கு சுருதி நாத சோமனை
போதி யாமல் தம்முளே பெற்று ணர்ந்த ஞானிகள்
சாதி பேதம் என்பதொன்று சற்று மில்லை இல்லையே. 211

ஆக்கை மூப்ப தில்லையே ஆதி கார ணத்திலே
நாக்கை மூக்கை யுள்மடித்து நாத நாடி யூடுபோய்
ஏக்க றுத்தி ரெட்டையும் இறுக்க மூத்த வல்லிரேல்
பார்க்க பார்க்க திக்கெல்லாம் பரப்பி ரம்மம் ஆகுமே. 212

அஞ்சும் அஞ்சும் அஞ்சும்அஞ்சும் அல்லல் செய்து நிற்பதும்
அஞ்சும் அஞ்சும் அஞ்சுமே அமர்ந்து ளேஇ ருப்பதும்
அஞ்சும் அஞ்சும் அஞ்சுமே ஆத ரிக்க வல்லிரேல்
அஞ்சும் அஞ்சும் உம்முளே அமர்ந்த தேசி வாயமே. 213

அஞ்செ ழுத்தின் அனாதியாய் அமர்ந்து நின்ற தேதடா
நெஞ்ச ழுத்தி நின்றுகொண்டு நீசெ பிப்ப தேதடா
அஞ்செ ழுத்தின் வாளதால் அறுப்ப தாவ தேதடா
பிஞ்செ ழுத்தின் நேர்மைதான் பிரித்து ரைக்க வேண்டுமே. 214

உயிரி ருந்த தெவ்விடம் உடம்பெ டுப்ப தின்முனம்
உயிர தாவ தேதடா உடம்ப தாவ தேதடா
உயிரை யும்உ டம்பையும் ஒன்று விப்ப தேதடா
உயிரி னால்உ டம்பெடுத்த உண்மை ஞானி சொல்லடா. 215

சுழித்த வோர்எ ழுத்தையும் சொன்மு கத்தி ருத்தியே
துன்ப இன்ப முங்கடந்து சொல்லு மூல நாடிகள்
அழுத்த மான அக்கரம் அங்கி யுள்ள ழுப்பியே
ஆறு பங்க யம்கலந் தப்பு றத்த லத்துளே. 216

உருத்த ரிப்ப தற்குமுன் உயிர்பு குந்த நாதமும்
கருத்த ரிப்ப தற்குமுன் காயம் என்ன சோணிதம்
அருள்த ரிப்ப தற்குமுன் அறிவு மூலா தாரமாம்
குருத்த றிந்து கொள்ளுவீர் குணங்கெ டும்கு ருக்களே. 217

எங்கும் உள்ள ஈசனார் எம்மு டல்பு குந்தபின்
பங்கு கூறு பேசுவார் பாடு சென்றே அணுகிலார்
எங்கள் தெய்வம் உங்கள்தெய்வம் என்றி ரண்டு பேதமோ
உங்கள் பேதம் அன்றியே உண்மை இரண்டும் இல்லையே. 218

அரியு மாகி அயனுமாகி அண்ட மெங்கு மொன்றதாய்
பெரிய தாகி உலகுதன்னில் நின்ற பாதல் ஒன்றலோ
விரிவ தென்று வேறுசெய்த வேட மிட்ட மூடரே
அறிவி னோடு பாரும்இங்கும் அங்கும் எங்கு மொன்றதே. 219

வெந்த நீறு மெய்க்கணிந்து வேட மும்த ரிக்கிறீர்
சிந்தை யுள்நி னைந்துமே தினம்செ பிக்கு மந்திரம்
முந்த மந்தி ரத்திலோ மூல மந்தி ரத்திலோ
எந்த மந்தி ரத்திலோ ஈசன் வந்தி யங்குமே. 220

அகார கார ணத்திதிலே அனேகே னேக ரூபமாய்
உகார கார ணத்திலே உருத்த ரித்து நின்றனன்
மகார கார ணத்திலே மயக்கு கின்ற வையகம்
சிவார கார ணத்திலே தெளிந்த தேசி வாயமே. 221

அவ்வெ ழுத்தில் உவ்வுவந்து அகார மும்ச னித்ததோ
உவ்வெ ழுத்து மவ்வெழுத்தும் ஒன்றை ஒன்றி நின்றதோ
செவ்வை ஒத்து நின்றலோ சிவப தங்கள் சேரினும்
மிவ்வை யொத்த ஞானிகள் விரித்து ரைக்க வேணுமே. 222

ஆதி யான அஞ்சிலும் அனாதி யான நாவிலும்
சோதி யான மூன்றிலும் சொரூபம் அற்ற ரெண்டிலும்
நீதி யான தொன்றிலே நிறைந்து நின்ற வத்துவை
ஆதி யான தொன்றுமே அற்ற தஞ்செ ழுத்துமே. 223

வானி லாத தொன்றுமில்லை வானு மில்லை வானிடில்
ஊனி லாத தொன்றுமில்லை ஊனு மில்லை ஊனிடில்
நானி லாத தொன்றுமில்லை நானு மில்லை நண்ணிடில்
தானி லாத தொன்றுமே தயங்கி ஆடு கின்றதே. 224

சுழித்த தோர்எ ழுத்தை உன்னிச் சொல்மு கத்தி ருத்தியே
துன்ப இன்ப முங்க டந்து சொல்லும் நாடி யூடுபோய்
அழுத்த மான வக்க ரத்தின் அங்கி யைஎ ழுப்பியே
ஆறு பங்க யம்கடந் தப்பு றத்து வெளியிலே
விழித்த கண்கு வித்த போத டைந்து போய்எ ழுத்தெலாம்
விளைந்து விட்ட இந்திர சால வீட தான வெளியிலே
அழுத்தி னாலு மதிம யங்கி அனுப விக்கும் வேளையில்
அவனு முண்டு நானு மில்லை யாரு மில்லை ஆனதே. 225

நல்ல மஞ்ச னங்கள் தேடி நாடி நாடி ஓடுறீர்
நல்ல மஞ்ச னங்களுண்டு நாதன் உண்டு நம்முளே
எல்லை மஞ்ச னங்கள்தேடி ஏக பூசை பண்ணினால்
தில்லை மேவும் சீவனும் சிவப தத்துள் ஆடுமே. 226

உயிர்அ கத்தில் நின்றிடும் உடம்பெ டுத்த தற்குமுன்
உயிர்அ காரம் ஆயிடும் உடல்உ காரம் ஆயிடும்
உயிரை யும்உ டம்பையும் ஒன்று விப்ப தச்சிவம்
உயிரி னால்உ டம்புதான் எடுத்த வாறு ரைக்கினே. 227

அண்டம் ஏழும் உழலவே அனந்த யோனி உழலவே
பண்டை மாறு மயனுடன் பரந்து நின்றும் உழலவே
எண்தி சைக டந்துநின் றிருண்ட சத்தி உழலவே
அண்ட ரண்டம் ஒன்றதாய் ஆதி நட்டம் ஆடுமே. 228

உருவ நீரு றுப்புகொண் டுருத்த ரித்து வைத்திடும்
பெரிய பாதை பேசுமோ பிசாசை ஒத்த மூடரே

கரிய மாலும் அயனுமாகக் காணொ ணாத கடவுளை
உரிமை யாக உம்முளே உணர்ந்து ணர்ந்து கொள்ளுமே. 229

பண்ணி வைத்த கல்லையும் பழம்பொ ருள்அ தென்றுநீர்
என்ன முற்றும் என்னபேர் உரைக்கி றீர்கள் ஏழைகாள்
பண்ண வும்ப டைக்கவும் படைத்து வைத்த ளிக்கவும்
ஒண்ணு மாகி உலகளித்த ஒன்றை நெஞ்சில் உன்னுமே. 230

நால தான யோனியுள் நவின்ற விந்தும் ஒன்றதாய்
ஆல தான வித்துளே அமர்ந்தொ டுங்கு மாறுபோல்
சூல தான உற்பனம் சொல்வ தான மந்திரம்
மேல தான ஞானிகாள் விரித்து ரைக்க வேணுமே. 231

அருவ மாய்இ ருந்தபோ தன்னை அங்க றிந்திலை
உருவ மாய்இ ருந்தபோ துன்னை நான்அ றிந்தனன்
குருவி னால்தெ ளிந்துகொண்டு கோதி லாத ஞானமாம்
பருவ மான போதலோ பரப்பி ரம்மம் ஆனதே. 232

பிறப்ப தும்இ றப்பதும் பிறந்தி டாதி ருப்பதும்
மறப்ப தும்நி னைப்பதும் மறைந்த தைத்தெ ளிந்ததும்
துறப்ப தும்தொ டுப்பதும் சுகித்து வாரி உண்பதும்
பிறப்ப தும்இ றப்பதும் பிறந்த வீட டங்குமே. 233

கண்ணி லேஇ ருப்பனே கருங்க டல்க டைந்தமால்
விண்ணி லேஇ ருப்பனே மேவி அங்கு நிற்பனே
தன்னு ளேஇ ருப்பனே தராத லம்ப டைத்தவன்
என்னு ளேஇ ருப்பனே எங்கு மாகி நிற்பனே. 234

ஆடு நாடு தேடினும் ஆனை சேனை தேடினும்
கோடி வாசி தேடினும் குறுக்கே வந்து நிற்குமோ
ஓடி இட்ட பிச்சையும் உகந்து செய்த தர்மமும்
சாடி விட்ட குதிரைபோல் தாமே வந்து நிற்குமே. 235

எள்இ ரும்பு கம்பளி இடும்ப ருத்தி வெண்கலம்
அள்ளி உண்ட நாதனுக்கோர் ஆடை மாடை வத்திரம்
உள்ளி ருக்கும் வேதியர்க் குற்ற தானம் ஈதிரால்
மெள்ள வந்து நோய்அனைத்து மீண்டி டும்சி வாயமே. 236

ஊரி லுள்ள மனிதர்காள் ஒரும னதாய்க் கூடியே
தேரி லேவ டத்தைவிட்டுச் செம்பை வைத்தி ழுக்கிறீர்
ஆரி னாலும் அறியொ ணாத ஆதி சித்த நாதரைப்
பேதை யான மனிதர்பண்ணும் பிரளி பாரும் பாருமே. 237

மருள்பு குந்த சிந்தையால் மயங்கு கின்ற மாந்தரே
குருக்கொ டுத்த மந்திரம் கொண்டு நீந்த வல்லிரேல்
குருக்கொ டுத்த தொண்டரும் குகனோ டிந்த பிள்ளையும்
பருத்தி பட்ட பன்னிரண்டு பாடும் தான்ப டுவரே. 238

அன்னை கர்ப்ப அறைஅதற்குள் அங்கி யின்ப்ர காசமாய்
அந்த அறைக்குள் வந்திருந்த தரிய விந்து ரூபமாய்
தன்னை ஒத்த நின்றபோது தடைய றுத்து வெளியதாய்
தங்க நற்பெ ருமைதந்து தலைவ னாய்வ ளர்ந்ததே
உன்னை யற்ப நேரமும் மறந்தி ருக்க லாகுமோ
உள்ள மீது றைந்தெனை மறைப் பிலாத சோதியை
பொன்னை வென்ற பேரொளிப் பொருவி லாத ஈசனே
பொன்ன டிப்பி றப்பிலாமை என்று நல்க வேணுமே. 239

பிடித்த தொண்டும் உம்மதோ பிரம மான பித்தர்காள்
தடித்த கோலம் அத்தைவிட்டுச் சாதி பேதங் கொண்மினோ
வடித்தி ருந்த தோர்சிவத்தை வாய்மை கூற வல்லிரேல்
திடுக்க முற்ற ஈசனைச் சென்று கூட லாகுமே. 240

சத்தி நீத யவும்நீ தயங்கு சங்கின் ஓசைநீ
சித்தி நீசி வனும்நீ சிவாய மாம்எ ழுத்துநீ
முத்தி நீமு தலும்நீ மூவ ரான தேவர்நீ
அத்தி றமும் உம்முளே அறிந்து ணர்ந்து கொள்ளுமே. 241

சட்டை யிட்டு மணிதுலக்கும் சாத்தி ரச்ச ழக்கரே
பொத்த கத்தை மெத்தவைத்துப் போத மோதும் பொய்யரே
நிட்டை ஏது ஞானமேது நீரி ருந்த அட்சரம்
பட்டை ஏது சொல்லிரே பாத கக்க பட்டரே. 242

உண்மை யான சுக்கிலம் உபாய மாய்இ ருந்ததும்
வெண்மை யாகி நீரிலே விரைந்து நீர தானதும்

தண்மை யான காயமே தரித்து ரூவம் ஆனதும்
தெண்மை யான ஞானிகாள் தெளிந்து ரைக்க வேணுமே. 243

வஞ்ச கப்பி றவ்வியை மனத்து ளேவி ரும்பியே
அஞ்செ ழுத்தின் உண்மையை அறிவி லாத மாந்தர்காள்
வஞ்ச கப்பி றவியை வதைத்தி டவ்வும் வல்லிரேல்
அஞ்செ ழுத்தின் உண்மையை அறிந்து கொள்ள லாகுமே. 244

காயி லாத சோலையில் கனியு கந்த வண்டுகாள்
ஈயி லாத தேனையுண் டிராப்ப கல்உ றங்குறீர்
பாயி லாத கப்பலேறி அக்க ரைப்ப டும்முனே
வாயி னால்உ ரைப்பதாகு மோன மான ஞானமே. 245

பேய்கள் பேய்கள் என்கிறீர் பிதற்று கின்ற பேயர்காள்
பேய்கள் பூசை கொள்ளுமோ பிடாரி பூசை கொள்ளுமோ
ஆதி பூசை கொள்ளுமோ அனாதி பூசை கொள்ளுமோ
காய மான பேயலோ கணக்க றிந்து கொண்டதே. 246

மூல மண்ட லத்திலே முச்ச துரம் ஆதியாய்
நாலு வாசல் எம்பிரான் நடுஉ தித்த மந்திரம்
கோலி எட்டி தழுமாய்க் குளிர்ந்த லர்ந்த தீட்டமாய்
மேலும் வேறு காண்கிலேன் விளைந்த தேசி வாயமே. 247

ஆதி கூடு நாடிஓடு காலை மாலை நீரிலே
சோதி மூல மானநாடி சொல்லி றந்த தூவெளி
ஆதி கூரு நெற்பறித் தகார மாதி ஆகமம்
பேத பேதம் ஆகியே பிறந்து டல்இ றந்ததே. 248

பாங்கி னோடி ருந்துகொண்டு பரமன் அஞ்செ ழுத்துளே
ஓங்கி நாடி மேல்இருந்த துச்ச ரித்த மந்திரம்
மூங்கில் வெட்டி நார்உரித்து மூச்சில் செய்வி தத்தினில்
ஆய்ந்த நூலில் தோன்றுமே அறிந்து ணர்ந்து கொள்ளுமே. 249

புண்ட ரீக மத்தியில் உதித்தெ ழுந்த சோதியை
மண்ட லங்கள் மூன்றினோடு மன்னு கின்ற மாயனை
அண்ட ரண்டம் ஊடறுத் தறிந்து ணர வல்லிரேல்
கண்ட கோயில் தெய்வம்என்று கையெ டுப்ப தில்லையே. 250

அம்ப லங்கள் சந்தியில் ஆடு கின்ற வப்பனே
அன்ப னுக்குள் அன்பனாய் நிற்பன் ஆதி வீரனே
அன்ப ருக்குள் அன்பராய் நின்ற ஆதி நாயனே
உம்ப ருக்கு முண்மையாய் நின்ற உண்மை உண்மையே. 251

அண்ண லாவ தேதடா அறிந்து ரைத்த மந்திரம்
தண்ண னாக வந்தவன் சகல புராணம் கற்றவன்
கண்ண னாக வந்தவன் கார ணத்து தித்தவன்
ஒண்ண தாவ தேதடா உண்மை யான மந்திரம். 252

உள்ள தோபு றம்பதோ உயிர்ஒ டுங்கி நின்றிடம்
மெள்ள வந்து கிட்டிநீர் வினவ வேணும் என்கிறீர்
உள்ள தும்பு றம்பதும் ஒத்த போது நாதமாம்
கள்ள வாச லைத்திறந்து காண வேணும் அப்பனே .253

ஆர லைந்து பூதமாய் அளவி டாத யோனியும்
பார மான தேவரும் பழுதி லாத பாசமும்
ஓரொ ணாத அண்டமும் உலோக லோக லோகமும்
சேர வெந்து போயிருந்த தேகம் ஏது செப்புமே. 254

என்ன கத்துள் என்னைநான் எங்கு நாடி ஓடினேன்
என்ன கத்துள் என்னை நான் அறிந்தி லாத தாகையால்
என்ன கத்துள் என்னைநான் அறிந்து மேதெ ரிந்தபின்
என்ன கத்துள் என்னைஅன்றி யாது மொன்றும் இல்லையே .255

விண்ணி னின்று மின்னெழுந்து மின்னொ டுங்கும் ஆறுபோல்
என்னுள் நின்றும் எண்ணும்ஈசன் என்ன கத்தி ருக்கையில்
கண்ணி னின்று கண்ணில்தோன்றும் கண்ண றிவி லாமையால்,
என்னுள் நின்ற என்னையும் யான றிந்த தில்லையே. 256

அடக்கி னும்அ டக்கொணாத அம்ப லத்தின் ஊடு போய்
அடக்கி னும்அ டக்கொணாத அன்பு ருக்கும் ஒன்றுளே
கிடக்கி னும்இ ருக்கினும் கிலேசம் வந்தி ருக்கினும்
நடக்கி னும்இ டைவிடாத நாத சங்கொ லிக்குமே. 257

மட்டு லாவு தண்துழாய் அலங்க லாய்பு னல்கழல்
விட்டு வீழில் தாகபோக விண்ணில் நண்ணில் வெளியினும்

எட்டி னோடி ரண்டினும் இதத்தி னால்ம னந்தனைக்
கட்டி வீடி லாதுவைத்த காத லின்பம் ஆகுமே. 258

ஏக முத்தி மூன்றுமுத்தி நாலு முத்தி நன்மைசேர்
போக முற்றி புண்ணியத்தில் முத்தி அன்றி முத்தியாய்
நாக முற்ற சயனமாய் நலங்க டல்க டந்தநீ
யாக முற்றி ஆகிநின்ற தென்கொ லாதி தேவனே .259

மூன்று முப்பத் தாறினோடு மூன்று மூன்று மாயமாய்
மூன்று முத்தி ஆகிமூன்று மூன்று மூன்று மூன்றுமாய்த்
தோன்று சாதி மூன்றதாய் துலக்க மில்வி ளக்கதாய்
ஏன்ற னாவின் உள்புகுந்த தென்கொ லோநம் ஈசனே. 260

ஐந்தும் ஐந்தும் ஐந்துமாய் அல்ல வற்றுள் ஆயுமாய்
ஐந்தும் மூன்றும் ஒன்றுமாகி நின்ற ஆதி தேவனே
ஐந்தும் ஐந்தும் ஐந்துமாய் அமைந்த னைத்தும் நின்றநீ
ஐந்தும் ஐந்தும் ஆயநின்னை யாவர் காண வல்லரே. 261

ஆறும் ஆறும் ஆறுமாய்ஓர் ஐந்தும் ஐந்தும் ஐந்துமாய்
ஏறு சீர்இ ரண்டுமூன்றும் ஏழும் ஆறும் எட்டுமாய்
வேறு வேறு ஞானமாகி மெய்யி னோடு பொய்யுமாய்
ஊறும் ஓசை யாய்அமர்ந்த மாய மாயம் மாயனே. 262

எட்டும் எட்டும் எட்டுமாய்ஓர் ஏழும் ஏழும் ஏழுமாய்
எட்டு மூன்றும் ஒன்றுமாகி நின்ற ஆதி தேவனே
எட்டு மாய பாதமோ டிறைஞ்சி நின்ற வண்ணமே
எட்டெ ழுத்தும் ஓதுவார்கள் அல்லல் நீங்கி நிற்பரே. 263

பத்தி னோடு பத்துமாய்ஓர் ஏழி னோடும் ஒன்பதாய்
நத்து நாற்றி சைக்குநின்ற நாடு பெற்ற நன்மையாய்
அத்து மாய கொத்தமோடும் அத்த லமிக் காதிமால்
பத்தர் கட்க லாதுமுத்தி முத்தி முத்தி யாகுமே. 264

வாசி யாகி நேசமொன்று வந்தெ திர்ந்த தென்னுக
நேச மாக நாளுலாவ நன்மை சேர்ப வங்களில்
வீசி மேல்நி மிர்ந்ததோளு மில்லை யாக்கி னாய்கழல்
ஆசை யால்ம றக்கலா தமரர் ஆகல் ஆகுமே. 265

எளிய தான காயமீதும் எம்பி ரான்இ ருப்பிடம்
அளிவு றாது நின்றதே அகார மும்உ காரமும்
கொளுகை யான சோதியும் குலாவி நின்ற தவ்விடம்
வெளிய தாகும் ஒன்றிலே விளைந்த தேசி வாயமே. 266

அஞ்செ ழுத்தும் மூன்றெழுத்தும் என்று ரைக்கும் அன்பர்காள்
அஞ்செ ழுத்தும் மூன்றெழுத்தும் அல்ல காணும் அப்பொருள்
அஞ்செ ழுத்தை நெஞ்சழுத்தி அவ்வெ ழுத்த றிந்தபின்
அஞ்செ ழுத்தும் மூன்றெழுத்தும் அவ்வு மாம்சி வாயமே. 267

பொய்யு ரைக்கப் போதமென்று பொய்ய ருக்கி ருக்கையால்
மெய்யு ரைக்க வேண்டுதில்லை மெய்யர் மெய்க்கி லாமையால்
வைய கத்தில் உண்மைதன்னை வாய்தி றக்க அஞ்சினேன்
நைய வைத்த தென்கொலோ நமசி வாய நாதனே. 268

ஒன்றை ஒன்று கொன்றுகூட உணவு செய்தி ருக்கினும்
மன்றி னூடு பொய்களவு மாறு வேறு செய்யினும்
பன்றி தேடும் ஈசனைப் பரிந்து கூட வல்லிரேல்
அன்று தேவர் உம்முளே அறிந்து ணர்ந்து கொள்ளுமே. 269

மச்ச கத்து ளேஇவர்ந்து மாயை பேசும் வாயுவை
அச்ச கத்து ளேயிருந் தறிவு ணர்த்திக் கொள்விரேல்
அச்ச கத்து ளேயிருந் தறிவு ணர்த்திக் கொண்டபின்
இச்சை அற்ற எம்பிரான் எங்கும் ஆகி நிற்பனே. 270

வயலி லேமு ளைத்த செந்நெல் களைய தான வாறுபோல்
உலகி னோரும் வன்மைகூறில் உய்யு மாற தெங்ஙனே
விரகி லேமு ளைத்தெழுந்த மெய்ய லாது பொய்யதாய்
நரகி லேபி றந்திருந்து நாடு பட்ட பாடதே. 271

ஆடு கின்ற எம்பிரானை அங்கு மிங்கும் என்றுநீர்
தேடு கின்ற பாவிகாள் தெளிந்த தொன்றை ஓர்கிலீர்
காடு நாடு வீடுவீண் கலந்து நின்ற கள்வனை
நாடி ஓடி உம்முளே நயந்து ணர்ந்து பாருமே. 272

ஆடு கின்ற அண்டர்கூடும் அப்பு றம்ம திப்புறம்
தேடு நாலு வேதமும் தேவ ரான மூவரும்
நீடு வாழி பூதமும் நின்ற தோர்நி லைகளும்
ஆடு வாழின் ஒழியலா தனைத்தும் இல்லை இல்லையே .273

ஆவ தும்ப ரத்துளே அழிவ தும்ப ரத்துளே
போவ தும்ப ரத்துளே புகுவ தும்ப ரத்துளே
தேவ ரும்ப ரத்துளே திசைக ளும்ப ரத்துளே
யாவ ரும்ப ரத்துளே யானும் அப்ப ரத்துளே. 274

ஏழு பாரும் எழுகடல் இபங்கள் எட்டு வெற்புடன்
சூழு வான்கி ரிகடந்து சொல்லும் ஏழு உலகமும்
ஆழி மால் விசும்புகொள் பிரமாண் டரண்ட அண்டமும்
ஊழி யான்ஒ ளிக்குளே உதித்து டன்ஒ டுங்குமே. 275

கயத்து நீர்இ றைக்குறீர் கைகள் சோர்ந்து நிற்பதேன்
மனத்துள் ஈரம் ஒன்றில்லாத மதிஇ லாத மாந்தர்காள்
அகத்துள் ஈரங் கொண்டுநீர் அழுக்க றுக்க வல்லிரேல்
நினைத்தி ருந்த சோதியும் நீயும் நானும் ஒன்றலோ. 276

நீரி லேபி றந்திருந்து நீர்ச டங்கு செய்கிறீர்
ஆசை உன்னி நீரெலாம் அவத்தி லேஇ றைக்கிறீர்
வேரை உன்னி வித்தைஉன்னி வித்தி லேமு ளைத்தெழும்
சீரை உன்ன வல்லிரேல் சிவப தம்அ டைவிரே. 277

பத்தொ டுற்ற வாசலில் பரந்து மூல வக்கர
முத்தி சித்தி தொந்தமென் றியங்கு கின்ற மூலமே
மத்த சித்த ஐம்புலன் மகார மான கூத்தையே
அத்தி யூரர் தம்முளே அமைந்த தேசி வாயமே. 278

அணுவி னோடும் அண்டமாய் அளவி டாத சோதியை
குணம தாகி உம்முளே குறித்தி ருக்கில் முத்தியாம்
முணமு ணென்றே உம்முளே விரலை ஒன்றி மீளவும்
தினந்தி னம்ம யக்குவீர் செம்பு பூசை பண்ணியே. 279

மூல மான அக்கரம் முகப்ப தற்கு முன்னெலாம்
மூட மாக மூடுகின்ற மூட மேது மூடரே
கால னான அஞ்சுபூதம் அஞ்சி லேஒ டுங்கினால்
ஆதி யோடு கூடுமோ அனாதி யோடு கூடுமோ. 280

முச்ச துர மூலமாகி முடிவு மாகி ஏகமாய்
அச்ச துரம் ஆகியே அடங்கி யோர்எ ழுத்துமாய்
மெய்ச்ச துர மெய்யுளே விளங்கு ஞான தீபமாய்
உச்ச ரிக்கும் மந்திரத்தின் உண்மை யேசி வாயமே. 281

வண்ட லங்கள் போலும்நீர் மனத்து மாச றுக்கிலீர்
குண்ட ரங்கள் போலும்நீர் குளத்தி லேமு ழுகுறீர்
பண்டும் உங்கள் நான்முகன் பறந்து தேடிக் காண்கிலான்
கண்டி ருக்கும் உம்முளே கலந்தி ருப்பர் காண்மினே. 282

நின்ற தன்றி ருந்ததன்று நேரி தன்று கூரிதன்று
பந்த மன்று வீடுமன்று பாவ கங்கள் அற்றது
கெந்த மன்று கேள்வியன்று கேடி லாத வானிலே
அந்த மின்றி நின்றதொன்றை எங்ஙனே உரைப்பதே. 283

பொருது நீரும் உம்முளே புகுந்து நின்ற காரணம்
எருதி ரண்டு கன்றைஈன்ற ஏக மொன்றை ஓர்கிலீர்
அருகி ருந்து சாவுகின்ற யாவை யும்அ றிந்திலீர்
குருவி ருந்து லாவுகின்ற கோலம் என்ன கோலமே. 284

அம்ப ரத்துள் ஆடுகின்ற அஞ்செ ழுத்து நீயலோ
சிம்பு ளாய்ப்ப ரந்துநின்ற சிற்ப ரமும் நீயலோ
எம்பி ரானும் எவ்வுயிர்க்கும் ஏக போகம் ஆதலால்
எப்பி ரானும் நானுமாய் இருந்த தேசி வாயமே. 285

ஈரொ ளிய திங்களே இயங்கி நின்ற தற்பரம்
பேரொ ளிய திங்களே யாவ ரும்மஃ தறிகிலீர்
காரொ ளிய படலமும் கடந்து போன தற்பரம்
பேரொ ளிய பெரும்பதம் ஏக நாத பாதமே. 286

கொள்ளொ ணாது மெல்லொ ணாது கோத றக்கு தட்டொணா
தள்ளொ ணாத ணுகொணா தாக லான்ம னத்துளே
தெள்ளொ ணாது தெளியொணாது சிற்ப ரத்தின் உட்பயன்
விள்ளொணாத பொருளைநான் விளம்பு மாற தெங்ஙனே. 287

வாக்கி னால்ம னத்தினால் மதித்த கார ணத்தினால்,
நோக்கொ ணாத நோக்கையுன்னி நோக்கை யாவர் நோக்குவார்,
நோக்கொ ணாத நோக்குவந்து நோக்க நோக்க நோக்கிடில்,
நோக்கொ ணாத நோக்குவந்து நோக்கை எங்கண் நோக்குமே. 288

உள்ளி னும்பு றம்பினும் உலகம் எங்க ணும்பரந்
தெள்ளில் எண்ணெய் போலநின் றியங்கு கின்ற எம்பிரான்
மெள்ள வந்தென் னுட்புகுந்து மெய்த்த வம்பு ரிந்தபின்
வள்ள லென்ன வள்ளலுக்கு வண்ண மென்ன வண்ணமே. 289

வேத மொன்று கண்டிலேன் வெம்பி றப்பி லாமையால்
போதம் நின்ற வடிவதாய்ப் புவன மெங்கும் ஆயினாய்
சோதி யுள்ஒ ளியுமாய்த் துரிய மோட தீதமாய்
ஆதி மூலம் ஆதியாய் அமைந்த தேசி வாயமே .290

சாண்இ ரும்ம டங்கினால் சரிந்த கொண்டை தன்னுளே
பேணி அப்ப திக்குளே பிறந்தி றந் துழலுவீர்
தோணி யான ஐவரைத் துறந்த றுக்க வல்லிரேல்
காணி கண்டு கோடியாய்க் கலந்த தேசி வாயமே. 291

அஞ்சு கோடி மந்திரம் அஞ்சு ளேஅ டங்கினால்
நெஞ்சு கூற உம்முளே நினைப்ப தோர்எ ழுத்துளே
அஞ்சு நாலு மூன்றதாகி உம்மு ளேஅ டங்கினால்
அஞ்சும் ஓர்எ ழுத்ததாய் அமைந்த தேசி வாயமே. 292

அக்கரந்த அக்கரத்தில் உட்க ரந்த அக்கரம்
சக்க ரத்துச் சிவ்வையுண்டு சம்பு ளத்தி ருந்ததும்
எள்க ரந்த எண்ணெய்போல் எவ்வெ ழுத்தும் எம்பிரான்
உள்க ரந்து நின்றநேர்மை யாவர் காண வல்லரே. 293

ஆக மத்தின் உட்பொருள் அகண்ட மூலம் ஆதலால்
தாக போகம் அன்றியே தரித்த தற்ப ரம்மும்நீ
ஏக பாதம் வைத்தனை உணர்த்தும் அஞ்செ ழுத்துளே
ஏக போகம் ஆகியே இருந்த தேசி வாயமே. 294

மூல வாசல் மீதுளே முச்ச துரம் ஆகியே
நாலு வாசல் எண்விரல் நடுஉ தித்த மந்திரம்
கோலம் ஒன்றும் அஞ்சுமாகும் இங்க லைந்து நின்றநீ
வேறு வேறு கண்டிலேன் விளைந்த தேசி வாயமே. 295

சுக்கி லத்த டியுளே கழித்த தோர்எ ழுத்துளே
அக்க ரத்த டியுளே அமர்ந்த ஆதி சோதிநீ
உக்க ரத்த டியுளே உணர்ந்த அஞ்செ ழுத்துளே
அக்க ரம்அ தாகியே அமர்ந்த தேசி வாயமே. 296

குண்ட லத்து ளேயுளே குறித்த கத்து நாயகன்
கண்ட வந்த மண்டலம் கருத்த ழித்த கூத்தனை
விண்ட லர்ந்த சந்திரன் விளங்கு கின்ற மெய்ப்பொருள்
கண்டு கொண்ட மண்டலம் சிவாயம் அல்ல தில்லையே .297

சுற்றும் ஐந்து கூடமொன்று சொல்லி றந்த தோர்வெளி
சத்தி யும்சி வனுமாக நின்ற தன்மை ஓர்கிலீர்
சத்தி யாவ தும்முடல் தயங்கு சீவ னுட்சிவம்
பித்தர் காள்அ றிந்திலீர் பிரான்இ ருந்த கோலமே. 298

மூலம் என்ற மந்திரம் முளைத்த அஞ்செ முத்துளே
நாலு வேதம் நாவுளே நவின்ற ஞான மெய்யுளே
ஆலம் உண்ட கண்டனும் அரிசு யனும் ஆதலால்
ஓலம் என்ற மந்திரம் சிவாயம் அல்ல தில்லையே 299

தத்து வங்கள் என்றுநீர் தமைக்க டிந்து போவிர்காள்
தத்து வம்சி வமதாகில் தற்ப ரமும் நீரல்லோ
முத்தி சீவ னாதமே மூல பாதம் வைத்தபின்
அத்த னாரும் உம்முளே அறிந்து ணர்ந்து கொள்ளுமே. 300

மூன்று பத்து மூன்றையும் மூன்று சொன்ன மூலனே
தோன்று சேர ஞானிகாள் துய்ய பாதம் என்தலை
ஏன்று வைத்த வைத்தபின் இயம்பும் அஞ்செ ழுத்தையும்
தோன்ற ஓத வல்லிரேல் துய்ய சோதி காணுமே. 301

உம்பர் வான கத்தினும் உலக பாரம் ஏழினும்
நம்பர் நாடு தன்னிலும் நாவ லென்ற தீவினும்
செம்பொன் மாடம் மல்குதில்லை அம்ப லத்துள் ஆடுவான்
எம்பி ரான லாது தெய்வம் இல்லைஇல்லை இல்லையே. 302

பூவ லாய ஐந்துமாய் புனலில் நின்ற நான்குமாய்
தீயி லாய மூன்றுமாய்ச் சிறந்த கால்இ ரண்டுமாய்
வேயி லாய தொன்றுமாய் வேறு வேறு தன்மையாய்
நீய லாமல் நின்றநேர்மை யாவர் காண வல்லரே. 303

அந்த ரத்தில் ஒன்றுமாய் அசைவு கால்இ ரண்டுமாய்
செந்த ழலில் மூன்றுமாய்ச் சிறந்த வப்பு நான்குமாய்
ஐந்து பாரில் ஐந்துமாய் அமர்ந்தி ருந்த நாதனை
சிந்தை யில்தெ ளிந்தமாயை யாவர் காண வல்லரே. 304

மனவி காரம் அற்றுநீர் மதித்தி ருக்க வல்லிரேல்
நினைவி லாத மணிவிளக்கு நித்தமாகி நின்றிடும்
அனைவர் ஓதும் வேதமும் அகம்பி தற்ற வேணுமேல்
கனவு கண்ட துண்மைநீர் தெளிந்த தேசி வாயமே. 305

இட்ட குண்டம் ஏதடா இருக்கு வேதம் ஏதடா
சுட்ட மண்க லத்திலே சுற்ற நூல்கள் ஏதடா
முட்டி நின்ற தூணிலே முளைத்தெ ழுந்த சோதியை
பற்றி நின்ற தேதடா பட்ட நாத பட்டரே. 306

நீரி லேமு ளைத்தெழுந்த தாம ரையின் ஓரிலை
நீரி னோடு கூடிநின்றும் நீரி லாத வாறுபோல்
பாரி லேமு ளைத்தெழுந்த பண்டி தப்ப ராபரம்
பாரி னோடு கூடிநின்ற பண்பு கண்டி ருப்பரே. 307

உறங்கில் என்வி ழிக்கில்என் உணர்வு சென்றொ டுங்கில்என்
சிறந்த ஐம்பு லன்களும் திசைத்தி சைகள் ஒன்றில்என்
புறம்பு முள்ளும் எங்கணும் பொருந்தி ருந்த தேகமாய்
நிறைந்தி ருந்த ஞானிகாள் நினைப்ப தேதும் இல்லையே. 308

ஓது வார்கள் ஓதுகின்ற ஓர்எ ழுத்தும் ஒன்றதே
வேதம் என்ற தேகமாய் விளம்பு கின்ற தன்றிது
நாதம் ஒன்று நான்முகன் மாலும் நானும் ஒன்றதே
ஏது மன்றி நின்றதொன்றை யான் உணர்ந்த நேர்மையே. 309

பொங்கி யேத ரித்தஅச்சு புண்ட ரீக வெளியிலே
தங்கி யேத ரித்தபோது தாது மாது ளையதாம்
அங்கி யுள்ச ரித்தபோது வடிவு கள்ஒ ளியுமாய்க்
கொம்பு மேல்வ டிவுகொண்டு குருஇ ருந்த கோலமே. 310

மண்ணு ளோரும் விண்ணுளோரும் வந்த வாற தெங்கெனில்
கண்ணி னோடு சோதிபோல் கலந்த நாத விந்துவும்
அண்ண லோடு சத்தியும் அஞ்சு பஞ்ச பூதமும்
பண்ணி னோடு கொடுத்தழிப் பாரொ டேழும் இன்றுமே. 311

ஒடுக்கு கின்ற சோதியும் உந்தி நின்ற ஒருவனும்
நடுத்த லத்தில் ஒருவனும் நடந்து காலில் ஏறியே
விடுத்து நின்ற இருவரோடு மெய்யி னோடு பொய்யுமாய்
அடுத்து நின்ற தறிமினோ அனாதி நின்ற ஆதியே. 312

உதித்த மந்தி ரத்தினும் ஒடுங்கும் அக்க ரத்தினும்
மதித்த மண்ட லத்தினும் மறைந்து நின்ற சோதிநீ
மதித்த மண்ட லத்துளே மறித்து நீர்இ ருந்தபின்
சிரித்த மண்ட லத்துளே சிறந்த தேசி வாயமே. 313

திருத்தி வைத்த சற்குருவைச் சீர்பெ றவ ணங்கிலீர்
குருக்கொ டுக்கும் பித்தரே கொண்டு நீந்த வல்லிரோ
குருக்கொ டுக்கும் பித்தரும் குருக்கொள் வந்த சீடனும்
பருத்தி பட்ட பாடுதான் பன்னி ரண்டும் பட்டதே. 314

விழித்த கண்து திக்கவும் விந்து நாத ஓசையும்
மேரு வும்க டந்தஅண்ட கோள முங்க டந்துபோய்
எழுத்தெ லாம்அ ழிந்துவிட்ட இந்த்ர ஞால வெளியிலே
யானும் நீயு மேகலந்த தென்ன தன்மை ஈசனே. 315

ஓம்ந மோஎன் றும்முளே உபாதை யென்ற றிந்தபின்
பானு டல்க ருத்துளே பாவை யென்ற றிந்தபின்
நானும் நீயும் உண்டடா நலங்கு லம்அ துண்டடா
ஊனும் ஊணும் ஒன்றுமே உணர்ந்தி டாய்எ னக்குளே. 316

ஐம்பு லனை வென்றவர்க் கன்ன தானம் ஈவதாய்
நன்பு லன்க ளாகிநின்ற நாத ருக்க தேறுமோ
ஐம்பு லனை வென்றிடா தவத்த மேஉ ழன்றிடும்
வம்ப ருக்கும் ஈவதும் கொடுப்ப தும்அ வத்தமே. 317

ஆணி யான ஐம்புலன்கள் அவையும் மொக்குள் ஒக்குமோ
யோனி யில்பி றந்திருந்த துன்ப மிக்கு மொக்குமோ
வீணர் காள்பி தற்றுவீர் மெய்மை யேஉ ணர்திரேல்
ஊண்உ றக்க போகமும் உமக்கெ னக்கும் ஒக்குமே. 318

ஓடு கின்ற ஐம்புலன் ஒடுங்க அஞ்செ ழுத்துளே
நாடு கின்ற நான்மறை நவிலு கின்ற ஞானிகாள்
கூடுகின்ற கண்டித குணங்கள் மூன்றெ ழுத்துளே
ஆடு கின்ற பாவையாய் அமைந்த தேசி வாயமே. 319

புவன சக்க ரத்துள்ளே பூத நாத வெளியிலே
பொங்கு தீப அங்கியுள் பொதிந்தெ ழுந்த வாயுவைத்
தவன சோமர் இருவரும் தாம்இ யங்கும் வாசலில்
தண்டு மாறி ஏறிநின்ற சரச மான வெளியிலே
மவுன அஞ்செ ழுத்திலே வாசி ஏறி மெள்ளவே
வான ளாய்நி றைந்த சோதி மண்ட லம்பு குந்தபின்
அவனும் நானும் மெய்கலந் தனுப வித்த அளவிலே
அவனு முண்டு நானுமில்லை யாரு மில்லை யானதே. 320

வாளு றையில் வாளடக்கம் வாயு றையில் வாய்வடக்கம்
ஆளு றையில் ஆளடக்கம் அருமை என்ன வித்தைகாண்
தாளு றையில் தாளடக்கம் தன்மை யான தன்மையும்
நாளு றையில் நாளடக்கம் நானும் நீயும் கண்டதே. 321

வழுத்தி டான்அ ழித்திடான் மாய ரூபம் ஆகிடான்
கழன்றி டான்வெ குண்டிடான் கால கால காலமும்
துவண்டி டான்அ சைந்திடான் தூய தூபம் ஆகிடான்
சுவன்றி டான்உ ரைத்திடான் சூட்ச சூட்ச சூட்சமே. 322

ஆகி கூவென் றேஉரைத்த அட்ச ரத்தின் ஆனந்தம்
யோகி யோகி என்பர்கோடி உற்ற றிந்து கண்டிடார்
பூக மாய்ம னக்குரங்கு பொங்கு மங்கும் இங்குமாய்
ஏகம் ஏக மாகவே இருப்பர் கோடி கோடியே. 323

கோடி கோடி கோடிகோடி குவல யத்தோர் ஆதியை
நாடி நாடி நாடிநாடி நாள கன்று வீணதாய்த்
தேடித் தேடித் தேடித்தேடித் தேக மும்க சங்கியே
கூடிக் கூடிக் கூடிக்கூடி நிற்பர் கோடி கோடியே. 324

கருத்தி லான்வெ ளுத்திலான் பரன்இ ருந்த காரணம்
இருத்தி லான்ஒ ளித்திலான் ஒன்றும் இரண்டும் ஆகிலான்
ஒருத்தி லான்ம ரித்திலான் ஒழிந்தி டான்அ ழிந்திடான்
கருத்திற் கீயும் கூவும் உற்றேன் கண்ட றிந்த ஆதியே. 325

வாதி வாதி வாதிவாதி வண்ட லைஅ றிந்திடான்
ஊதி ஊதி ஊதிஊதி ஒளிம முங்கி உளறுவான்
வீதி வீதி வீதிவீதி விடைஎ ருப்பு ரக்குவோன்
சாதி சாதி சாதிசாதி சாக ரத்தைக் கண்டிடான். 326

ஆண்மை ஆண்மை ஆண்மைஆண்மை ஆண்மை கூறும்
காண்மை யான வாதிரூபம் கால கால காலமும்
பாண்மை யாகி மோன மோன பாச மாகி நின்றிடும்
நாண்மை யான நரலைவாயில் நங்கு மிங்கும் அங்குமே. 327

மிங்கு என்ற அட்சரத்தின் மீட்டு வாகிக் கூவுடன்
துங்க மாகச் சோமனோடு சோமன் மாறி நின்றிடும்
அங்க மாமு னைச்சுழியில் ஆகும் ஏகம் ஆகையால்
கங்கு லற்றுக் கியானமுற்றுக் காணு வாய் சுடரொளி. 328

சுடரெ ழும்பும் சூட்சமும் சுழிமு னையின் சூட்சமும்
அடரெ ழும்பி ஏகமாக அமர்ந்து நின்ற சூட்சமும்
திடர தான சூட்சமும் திரியின் வாலை சூட்சமும்
கடலெ ழும்பு சூட்சமுங் கண்ட றிந்தோன் ஞானியே. 329

ஞானி ஞானி என்றுரைத்த நாய்கள் கோடி கோடியே
வானி லாத மழைநாளென்ற வாதி கோடி கோடியே
தானி லான சாகரத்தின் தன்மை காணா மூடர்கள்
மூனி லாமல் கோடி கோடி முன்ன றிந்த தென்பரே. 330

சூச்ச மான கொம்பிலே சுழிமு னைச்சு டரிலே
வீச்ச மான வீயிலே விபுலை தங்கும் வாயிலே
கூச்ச மான கொம்பிலே குடிஇ ருந்த கோயிலே
தீச்ச யான தீவிலே சிறந்த தேசி வாயமே. .331

பொங்கி நின்ற மோனமும் பொதிந்து நின்ற மோனமும்
தங்கி நின்ற மோனமும தயங்கி நின்ற மோனமும்
கங்கை யான மோனமும் கதித்து நின்ற மோனமும்
திங்க ளான மோனமும் சிவனி ருந்த மோனமே. 332

மோன மான வீதியில் முனைச்சு ழியின் வாலையில்
பான மான வீதியில் பசைந்த செஞ்சு டரிலே
ஞான மான மூலையில் நரலை தங்கும் வாயிலில்
ஓன மான செஞ்சுடர் உதித்த தேசி வாயமே. 333

உதித்தெ ழுந்த வாலையும் உயங்கி நின்ற வாலையும்
கதித்தெ ழுந்த வாலையும் காலை யான வாலையும்
மதித்தெ ழுந்த வாலையும் மறைந்து நின்ற ஞானமும்
கொதித்தெ ழுந்து கும்பலாகிக் கூவும் கீயும் ஆனதே. 334

கூவும் கீயும் மோனமாகி கொள்கை யான கொள்கையை
மூவி லேஉ தித்தெழுந்த முச்சு டர்வி ரிவிலே
பூவி லேந ரைகள்போல் பொருந்தி நின்ற பூரணம்
ஆவி ஆவி ஆவிஆவி அன்ப ருள்ளம் உற்றதே. 335

ஆண்மை கூறும் மாந்தரே அருக்க னோடும் வீதியைக்
காண்மை யாகக் காண்பிரே கசட றுக்க வல்லிரே
தூண்மை யான வாதிசூட்சம் சோப மாகும் ஆகுமே
நாண்மை யான வாயிலில் நடித்து நின்ற நாதமே. 336

நாத மான வாயியில் நடித்து நின்ற சாயலில்
வேத மான வீதியில் விரிந்த முச்சு டரிலே
கீத மான கீயிலே கிளர்ந்து நின்ற கூவிலே
பூத மான வாயிலைப் புகல றிவன் ஆதியே. 337

ஆவி ஆவி ஆவிஆவி ஐந்து கொம்பின் ஆவியே
மேவி மேவி மேவிமேவி மேதி னியின் மானிடர்
வாவி வாவி வாவிவாவி வண்டல் கள்அ றிந்திடார்
பாவி பாவி பாவிபாவி படியி லுற்ற மாந்தரே. 338

வித்தி லேமு ளைத்தசோதி வில்வ ளைவின் மத்தியில்
முத்தி லேஒ ளிவதாகி மோன மான தீபமே
நத்தி லோதி ரட்சிபோன்ற நாதனைஅ றிந்திடார்
வத்தி லேகி டந்துழன்ற வாலை யான சூட்சமே. 339

மாலை யோடு காலையும் வடிந்து பொங்கும் மோனமே
மாலை யோடு காலையான வாற றிந்த மாந்தரே
மூலை யான கோணமின் முளைத்தெ ழுந்த செஞ்சுடர்
காலை யோடு பானகன்று தங்கி நின்ற மோனமே. 340

மோன மான வீதியில் முடுகி நின்ற நாதமே
ஈன மின்றி வேகமான வேகம் என்ன வேகமே
கான மான மூலையில் கனிந்தி ருந்த வாலையில்
ஞான மான செஞ்சுடர் நடந்த தேசி வாயமே. 341

உச்சி மத்தி வீதியில் ஒழிந்தி ருந்த சாதியில்
பச்சி யுற்ற சோமனும் பரந்து நின்று லாவவே
செச்சி யான தீபமே தியான மான மோனமே
கச்சி யான மோனமே கடந்த தேசி வாயமே. 342

அஞ்சு கொம்பில் நின்ற நாத மாலை போல்எழும்பியே
பிஞ்சி னோடு பூமலர்ந்து பெற்றி யுற்ற சுத்தமே
செஞ்சு டர்உ தித்தபோது தேசி கன்சு ழன்றுடன்
பஞ்ச பூதம் ஆனதே பரந்து நின்ற மோனமே. 343

சடுதி யான கொம்பிலே தத்து வத்தின் கீயிலே
அடுதி யான ஆவிலே அரன்இ ருந்த கூவிலே
இடுதி என்ற சோலையில் இருந்த முச்சு டரிலே
நடுதி என்று நாதம்ஓடி நன்கு றஅ மைந்ததே. 344

அமையு மான மோனமும் அரன்இ ருந்த மோனமும்
சமையும் பூத மோனமும் தரித்தி ருந்த மோனமும்
இமையும் கொண்ட வேகமும் இலங்கும் உச்சி மோனமும்
தமைய றிந்த மாந்தரே சடத்தை உற்று நோக்கிலார். 345

பாய்ச்ச லூர் வழியிலே பரன்இ ருந்த சுழியிலே
காய்ச்ச கொம்பின் நுனியிலே கனிஇ ருந்த மலையிலே
வீச்ச மான தேதடா விரிவு தங்கும் இங்குமே
மூச்சி னோடு மூச்சைவாங்கு முட்டி நின்ற சோதியே. 346

சோதி சோதி என்றுநாடித் தோற்ப வர்சி லவரே
ஆதி ஆதி என்றுநாடும் ஆட வர்சி லவரே
வாதி வாதி என்று சொல்லும் வம்ப ரும்சி லவரே
நீதி நீதி நீதிநீதி நின்றி டும்மு மூச்சுடர். 347

சுடர தாகி எழும்பி யெங்கும் தூப மான காலமே
இடர தாகிப் புவியும்விண்ணும் ஏக மாய்அ மைக்கமுன்
படர தாக நின்றஆதி பஞ்ச பூதம் ஆகியே
அடர தாக அண்டம்எங்கும் ஆண்மை யாக நின்றதே. 348

நின்றி ருந்த சோதியை நிலத்தில் உற்ற மானிடர்
கண்ட றிந்து கண்குளிர்ந்து காத லுற்று லாவுவோர்
கண்ட முற்ற மேன்முனையின் காட்சி தன்னைக் காணுவார்
நன்றி அற்று நரலைபொங்கி நாத மும்ம கிழ்ந்திடும். 349

வயங்கு மோனச் செஞ்சுடர் வடிந்த சோதி நாதமும்
கயங்கள் போலக் கதறியே கருவூ ரற்ற வெளியிலே
பயங்கொ டின்றி இன்றியே படர்ந்து நின்ற பான்மையே
நயங்கள் கோவென் றேநடுங்கி நங்கை யான தீபமே. 350

தீப உச்சி முனையிலே திவாக ரத்தின் சுழியிலே
கோப மாறு கூவிலே கொதித்து நின்ற தீயிலே
தாப மான மூலையில் சமைந்து நின்ற சூட்சமும்
சாப மான மோட்சமும் தடிந்து நின்றி லங்குமே. 351

தேசி கன்சு ழன்றதே திரிமு னையின் வாலையில்
வேச மோடு வாலையில் வியன்இ ருந்த மூலையில்
நேச சந்தி ரோதயம் நிறைந்தி ருந்த வாசலில்
வீசி வீசி நின்றதே விரிந்து நின்ற மோனமே. 352

உட்க மல மோமிதில் உயங்கி நின்ற நந்தியை
விக்க லோடு கீயுமாகி வில்வ ளைவின் மத்தியில்
முட்பொ திந்த தென்னவே முடுகி நின்ற செஞ்சுடர்
கட்டு வைகள் போலவும் கடிந்து நின்ற காட்சியே. 353

உந்தி யில்சு ழிவழியில் உச்சி யுற்ற மத்தியில்
சந்தி ரன்ஒ ளிகிரணம் தாண்டி நின்ற செஞ்சுடர்
பந்த மாக வில்வளைவில் பஞ்ச பூத விஞ்சையாம்
கிந்து போலக் கீயில்நின்று கீச்சு மூச்சு என்றதே. 354

செச்சை யென்ற மூச்சினோடு சிகார மும்வ காரமும்
பச்சை யாகி நின்றதே பரவெ ளியின் பான்மையே
இச்சை யான கூவிலே இருந்தெ ழுந்த கீயிலே
உச்சி யான கோணத்தில் உதித்த தேசி வாயமே. 355

ஆறு மூலைக் கோணத்தில் அமைந்த ஒன்ப தாத்திலே
நாறு மென்று நங்கையான நாவி யும்தெ ரிந்திட
கூறு மென்று ஐவர் அங்கு கொண்டுநின்ற மோனமே
பாறு கொண்டு நின்றது பறந்த தேசி வாயமே. 356

பறந்த தேக றந்தபோது பாய்ச்ச லூர்வ ழியிலே
பிறந்த தேபி ராணன் அன்றிப் பெண்ணும் ஆணும் அல்லவே
துறந்த தோசி றந்ததோ தூய துங்க மானதோ
இறந்த போதில் அன்றதே இலங்கி டும்சி வாயமே. 357

அருளி ருந்த வெளியிலே அருக்கன் நின்ற இருளிலே
பொருளி ருந்த சுழியிலே புரண்டெ ழுந்த வழியிலே
தெருளி ருந்த கலையிலே தியங்கி நின்ற வலையிலே
குருவி ருந்த வழியினின்று கூயும் கீயும் ஆனதே. 358

ஆன தோர்எ ழுத்திலே அமைந்து நின்ற ஆதியே
கான மோடு தாலமீதில் கண்ட றிவ்வ தில்லையே
தானும் தானும் ஆனதே சமைந்த மாலை காலையில்
வேன லோடு மாறுபோல் விரிந்த தேசி வாயமே. 359

ஆறு கொண்ட வாரியும் அமைந்து நின்ற தெய்வமும்
தூறு கொண்ட மாரியும் துலங்கி நின்ற தூபமும்
வீறு கொண்ட மோனமும் விளங்கும் உள்ளக் கமலமும்
மாறு கொண்ட கூவிலே மடிந்த தேசி வாயமே. 360

வாயில் கண்ட கோணமில் வயங்கும் ஐவர் வைகியே
சாயல் கண்டு சார்ந்ததும் தலைமன் னாய்உ றைந்ததும்
காய வண்டு கண்டதும் கருவூர் அங்கு சென்றதும்
பாயும் என்று சென்றதும் பறந்த தேசி வாயமே. 361

பறந்த தேது றந்தபோது பாய்ச்ச லூரின் வழியிலே
மறந்த தேகவ் வுமுற்ற வாணர் கையின் மேவியே
பிறந்த தேஇ றந்தபோதில் நீடி டாமற் கீயிலே
சிறந்து நின்ற மோனமே தெளிந்த தேசி வாயமே. 362

வடிவு பத்ம ஆசனத் திருத்தி மூல அனலையே
மாரு தத்தி னால்எழுப்பி வாசல் ஐந்து நாலையும்
முடிவு முத்தி ரைப்படுத்தி மூல வீணா தண்டினால்
முளரி ஆல யம்கடந்து மூல நாடி ஊடுபோய்
அடிது வக்கி முடியளவும் ஆறு மாநி லங்கடந்து
அப்பு றத்தில் வெளிகடந்த ஆதி எங்கள் சோதியை
உடுப திக்கண் அமுதருந்தி உண்மை ஞான உவகையுள்
உச்சி பட்டி றங்குகின்ற யோகி நல்ல யோகியே. 363

மந்தி ரங்கள் உண்டுநீர் மயங்கு கின்ற மானிடர்
மந்தி ரங்கள் ஆவது மரத்தி லூறல் அன்றுகாண்
மந்தி ரங்கள் ஆவது மதித்தெ ழுந்த வாயுவை
மந்தி ரத்தை உண்டவர்க்கு மரணம் ஏதும் இல்லையே. 364

உள்ள தோடி நம்பதோ உயிர்ஒ டுங்கி நின்றிடம்
மெள்ள வந்து கிட்டிநீர் வினாவ வேண்டும் என்கிறீர்
உள்ள தும்பி நப்பதும் ஒத்த போது நாதமாம்
கள்ள வாச லைத்திறந்து காண வேண்டும் மாந்தரே 366

மந்தி ரங்கள் கற்றுநீர் மயங்கு கின்ற மாந்தரே
மந்தி ரங்கள் கற்றநீர் மரித்த போது சொல்விரோ
மந்தி ரங்கள் உம்முளே மதித்த நீரும் உம்முளே
மந்தி ரங்கள் ஆவது மனத்தின் ஐந்து எழுத்துமே. 365

ஒரெ ழுத்து லிங்கமாய் ஓதும் அட்ச ரத்துளே
ஒரெ ழுத்தி யங்குகின்ற உண்மை யைநீர் அறிகிலீர்
மூவெ ழுத்து மூவராய் முளைத்தெ ழுந்த சோதியை
நாவெ ழுத்து நாவுளே நவின்ற தேசி வாயமே. 367

முத்தி சுத்தி தொந்தமாய் முயங்கு கின்ற மூர்த்தியை
மற்று தித்த ஐம்புலன்கள் ஆகு மத்தி மப்புலன்
அத்தர் நித்தர் காளகண்டர் அன்பி னால்அ னுதினம்
உச்ச ரித்து ளத்திலே அறிந்து ணர்ந்து கொண்மினே. 368

மூன்றி ரண்டும் ஐந்துமாய் முயன்றெ ழுந்த தேவராய்
மூன்றி ரண்டும் ஐந்ததாய் முயன்ற தேஉ லகெலாம்
ஈன்ற தாயும் அப்பனும் இயங்கு கின்ற நாதமாய்
தோன்றும் ஓர்எ ழுத்தினோடு சொல்ல ஒன்றும் இல்லையே. 369

வெளியு ருக்கி அஞ்செழுத்து விந்து நாத சத்தமும்
தளியு ருக்கி நெய்கலந்து சகல சத்தி ஆனதும்
வெளியி லும்அவ் வினையிலும் இருவ ரைஅ றிந்தபின்
வெளிக டந்த தன்மையால் தெளிந்த தேசி வாயமே. 370

முப்பு ரத்தில் அப்புரம் முக்க ணன்வி ளைவிலே
சிற்ப ரத்துள் உற்பனம் சிவாயம் அஞ்செ ழுத்துமாம்
தற்ப ரம்உ தித்துநின்று தாணு எங்கும் ஆனபின்
இப்பு றம்ஒ டுங்குமோடி எங்கும் லிங்கம் ஆனதே. 371

ஆடி நின்ற சீவன்ஓர் அஞ்சு பஞ்ச பூதமோ
கூடி நின்ற சோதியோ குலாவி நின்ற மூலமோ
நாடு கண்டு நின்றதோ நாவு கற்ற கல்வியோ
வீடு கண்டு விண்டிடின் வெட்ட வெளியும் ஆனதே. 372

உருத்த ரித்த போதுசீவன் ஒக்க நின்ற உண்மையும்
திருத்த முள்ள தொன்றிலும் சிவாயம் அஞ்செ ழுத்துமாம்
இருத்து நின்று உறுத்தடங்கி ஏக போகம் ஆனபின்
கருத்தி னின்று தித்ததே கபாலம் ஏந்து நாதனே. 373

கருத்த ரித்து தித்தபோது கமல பீடம் ஆனதும்
கருத்த ரித்து தித்தபோது கார ணங்கள் ஆனதும்
கருத்த ரித்து தித்தபோது கரணம் இரண்டு கண்களாய்
கருத்தி னின்று தித்ததே கபாலம் ஏந்து நாதனே. 374

ஆன வன்னி மூன்றுகோணம் ஆறி ரண்டும் எட்டிலே
ஆன சீவன் அஞ்செழுத் தகார மிட்ட லர்ந்தது
ஆன சோதி உண்மையும் அனாதி யான உண்மையும்
ஆன தான தானதாய் அவல மாய்ம றைந்திடும். 375

ஈன்றெ ழுந்த எம்பிரான் திருவ ரங்க வெளியிலே
நான்ற பாம்பின் வாயினால் நாலு திக்கும் ஆயினான்
மூன்று மூன்று வளையமாய் முப்பு ரம்க டந்தபின்
ஈன்ற ழுந்த அவ்வினோசை ஏங்கு மாகி நின்றதே. 376

எங்கும் எங்கும் ஒன்றலோ ஈரேழ் லோகம் ஒன்றலோ
அங்கும் இங்கும் ஒன்றலோ அனாதி யான தொன்றலோ
தங்கு தாப ரங்களும் தரித்த வாற தொன்றலோ
உங்கள் எங்கள் பங்கினில் உதித்த தேசி வாயமே. 377

அம்ப ரத்தில் ஆடும்சோதி யான வன்னி மூலமாம்
அம்ப ரம்மும் தம்பரமும் அகோர மிட்ட லர்ந்தது
அம்ப ரக்கு ழியிலே அங்க மிட்ட ருக்கிட
அம்ப ரத்தில் ஆதியோ டமர்ந்த தேசி வாயமே. 378

வாடி லாத பூமலர்ந்து வண்டு ரிசை நாவிலே
ஓடி நின்று உருவெடுத் துகார மாய்அ லர்ந்ததும்
ஆடி ஆடி அங்கமும் அகப்ப டக்க டந்தபின்
கூடி நின்று லாவுமே குருவி ருந்த கோலமே. 379

விட்ட டிவி ரைத்ததோ வேர் உருக்கி நின்றதோ
எட்டி நின்ற சீவனும் ஈரேழ் லோகம் கண்டதோ
தட்டு ருவம் ஆகிநின்ற சதாசி வத்து ஒளியதோ
வட்ட வீடு அறிந்தபோர்கள் வான தேவர் ஆவரே. 380

வான வர்நி றைந்தசோதி மானி டக்க ருவிலே
வான தேவர் அத்தனைக்குள் வந்த டைவர் வானவர்
வான கம்மும் மண்ணகமும் வட்ட வீட றிந்தபின்
வானெ லாம்நி றைந்துமன்னு மாணிக் கங்கள் ஆனவே. 381

பன்னி ரண்டு கால்நிறுத்திப் பஞ்ச வர்ணம் உற்றிடின்
மின்னி யேவெ ளிக்குள் நின்று வேறி டத்த மர்ந்ததும்
சென்னி யாம்த லத்திலே சீவன் நின்றி யங்கிடும்
பன்னி உன்னி ஆய்ந்தவர் பரப்பி ரம்மம் ஆனதே. 382

உச்சி கண்டு கண்கள்கட்டி உண்மை கண்ட தெவ்விடம்
மச்சு மாளி கைக்குளே மானி டம்க லப்பிரேல்
எச்சி லான வாசல்களும் ஏக போகம் ஆய்விடும்
பச்சை மாலும் ஈசனும் பரந்த தேசி வாயமே. 383

வாயி லிட்டு நல்லுரிசை அட்ச ரத்தொ லியிலே
கோயி லிட்டு வாவியுமக் கொம்பி லேஉ லர்ந்தும்
ஆயி லிட்ட காயமும் அனாதி யிட்ட சீவனும்
வாயு விட்ட வன்னியும் வளர்ந்த தேசி வாயமே. 384

அட்ச ரத்தை உச்சரித் தனாதி யங்கி மூலமாம்
அட்ச ரத்தை யும்திறந்த தகோர மிட்ட லர்ந்ததும்
அட்ச ரத்தில் உட்கரம் அகப்ப டக்க டந்தபின்
அட்ச ரத்தில் ஆதியோ டமர்ந்த தேசி வாயமே. 385

கோயி லும்கு ளங்களும் குறியி னில்கு ருக்களாய்
மாயி லும்ம டியிலும் மனத்தி லேம யங்குறீர்
ஆய னைஅ ரனையும் அறிந்து ணர்ந்து கொள்விரேல்
தாயி னும்த கப்பனோடு தான்அ மர்ந்த தொக்குமே. 386

கோயில் எங்கும் ஒன்றலோ குளங்கள் நீர்கள் ஒன்றலோ
தேயு வாயு ஒன்றலோ சிவனும் அங்கே ஒன்றலோ
ஆய சீவன் எங்குமாய் அமர்ந்து வார தொன்றலோ
காயம் ஈத றிந்தபேர்கள் காட்சி யாவர் காணுமே. 387

காது கண்கள் மூக்குவாய் கலந்து வார தொன்றலோ
சோதி யிட்ட டுத்ததும் சுகங்கள் அஞ்சும் ஒன்றலோ
ஓதி வைத்த சாத்திரம் உதித்து வார தொன்றலோ
நாத வீட றிந்தபேர்கள் நாதர் ஆவர் காணுமே. 388

அவ்வு தித்த அட்சரத்தின் உட்க லந்த அட்சரம்
சவ்வு தித்த மந்திரம் சம்பு ளத்தி ருந்ததால்
மவ்வு தித்த மாய்கையால் மயங்கு கின்ற மாந்தர்காள்
உவ்வு த்த்த தவ்வுமாய் உருத்த ரித்த துண்மையே. 389

அகால மென்னும் அக்கரத்தில் அக்க ரம்ஒ ழிந்ததோ
அகார மென்னும் அக்கரத்தில் அவ்வு வந்து தித்ததோ
உகார மும்அ காரமும் ஒன்றி நன்று நின்றதோ
விகார மற்ற ஞானிகாள் விரித்து ரைக்க வேணுமே. 390

சத்தி யாவ துன்னுடல் தயங்கு சீவன் உட்சிவம்
பித்தர் காள்இ தற்குமேல் பிதற்று கின்ற தில்லையே
சுத்தி ஐந்து கூடம்ஒன்று சொல்லி றந்த தோர்வெளி
சத்தி சிவமும் ஆகிநின்று தண்மை யாவ துண்மையே. 391

சுக்கி லத்து ளையிலே சுரோணி தக்க ருவுளே
முச்ச துர வாசலில் முளைத்தெ ழுந்த மோட்டினில்
மெய்ச்ச துர மெய்யுளே விளங்கு ஞான தீபமாய்
உச்ச ரிக்கும் மந்திரம் ஓம்ந மசி வாயமே. 392

அக்க ரம்அ னாதிஅல்ல ஆத்து மாஅ னாதிஅல்ல
புக்கி ருந்த பூதமும் புலன்க ளும்அ னாதிஅல்ல
தக்க மிக்க நூல்களும் சாத்தி ரம்அ னாதிஅல்ல
ஒக்க நின்று டன்கலந்த உண்மை காண்அ னாதியே. 393

மென்மை யாகி நின்றதேது விட்டு நின்ற தொட்டதேது
உண்மை யாக நீயுரைக்க வேணும் எங்கள் உத்தமா
பெண்மை யாகி நின்றதொன்று விட்டு நின்ற தொட்டதை
உண்மை யாய்உ ரைக்கமுத்தி உட்க லந்தி ருந்ததே. 394

அடக்கி னால்அ டங்குமோ அண்டம் அஞ்செ ழுத்துளே
உடக்கி னால்எ டுத்தகாயம் உண்மை யென்று ணர்ந்துநீ
சடக்கில் ஆறு வேதமும் தரிக்க ஓதி லாமையால்
விடக்கு நாயு மாயவோதி வேறு வேறு பேசுமோ. 395

உண்மை யான சக்கரம் உபாய மாய்இ ருந்ததும்
தண்மை யான காயமும் தரித்த ரூபம் ஆனதும்
வெண்மை யாகி நீறியே விளைந்து நின்ற தானதும்
உண்மை யான ஞானிகள் விரித்து ரைக்க வேண்டுமே. 396

எள்ள கத்தில் எண்ணெய்போல எங்கு மாகி எம்பிரான்
உள்ள கத்தி லேயிருக்க ஊச லாடும் மூடர்காள்
கொள்ளை நாயின் வாலினைக் குணக்கெ டுக்க வல்லிரேல்
வள்ள லாகி நின்றசோதி காண லாகும் மெய்ம்மையே. 397

வேணு மென்ற ஞானமும் விரும்பு கின்ற நூலிலே
தாணு வுண்டங் கென்கிறீர் தரிக்கி லீர்ம றக்கிலீர்
தாணு வொன்று மூலநாடி தன்னுள் நாடி உம்முளே
காணு மன்றி வேறியாவும் கனாம யக்கம் ஒக்குமே. 398

வழக்கி லேயு ரைக்கிறீர் மனத்து ளேத விக்கிறீர்
உழக்கி லாது நாழியான வாறு போலும் ஊமைகாள்
உழக்கு நாலு நாழியான வாறு போலும் உம்முளே
வழக்கி லேயு ரைக்கிறீர் மனத்துள் ஈசன் மன்னுமே. 399

ஆடு கின்ற எம்பிரானை அங்கும் இங்கும் நின்றுநீர்
தேடு கின்ற வீணர்காள் தெளிவ தொன்றை ஓர்கிலீர்
நாடி நாடி உம்முளே நவின்று நோக்க வல்லிரேல்
கூடொ ணாத தற்பரம் குவிந்து கூடல் ஆகுமே .400

சுற்றி ஐந்து கூடம்ஒன்று சொல்லி றந்த தோர்வெளி
சத்தி யும்சி வமுமாகி நின்ற தன்மை ஓர்கிலீர்
சத்தி யாவ தும்முடல் தயங்கு சீவன் உட்சிவம்
பித்தர் காள்அ றிந்துகொள்ளும் பிரான்இ ருந்த கோலமே. 401

அகார மான தம்பலம் அனாதி யான தம்பலம்
உகார மான தம்பலம் உண்மை யான தம்பலம்
மகார மான தம்பலம் வடிவ மான தம்பலம்
சிகார மான தம்பலம் தெளிந்த தேசி வாயமே. 402

சக்க ரம்ப றந்ததோடி சக்க ரம்மேல் பலகையாய்
செக்கி லாமல் எண்ணெய்போல் சிங்கு வாயு தேயுவும்
உக்கி லேஒ ளிகலந்து துகங்க ளும்க லக்கமாய்
புக்கி லேபு குந்தபோது போன வாற தெங்ஙனே. 403

வளர்ந்தெ ழுந்த கொங்கைதன்னை மாய மென்றெ எண்ணிநீர்
உளங்கொள் சீவ ராருடப் புடைமை யாகத் தேர்வீர்காள்
விளங்கு ஞானம் மேவியே மிக்கோர் சொல்லைக் கேட்பிரேல்
களங்க மற்று நெஞ்சுளே கருத்து வந்து புக்குமே. 404

நாலு வேதம் ஓதுகின்ற ஞானம் ஒன்று அறிவிரோ
நாலு சாமம் ஆகியே நவின்ற ஞான போதமாய்
ஆலம் உண்ட கண்டனும் அயனும் அந்த மாலுமாய்ச்
சால உன்னி நெஞ்சுளே தரித்த தேசி வாயமே. 405

சுற்றம் என்று சொல்வதும் சுருதி முடிவில் வைத்திடீர்
அத்தன் நித்தம் ஆடியே அமர்ந்தி ருந்த தெவ்விடம்
பத்தி முற்றி அன்பர்கள் பரத்தில் ஒன்று பாழது
பித்த ரேஇ தைத்கருதிப் பேச லாவ தெங்ஙனே. 406

எங்ங னேவி ளக்கதுக்குள் ஏற்ற வாறு நின்றுதான்
எங்ங னேஎ ழுந்தருளி ஈசன் நேசர் என்பரேல்
அங்ங னேஇ ருந்தருளும் ஆதி யான தற்பரம்
சிங்கம் அண்மி யானைபோலத் திரிம லங்கள் அற்றவே. 407

அற்ற வுள்அ கத்தையும் அலக்கி டும்மெ ழுக்கிடும்
மெத்த தீபம் இட்டதிற்ப்ர வாத பூசை ஏத்தியே
நற்ற வம்பு ரிந்தேக நாத பாதம் நாடியே
கற்றி ருப்ப தேசரிதை கண்டு கொள்ளும் உம்முளே. 408

பார்த்து நின்ற தம்பலம் பரமன் ஆடும் அம்பலம்
கூத்து நின்ற தம்பலம் கோர மான தம்பலம்
வார்த்தை யான தம்பலம் வன்னி யான தம்பலம்
சீற்ற மான தம்பலம் தெளிந்த தேசி வாயமே. 409

சென்று சென்றி டந்தொறும் சிறந்த செம்பொன் அம்பலம்
அன்றும் இன்றும் நின்றதோர் அனாதி யான தம்பலம்
என்றும் என்றும் இருப்பதோர் உறுதி யான அம்பலம்
ஒன்றி ஒன்றி நின்றதுள் ஒழிந்த தேசி வாயமே. 410

தந்தை தாய்த மரும்நீ சகல தேவ தையும்நீ
சிந்தை நீதெ ளிவும்நீ சித்தி முத்தி தானும்நீ
விந்து நீவி ளைவுநீ மேல தாய வேதம்நீ
எந்தை நீஇ றைவன்நீ என்னை ஆண்ட ஈசனே. 411

எப்பி றப்பி லும்பிறந்த திறந்த ழிந்த ஏழைகாள்
இப்பி றப்பி லும்பிறந் தென்ன நீறு பூசுறீர்
அப்பு டன்ம லம்அறுத் தாசை நீக்க வல்லிரேல்
செப்பு நாத ஓசையில் தெளிந்து காணல் ஆகுமே. 412

எட்டு யோகம் ஆனதும் இயங்கு கின்ற நாதமும்
எட்டக் கரத் துளேஉ கார மும்ம காரமும்
விட்ட லர்ந்த மந்திரம் வீணா தண்டின் ஊடுபோய்
அட்ட அட்ச ரத்துளே அமர்ந்த தேசி வாயமே. 413

பிரான்பி ரான்பி ரான்என்றுநீர் பிணத்து கின்ற மூடரே
பிரானை விட்டும் எம்பிரான் பிரிந்த வாற தெங்ஙனே
பிரானு மாய்ப்பி ரானுமாய் பேரு லகமும் தானுமாய்ப்
பிரானி லேமு ளைத்தெழுந்த பித்தர் காணும் உம்முடல். 414

ஆதி யில்லை அந்தமில்லை ஆன நாலு வேதமில்லை
சோதி யில்லை சொல்லுமில்லை சொல்லி றந்த தூவெளி
நீதி யில்லை நேசமில்லை நிச்ச யப்ப டாததும்
ஆதி கண்டு கொண்டபின் அஞ்செ ழுத்தும் இல்லையே. 415

அம்மை யப்பன் அப்பனீர் அமர்ந்த போது அறிகிலீர்
அம்மை யப்பன் ஆனநீர் ஆதி யான பாசமே
அம்மை யப்பன் நின்னைஅன்றி யாரு மில்லை ஆனபின்
அம்மை யப்பன் நின்னைஅன்றி யாரு மில்லை இல்லையே. 416

நூறு கோடி மந்திரம் நூறு கோடி ஆகமம்
நூறு கோடி நாளிருந்த தூடி னாலும் என்பயன்
ஆறும் ஆறும் ஆறுமாய் அகத்தில் ஓர்எ ழுத்ததாய்
சீரை ஓத வல்லிரேல் சிவப தங்கள் சேரலாம். 417

முந்த ஓர்எ ழுத்துளே முளைத்தெ ழுந்த செஞ்சுடர்
அந்த ஓர்எ ழுத்துளே பிறந்து காயம் ஆனதும்
அந்த ஓர்எ ழுத்துளே ஏக மாகி நின்றதும்
அந்த ஓர்எ ழுத்தையும் அறிந்து ணர்ந்து கொள்ளுமே. 418

கூட்டம் இட்டு நீங்களும் கூடி வேதம் ஓதுறீர்
ஏட்ட கத்துள் ஈசனும் இருப்ப தென்எ ழுத்துளே
நாட்டம் இட்டு நாடிடும் நாலு மூன்று தன்னுளே
ஆட்ட கத்துள் ஆடிடும் அம்மை ஆணை உண்மையே. 419

காக்கை மூக்கை ஆமையார் எடுத்து ரைத்த காரணம்
நாக்கை ஊன்றி உள்வளைத்து ஞான நாடி ஊடுபோய்
ஏக்கை நோக்க அட்சரம் இரண்டெ ழுத்தும் ஏத்திடில்
பார்த்த பார்த்த திக்கெலாம் பரப்பி ரம்மம் ஆனதே. 420

ஓசை உள்ள கல்லைநீர் உடைத்தி ரண்டாய்ச் செய்துமே
வாச லில்ப தித்தகல்லை மழுங்க வேமி திக்கிறீர்
பூச னைக்கு வைத்தகல்லில் பூவும் நீரும் சாத்துறீர்
ஈச னுக்கு கந்தகல் எந்தக் கல்லு சொல்லுமே. 421

ஒட்டு வைத்துக் கட்டிநீர் உபாய மான மந்திரம்
கட்டுப் பட்ட போதிலும் கர்த்தன் அங்கு வாழுமோ
எட்டும் எட்டும் எட்டுளே இயங்கு கின்ற வாயுவை
வட்டம் இட்ட யவ்விலே வைத்து ணர்ந்து பாருமே. 422

இந்த ஊரில் இல்லைஎன் றெங்கு நாடி ஓடுறீர்
அந்த ஊரில் ஈசனும் அமர்ந்து வாழ்வ தெங்ஙனே
அந்த மான பொந்திலாரில் மேவி நின்ற நாதனை
அந்த மான சீயில்வவ்வில் அறிந்துணர்ந்து கொள்ளுமே. 423

புக்கி ருந்த தும்முளே பூரி யிட்ட தோத்திரம்
தொக்கு சட்சு சிங்குவை ஆக்கி ராணன் சூழ்ந்திடில்
அக்க மணிந்து கொன்றைசூடி அம்ப லத்துள் ஆடுவார்
மிக்க சோதி அன்புடன் விளம்பி டாது பின்னையே. 424

பின்னெ ழுந்த மாங்கிசத்தைப் பேதை யர்கண் பற்றியே
பின்பு மாங்கி சத்தினால் பேத மாய்கை பண்ணினால்
துன்பு றும்வி னைகள்தான் சூழ்ந்தி டும்பின் என்றலோ
அன்ப ராய்இ ருந்தபேர்கள் ஆறு நீந்தல் போல்விரே. 425

விட்டி ருந்த தும்முளே விதன மற்றி ருக்கிறீர்
கட்டி வைத்த வாசல்மூன்று காட்சி யான வாசல்ஒன்று
கட்டி வைத்த வாசலும் கதவு தாள்தி றந்துபோய்த்
திட்டமான ஈசனைத் தெளிவு மாங்கி சத்துளே. 426

ஆகும் ஆகும் ஆகுமே அனாதி யான அப்பொருள்
ஏகர் பாதம் நாடிநாடி ஏத்தி நிற்க வல்லிரேல்
பாகு சேரு மொழிஉமைக்குப் பால னாகி வாழலாம்
வாகு டன்நீர் வன்னியை மருவி யேவ ருந்திடீர். 427

உண்மை யான தொன்றதொன்றை உற்று நோக்கி உம்முளே
வண்மை யான வாசியுண்டு வாழ்த்தி ஏத்த வல்லிரேல்
தன்மை பெற்றி ருக்கலாம் தவமும் வந்து நேரிடும்
கன்ம தன்மம் ஆகும்ஈசர் காட்சி தானும் காணுமே. 428

பால னாக வேணும்என்று பத்தி முற்றும் என்பரே
நாலு பாதம் உண்டதில் நனைந்தி ரண்ட டுத்ததால்
மூல நாடி தன்னில்வன்னி மூட்டி அந்த நீருண
ஏல வார்கு ழலியோடே ஈசர் பாதம் எய்துமே. 429

எய்து நின்னை அன்பினால் இறைஞ்சி ஏத்த வல்லிரேல்
எய்தும் உண்மை தன்னிலே இறப்பி றப்ப கற்றிடும்
மைஇ லங்கு கண்ணிபங்கன் வாசி வானில் ஏறிமுன்
செய்த வல்வி னைகளும் சிதறும் அஃது திண்ணமே. 430

திண்ணம் என்று சேதிசொன்ன செவ்வி யோர்கள் கேண்மினோ
அண்ணல் அன்பு ளன்புருகி அறிந்து நோக்க லாயிடும்
மண்ணு மதிர விண்ணுமதிர வாசி யைந டத்திடில்
நண்ணி எங்கள் ஈசனும் நமது டலில்இ ருப்பனே. 431

இருப்பன் எட்டெட் டெண்ணிலே இருந்து வேற தாகுவன்
நெருப்பு வாயு நீருமண்ணும் நீள்வி சும்பும் ஆகுவான்
கருப்பு குந்து காலமே கலந்த சோதி நாதனைக்
குருப்பு னலில் மூழ்கினார் குறித்து ணர்ந்து கொள்வரே. 432

கொள்ளு வார்கள் சிந்தையில் குறிப்பு ணர்ந்த ஞானிகள்
விள்ளு வார்கள் பக்குவத்தில் வேண்டி வேண்டி ஏத்தினால்
உள்ளு மாய்ப்பு றம்புமாய் உணர்வ தற்கு ணர்வுமாய்த்
தெள்ளி தாக நின்றசோதி செம்மை யைத்தெ ளிந்திடே. 433

தெளிந்த நற்ச ரியைதன்னில் சென்று சாலோ கம்பெறும்
தெளிந்த நற்கி ரியைபூசை சேர லாம்சா மீபமே
தெளிந்த நல்ல யோகம்தன்னில் சேர லாகும் சாரூபம்
தெளிந்த ஞானம் நான்கிலும் சேர லாம்சா யுச்யமே. 434

சேரு வார்கள் ஞானம்என்று செப்பு வார்தெ ளிவுளோர்
சேரு வார்கள் நாலுபாதச் செம்மை என்ற தில்லையே
சேரு வார்கள் சிவதி திருவ ருளைப் பெற்றபோர்
சேரு மாறு கண்டுநாலும் செய்தொ ழில்தி றப்படே. 435

திறம லிக்கு நாலுபாதம் செம்மை யும்தி றப்படார்
அறிவி லிகள் தேசநாடி அவத்தி லேஅ லைவதே
குறிய தனைக் காட்டிஉள் குறித்து நோக்க வல்லிரேல்
வெளிக மழ்ச டையுடையோன் மெய்ப்ப தம்அ டைவரே. 436

அடைவு ளோர்கள் முத்தியை அறிந்தி டாத மூடரே
படையு டைய தத்துவமும் பாத கங்கள் அல்லவோ
மடைதி றக்க வாரியின் மடையில் ஏறு மாறுபோல்
உடலில் மூல நாடியை உயர ஏற்றி ஊன்றிடே. 437

ஊன்றி ஏற்றி மண்டலம் உருவி மூன்று தாள்திறந்
தான்று தந்தி ஏறிடில் அமிர்தம் வந்தி றங்கிடும்
நான்றி தென்று தொண்டருக்கு நாத னும்வெ ளிப்படும்
ஆன்றி யும்உ யிர்பரம் பொருந்தி வாழ்வ தாகவே. 438

ஆக மூல நாடியில் அனல்எ ழுப்பி அன்புடன்
மோக மான மாயையில் முயல்வ தும்ஒ ழிந்திடில்
தாக மேரு நாடிஏகர் ஏகமான வாறு போல்
ஏகர் பாதம் அன்புடன் இறைஞ்சி னார்அ றிவரே. 439

அறிந்து நோக்கி உம்முளே அயன்தி யானம் உம்முளே
பிறிந்தி ராமல் ஏகர்பாதம் பெற்றி ருப்ப துண்மையே
அறிந்து மீள வைத்திடா வகையு மரணம் ஏத்தினார்
செறிந்து மேலை வாசலைத் திறந்து பாரும் உம்முளே. 440

சேதி யாக உம்முளே தெளிந்து நோக்க வல்லிரேல்
சோதி வந்து தித்திடும் துரியா தீதம் உற்றிடும்
ஆதி சக்க ரத்தினில் அமர்ந்து தீர்த்தம் ஆடுவன்
பேதி யாது கண்டுகொள் பிராண னைத்தி ருத்தியே. 441

திருவு மாகிச் சிவனுமாகித் தெளிந்து ளோர்கள் சிந்தையில்
மருவி லேஎ ழுந்துவீசும் வாச னைய தாகுவன்
கருவி லேவி ழுந்தெழுந்த கன்ம வாத னையெலாம்
பருதி முன்இ ருளதாகிப் பறியும் அங்கி பாருமே. 442

பாரும் எந்தை ஈசர்வைத்த பண்பி லேஇ ருந்துநீர்
சேரு மேந டுவறிந்து செம்மை யான அப்பொருள்
வேரை யும்மு டியையும் விரைந்து தேடி மால்அயன்
பார்இ டந்து விண்ணிலே பறந்தும் கண்ட தில்லையே. 443

கண்டி லாத யன்மால்என்று காட்சியாகச் சொல்லுறீர்
மிண்டி னால்அ ரனுடன் மேவ லாயி ருக்குமோ
தொண்டு பட்டும் அன்புடன் தொழுது நோக்க வல்லிரேல்
பண்டு முப்பு ரம்எரித்த பத்தி வந்து முற்றுமே. 444

முற்று மேய வன்ஒழிந்து முன்பின் ஒன்றும் காண்கிலேன்
பற்றி லாத ஒன்றுதன்னைப் பற்றி நிற்க வல்லது
கற்ற தாலே ஈசர்பாதம் காண லாயி ருக்குமோ
பெற்ற பேரை அன்புடன் பிரிய மாகக் கேளுமே. 445

கேட்டு நின்ற உன்னிலை கிடைத்த காலந் தன்னுளே
வாட்டம் உள்ள தத்துவ மயக்க மும்அ கற்றிடும்
வீட்டி லேவெ ளியதாகும் விளங்க வந்து நேரிடும்
கூட்டி வன்னி மாருதம் குயத்தை விட்டெ ழுப்புமே. 446

எழுப்பி மூல நாடியை இதப்ப டுத்த லாகுமே
மழுப்பி லாத சபையைநீர் வலித்து வாங்க வல்லிரேல்
சுழுத்தி யும்க டந்துபோய்ச் சொப்ப னத்தில் அப்புறம்
அழுத்தி ஓர்எ ழுத்துளே அமைப்ப துண்மை ஐயனே. 447

அல்ல தில்லை என்றுதான் ஆவி யும்பொ ருளுடல்
நல்ல ஈசர் தாள்இணைக்கு நாத னுக்கும் ஈந்திலை
என்றும் என்னுள் நேசமும் வாசி யைவ ருந்தினால்
தொல்லை யாம்வி னைவிடென்று தூர தூரம் ஆனதே. 448

ஆன தேப தியதுயிர் அற்ற தேப சுபாசம்
போன தேம லங்களும் புலன்க ளும்வி னைகளும்
கான கத்தில் இட்டதீயில் காற்று வந்தடுத்தபோல்
ஊன கத்தில் வாயு உன்னி ஒன்றி யேஉ லாவுமே. 449

உலாவும் உவ்வும் மவ்வுமாய் உதித்த டர்ந்து நின்றதும்
உலாவி ஐம்பு லன்களும் ஒருத லத்தி ருந்திடும்
நிலாவும் அங்கு நேசமாகி நின்ற மிர்தம் உண்டுதாம்
குலாவும் எங்கள் ஈசனைக் குறித்து ணர்ந்து கும்பிடே. 450

கும்பி டும்க ருத்துளே குகனை ஐங்க ரனையும்
நம்பி யேஇ டம்வலம் நமக்க ரித்து நாடிட
எம்பி ரானும் அம்மையும் இருத்தி யேந டுவணைத்
தும்பி போல வாசகம் தொடர்ந்து சோம்பி நீங்குமே. 451

நீங்கும் ஐம்பு லன்களும் நிறைந்த வல்வி னைகளும்
ஆங்கா ரம்மாம் ஆசையும் அருந்த டர்ந்த பாவமும்
ஓங்கா ரத்தின் உள்ளிருந்த ஒன்ப தொழிந்த தொன்றிலத்
தூங்கா ஈசர் சொற்படி துணிந்தி ருக்கச் சுத்தமே. 452

கருக்க லந்த காலமே கண்டு நின்ற காரணம்
உருக்க லந்த போதலோ உன்னை நான்உ ணர்ந்தது
விரிக்கில் என்ம றைக்கில்என் வினைக்கி சைந்த போதெலாம்
உருக்க லந்து நின்றபோது நீயும் நானும் ஒன்றலோ. 453

ஞான நூல்கள் தேடியே நவின்ற ஞான யோகிகாள்
ஞான மான சோதியை நாடி உள்அ றிகிலீர்
ஞானம் ஆகி நின்றதோர் நாத னைஅ றிந்தபின்
ஞானம் அல்ல தில்லைவேறு நாம்உ ரைத்த துண்மையே. 454

கருத்த ரிப்ப தற்குமுன் காயம் நின்ற தெவ்விடம்
உருத்த ரிப்ப தற்குமுன் உயிர்ப்பு நின்ற தெவ்விடம்
அருட்பொ திந்த சிந்தையில் மயக்கம் நின்ற தெவ்விடம்
விருப்பு ணர்ந்த ஞானிகாள் விரித்து ரைக்க வேணுமே. 455

கருவி னில்க ருவதாய் எடுத்த ஏழு தோற்றமும்
இருவி னைப்ப யத்தினால் பிறந்தி றந்து ழன்றிடும்
மறுவி னைப்பி றவிமூன்று கால மும்வ குத்தபின்
உறுவி னைப்ப யனிதென்ன உணர்ந்த ஞானிசொல்லுமே. 456

வாயில் எச்சில் போகவே நீர்கு டித்துத் துப்புவீர்
வாயிருக்க எச்சில்போன வாற தென்ப தெவ்விடம்
வாயில் எச்சில் அல்லவோ நீர்உ ரைத்த மந்திரம்
நாயி னைஅ றிந்தபோது நாடும் எச்சில் ஏதுகொல். 457

தொடக்க தென்று நீர்விழத் தொடங்கு கின்ற ஊமர்காள்
தொடக்கி ருந்த தெவ்விடம் சுத்தி யான தெவ்விடம்
தொடக்கி ருந்த வாறறிந்து சுத்தி பண்ண வல்லிரேல்
தொடக்கி லாத சோதியைத் தொடர்ந்து காண லாகுமே. 458

மேதி யோடும் ஆவுமே விரும்பி யேபு ணர்ந்திடில்
சாதி பேத மாய்உருத் தரிக்கும் ஆறு போலவே
வேதம் ஓது வானுடன் புலைச்சி சென்று மேவிடில்
பேத மாய்ப்பி றக்கிலாத வாற தென்ன பேசுமே. 459

வகைக்கு லங்கள் பேசியே வழக்கு ரைக்கும் மாந்தர்காள்
தொகைக்கு லங்கள் ஆன நேர்மை நாடி யேஉ ணர்ந்தபின்
மிகைத்த சுக்கிலம் அன்றியே வேறு ஒன்றும் கண்டிலீர்.
........................................................................................ 460

ஓதும் நாலு வேதமும் உரைத்த சாத்தி ரங்களும்
பூத தத்து வங்களும் பொருந்தும் ஆக மங்களும்
சாதி பேத வன்மையும் தயங்கு கின்ற நூல்களும்
பேத பேதம் ஆகியே பிறந்து ழன்றி ருந்ததே. 461

உறங்கில் என்வி ழிக்கில்என் உணர்வு சென்றொ டுங்கில்என்
திறம்பில் என்தி கைக்கில்என் சிலதி சைகள் எட்டில்என்
புறம்பும் உள்ளும் எங்கணும் பொதிந்தி ருந்த தேகமாய்
நிறைந்தி ருந்த ஞானிகள் நினைப்ப தேதும் இல்லையே. .462

அங்க லிங்கம் பூண்டு நீர் அகண்ட பூசை செய்கிறீர்
அங்க லிங்கம் பூண்டுநீர் அமர்ந்தி ருந்த மார்பரே
எங்கும் ஓடி எங்கும்எங்கும் ஈட ழிந்து மாய்கிறீர்
செங்கல் செம்பு கல்லெலாம் சிறந்து பார்க்கும் மூடரே. 463

தீட்டம் தீட்டம் என்றுநீர் தினமும் முழுகும் மூடரே
தீட்ட மாகி அல்லவோ திரண்டு காயம் ஆனது
பூட்ட காயம் உம்முளே புகமு கின்ற பேயரே
தீட்டு வந்து கொண்டலோ தெளிந்த தேசி வாயமே. 464

ஊந்தி மேலே நாலு மூன்று ஓம்ந மசி வாயமாம்
சந்தி சந்தி என்றுநீர் சாற்று கின்ற பேயரே
முந்து வந்து நம்முளே மூல நாடி ஊடுபோய்
அந்தி சந்தி அற்றிடம் அறிந்து ணர்ந்து பாருமே. 465

வன்னி மூன்று தீயினில் வாழும் எங்கள் நாதனும்
கன்னி யான துள்ளிருக்கக் காதல் கொண்ட தெவ்விடம்
சென்னி நாலு கையிரண்டு சிந்தை யில்இ ரண்டில் ஒன்று
உன்னி உன்னி நும்முளே உய்த்து ணர்ந்து பாருமே. 466

தொண்டு செய்து நீங்களும் சூழ ஓடி மாள்கிறீர்
உண்டு ழன்று நும்முளே உற்று ணர்ந்து பார்க்கிலீர்
வண்டு ளாடு சோலைசூழ் வாழும் எங்கள் நாதனும்
பண்டு போல நும்முளே பகுத்தி ருப்பன் ஈசனே. 467

பரம்உ னக்கெ னக்குவேறு பயம் இல்லை பாரையா
கரம்உ னக்கு நித்தமும் குவித்தி டக்க டமையாம்
சிரமு ருக்கி அமுதளித்த சீரு லாவும் நாதனே
உரம்எ னக்கு நீஅளித்த உண்மை உண்மை உண்மையே. 468

மூல வட்டம் மீதிலே முளைத்த ஐந்து எழுத்திலே
கோல வட்டம் மூன்றுமாய்க் குளிர்ந்த லர்ந்து நின்றதீ
ஞால வட்ட மன்றுளே நவின்ற ஞானி மேலதாய்
ஏல வட்டம் ஆகியே இருந்த தேசி வாயமே. 469

முச்ச துர மூலமாகி மூன்ற தான பேதமாய்
அச்ச துரம் உம்முளே அடங்க வாசி யோகமாம்
மெய்ச்ச துர மெய்யுளே விளங்கு ஞான தீபமாய்
உச்ச ரித்த மந்திரம் ஓம்ந மசி வாயமே. 470

இடங்கள் பண்ணி சுத்திசெய்தே இட்ட பீட மீதிலே
அடங்க நீறு பூசல்செய்து அருந்த வங்கள் பண்ணுவீர்
ஒடுங்கு கின்ற நாதனார் உதிக்கும் ஞானம் எவ்விடம்
அடங்கு கின்ற தெவ்விடம் அறிந்து பூசை செய்யுமே. 471

புத்த கங்க ளைச்சுமந்து பொய்க ளைப்பி தற்றுவீர்
செத்தி டம்பி றந்திடம்ம தெங்ஙன் என்றே அறிகிலீர்
அத்த னைய சித்தனை அறிந்து நோக்க வல்லிரேல்
உத்த மத்துள் ஆயசோதி உணரும் போகம் ஆகுமே. 472

அருளி லேபி றந்துதித்து மாயை ரூபம் ஆகியே
இருளி லேத யங்குகின்ற ஏழை மாந்தர் கேண்மினோ
பொருளி லேத வம்புனைந்து பொருந்தி நோக்க வல்லிரேல்
மருள்அ தேது வன்னியின் மறைந்த தேசி வாயமே. 473

தன்ம சிந்தை ஆம்அளவும் தவம றியாத் தன்மையாய்க்
கன்ம சிந்தை வெயில்உழன்று கருத்த ழிந்த கசடரே
சென்ம சென்மம் தேடியும் தெளியொ ணாத செல்வனை
நன்மை யாக உம்முளே நயந்து காண வேண்டுமே. 474

கள்ள வுள்ள மேயிருக்கக் கடந்த ஞானம் ஓதுவீர்
கள்ளம் உள்அ றுத்தபோது கதிஇ தன்றிக் காண்கிலீர்
உள்ள மேவி எக்கிநித்தம் ஒளியை யணுக வல்லிரேல்
தெள்ளு ஞானம் உம்முளே சிறந்த தேசி வாயமே. 475

காண வேண்டும் என்றுநீர் கடல்ம லைகள் ஏறுவீர்
ஆண வம்அ தல்லவோ அறிவில் லாத மாந்தரே
வேணு மென்றவ் வீசர்பாதம் மெய்யு ளேத ரிப்பிரேல்
தாணு வாக நின்றசீவன் தான்சி வம்அ தாகுமே. 476

அணுவி னோட கண்டமாய் அளவி டாத சோதியைக்
குணம தாக உம்முளே குறித்து நோக்கின் முத்தியாம்
மிணமி ணென்று விரலைஎண்ணி மீளொ ணாம யக்கமாய்த்
துணிவி லாத படியினால் தொடர்ந்து பூசை செய்குவீர். 477

எச்சில் எச்சில் என்றுநீர் இடைந்தி ருக்கும் ஏழைகாள்
துச்சில் எச்சில் அல்லவோ தூய காயம் ஆனதும்
வைத்த எச்சில் தேனலோ வண்டின் எச்சில் பூவலோ
கைச்சு தாவில் வைத்துடன் கறந்த பாலும் எச்சிலே. 478

தீர்த்த லிங்க மூர்த்திஎன்று தேடி ஓடும் தீதரே
தீர்த்த லிங்கம் உள்ளில்நின்ற சீவ னைத்தெ ளியுமே
தீர்த்த லிங்கம் உம்முளே தெளிந்து காண வல்லிரேல்
தீர்த்த லிங்கம் தான்அதாய்ச் சிறந்த தேசி வாயமே. 479

ஆடு கொண்டு கூடுசெய் தமர்ந்தி ருக்கும் ஆறுபோல்
தேடு கின்ற செம்பினைத் திடப்ப டப்ப ரப்பியே
நாடு கின்ற தம்பிரானும் நம்மு ளேஇ ருக்கவே
போடு தர்ப்ப பூசைஎன்ன பூசை என்ன பூசையே. 480

என்னை அற்ப நேரமும் இறக்கி லாத நாதனே
ஏக னேஇ றைவனே இராச ராச ராசனே
உன்னை அற்ப நேரமும் ஒழிந்தி ருக்க லாகுமோ
உனது நாட்டம் எனதுநாவில் உதவி செய்வீர் ஈசனே 481

எல்லை அற்று நின்றசோதி ஏக மாய்எ ரிக்கவே
எந்தை பூர ணப்பிரகாசர் ஏக போகம் ஆகியே
நல்ல இன்ப மோனசாக ரத்தி லேஅ ழுத்தியே
நாடொ ணாத அமிர்தம்உண்டு நான்அ ழிந்து நின்றநாள். 482

ஆன வாற தாயிடும் அகண்ட மான சோதியை
ஊனைக் காட்டி உம்முளே உகந்து காண வல்லிரேல்
ஊன காயம் ஆளலாம் உலக பாரம் ஆளலாம்
வான நாடும் ஆளலாம் வண்ண நாடர் ஆணையே. 483

நித்த மும்ம ணிதுலக்கி நீடு மூலை புக்கிருந்து
கத்தி யேக தறியே கண்கள் மூடி என்பயன்
எத்த னைபேர் எண்ணினும் எட்டி ரண்டும் பத்தலோ
அத்த னுக்கி தேற்குமோ அறிவி லாத மாந்தரே. 484

எட்டி ரண்டும் கூடியே இலிங்க மான தேவனை
மட்ட தாக உம்முளே மதித்து நோக்க வல்லிரேல்
கட்ட மான பிறவிஎன் கருங்க டல்க டக்கலாம்
இட்ட மான வெளியினோ டிசைந்தி ருப்பீர் காண்மினே. 485

உண்மை யான மந்திரம் ஒளியி லேஇ ருந்திடும்
தண்மை யான மந்திரம் சமைந்து ரூபம் ஆகியே
வெண்மை யான மந்திரம் விளைந்து நீற தானதே
உண்மை யான மந்திரம் அதொன்று மேசி வாயமே. 486

பன்னி ரண்டு நாள்இருத்திப் பஞ்ச வண்ணம் ஒத்திட
மின்னி அவ்வெ ளிக்குள்நின்று வேரெ டுத்த மர்ந்தது
சென்னி யான தலத்திலே சீவன் நின்றி யங்கிடும்
பன்னி உன்னி ஆய்ந்தவர் பரப்பி ரம்மம் ஆவரே. 487

தச்சு வாயில் உச்சிமேல் ஆயி ரம்த லங்களாய்
முச்சு டரும் மூவிரண்டு மூண்டெ ழுந்த தீச்சுடர்
வச்சி ரம்அ தாகியே வளர்ந்து நின்ற தெவ்விடம்?
இச்ச டரும் இந்தியமும் ஏக மானது எங்ஙனே? 488

முத்தி சித்தி தொந்தமாய் முயங்கு கின்ற மூர்த்தியை
மற்று தித்த ஐம்புலன்கள் ஆகும் மத்தி மப்புலன்
அத்த னித்த காளகண்டர் அன்பி னால்அ னுதினம்
உச்ச ரித்து ளத்திலே அறிந்து ணர்ந்து கொண்மினே. 489

வல்ல வாசல் ஒன்பதும் மருத்த டைத்த வாசலும்
சொல்லும் வாசல் ஓர்ஐந்தும் சொல்ல விம்மி நின்றதும்
நல்ல வாச லைத்திறந்து ஞான வாசல் ஊடுபோய்
எல்லை வாசல் கண்டபின் இனிப்பி றப்ப தில்லையே. 490

வண்டு பூம ணங்களோடு வந்தி ருந்த தேன்எலாம்
உண்டு ளேஅ டங்கும்வண்ணம் ஓது லிங்க மூலமாய்க்
கண்டு கண்டு வேரிலே கருத்தொ டுங்க வல்லிரேல்
பண்டு கொண்ட வல்வினை பறந்தி டும்சி வாயமே. 491

ஓரெ ழுத்தி லிங்கமாக ஓதும் அக்க ரத்துளே
ஓரெ ழுத்தி யங்குகின்ற உண்மை யைஅ றிகிலீர்
மூவெ ழுத்தும் மூவராய் முளைத்தெ ழுந்த சோதியை
நாலெ ழுத்து நாவுளே நவின்ற தேசி வாயமே. 492

தூர தூர தூரமும் தொடர்ந் தெழுந்த தூரமும்
பார பார பாரம்என்று பரிந்தி ருந்த பாவிகாள்
நேர நேர நேரமும் நினைந்தி ருக்க வல்லிரேல்
தூர தூர தூரமும் தொடர்ந்து கூடல் ஆகுமே. 493

குண்ட லங்கள் பூண்டுநீர் குளங்கள் தோறும் மூழ்கிறீர்
மண்டு கங்கள் போலநீர் மனத்தின் மாச றுக்கிலீர்;
மண்டை ஏந்து கையரை மனத்தி ருத்த வல்லிரேல்
பண்டை மால்அ யன்தொழப் பணிந்து வாழ லாகுமே. 494

கூடு கட்டி முட்டையிட்டுக் கொண்டி ருந்த வாறுபோல்
ஆடி ரண்டு கன்றைஈன்ற அம்ப லத்துள் ஆடுதே;
மாடு கொண்டு வெண்ணெய்உண்ணும் மானிடப்ப சுக்களே!
வீடு கண்டு கொண்டபின்பு வெட்ட வெளியும் காணுமே. 495

நட்ட கல்லைத் தெய்வம்என்று நாலு புட்பம் சாத்தியே
சுற்றி வந்து முணமுணென்று சொல்லு மந்த்ரம் ஏதடா!
நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளி ருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சு வைஅ றியுமோ? 496

நானும் அல்ல நீயும்அல்ல நாதன் அல்ல ஓதுவேன்
வனில் உள்ள சோதிஅல்ல சோதி நம்முள் உள்ளதே
நானும் நீயும் ஒத்தபோது நாடிக் காண லாகுமே
தான தான தத்ததான தான தான தானனா. 497

நல்ல தல்ல கெட்டதல்ல நடுவில் நிற்ப தொன்றுதான்
நல்ல தென்ற போதது நல்ல தாகி நின்றுபின்
நல்ல தல்ல கெட்டதென்றால் கெட்ட தாகும் ஆதலால்
நல்ல தென்று நாடிநின்று நாமம் சொல்ல வேண்டுமே. 498

பேய்கள் கூடிப் பிணங்கள் தின்னும் பிரிய மில்லாக் காட்டிலே
நாய்கள் சுற்ற நடனமாடும் நம்பன் வாழ்க்கை ஏதடா!
தாய்கள் பால்உ திக்கும்இச்சை தவிர வேண்டி நாடினால்
நோய்கள் பட்டு ழல்வதேது நோக்கிப் பாரும் உம்முளே. 499

உப்பை நீக்கில் அழுகிப்போகும் ஊற்றை யாகும் உடலில்நீ
அப்பி யாசை கொண்டிருக்கல் ஆகு மோசொல் அறிவிலா
தப்பி லிப்பொய் மானம்கெட்ட தடிய னாகும் மனமேகேள்:
ஒப்பி லாச்செஞ் சடையனாகும் ஒருவன் பாதம் உண்மையே. 500

பிறப்ப தெல்லாம் இறப்பதுண்டு பேதைமக்கள் தெரிகிலா
திறப்ப தில்லை எனமகிழ்ந் தெங்கள் உங்கள் சொத்தெனக்
குறிப்புப் பேசித் திரிவரன்றிக் கொண்ட கோலம் என்னவோ
நிறப்பும் பொந்தி அழிந்தபோது நேச மாமோ ஈசனே? 501

சுட்டெ ரித்த சாந்துபூசும் சுந்த ரப்பெண் மதிமுகத்
திட்ட நெட்டெ முத்தறியா தேங்கி நோக்கு மதிவலீர்
பெட்ட கத்துப் பாம்புறங்கும் பித்த லாட்டம் அறியீரோ?
கட்ட விழ்த்துப் பிரமன்பார்க்கில் கதிஉ மக்கும் ஏதுகாண். 502

வேதம் ஓது வேலையோ வீண தாகும் பாரிலே
காத காத தூரம்ஓடிக் காதல் பூசை வேணுமோ?
ஆதி நாதன் வெண்ணெயுண்ட அவனி ருக்க நம்முளே
கோது பூசை வேதம்ஏது குறித்துப் பாரும் உம்முளே. 503

பரம்இ லாத தெவ்விடம் பரம்இ ருப்ப தெவ்விடம்?
அறம்இ லாத பாவிகட்குப் பரம்இ லைஅஃ துண்மையே;
கரம்இ ருந்தும் பொருளிருந்தும் அருளி லாத போதது
பரம்இ லாத சூன்யமாகும் பாழும் நரகம் ஆகுமே. 504

மாதர் தோள்சே ராததேவர் மாநி லத்தில் இல்லையே!
மாதர் தோள்பு ணர்ந்தபோது மனிதர் வாழ்சி றக்குமே
மாத ராகுஞ் சத்தியென்று மாட்டிக் கொண்ட தாதலால்
மாத ராகும் நீலிகங்கை மகிழ்ந்து கொண்டான் ஈசனே. 505

சித்தர் என்றும் சிறியர்என்றும் அறியொ ணாத சீவர்காள்!
சித்தர் இங்கி ருந்தபோது பித்தர் என்றே எண்ணுவீர்
சித்தர் இங்கி ருந்தும்என்ன பித்தன் நாட்டி ருப்பரே;
அத்தன் நாடும் இந்தநாடும் அவர்க ளுக்கெ லாமொன்றே. 506

மாந்தர் வாழ்வு மண்ணிலே மறந்த போது விண்ணிலே
சாந்த னான ஆவியைச் சரிப் படுத்த வல்லிரேல்
வேந்த னாகி மன்றுளாடும் விமலன் பாதம் காணலாம்
கூந்த லம்மை கோணல்ஒன்றும் குறிக்கொ ணாதிஃதுண்மையே. 507

சருக ருந்தி நீர்குடித்துச் சாரல் வாழ்த வசிகாள்!
சருக ருந்தில் தேகங்குன்றிச் சஞ்ச லம்உண் டாகுமே;
வருவி ருந்தோ டுண்டுடுத்தி வளர் மனைசு கிப்பிரேல்
வருவி ருந்தோன் ஈசனாகி வாழ்வ ளிக்கும் சிவாயமே. 508

காடு மேடு குன்றுபள்ளம் கானின் ஆற கற்றியும்
நாடு தேசம் விட்டலைவர் நாதன் பாதம் காண்பரோ
கூடு விட்ட கன்றுன்ஆவி கூத்த னூர்க்கே நோக்கலால்
வீடு பெற்ற ரன்பதத்தில் வீற்றி ருப்பர் இல்லையே. 509

கட்டை யால்செய் தேவரும் கல்லி னால்செய் தேவரும்
மட்டை யால்செய் தேவரும் மஞ்ச ளால்செய் தேவரும்
சட்டை யால்செய் தேவரும் சாணி யால்செய் தேவரும்
வெட்ட வெளிய தன்றிமற்று வேறு தெய்வம் இல்லையே. 510

தங்கள் தேகம் நோய்பெறின் தனைப்பி டாரி கோயிலில்
பொங்கல் வைத்தும் ஆடுகோழிப் பூசைப் பலியை இட்டிட
நங்கச் சொல்லு நலிமிகுந்து நாளும் தேய்ந்து மூஞ்சுராய்
உங்கள் குலத்தெய் வம்உங்கள் உருக்கு லைப்ப துண்மையே. 511

ஆசை கொண்ட னுதினமும் அன்னி யர்பொ ருளினை
மோசம் செய்த பகரிக்க முற்றி லும்அ லைபவர்
பூசை யோடு நேமநிட்டை பூரிக் கச்செய் பாதகர்
காசி னியில் எழுநரகைக் காத்தி ருப்ப துண்மையே. 512

நேச முற்றுப் பூசைசெய்து நீறுபூசிப் சந்தனம்
வாச மோட ணிந்துநெற்றி மைதி லதம் இட்டுமே
மோசம் பொய்யு னைசுருட்டு முற்றி லும்செய் மூடர்காள்
வேச ரிக ளம்புரண்ட வெண்ணீ றாகும் மேனியே. 513

வாதம் செய்வேன் வெள்ளியும் பொன்மாற் றுயர்ந்த தங்கமும்
போத வேகு ருமுடிக்கப் பொன்ப ணங்கள் தாவெனச்
சாத னைசெய் தெத்திச்சொத்து தந்த தைக்க வர்ந்துமே
காத தூரம் ஓடிச்செல்வர் காண்ப தும்அ ருமையே .514

யோக சாடை காட்டுவார் உயர வும்எ ழும்புவார்.
வேக மாக அட்டசித்து வித்தை கற்று நெட்டுவார்
மோகம் கொண்டு மாதரின் மூத்தி ரப்பை சிக்கிப்பின்
பேய துபி டித்தவர்போல் பேரு லகில் சாவரே. 515

காய காயம் உண்பதாகக் கண்ட வர்ம தித்திட
மாய வித்தை செய்வதெங்கு மடிப்பு மோசம் செய்பவர்
நேய மாக்கஞ் சாஅடித்து நேர்அ பினைத் தின்பதால்
நாய தாக நக்கிமுக்கி நாட்டி னில்அ லைவரே. 516

நீரி னில்கு மிழிஒத்த நிலையி லாத காயம்என்
றூரி னில்ப றைஅடித் துதாரி யாய்த்தி ரிபவர்
சீரி னில்உ னக்குஞான சித்தி செய்வேன் பாரென
நேரி னில்பி றர்பொருளை நீள வும்கைப் பற்றுவார். 517

காவி யும்ச டைமுடி கமண்ட லங்கள் ஆசனம்
தாவு ருத்தி ரட்ச யோகத் தண்டு கொண்ட மாடுகள்
தேவி யைஅ லையவிட்டுத் தேசம் எங்கும் சுற்றியே
பாவி யென்ன வீடெலாம் பருக்கை கேட்ட லைவரே. 518

முத்தி சேரச் சித்திஇங்கு முன்ன லைப்பேன் பாரெனச்
சத்தி யங்கள் சொல்லிஎங்கும் சாமி வேடம் பூண்டவர்
நித்தி யம்வ யிறுவளர்க்க நீதி ஞானம் பேசியே
பத்தி யாய்ப்ப ணம்பறித்துப் பாழ்ந ரகில் வீழ்வரே. 519

செம்மை சேர்ம ரத்திலே சிலைத லைகள் செய்கிறீர்
கொம்மை யற்ற கிளையில்பாத குறடு செய்து அழிக்கிறீர்
நும்மு ளேவி ளங்குவோனை நாடி நோக்க வல்லிரேல்
இம்ம ளமும் மும்மளமும் எம்ம ளமும் அல்லவே. 520

எத்தி சைஎங் கெங்கும்ஓடி எண்ணி லாத நதிகளில்
சுற்றி யும்த லைமுழுகச் சுத்த ஞானி யாவரோ?
பத்தி யோட ரன்பாதம் பணிந்தி டாத பாவிகாள்!
முத்தி இன்றிப் பாழ்நரகில் மூழ்கி நொந்த லைவிரே. 521

கல்லு வெள்ளி செம்பிரும்பு காய்ந்தி டும்த ராக்களில்
வல்ல தேவ ரூபபேதம் அங்க மைத்துப் போற்றிடில்
தொல்லை அற்றி டப்பெரும் சுகந்த ருமோ சொல்லுவீர்
இல்லை இல்லை இல்லைஇல்லை ஈசன் ஆணை இல்லையே. 522

இச்ச கம்ச னித்ததுவும் ஈசன் ஐந்தெ ழுத்திலே
மெச்ச வும்ச ராசரங்கள் மேவும் ஐந்தெ ழுத்திலே
உச்சி தப்ப லஉயிர்கள் ஓங்கல் அஞ்செ ழுத்திலே
நிச்ச யமெய்ஞ் ஞானபேதம் நிற்கும் ஐந்தெ ழுத்திலே. 523

சாத்தி ரங்கள் பார்த்துப்பார்த்துத் தான்கு ருடு ஆவதால்
நேத்தி ரங்கெட வெய்யோனை நோர்து திசெய் மூடர்கள்!
பாத்தி ரம்அ றிந்துமோன பக்தி செய்ய வல்லிரேல்
சூத்தி ரப்படி யாவரும் சுத்தர் அவர் அங்ஙனே. 524

மனவு றுதி தானிலாத மட்டிப் பிண மாடுகள்
சினமு றப்பி றர்பொருளைச் சேக ரித்து வைத்ததைத்
தினந்தி னம்ஊர் எங்கும்சுற்றித் திண்டிக் கேஅ லைபவர்
இனம தில்ப லர்கள்வையும் இன்பம் அற்ற பாவிகள். 525

சிவாய வசி என்னவும் செபிக்க இச்ச கம்எலாம்
சிவாய வசி என்னவும் செபிக்க யாவும் சித்தியாம்
சிவாய வசி என்னவும் செபிக்க வானம் ஆளலாம்
சிவாய வசி என்பதே இருத லைத்தீ ஆகுமே. 526

**சிவவாக்கியர் முற்றிற்று.**

# குதம்பைச்

# சித்தர்

# முன்னுரை

*சித்தர் பாடல்கள் சீர்திருத்தப் பெட்டகம்; பகுத்தறிவுப் பாசறை; உள்ளொளி உறையுள்; உயிருய்க்கும் ஒளிநெறி!*

*சித்தருள் சித்தர், சிவவாக்கியர்! அவர், சித்தர் உலகின் நக்கீரர்! 'குற்றம் குற்றமே' என்பதைக் குலையாமல் - குறையாமல் - உரைக்கும் கொள்கை வீரர்! "ஊனுடம்பு ஆலயத்தை" உள்ளவாறு உணர்ந்து, உலகுய்ய உணர்த்தும் உரவோர்! தொண்டின் உறைப்பிலே துடித்தெழும்பிய தூண்டாத் தொண்டர் பெருமகனார்! "காற்றின் கணக்கறிந்து கூற்றை வதைக்கும்" நெறியறிந்த நேராளர்! அவரைப்பற்றிய மேலோட்ட ஆய்வு, முன்னை ஐம்பது பக்கங்கள்! அவர்தம் உள்ளோட்ட வழிவந்த பிழிவாம் பாடல்கள், பின்னை எழுபத்தாறு பக்கங்கள்!*

*சித்தர் நெறியை முற்றாக ஆய்ந்து பெருநூல் ஒன்று ஆக்குதல் வேண்டும். அது, இக்காலத்துச் சமயத்துள் புகுந்துள்ள புன்னோய்களுக்கு நன்மருந்தாகத் திகழும்!*

*சித்தரை எண்ணுதற்கு நிலைக்களம் வகுத்துத் தந்தவர்கள் சிங்கம்புணரி, சித்தர் வழிபாட்டுத் திருக்கூட்டத்தார். நூலுருத்தந்து தமிழுலா அருளியவர்கள் கழக ஆட்சியாளர் திரு. இரா. முத்துக்குமாரசாமி எம்.ஏ., பி.லிப்., அவர்கள். இவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.*

***சித்தர் நெறி செந்நெறி!*** *செந்தண்மை நெறி! பின்னைப் புன்மைகளைக் களைந்து முன்னைப் பெருமையை முடித்து வைக்கவல்லது! அந்நெறி தழைத்து உலகம் உய்வதாக!*

*தமிழ்ச்செல்வம்,*
*பாவாணர் ஆராய்ச்சி நூலகம்,*
*திருநகர், மதுரை - 6.*

*தமிழ்த் தொண்டன்*
**இரா. இளங்குமரன்**

# குதம்பைச் சித்தர்

*சித்தர் பெருமக்களுள் குதம்பைச் சித்தர் ஒருவர்.; சிவவாக்கியர் போல்வார் சித்தரே எனினும், சித்தர் பாடல் தொகுப்புகளுள் அவர்கள் பாடல்கள் இடம்பெற்றிருப்பினும், 'சித்தர்' பெயர் ஒட்டிக் கொள்ளவில்லை. ஆனால் குதம்பை யார்க்கோ 'சித்தர்' பெயரொட்டு எவ்விடத்தும் உண்டு.*

*'குதம்பை' என்பது விளிவடிவில் 'குதம்பாய்' என்று ஆகும் என்பது, இலக்கணநெறி, 'ஐ' என்பது 'ஆய்' ஆதல் என முறை காட்டுவர். தந்தை, 'தந்தாய்' என்றும், அன்னை, 'அன்னாய்' என்றும், குழந்தை 'குழந்தாய்' என்றும் வருவன காண்க.*

*குதம்பைச் சித்தரைக் 'குதம்பேய்ச் சித்தர்' என்கிறது* ***அபிதான சிந்தாமணி.*** *இவர் ஒரு சித்தர். பெண்களைப் பேய்களௌன எண்ணி உண்மையுணர்ந்து நன்மையடைந்தனர். இவர் செய்த நூல் குதம்பேய்ச் சித்தர் பாடல் என்றும் சொல்கிறது அது. இவர் பெயரை அப்படிச் சொல்லியும், பதிப்பித்தும், விளக்கம் கூறியும் வந்தவர்கள் இருந்தார்கள் என்பது இதனால் விளங்குகின்றது. முறையற்ற செய்திகள் இவை.*

*அகத்தைப் பேயாக உருவகித்துப் பாடல்தோறும் 'அகப்பேய்' என்றே விளித்துப் பாடிய சித்தர் 'அகப்பேய்ச்சித்தர்' எனப் பட்டார். அதனை நினைத்துக் கொண்ட ஒருவர், குதம்பேய்ச் சித்தரென இட்டுக் கட்டி உலாக் கொள்ளவும் விட்டிருக்கலாம்! குதம்பைக்கும் பேய்க்கும் எத்தொடர்பும் இல்லை. மாதரைப் பழித்துப் பாடும் பாடல்கள் உண்டு என்பதால், இப்பொருள் பொருந்தாது; ஏனெனில், உடலைப் பழிக்கிறார்; சாதிகளைப் பழிக்கிறார்; சமயங்களைப் பழிக்கிறார்; பொய்த்தவக் கோலங் களைப் பழிக்கிறார்; மகளிரை மட்டுமோ பழித்தார்?*

*'நெஞ்சே' எனத் தன்னெஞ்சையே விளித்து அழைத்துக் கூறுவது உண்டு. முன்னிலையாரை விளித்துக் கூறுவது பெருவழக்கு. நடைமுறையிலேயே, அம்மா அப்பா, தங்காய் என்பனவெல்லாம் விளியால் பெற்ற பெயர்களே! அவையே முறைப் பெயர்களாக அமைந்து விட்டமை காண்க. அண்ணா,*

அக்கா, மாமா என்பனவும் விளி வடிவங்களே. இதனை வழக்கில் கண்டோர் இலக்கிய வழக்கிலும் ஆட்சி செய்தனர். ஆண் ஒருவனை முன்னிலைப்படுத்திக் கூறினால் அதற்கு, 'ஆடூஉ' முன்னிலை என்றும், பெண் ஒருத்தியை முன்னிலைப்படுத்திக் கூறினால் 'மகடூஉ முன்னிலை' என்றும் இலக்கணப் பெயர் வழங்கினர். அறநூல் உரைப்பாரும் இவ்வழக்கத்தை மேற் கொண்டனர். நாலடியார், பழமொழி ஆகியவற்றில் இவ்விரு வகை முன்னிலைகளையும் நிரம்பக் காணலாம். யாப்பருங்கலக் காரிகை என்னும் இலக்கண நூல் காரிகையை முன்னிலைப் படுத்திக் கூறுவதால் பெற்ற பெயர் என்பதும் உண்டு. இந்நெறி சித்தர்கள் உள்ளத்தைக் கவர்ந்தமையால், அவர்கள் தாம் கூறும் மெய்ப்பொருள் விளக்கத்தை மகளிரை முன்னிலைப்படுத்தி அல்லது விளித்துக் கூறினர் என்க.

இனிக், குதம்பை என்பதன் பொருளைப் பார்க்கலாம். குதம்பை என்பது 'குள்' என்னும் வேர் வழியாக வந்த சொல்லாகும். குடம்பை என்பதும் அவ்வேர் வழியாக வந்த சொல்லே! வட்டம் என்னும் பொருளில் குதம்பையும் குடம்பையும் வருகின்றன.

குதம்பை ஓர் அணிகலம்; அது மகளிர் அணியும் அணிகலம்; காதிற்கு அணியப்படுவது அது; மகளிர் அணிகலம் எனின் வளர்ந்தவர்களுக்கு உரியதன்று; இளமகளிர்க்கு அல்லது சிறுமியர்க்கு உரிய அணிகலமாம்.

அரைவடங்கள், கட்டிச் சதங்கை, **இடுகுதம்பை,** பொற் சுட்டி, தண்டை என இளஞ்சிறுமியர் அணிகளை அடுக்குவார் அருணகிரியார்.

முற்காலப் பெண்டிர் காது வளர்த்தனர். காது நீள நீளப் பெருமிதமும் கொண்டனர். கூந்தல் நீளத்திற்கு ஒரு பெருமை இருப்பது போலக், காது நீளத்திற்கும் அந்நாளில் ஒரு பெருமை இருந்தது. 'வடிந்து வீழ்காது' என்கிறார் இளங்கோவடிகளார். வடிந்து வீழ்காது என்பது தோளில் தட்டிக் கீழே புரளும் காது என்பதாம்.

காது நீளத்திற்குக் குணுக்கு என ஓர் அணிகலம் அணிந்தனர். காது குத்திப், பஞ்சும் தக்கையும் வைத்துப் பின்னே குணுக்கு அணிவது வழக்கம். காது வலுவாக வலுவாகக் குணுக்கு எண்ணிக்கையும் பெருகும். அது, கீழே இழுத்து வடிந்து வீழ்காது ஆக்கும்! புடலைப் பிஞ்சு நீள்வதற்குக் கல் கட்டி விடுவது

இல்லையா; அது போல் 'குணுக்கு' என்க; ஆனால், அஃதணிகலம் அன்றோ!

பூப்பு அடைந்தவர் குணுக்கு அணிவதில்லை. அதனைக் கழற்றிவிட்டால் 'ஆளாகி விட்டாள்' என்பதற்கு அடையாளம். ஆளானவள், குணுக்கைக் கழற்றித் தங்கநகைகளாகிய தண்டொட்டி, பாம்படம் முதலியவற்றை அணிவாள். ஆதலால், குணுக்கு ஆகிய குதம்பை சிறுமியர் அணிகலமாம். இந்நாள் சிறுமியர், காது வளையம் போட்டுக் கொள்வதை ஒப்பிட்டுக் காணலாம். ஆனால், காது வளையம் சிறுமியர் அணிகலம் என்னும் நிலைமை மாறி, வளர்ந்தோரும் அணிவது அவர்கள் இளமைத்துடிப்பின் அடையாளமாகலாம்.

ஒவ்வொன்றையும் என்ன என்ன என்று அறிந்து கொள்ள அவாவும் பருவம், இளம் பருவம். அதனைப் 'புரிவு தெரியும் பருவம்' என்றும் கூறுவர். அப்பருவத்தே கற்க வேண்டுவன வற்றைக் கற்றல் வேண்டும் என்பாராய் 'இளமையில் கல்' என்றார் ஔவையார். 'இளமைக் கல்வி சிலையில் எழுத்து' என்பது பழமொழி. ஆதலால் இளம்பருவத்தினரை முன்னி லைப்படுத்தி ஒன்றைக் கூறுதல் வழக்காறாகியது. தம்பி, தங்கை, பாப்பா, கண்ணம்மா என்றெல்லாம் விளித்துப் பாடும் பாடல் களை அறிந்தால் இது விளக்கமாம் குழந்தைகள், கதை கேட்ப தற்கும் ஆடல் பாடல் விடுகதை முதலியன நிகழ்த்துதற்கும் பெருவேட்கையர். ஆதலால், பெற்றோர்களையும் பெரியோர் களையும் எப்பொழுதும் சூழ்ந்திருப்பர். அவர்களை முன்னிலைப் படுத்திக் கூறுவது இயல்பான பொருத்தமாகும். இத்தேர்ச்சியே குதம்பையாரைத் தூண்டியிருக்க வேண்டும். இதன் விளைவே அவர்க்கே அப்பெயர் வாய்க்க வாய்ப்பாயிற்றாம்.

குதம்பையார் பாடும் பாடற் செய்திகளெல்லாம் குழந்தைப் பருவத்தினர்க்கு உரியவோ? அவர் பாடல்கள், குழந்தை இலக்கிய வகையைச் சார்ந்தனவோ? எனின் இல்லையாம்! அவை, முதிர்ந் தோர்க்கு உரியவையே! ஆனால் வாழ்வியற் கருத்துகளைக் கேட்பதற்கு அகவை ஒரு குறுக்கீடு இல்லையே! திருக்குறள் கருத்து எவருக்கும் ஏற்றதே! அதன் கருத்து வளம், அகவை வளர வளரப் பட்டறிவு முதிர முதிரச் சிறந்துகொண்டே செல்லும்! அந்நோக்கே தான் குழந்தைகளுக் கென்றே பாடப்படும் பாடல் களிலும், அறவுரைகள் அமைந்திருக்கக் காரணியமாம்.

இனிக் குதம்பைச்சித்தர் பாடல்களைப் பற்றிக் காணலாம். குதம்பைச் சித்தர் பாடல்கள் கும்மி மெட்டில் அமைந்தவை. முன்

ஓரடியும் வெண்டளையான் அமைந்த நாற்சீருடையது. இரண்டாமடி முதலடி முதற்சீருக்கு ஏற்ற எதுகையுடையதாகி இரு சீராய் இடை மடுத்துக் 'குதம்பாய்' என விளியுடையதாய் அவ்விரண்டாமடி இரு சீர்களுமே மடங்கி வருவதாய் அமைந்ததாம். இரண்டாம் அடி இரண்டாம் சீரும், அதன் மடக்காக வரும் அதே சீரும் மாங்கனிச் சீராகவே அமைகின்றது. வண்ணம் அறுத்தால்,

"தானன தானன தானன தானன
தானன தன்னானன - தானன
தானன தன்னானன."

எனவரும். பெரும்பாலும் - ஒன்றிரண்டிடங்கள் தவிர எஞ்சிய இடங்களிலெல்லாம் இவ்வண்ணத்திலேயே அமைந்துள்ளன வாம். வெண்டளை பிழைத்தல் மிக அரிதாகவே உள்ளது.

குதம்பைச்சித்தர் பாடல்களாகச் சித்தர் பாடல் திரட்டு நூல்களில் அறியவருவன முப்பத்திரண்டேயாம். ஆனால் "யோக ஞான சாத்திரத் திரட்டு" என்னும் தொகுப்பில் குதம்பைச் சித்தர் பாடல் 246 காணப்படுகின்றன. அப்பகுதியின் பெயரே, "குதம்பைச் சித்தர் பாடல்" (246) என்பதேயாம். மற்றைத் தொகுப்புகளில் உள்ள முப்பத்திரண்டு பாடல்களும் இத் தொகுப்பில் 215 முதல் 246 வரை ஒரே தொடர்ச்சியாய்க் காணக்கிடக்கின்றன.

**"யோக ஞான சாத்திரத் திரட்டு"** ஏடு கொண்டு பதிப்பித்தது என்றும், **"மதுரை திண்டுக்கல் ரோட்டு மங்காரு சுவாமியார்கள் குமாரர் முத்தியாலு நாயுடு அவர்களுடைய பிரதியின்படி அச்சிடலானது"** என்றும் அந்நூலில் உள்ள குறிப்பால் அறியமுடிகின்றது. அன்றியும் குதம்பைச் சித்தர்பாடல், அத்தொகுப்பில் அறுபத்திரண்டாவது பகுதியாக வெளிப் பட்டுள்ளது என்பதும் கருதத்தக்கது.

சித்தர்கள் சமயம் உருவ வழிபாடு கடந்தது; பெயர் நிலையும் கடந்தது; கோயில் குளம்நீராட்டு, தேர்த் திருவிழா சடங்கு இன்னவை யெல்லாவற்றையும் பொருட்டாக எண்ணாதது. புறக்கோலங்களில் கருத்துச் செலுத்தாமல், அகவுணர்வு களிலேயே அழுத்தமாக ஊன்றி உயிர்களுக்கெல்லாம் உரிமைத் தொண்டு செய்தலையே உயிர்ப்பாகக் கொண்டது! ஆதலால், சித்தர்கள் பார்வை எல்லாமும், பொதுமையில் கனிந்த ஒருமைப் பாட்டிலேயே இயலக் காணலாம்.

குதம்பைச்சித்தர், காப்புச் செய்யுள் பாடினார். அதில் உலகில் அஞ்ஞானம் ஒழிந்திட யார்க்கும், இலகும் கடவுளை ஏத்துகின்றார். அவர் மெய்ப்பொருளை நன்றாகத் தேர்ந்து கூறுகின்றாராம் குதம்பை, நாளும் பொழுதும் அதனை நன்கனம் எண்ணி நெஞ்சில் நிறுத்திக்கொள்ள வேண்டுமாம்! இதுவே அவர் கூறும் காப்புச் செய்யுள்.

"ஒருருவம் ஒரு நாமம் ஒன்று மில்லான்" என்னும் மணிமொழியை எடுத்த எடுப்பிலேயே நிலைப்படுத்துகின்றார் குதம்பையார்.

குதம்பைச்சித்தர் பாடல்களின் பொருள்வகை கடவுள் வணக்கம், கடவுள்திறம் கூறல், வீட்டையும் வழி, உடலைப் பழித்தல், மயக்கும் மாதரைப் பழித்தல், நிரய (நரக) நிலைமை, பொய்த்தவ வொழுக்கத்தைப் பழித்தல், நிலையாப் பொருள், உடன் வருவன, ஆசையை ஒழித்தல், தவநிலை கூறல், அறிவுவிளக்கம், சாதிவேற்றுமை இன்மை, சமய நிலை கூறல், மந்திரநிலை கூறல், வளி (வாத) நிலைகூறல், மருத்துவம் கூறல், கற்பு நிலைகூறல், திருத்தலங் கூறல், தேவநிலை கூறல், அறியாமை அகற்றல் என இருபத்தொரு வகைத்தாம். இவற்றுள் பொருள் மயக்கமாகிக் கிடப்பனவும் உண்டு.

# பாடல் தெளிபொருள்

## 1. கடவுள் வணக்கம் : (1-20) குதம்பாய்.

முழுநிறை பொருளாம் இறைவனைக் கண்டோர் பிறவியை அறுப்பார்; அவர் இறப்பும் அடையார்; பிறந்து இறக்கும் சிறுதெய்வத்தை வணங்குவார், வீடுபேறு அடையார்; மெய்ப் பொருளைக் கண்டோர்க்குத் துயர் என்பதே இல்லை; பற்றற்ற இறைவனைப் பற்றினோர்க்குக் குற்றங்கள் இல்லையாம்; கண்ணுக்குத் தோன்றுவதும் தோன்றாததும் ஆகிய முதல்வனை உள்ளுள் காணவேண்டும். வெறும் பாழில் நிலைபெற்ற இறையை விருப்போடு அகத்தே பார்த்தல் வேண்டும்; எங்கும் நிறைந்த ஒளிப்பிழம்பாய் இறைவனை உடலுக்குள் உன்னிப்பாய்ப் பார்த்தல் வேண்டும். அண்டத்துக்கு அப்பாலாய் அமையும் இறைவனைப் பிண்டத்துள் காணவேண்டும்; குதம்பாய், ஆருயிர்த்துணையும் தெவிட்டா அமுதுமாம், இறைவன்; தூண்டா விளக்காய்த் துலங்குபவன், இறைவன்; உலகும் உயிரும் படைத்தவன் இறைவன்; எப்பொருளுக்கும் மேலாய் இருப்பவன், இறைவன். எவ்வுயிர்க்கும் உணவளிப்பவன், இறைவன்; காணற் கரிய ஊழி முதல்வன், இறைவன்; அணுவாகவும் அண்டமாகவும் ஆனவன், இறைவன்; மாணிக்கக் குன்றாகவும் செங்கதிர்களின் செல்வனாகவும் இருப்பவன், இறைவன். அவனை வழிபடுதல் வேண்டும்; தூயமனத்தையே காணிக்கைப் பொருளாகப் படைத்தல் வேண்டும்.

## 2. கடவுள் திறம் கூறல் : (21-50)

குதம்பாய், இறைவன் தேவர்களாலும் சித்தர்களாலும் தேடப்படுபவன்; அவனே முதல்வன்; அவனே மூவரும் ஆனவன்; அவனே அழியாப்பொருளும், அழியும் பொருளும், இயங்கு பொருளும், நிலைபொருளும், உருவப்பொருளும், அருவப் பொருளும், ஒளியும், வெளியும், தீயும், நெருப்பும், காற்றும், விண்ணும், மண்ணும் எல்லாமுமாய் ஆனவன்; உலகை நொடிப் போதில் அழிப்பவன் அவனே; அவன் அசையா விடில் அணுவும் அசையாது. குதம்பாய், காரணம் அறிவென்றும், காரியம் மெய்யென்றும் மறைநூல் கூறும்; காரணம் முற்பட்டதென்றும்,

காரியம் பிற்பட்டதென்றும் உலகநூல் கூறும். உலகம் தொல் பழமையானது என்றும் இறை அதிற்பெரிய தென்றும் உயர்ந்தோர் கூறுவர்; படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளலாம் ஐந்தொழிற்கும் உரியோன் இறைவன் என மந்திரங்கள் கூறும்; யானை முதலாக எறும்பு ஈறாக அனைத்துயிரும் தந்தவன் இறைவன்; மண்ணை அளந்தாலும், பொருள்களின் எண்ணை, அளக்க இயலாது. இறைவன் முதலும் முடிவும் ஆனவன்; உயிரும் அறிவும் மனமும் அருளியவன்; தூய்மை, எவரும் தோற்றுவியாது தானே தோன்றல், உயர்குணம், குறைவிலா நிறைவு, நிலைபேறு ஆகிய எல்லாமும் அமைந்தவன்; எங்கும் விரிந்தவன்; ஈகையாளன்; கண்ணில் காண்டற் கரியவன்; உருவ மற்றவன்; உலகைப் படைக்க அவன் எண்ணுமளவிலே உலகம் தோன்றிவிடச் செய்தவன்; வெட்ட வெளிக்குள் அண்டங்களை நிற்கச்செய்தவன்; கருவிகள் இல்லாமலே அண்டங்கள் உருவடையச் செய்தவன்; நிலங்காவல் புரியும் வேந்தனைப் போல், உலகெலாம் காவல் புரிபவன். உலகம் தோன்று முன்னரே தோன்றியவன்; எவ்வுயிர்க்கும் எவ்வுலகுக்கும் இறுதியானவன்; இறங்கி வந்து அருளிச்செய்யும் தன்மையால் இறைவன் அறியாதது ஓர் அணுத்தானும் இல்லை; இறைவன் முத்தொழில் செய்யாக்கால் உலகமே தோன்றியிராது; இறைவன் திருநிறை சிறப்பைச் சொல்ல எவருக்கே இயலும்?

### 3. வீடடையும்வழி : (51-61)

குதம்பாய், ஒப்பிலா ஒருவனைப் பற்றிக் கொண்டவர்க்கு வீடுபேறு வாய்த்திடும்; பற்றற்ற இறைவனைப் பற்றிக்கொள்ளக், கற்றுக்கொண்டவர்க்குக் கட்டாயம் வீடுபேறாம்; கட்டற்ற கட்டினைக் கட்டிப் பிடித்தார்க்கு, என்றும் நிலைத்த வீடு பேறாகும்; ஒருமையுள் ஆமையைப் போல் ஐம்புலனையும் அடக்கி அமைந்தார்க்கு வீடுபேறாம்; குரங்குபோல் தாவும் மனத்தை அடக்கி வைத்தவர்க்கு வீடுபேறு வாய்க்கும்; அகக் கருவிகளையெல்லாம் அடக்கினால் இறைவனே உறவாகி நிற்பான்; கன்றை விடாமல் தொடரும் ஈற்றுப்பசுவைப்போல் இறைவனைத் தொடுத்தால் வீடுபேறாம்; கையிற் கனியெனக் குற்றமற்ற இறைமையில் ஒன்றிவிட்டால் வீடுபேறாம்; நிலைத்த இறையை நீங்காமல் கூடினால் வீடுபேறேயாம்.

### 4. உடலைப்பழித்தல் : (62-70)

குதம்பாய், சொல்லரிய நாற்றம் பெருகும் உடலுக்கு மணங்கூட்டுவதும் எதற்காகவோ? மலமும், நெடியும் மல்கிய

உடலுக்கு மணமும் பூச்சும் எதற்காகவோ? ஆடையழகும், அணிகல அழகும் வெளிஅழகே அல்லவோ? ஒன்றுக்கு ஒன்று மாறுபாடாகிப் போரிட்டுப் புழுத்துப் போவதும், சீழும் நீரும் திரண்டதும், காகங்கழுகுகள் களித்து உண்பதும் கோவணத் தோடே கொளுத்தப்படுவதும் ஆகிய உடலுக்கு நீராட்டம் ஏன்? ஆராய்ச்சி ஏன்? ஊர்திகள் பூமெத்தைகள் ஏன்?

**5. மயக்கும் மாதரைப் பழித்தல் : (71-82)**

குதம்பாய், மலைபோன்ற மார்பு இடையே வந்ததன்றோ? கண்ணில் தீட்டிய மையோ, கையால் வாவென அழைப்பது போல்வதன்றோ? முல்லை போலும் பல், ஒருநாள் சுடுகாட்டில் உதிர்ந்து கிடக்குமேயன்றோ? கிளி போலும் மொழி, ஒருநாள் குழறி அழியுமேயன்றோ? பருவத்தில் நிமிர்ந்த மார்பும், முதுமையில் வீழ்ந்துபடுமேயன்றோ? பொலிவொடு தோன்றும் தோலில், சுருக்கம் விழுமேயன்றோ? கொள்ளை வனப்பாம் கண்ணும், நொள்ளையாகி விடுமன்றோ? மஞ்சு போலுங் கருங்கூந்தல், பஞ்சாக வெளுப்பதும் உண்டேயன்றோ? பொற் கண்ணாடி போன்ற கன்னங்கள், பின்னால் ஒட்டிப்போகுமே யன்றோ? நிமிர்ந்த உடல், கூனிப்போய் வளைந்த வில்லாகி விடுமேயன்றோ? அன்னமென நடக்கும் நடையும், பின்னாளில் இருந்த இருப்பில் இருக்க ஆகிவிடுமன்றோ?

**6. நிரய (நரக) நிலைமை : (83-92)**

குதம்பாய், சினம், பொறாமை, கொடுஞ்சொல், கோளுரை என்பவை பாவத்துக்கு மூலமானவை; கள்ளம் காமம் கொலை வஞ்சம் என்பவை நிரயப்பள்ளத்துள் வீழ்த்துபவை; தீராப் பொருளாசை பேராஇருளாம் நரகத்துச் சேர்க்கும்; நன்மகளிரை மனங்கலங்கச் செய்தல் கொடும்பாவம்; நற்குணத்தோரை இகழ்வதும், தூயமுதல்வனை வழிபடாதிருப்பதும் நிரயத்திற் சேர்ப்பன; முறைகேடாம் வகையில் இறை வழிபாடு செய்வார்க்கு மாபூதியாம் ஏழாம் நிரயம் எய்தும்.

**7. பொய்த்தவ வொழுக்கத்தைப் பழித்தல் : (93-101)**

குதம்பாய், தூய துறவாடை பூண்டு இரந்து தெருவில் திரிவார்க்கு நல்வழியில்லை; துறவுக்கு அடையாளமாம் கோலைக் கையில் கொண்டு வஞ்சம் செய்பவர்க்குப் பொருள் நூல் கல்வி என்ன பயனாம்? வெண்ணீற்றைப் பூசிக்கொண்டு இறைவன் திருவீதியில் நடப்பவர்க்குப் பெண்ணாசை எதற்காகவோ? ஒப்பற்ற இறைவனை உள்பொருளாய்க் கொண்டவர்க்குக்

கையில் கப்பரை எதற்காகவோ? சான்றோர் என்று சொல்லிக் கொண்டு, மெய்ப்பொருள் அறிந்தவர்க்கு மான்தோல் எதற்காகவோ? இறைவன்பால் நாடிய மனத்தவர்க்குத் தாடியும் சடையும் எதற்காகவோ? நாதற்கு உறவாகி நல்ல தவநெறியில் தலைப்பட்டவர்க்குப், பாதக் குறடும் எதற்காகவோ? தவநிலை கண்டு தலைவன்வழி நடப்பார்க்கு மணிமாலை எதற்காகவோ? பிறபூதங்களொடு கூடுவதும் கூடாததும் ஆகிய வெட்ட வெளியைக் கண்டவர்க்கு அரைக்கச்சை எதற்காகவோ?

## 8. நிலையாப் பொருள் : (102-110)

குதம்பாய், முயன்று தேடிய பொருள் முடிவில் கூடவருமோ? உலகமெல்லாம் உன்கைவயம் இருந்தாலும் ஒரு தூசியளவாவது உன்னோடு வருமோ? உற்றாரும் உறவினரும், பெற்றாரும் பிறந்தாரும் ஊராரும் நீ போம் போது துணைக்கு வருவரோ? இறைபணியாம் மெய்ப்பணியைக் கொள்ளாதவர்க்குப் பிற பொய்ப்பணிகள் எதற்காகவோ? விண்ணின் மேல் ஆசை கொள்ளாதவர்க்கு மண்ணின் மேல் ஆசை எதற்காகவோ? யானை - குதிரை - தேர் - காலாள் என்னும் நாற்படைதாமும் நிலையானவையோ? செங்கோல் வேந்தன் செல்வமே எனினும் தங்குவதுண்டோ? கூடமும் - மாடமும் - கோபுரமும் - பெருநகரும் கூடவே வருமோ?

## 9. உடன் வருவன : (111-113)

குதம்பாய், நல்வினையும் தீவினையும் செய்தவரைத் தொடர்ந்து வருதல் உறுதியாம்; செய்யும் தவமும், செய்யும் தீமையும், செய்யும் நன்மையும் உடன்வருவனவாம்; இறைவனை வழிபட்ட வழிபாடும் உடன்வருமாம்.

## 10. ஆசையை ஒழித்தல் : (114-119)

குதம்பாய், ஆசையே பிறவிக்கு வித்து என்று முன்னோர் சொல்லியது உறுதிமொழியேயாம்; ஆசையை அறுத்தலே அரிய துறவாகும்; ஆசை அறுத்தவர்க்கு அளவிலா இன்பமாகும்; ஆசையை அறவே தொலைத்தவரே பெரும் பேற்றாளர்; இன்பங்களில் இச்சை வைப்பார்க்கே இடையறாத் துன்பமாம்; ஆசையை அறவே துறந்தார்க்கே பிறவிகள் இல்லையாம்.

## 11. தவநிலை கூறல் : (120-130)

குதம்பாய், கொல்லாவிரதம் போற்றுதலும் நடுக்கும் பசியைக் களைதலும் நல்ல நோன்பாம்; தவநிலை சாராதவர்

அவநிலை சார்ந்தவராம்; தவத்தைப் போற்றுவார் சிவத்தைக் கைக்கொண்டவராம்; காமனை வெல்வார்க்குக் காலனும் அஞ்சுவான்; ஓகம் கடைப் பிடிப்பவனுக்கு மோகம் என்பது இல்லையாம்; முக்காலமும் உணர்ந்து பற்றற்ற துறவோர்க்குத் தனியழகு உண்டாகும்; ஐம்புலன்களையும் வெற்றிகொண்டவர் இறைவனைக் கண்டடைவர்; பொய்யாம் உடல் நிலையறிந்து மெய்ப் பொருளைப் போற்றுவோர் என்றும் மெய்யராகத் திகழ்வர்; யான் எனது என்னும் இருவகைப் பற்றும் அற்றவர் தெய்வநிலை யுற்றவராம்; அகப்பற்றும் புறப்பற்றும் அறவே தொடரார்க்குப் பிறப்பு என்பது இல்லை. பற்றற்றால் இன்பமும் பற்றுற்றால் துன்பமும் முழுமையாக வரும்.

## 12. அறிவுவிளக்கம் : (131-136)

குதம்பாய், பொய்யறிவு அகற்றி இறைவனை அடைதற்கு மெய்யறிவு வேண்டும்; பிறவியை ஒழித்தற்குப் பேரின்பத்தைக் கருதிய மெய்யறிவு வேண்டும்; தூய்மையே இறைவனாகக் காண்பது மெய்யறிவாகும்; உலகத்தைக் காணும் போதில் அதனைப் படைத்தவன் உண்டென்று கண்டு கொள்ள வேண்டும்; காமம் வெகுளி மயக்கமாகிய முக்குற்றமும் நீக்க முயலும் மெய்யுணர்வே சீரிய மெய்யுணர்வாகும்; மெய்ப்பொருள் ஈதே என்று மெய்யுணர்வு கொள்ளுதலே மெய்யான அறிவாகும்.

## 13. சாதி வேற்றுமை இன்மை : (137-145)

குதம்பாய், ஆண்சாதி பெண்சாதி என்று சொல்வதை அல்லாமல் பிறப்பால் சொல்லப்படும் சாதிகள் எல்லாம் வீண் சாதிகளேயாம்; பார்ப்பாரை மேல் என்றும் பறையரைக்கீழ் என்றும் முடிவாகச் சொல்வது எவ்வறிவின் பாற்பட்டதோ? பார்ப்பாரைப் போலவே பறையரையும் முழுதொப்பாய்ப் படைத்தான் இறைவன்; பற்பல சாதிகளாகப் பகுத்துக் கூறுவ தெல்லாம் கற்பனையேயாம்; கட்டிவிட்ட சாதிப்பேர்கள் எல்லாம் கட்டுமானங்களே யல்லாமல் மெய்ம்மையொடு பொருந்திய வல்லவாம்; இறைவன் முதற்கண் படைக்கும் போது சாதிப்பிரிவு என்பதே இல்லை; சாதிகள் வேறு வேறு என்று பிரித்துப் பார்ப்பவருக்கு ஒளியும் கூட இருளேயாம்; நேர்மை தவறாத நெறியாளன் எவனோ அவனே சாதியில் உயர்ந்தோன்; சாதியும் இல்லை - சமயமும் இல்லை என்பதைக் கல்வியாலும் இயற்கை உணர்வாலும் அறிந்து கொள்வாயாக.

## 14. சமயநிலை கூறல் (146-154)

குதம்பாய், தன்னறிவே தெய்வமென்னும் உலகியற் கொள்கையாளர் அறிவு, புல்லறிவேயாம்; கல்லையும் செம்பையும் கட்டையையும் வணங்குதல் புல்லறிவேயாம்; உலகத்தையும் அதன் இயக்கத்தையும் கண்ணாரக்கண்டும் இறைவன் இல்லை என்பவர் கருத்து இழிந்ததேயாம்; பெண்ணின்பம் பெறுதலே வீடுபெறு என்னும் பாடாண்டியர் அறிவுக்கண் தூர்ந்து போனவரே; செங்கதிரே தெய்வமாகச் சொல்லும் கதிரவச் சமயம் பொருளற்றது; மனமே தெய்வம் என்று கொண்டாடும் கூட்டம் இழிந்த கூட்டமேயாம்; பற்பல சமயங்களைக் கூறும் மறைகள் கற்பனையால் ஆக்கப்பட்டவையே; நிமிர்ந்த குரங்கையும், பெரும்பருந்தையும் வேண்டிக் கொள்வதால் பயனேதும் உண்டாமோ? மெய்யான இறைவன் ஒருவனே என்று கொள்ளாத பற்பல மதங்களும் பொய்யான தேவனையே வணங்குவனவாம்.

## 15. மந்திரநிலை கூறல் : (155-157)

குதம்பாய், மந்திர எழுத்துகளை நாற்பத்து மூன்று கோணத்துள் அடக்கி அதன்மேல் கண்டறிவாயாக. அறு கோணத்துள்ளே ஆறெழுத்து மந்திரத்தை (சரவணபவ) அமைத்து அதனுள்ளின் உள்ளே அறிவாயாக; ஐந்து அறைக்குள் ஐந்தெழுத்து மந்திரத்தை (சிவாயநம) அமைத்து அவ்வண்ணமே உள்ளத்துள்ளேயும் அதனைக் கண்டு அறிவாயாக.

## 16. வளி(வாத)நிலை கூறல் : (158-163)

குதம்பாய், ஆறு ஆறும் நூறும் ஆகிய 136 கார வகைகளும் சேர வலிமிக்க 'முப்பூ' ஆகும்; விந்தும் நாதமும் (ஓசையும் ஒலியும்) விளங்கி அசைந்த பின்வந்தது வளிநிலையாம். நீரைக் கொண்டு உப்பினை நிலைப்படுத்தினால் அது முப்பூ வாகும்; உள்ளக் கருவியால் அறிவதே உண்மை வளிநிலையாம்; பிற வகையால் கொள்ள இயலாதாம்; பிறப்பாலே வளிநிலை ஆவதன்றிப் பின்னை வாழ்வாலே வருவதில்லையாம்; ஐந்து பூதங்களும் விந்து நாதம் என்பனவும் தனித்தனி நீங்கி ஒன்றுபட்டுவிட்டால் உலகம் அழிந்துபோகும்;

## 17. மருத்துவம் கூறல் : (164-169)

குதம்பாய், முப்பிணி எனப்படும் மும்மலங்களையும் அறியாதவர் எப்பிணியும் அறியாதவரே; துய்ப்புவகை (போக)க் கட்டுடையவனின் சுடர் நெருப்பிலே நோய்கள் எவையேனும்

கட்டோடே விட்டொழியும்; நாடிகள் பத்தினையும் நன்றாக அறிந்துகொண்டால் பிணி அகலும்; எழுவகை அடிப் பொருளும் (தாது) அறிந்தவனே நல்ல பண்டுவன்; பத்துவகைக் காற்றுகளையும் அறிந்து கொண்டவனே ஆயுள் அறிந்தவன். ஆயுள் முறைப்படி பண்டுவம் பார்த்தால் நோய் அடியோடு அகலும்.

**18. கற்புநிலை கூறல் : (170-175)**

குதம்பாய், பொன்போலும் முப்பூவை உண்ணு முறையில் உண்டவர் ஊழியளவும் வாழ்வர்; நீறாதல் இல்லாத முப்பூவை விரும்பி உண்டவர் என்றும் அழிவின்றி வாழ்வர்; விந்தினைக் கட்டுப்படுத்தவல்லார், வெந்து அழிதலின்றி வாழ்வார். ஊன உடலம்விட்டு ஒளியுடலம் கொண்டவர் எல்லை இல்லாமல் காலமெல்லாம் வாழ்வர்; தோலுடல் நீக்கித் துலங்கும் ஒளியுடல் கொண்டவர் நஞ்சேனும் அமுதாக உண்ணவல்லவராம்; அழியும் உடலை மாற்றி அழியா மெய்யுடலம் கொண்டவர் கூற்றினையும் வெற்றி கொண்டு என்றும் வாழ்வார்.

**19. திருத்தலங்கூறல் : (176-181)**

குதம்பாய், பலப்பல கோயில்களைத் தேடிக் கும்பிட்டதால் வரும் பயன் ஏதேனும் உண்டோ? மனமாகிய திருக்கோயிலைப் போல் இறைவனுக்கு ஒரு கோயில் உண்டோ? உடலாகிய திருக்கோயிலில் இல்லாத இறைவர் பொய்யான திருக்கோயில் களில் உறைவாரோ? சிற்பவல்லார் கட்டிய கோயிற்குள்ளே, தானே ஆகிய முழுமுதல்வன் தங்குவானோ? தன்னால் படைக்கப் பட்டவன் படைத்த, அழியும் கோயில்களில் ஆண்டவன் உறைவானா? அன்பான அடியார் உள்ளமே ஆண்டவன் உறையும் இன்பமான திருக்கோயிலாம்!

**20. தேவ நிலையறிதல் : (182-190)**

குதம்பாய், உள்ளத்துள் உறையும் இறைவனைக் காணாமல், உலகில் உள்ள கோயில்களுக்கெல்லாம் சென்று அடைவதென்ன? இருக்கும் இடத்தில் இருந்தே காணற்குரிய இறைவனை எங்கெங்கும் தேடித்திரிவதென்னே அறியாமை? காசி என்றும் இராமேச்சுரம் என்றும் புகழ்ந்து சொல்லப்படும் தலங்களைத் தேடிச் சென்றாலும், இறைவனைக் காண இயலுமா? பூவுலகில் இடையீடின்றி நடந்தே திரிந்து தேடினாலும், தேவனைக் காண இயலுமோ? உள்ளங்கால் தேய்ந்து வெள்ளெலும்பு வெளிப்பட நடந்தாலும், வள்ளலாம் இறைவனைக் காணுவையோ?

வைக்கோற்போரிலே போட்ட ஊசியைத் தேடுவது போல்வதாம். உலகப்பொருட் குவியலுள்ளே இறைவனைத் தேடுவது; செயற்கரிய செய்யும் தொண்டின் உறைப்பால் இறைவனை அடையாதவர் எய்துவது, இன்னலேயாம்; உலகத்துயர்களை வெற்றி கொண்டு சிறிதும் விடாமல் இறைவனைச் சிக்கெனப் பற்றிக்கொண்டவரே, அவனைக் கண்டடைவராம்; மூச்சின் இயக்கம் அறிந்து முறையாகச் செலுத்தவல்லவரே, நிலைத்த உள்ளொளி கண்டடைவர்.

## 21. அறியாமை அகற்றல் : (191-246)

குதம்பாய், தீராநோய்க்கு ஆட்பட்டவர்க்கு நாள் என்ன செய்யும்? கோள் என்ன செய்யும்? வினையை அவை அகற்றி விடுமோ? தீட்டிலே உருக்கொண்டு வந்ததே உடல்; அவ் வாறிருக்கப் பின்னும் தீட்டு என்பதற்கு என்ன உண்டு? இறந்த பின்னர் பிணப்பறை கொட்டி எடுத்தால், பிணமானவர்க்கு அது கேட்குமோ? ‘பெற்றோர் செய்வினை பிள்ளைகளுக்கு’ என்பவர் மனத்தெளிவுடையவர் அல்லர்; அவ்வாறே, பிள்ளைகள் செய்யும் நல்வினை பெற்றோர்க்கு ஆகும் என்பதும் அறிவின்மையேயாம்; அவரவர் செய்வினைப் பிணிப்பைத் தீர்க்கப் பிறந்தவர்க்குப் பிறர் எவரே சொந்தமாக இருப்பார்? பார்ப்பனர் செய்யும் சடங்குகளால் எப்பயனும் வரப்போவதில்லை என்பதைத் திட்டமாக எண்ணுவாயாக; பிராமணர்க்குப் பசுவைத் தானமாகத் தந்தால் தந்த அவர்க்கு முத்தி வாய்த்திடுமோ? வேதம் என்று சுட்டிச் சொல்லியதை ஆய்ந்து பார்த்து வீண் என்று தள்ளிவிடுவாயாக; தன் பாவத்தைத் தான் தீர்க்க மாட்டாதவர் பிறர் செய்த கொடும்பாவத்தைத் தீர்த்துவிடுவரோ? வேள்விப் பொருளாக ஆட்டை வெட்டி வேகவைத்து உண்பவர்க்குக் கடைத்தேறும் வழியே இல்லை; வேதம் என்பவையும் புராணம் என்பவையும் சடங்குகள் என்பவையும் விரும்பியவாறு கற்பிக்க வந்தவைகளேயாம்.; வேள்விகள் சடங்குகள் என்பனவெல்லாம் பொருந்தாச் செய்கைகளேயாம்; சகுனம் பார்ப்பதுவும், அந்தி சந்தி தொழுகைகளும் அறிவற்ற செயல்களேயாம்; நல்லநாள் கெட்டநாள் என்று பார்ப்ப தெல்லாம் அறிவறியாத் தன்மையாலேயாம்; மையிட்டுக் காட்டல் என்பது பிறர் அறியாமல் ஏய்க்கும் ஏமாற்று வஞ்சமே யாம்; மாயம் மந்திரம் கண்கட்டு வித்தை என்பனவெல்லாம் தீத்தொழில்களேயாம்; கருவை அழித்து அக்கருவால் தீவினை செய்தால் நல்லவற்றை எல்லாம் அழித்துவிடும்; செய்வினை

செய்து மாந்தரைக் கொல்பவர், அவர்க்கே அழிவைத் தேடிக் கொள்வார்; சோதிடர் சொல்வனவெல்லாம் கொடிய அறியாமை மயக்கத்தால் விளைவனவேயாம்; கண்ணேரில் காணும் முகக்குறி கட்குறிகளைக் காணாமல், பொய்யான குறிகளைக் காண்பது எதற்காகவோ?

நாயைப்போலச் சுற்றித் திரிந்து பிறர் நகைக்க இருப்ப வர்க்குப் பேயாட்டம் ஆடுதல் எதற்காகவோ? மந்திரங்களுக் கெல்லாம் மந்திரமாம் இறைவனை அறியார்க்கு மற்றைத் தந்திரங்களால் ஆவதென்ன? தர்க்கம் என்னும் பொருளில் பொய்யையே புகல்பவர்க்கு அழிவு மிக வருமாம்; வெட்ட வெளியே மெய்யாம் இறைவன் என்று இருப்பவர்க்கு மற்றை விளம்பரப்பாடுகள் எதற்காகவோ? மெய்யுணர்வால் மெய்ப் பொருளை அடையவல்ல அறிவாளர்க்கு உடலை நிலை பெறுத்தும் மருந்துகள் எதற்காகவோ? காணாமலே காணவல்ல திறங் கண்டவர்க்கு மற்றை வீணான ஆசைகள் எதற்காகவோ? வஞ்சமிலா வாய்மை வழிகண்டவர்க்குக் கவலை எதற்காகவோ? இறைமையின் அடியும் முடியும் கண்டவர்க்குப் பின் எதற்காகத் தருக்கம் வேண்டும்? உறங்காமல் உறங்கி உண்மை காண வல்லார்க்கு மற்றையோர் சான்று எதற்காகவோ? பிறரால் காணரிய மெய்யுணர்வுத் திறங்களில் நிலைபெற்றவர்க்கு மற்றவர் களைப் போல முணுமுணுக்கும் மந்திரங்கள் எதற்காகவோ? மெய்யாம் தவநெறியில் தலைப்பட்டவர்க்குப் பொய்யாம் வஞ்சம் எதற்காகவோ? அகக்கண் நோக்கால் சுழிமுனையில் சேர வல்லவர்க்கு மற்றைத் துயரங்கள் உண்டாமோ? முத்தமிழில் தோய்ந்த மெய்யறிவாளர்க்கு மற்றை உரப்பல் கனைத்தல் ஒலிகள் எதற்காகவோ? எட்டாத உயரத்தின் வெளியினைக் கண்டவர்க்கு மற்றை ஆசைகள் எதற்காகாவோ? நெருப்பால் நீறாகாமல் நீறாகிப் பரவெளி கண்டவர்க்குப் பற்றுமை எதற்காகவோ? இறவாமலே இறந்து மேனிலை யடைவார்க்குத் தனித்திருத்தல் எதற்காகவோ? விண்ணுலகில் களித்திருக்கும் வீடு பேற்றாளர்க்குச் சமய நூல்தானும் எதற்காகவோ? இன்பத்தில் மகிழும் இணையற்ற அறிவோடிருப்பவர்க்கு அறிவுநூல் தான் எதற்காகவோ? இறை இயல் திருநடத்தைக் கண்ணேரில் காணவல்லார்க்கு இலையும் பூவும் பழமும் எதற்காகவோ? பருவுடல் நுண்ணுடல் காரணவுடல் என்பவற்றின் உருக்கொண்ட மெய்யுணர்வாளிக்கு அறுகோண எந்திரம் எதற்காகவோ? எட்டுத்திக்கிலும் அசைந்தாடும் இறைவனுக்கு நடுவணை இட்டுவைத்தல் எதற்காகவோ? வீடுணர்ந்த

மெய்யுணர்வாளிக்கு விலக்குகள் எதற்காகவோ? 'அல்லல் என் செய்யும்' என்னும் அறிவுடன் இருப்பவர் ஏறிச் செல்லுதற்குப் பல்லாக்கு எதற்காகவோ? புலனடக்க (இயமம் முதல் எட்டு) ஓகநெறிகளை அறிந்த மெய்யறிவாளனுக்கு மேலுக்கு முட்டாக்கு எதற்காகவோ? அன்றி, ஒன்றோடு ஒன்று மறுதலையாம் தருக்கங்கள் எதற்காகவோ? தன் முனைப்பை அடக்கவல்ல மெய்யுணர் வாளனுக்கு ஓகநெறி எதற்காகவோ? தீக்குணங்களாம் படைகளை யெல்லாம் ஒருங்கே வெற்றி கொண்டு உயர்நிலையில் இருப்பவர்க்குப் பூவிருக்கை (மெல்லிய இருக்கை) எதற்காகவோ? விருப்பு வெறுப்புகளை யடியோடே தொலைத்து உயிரற்ற கட்டை போல் உலவும் மெய்யறி வாளனுக்குக் கையில் தாளக் கருவியும் எதற்காகவோ? பிறர் துயர்கண்டு உருக்கத்தாடு இருப்பவர்க்கு மகிழும் கொண்டாட்டங்கள் எதற்காகவோ? காலனை வெல்லும் வழி தெரிந்தவர்க்குப் புறக்கோலங்கள் எதற்காகவோ? உடற்குறும்பை ஒழித்துச், சினத்தைத் தொலைத்து உடலைச் சுக்காக வாட்டத் திறம் வாய்ந்தோர்க்கு உண்ணுகின்ற நிலைபேற்று மருந்துகள் (காயகற்பம்) எதற்காகவோ? மூலநீரையுண்டு (குண்டலிநீர்) முகட்டில் ஏற்றும் திறவோர்க்கு மற்றைத் தேங்காய்ப்பால் எதற்காகவோ? நீர்ச்சீலை மட்டும் சுற்றிக் கொண்டு பகலிலே திரிபவர்க்கு முக்காடும் எதற்காகவோ? உயிர்கள் மேல் இரக்கம் இல்லை; தன்னலத்தில் தவிர்தல் இல்லை; இவர்க்கு இறைப்பாடல்கள் எதற்காகவோ? தன்னையும் அறிந்து தலைவனையும் அறிந்து அவனை அடைந்தவர்க்கு மேலென்ன ஆசை வேண்டும்? இறைவனும் தானுமாய் இணைந்து விட்டவர்க்கு அதனினும் உயர்ந்தது (அல்லது தருக்கமிடல்) என்ன வேண்டும்? (எதற்காகவோ என்பது வேண்டுவது இல்லை என்னும் பொருட்டது.)

# ௩. நூலாய்வு – பொது.

*குதம்பைச் சித்தர்பாடலில், எதுகையும் மோனையும் கொஞ்சிக் குலவுகின்றன; எளிமையில் இனிமை சொட்டு கின்றது; அரிய பொருள்களும் அவர்தம் சொல்லாட்சியின் எளிமைக்குள் அகப்பட்டுப் பளிச்சிடுகின்றன. குதம்பையை விளித்துச்சொல்லும் மடக்குத் தொடர் மனத்தை ஈர்த்துத் தன்வயமாக்குகின்றது. இசைத்துப் பாடுதற்கு ஏற்ற நிலைக் களத்தை அவரே அருமையாய் அமைத்துக் கொண்டுள்ளார். பின்னேயுள்ள 32 பாடல்களுக்கும் முன்னே உள்ள பாடல் களுக்கும் யாப்பு, சந்த அமைப்புகளில் வேறுபாடு தோன்ற வில்லை. எனினும், முற்பட்ட பாடல்கள், பிற்பட்ட ஒருவரால் பாடிச் சேர்த்திருக்க வேண்டும் என்னும் எண்ணம் உண்டா கின்றது.*

*பின் 32 பாடல்களில் காணப்படும் பொதுமை நோக்கு முற்பகுதிப் பாடல்களில் ஒருசிறிதே விலக்காகின்றது. பிற்பகுதி யில் வாராத சிலசொல் நடைகளும், சொற்களும் முற்பகுதியில் வருகின்றன. முற்பகுதியில் உள்ள இடச்சுட்டு பிற்பகுதியில் இடம் பெறவில்லை. முற்பகுதியில் நூலறிவு முகிழ்ப்பும், பிற்பகுதியில் பட்டறிவு முகிழ்ப்பும் புலப்படுகின்றன. இவற்றால் ஒருவர் பாடியனஅல்ல என எண்ண நேர்கின்றது. ஆனால், பொதுமையில் சித்தர்வாக்கு என்று கொள்ளுதற்குத் தடையே தும் இல்லையாம். இவற்றின் விளக்கத்தை இந்நூலாய்வுப் பகுதியிலும், நூலிலும் கண்டு கொள்க.*

*"செத்துப்பிறக்கின்ற சிறுதெய்வம்" என்பது முன்னவர் ஆட்சி. அது "செத்துப் பிறக்கின்ற தேவைத் துதிப்போர்க்கு முத்திதான் இல்லை" என இந்நூல் சுட்டப்படுகின்றது (3).*

"பற்றற நின்றானைப் பற்றறப் பற்றிடக்
கற்றார்க்கு முத்தி" *என்பது (52)*

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

*என்னும் குறள் வழியதாம்.*

"யானென தென்னும் இருவகைப் பற்றற்றோன்
வானவன் ஆவான்"

*என்பது,*

"யானென தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்"

*என்னும் குறள் வழியதாம்.*

"ஆமைபோல் ஐந்தும் அடக்கித் திரிகின்ற
ஊமைக்கு முத்தி"

*என்பது (54)*

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து"

*என்னும் வள்ளுவ வகையது.*

"இச்சை பிறப்பினை எய்துவிக்கும் என்றது
நிச்சயமாகும்"

*என்பதில் (114) உள்ள 'என்றது' என்பது, திருக்குறளைச் சுட்டியது ஆகலாம்! இஃது அவாவறுத்தலில் பெரிதும் வலியுறுத்தப்படும் செய்தியாம்.*

"அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து"

*என்பதையும்,*

"ஆரா இயற்கை அவா நீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்"

*என்பதையும் கருதுக.*

*இவ்வாறே வள்ளுவர் வாய்மொழிகள் இன்னும் பல சுட்டப்பெறுகின்றன. வள்ளுவர் கூறும் "கூடாவொழுக்கம்" இவர்தம் பொய்த்தவ ஒழுக்கத்தைப் பழித்தலில் ஊடகமாக இயைந்துள்ள தெனலாம்.*

"ஆசையை அறுத்தோர்க்கே ஆனந்தம் உண்டென்ற
ஓசையைக் கேட்டிலையோ?"

*என்பதில் (116) வரும் 'ஓசை' திருமந்திர ஓசை ஆகலாம்.*

"ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈச னோடாயினும் ஆசை அறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்த மாமே"

*என்பது திருமந்திரம்.*

*இதனையே மேலும்,*

"பற்றுறில் துன்பமும் பற்றறின் இன்பமும்
முற்றாக எய்தும்"

*என்பதிலும் (130) கூறுகின்றார்.*

"ஆதியும் அந்தமு மான சோதி" (33)
"அவனசையாவிடில் அணு வசையாது என்றல்" (26)
"கன்றை விடாதுசெல் கற்றாவைப்போல்" (59)
"நாளேது கோளேது" (191)
"ஆரா அமுது" (10)
"மாசற்ற சோதி" (20)
"மாணிக்கக் குன்று" (20)

*என்பன வெல்லாம் தேவார திருவாசகங்களை நினைப்பிப்பனவாம். "அவனசையா விடில் அணுவசையாது என்றல்" என்பதில் உள்ள 'என்றல்' திருவாசகம் சுட்டியதாம்.*

"உற்றார் உறவினர் ஊரார் பிறந்தவர்
பெற்றார் துணையாவரோ?" (105)

"நல்வினை தீவினை நாடிப் புரிந்தோர்பால்
செல்வன நிச்சயமே!" (111)

*என்பவையும் பிறவும் (102, 103) பட்டினத்தார் பாடற் செய்தி என்பது தெளிவு.*

"அத்தமும் வாழ்வும் அகத்துமட் டேவிழி யம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட் டேவிம்மி விம்மியிரு
கைத்தலை மேல்வைத் தழுமைந் தருஞ்சுடு காடுமட்டே
பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே"

என்பது அது. "வீடுவரை உறவு" என்னும் திரைப்படப் பாடல் எவர் செவிகளிலும் விழுந்தது தானே! அது பட்டினத்தார் விற்ற சரக்கு!

இனி இவர் கூறும் மந்திரநிலைகூறல், வளிநிலைகூறல், மருத்துவங்கூறல், கற்பநிலை கூறல் என்பவை திருமூலர் அருளிய திருமந்திரம், திருமந்திரமாலை முந்நூறு என்னும் நூற்செய்தி களாம். ஆதலால் குதம்பைச் சித்தர் பாடல்களில் உள்ள முற்பகுதி 214 பாடல்களையும் பாடியவர் எவரெனினும் அவர் பரந்த அளவில் நூல்களைக் கற்றறிந்தவர் என்பது புலனாம். ஆகலின் அதனைத் தனிப் பகுதியாகவும், மற்றைச் சித்தர் பாடல் தொகுப்பு நூல்களில் உள்ள பாடல்கள் 32ஐயும் தனிப்பகுதி யாகவும் இந்நூலில் பகுக்கப்பட்டுள்ளனவாம்.

**ச. நூலாய்வு – முதல்பகுதி (1–214)**

கண்டத்தை ஆள்கின்ற காவலன் போன்றவன் அண்டத்தை ஆளும் இறைவன் என ஒப்பிடுகிறார் (45). அண்டத்தைக் கண்டு அதனை ஆக்கினோன் உண்டு என்று அறியக் கூறுகிறார் (134) கண்டது கொண்டு காணாத தறியும் ஏதுவணியின் பாற்படும் இது. 'பொன்னாலே செய் ஆடி போன்ற உன் கன்னங்கள்' என்பதில் (79) இல் பொருள் உவமையை இயைக்கிறார். "போத மிதென்று மெய்ப் போதநிலை காணல் போதமதாகும்" என்பதில் (136) சொற்பொருள் பின்வரு நிலையணியை வைத்துளார். "தோற்பையை நீக்கிநற் சோதிப்பை கொண்டவர், மேற்பைநஞ்சு உண்பார்" எனச் சொற் பின்வரு நிலையணியைக் காட்டுகிறார், (174)

இவர் கூறும் உலக இயற்கை "நீரும் நெருப்பும் நெடுங் காற்றும் வானமும் பாருமாய்" "நின்றது, (24)" நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்தும், கலந்த மயக்கம் உலகம்" என்று தொல்காப்பியராலும் (1589) அவர்க்குப் பின்னே வந்த பரி பாடல், திருவாசகம் முதலிய நூலுடையாராலும் சுட்டப்பட்ட செய்தியாம். மனத்தை மந்திக்கு ஒப்பிட்டுக் கூறுவதும் (55) பழகிப்போன செய்தியே.

இவர்தம் சித்த சமய நெறிக்குள் சைவசமயமே தலை தூக்கி நிற்கின்ற தென்னலாம். இறைவனைப் பொதுவாக 'எந்தை' என்றும் 'என்தேவு' என்றும் (13, 15) குறித்தாலும், அவன் ஐந்தொழில் (30) முத்தொழில்களை (49)க் குறித்தாலும், சம்பு, சுயம்பு, தாணு கூத்தன் சிவன் (126, 35, 48, 38, 25) எனத்

தெளிவாக்குகிறார். 'ஏகன்' என (51)ச் சிறப்பாகவும் பொதுவா கவும் பொருள் கொள்ளவும் வைத்துள்ளார்.

இவர் பல்வேறு சமய நிலைகளையும் அறிந்தவர் என்பது சார்வாகம் (146) நம்பா மதம் (148) பாடாண்மதம் (149) கதிரவமதம் (150) வேதமதம் (152) முதலிய பல்வேறு மதங்களைச் சுட்டுவதால் அறியலாம். அவற்றை எல்லாம் மறுப்பதுடன் கல்லினைச் செம்பினைக் கட்டையைக் கும்பிடல் புல்லறிவு என்றும் (147) நீண்ட குரங்கையும், நெடிய பருந்தையும் வேண்டப் பயன் இல்லை என்றும் (153) கூறுகிறார்.

தாடி சடை வைத்தல் (98) காற்குறடு அணிதல் (99) மணிவடம் உருட்டல் (100) அரைக்கச்சை கட்டுதல் (101) ஆகியவற்றைக் கண்டிக்கிறார்.

பார்ப்பார் சடங்கின் பயனின்மை, பசுக்கொடை புரிதலின் பயனின்மை, வேதத்தின் பயனின்மை, வேள்விகளின் கேடு இவற்றையெல்லாம் விளக்குகிறார். தன்பாவம் நீக்காத தன்மையர் மற்றவர் வன்பாவம் நீக்குவரோ என வினாவி நீக்கார் எனச் சுட்டுகிறார். (197-203)

சகுனம் பார்த்தல், நல்லநாள் கெட்டநாள் எனப் பார்த்தல், மையோட்டம் பார்த்தல், மாயவித்தை செய்தல், கருவை அழித்துக் கன்மத்தொழில் புரிதல், செய்வினை செய்தல், சோதிடம் பார்த்தல், குறிகேட்டல், பேயாடல் என்பனவற்றை யெல்லாம் கடுமையாகச் சாடுகின்றார். (204-212)

பெற்றோர் செய்த பாவம் பிள்ளைகளுக்கு வரும் என்றும், பிள்ளைகள் செய்யும் நல்லறம் பெற்றோரைக் கடைத்தேற்றும் என்றும் சில கருதுகோள்கள் உள.அவற்றை ஏற்க மறுக்கும் இவர், "அவரவர் வினை அவரவர்க்கே" என்பதை அழுத்திக் கூறுகிறார்:

"தந்தை தாய் செய்வினை சந்ததிக்காம் என்பார்
சிந்தை தெளிந்திலரே"

"பிள்ளைகள் செய்தன்மம் பெற்றோர்க் குறுமென்றல்
வெள்ளறி வாகும்"

"பந்தவினைக் கீடாய்ப் பாரிற் பிறந்தோர்க்குச்
சொந்தம தில்லை"

என்பவை அவை.

உயிரோடு இருக்கும் போது பெற்றோரைப் பேணாத சிலர், அவர்கள் இறந்தபோது கொட்டு குரவை பாடை பல்லக்கு வேட்டு வேடிக்கை என்று பகட்டாகப் பணம் செலவிடுதல் உண்டு. அத்தகையர் சிறுசெயலை நயமாக விளம்புபவர்போல், "செத்தபின்னே சாப்பறை கொட்டினால் செத்தவர் கேட்பாரோ?" என்கிறார் (193).

விலங்குகளையும் பறவைகளையுமே ஒரு காலத்தில் 'சாதி' என்னும் சொல் குறித்தமை தொல்காப்பியத்தால் விளங்கும். பின்னே சாதிச்சொல் மக்களுக்கு வந்ததுமன்றி, சொல் லொணாக் கேடுகளைப் பல்வகைகளிலும் செய்வதாயிற்று. இன்றும் அதன் கொடுமை முற்றாக ஓய்ந்த பாடில்லை. சித்தர் சமயமோ சாதியற்ற சமயம்! சமயம் எனச் சொல்லப்படும் பவப்பல சமயங்களையும் கடந்த இயற்கைச் சமயம்!

'ஆண்சாதி' என ஒன்று; 'பெண் சாதி' என ஒன்று; இவ்விரு சாதியை யன்றி மற்றவை வீண்சாதி என்கிறார். ஆண்பால் பெண்பால் என்பவற்றை ஆண்சாதி பெண்சாதி என இருவேறு சாதியாகப் பகுத்ததே பெண்ணடிமைக்கும், பெண்ணை விலைப் பண்டம் போலக் கருதுதற்கும் வாய்ப்புத் தந்துவிட்டது என்றால், வீண்சாதிகளின் பேயாட்டத்தைச் சொல்லவேண்டுமா? பழனி மலைப் படிக்கட்டுப் போலல்லவோ சாதிப்படிகள் அமைந்து விட்டன! ஒன்றின் தலையில் ஒன்று ஏறிக்கொண்டு பேயாட்டம் போடுகின்றன!

சித்தர் சொல்கிறார்:

"பார்ப்பார்கள் மேலென்றும் பறையர்கள் கீழென்றும்
தீர்ப்பாகச் சொல்வதென்ன?" (138)

- தீர்ப்பாக - முடிவாக!

"பார்ப்பாரைக் கர்த்தர் பறையரைப் போலவே
தீர்ப்பாய்ப் படைத்தார்"

- தீர்ப்பாய் - முழுமையாய். (139)

இவ்வாறு சுட்டிய சித்தர், சாதிகளின் படைப்பு 'கற்பனை' என்றும், சாதிப்பேர் 'கட்டுச்சொல்' என்றும், 'நீதிமானே சாதிமான்' என்றும் (140, 141, 144) மேலும் தெளிவிக்கிறார்.

'ஊனுடம்பு ஆலயம்' என்று கண்ட மண்ணிலேதான் உடலைப் பழித்துக் கூறுதலையும் ஒரு நோன்பு போலக்

கொண்டவரும் பிறந்தனர். நிலையாமையைச் சுட்டிக்காட்டி நிலைக்கத்தக்க பணி செய்விக்கக் கருதிய மெய்யுணர்வாளர்களின் கொள்கையைப் பொய்யுணர்வு பற்றிக்கொண்டோர் வளமாகப் பழித்தனர். பழித்துக் கூறுவதே பண்பாடு என்றும் கொண்டுவிட்டனர். "பெண்ணிற் பெருந்தக்கது யாது" என்று வினாவினை அறத்துப்பாலிலே எழுப்பி, இன்பத்துப் பாலிலே, "பெண்ணிற் பெருந்தக்கது இல்" என்று விடையிறுத்த வள்ளுவர் வழியை எண்ணாதார்-தம்மைப் பெற்றவரும், தம்மை மணந்தவரும், தமக்குத் துணையாய்ப் பிறந்தவரும், தம் மக்களாய்ப் பிறந்தவரும் பெண்டிரே - அன்பின் வைப்பகம்; அருளின் இருப்பகம் பெண்மையே - என்பவற்றை எள்முனையளவும் எண்ணாராய் மகளிரைப் பழிப்பதே மாப்பெரும் தொண்டாகக் கொண்டு வாய்கிழியப் பழித்துப் போயினர். இவ்வகையில் சித்தர்களும் விதிவிலக்குப் பெற்றார்கள் இல்லைபோலும்!

"நாற்றமிக்க உடலுக்கு நறுமணம் எதற்கோ?
மலஞ்சோரும் உடலுக்கு மணம் எதற்கோ?
நீச்சுக் கவிச்சு நீங்கா உடலுக்குப் பூச்சு எதற்கோ?
பீவாச முள்ள உடலுக்குப் பூவாசம் எதற்கோ?
போராட்டம் செய்து புழுத்த உடலுக்கு நீராட்டம் எதற்கோ?
கோவணத்தோடேகொளுத்தும் உடலுக்குப் பூவணை எதற்கோ?"

எப்படி வினாக்கள்?

இவ் வினாக்களின் பயன் என்ன? ஒன்றே ஒன்று! "மேலை மினுக்குதலே மேன்மை எனக்கருதாதே! மேலான நல்வினைகளிலே ஈடுபடு" என்பதாம்! இன்னும் சொல்லலாம். "புறத்தழகே போற்றி ஒழியாதே; அகத்தழகு தேடு" என்பதாம்.

மலைபோல் மார்பு நடுவாக வந்ததாம்; கண்ணில் இடும் மை கையால் அழைப்பது போல்வதாம்; முல்லைப்பல் சுடுகாட்டில் உதிர்ந்து கிடக்குமாம். கிளிமொழி குழறிவிடுமாம்; தோல் சுருக்கமாகுமாம்; கொள்ளைக்கண் நொள்ளையாகுமாம்; மஞ்சுக் கூந்தல் பஞ்சாகும்; மேனி வில்லாய் வளையுமாம்-இவை மாதரைப் பழித்து மகிழ்வு கொண்ட செய்திகள். "சாதி வேற்றுமை இல்லை; சமயவேற்றுமை இல்லை; உயிர்த்தொண்டே உயர் தொண்டு; புறக்கோலத்தினும் அகக்கோலமே போற்றத்தக்கது" என்னும் கடைப்பிடி உடையவரும் மாதரைப் பழித்துக் கூறுகிறார் என்றால் 'போலித்துறவு' அவரையும் ஆட்டிவைக்கிறது என்பது தானே பொருள்?

*இனி, இவர்தம் சொல்லாட்சிகளைக் கருதலாம்: பெருமை சிறுமைகளை 'அரசன் முதல் ஆண்டிவரை' என்றும், 'தோட்டி முதல் தொண்டைமான் வரை ' என்றும், 'தினைபனை' என்றும் வழங்கும் வழக்கம் உண்டு. அத்தகு வழக்குகளுள் ஒன்றே 'எறும்பு முதல் யானையீறாக' என்பது. இதனை "யானை தலையா எறும்பு கடையா" என்கிறார் இவர். (31)*

*வஞ்ச உருக்கொண்டு மெய்ம்மானாகக் காட்டிப் பொய்ம் மானாகப் போனவன் 'மாரீசன்' என்பது இராமகாதைச் செய்தி. இவர் வஞ்சத்தை 'மாரீசம்' என்கிறார் (94). பெயர், வினையாக மாறுதல் உலகம் தழுவிய வழக்கு. காட்டிக் கொடுத்தலுக்கும், தமிழ் மொழிக்கேடு புரிதலுக்கும் நம் நாட்டில் வழங்கும் பெயர்கள் கற்றவர்கள் அறிந்தனவேயாம்.*

*'பசியைப் பாவி' என்பார் மணிமேகலையார்; மணி மேகலையார் யார்? மணிமேகலை பாடிய சாத்தனாரும் தாம்! 'பசிப்பிணி' என்னும் புறப்பாடல். அதனைத் தீப்பிணி என்னும் திருக்குறள். நடுக்கும் பசியை எவரேனும் 'குளிர்பசி' என்பாரா? குதம்பையார் கூறுகிறார். குளிர்பசி என்று! ஏன்? குளிர்க்கு நடுக்கம் வருதல் இயற்கை தானே! சுற்றிவளைத்து இவ்வாட்சி யை மேற்கொள்கிறார் (120).*

*போகும் சாகும் என்பவற்றை 'போம்' 'சாம்' எனத் தொகுத்துரைக்கிறார். 'போம்போது' சாம்போது 'போங்காலம்' 'சாங்காலம்' என்பவை இவர் ஆட்சி (103, 2).*

*'தூண்டாவிளக்கு', 'தீண்டாவிளக்கு' எனவும், தண்டன் தெண்டன் எனவும், தரணி தாரணி எனவும், துர்க்கந்தம் துற்கந்தம் எனவும், எமன் ஏமன் எனவும் தூசி தூசு எனவும், இவரால் ஆளப்படுகின்றன.*

*சொந்தத்தைத் 'தொந்தம்' எனவும், குறையை 'நொள்ளை' எனவும் இவர் வழங்குதல் நாட்டு வழக்காகும். குந்தியிருத்தல், மேலைமினுக்குதல், கபிச்சி (நாற்றம்) என்பவை நாட்டுப்புற வழக்காகும். வியர்வை வெளிப்பட்டு உப்புப் படிந்து நாறுவதை 'நீச்சுக் கவிச்சி' என்பது நீற்றுக் கவிச்சி என்பதன் கொச்சை யாகும் (64).*

*மொய்ம்பு, பூவணை, கற்றா, செங்காவி ஆகிய அரிய இலக்கிய வழக்குகளையும் கையாண்டுள்ளார்.*

*அகத்தியரால் செய்யப்பட்டதென வழங்கும் 'முப்பு' (158) என்னும் வாகடநூலும், முப்பூ என்னும் மருந்தும் இவரால் சுட்டப்படுகின்றன. இவற்றுள், முப்பூ பல இடங்களில் கூறப்படுகின்றது. (160, 170, 171)*

*எட்டெட்டுங்கட்டுதல் (165) நாடி ஒருபது (166) சத்த வகைத்தாது (167) வாயு ஒருபத்து (168) ஆறாறு காரமும் நூறும் (158) ஐந்து சரக்கு (163) நாற்பத்து முக்கோணம் (155) சட்கோணம் (156) ஐந்தெழுத்து (157) முக்குற்றம் (135) முதலியவை இவரால் சுட்டப்படும் எண்ணாட்சிகளாம்.*

*'லங்கோடு' என்னும் வேற்றுச் சொல்லாட்சியை இவர் ஓரிடத்து மேற்கொண்டுள்ளார் (101). வத்து, கத்தி என்பவை இவரால் 'வஸ்து' 'கஸ்தி' என்றே ஆளப்பெற்றுள. தமிழ் மரபுக்கு ஏற்ப வடவெழுத்தை நீக்கி இவண் பதிப்பிக்கப் பெற்றுள்ளவாம்.*

## இரண்டாம் பகுதி (215 - 246)

*மெய்யுணர்வாளர் மேம்பட்ட தன்மைகள் இப்பகுதியில் மிக அருமையாகச் சொல்லப்பட்டுள்ளன. அவர்கள்,*

'வெட்ட வெளிதன்னை மெய்யென்றிருப்பவர்'
'மெய்ப்பொருள் கண்டு விளங்குமெய்ஞ் ஞானியர்'
'காணாமற் கண்டு கருத்தோடிருப்பவர்'
'வஞ்சக மற்று வழிதனைக் கண்டவர்'
'ஆதார மான அடிமுடி கண்டவர்'
'நித்திரை கெட்டு நினைவோ டிருப்பவர்'
'தந்திரமான தலந்தனில் நிற்பவர்'
'சத்தியமான தவத்தில் இருப்போர்'
'நாட்டத்தைப் பற்றி நடுவணை சேர்வோர்'
'முத்தமிழ் கற்று முயங்குமெய்ஞ் ஞானியர்'
'உச்சிக்கு மேற்சென் றுயர்வெளி கண்டவர்'
'வேகாமல் வெந்து வெளியொளி கண்டவர்'
'சாகாமல் தாண்டித் தனிவழி போவார்'
'அந்தரந் தன்னில் அசைந்தாடும் முத்தர்'

'ஆனந்தம் பொங்கி அறிவோடிருப்போர்'

'சித்திரக் கூத்தைத் தினந்தினங் காண்போர்'

'முக்கோணந் தன்னில் முளைத்தெழுந்த ஞானி'

'அட்டதிக் கெல்லால் அசைந்தாடும் நாதர்'

'முத்திபெற் றுள்ள முயங் குமெய்ஞ் ஞானி'

'அல்லலை நீக்கி அறிவோ டிருப்போர்'

'அட்டாங்க யோகம் அறிந்த மெய்ஞ்ஞானி'

'வேக மடக்கி விளங்குமெய்ஞ் ஞானி'

'மாத்தானை வென்று மலைபோல் இருப்பார்'

'செத்தாரைப் போலே திரியுமெய்ஞ் ஞானி'

'கண்டாரை நோக்கிக் கருத்தோ டிருப்போர்'

'காலனை வென்று கருத்தறிவாளர்'

'வெண்காயமுண்டு மிளகுண்டு சுக்குண்டோர்'

'மாங்காய்ப் பாலுண்டு மலைமேல் இருப்போர்'

'பட்டணஞ் சுற்றிப் பகலே திரிவார்'

'தன்னை யறிந்து தலைவனைச் சேர்ந்தவர்'

'பத்தாவும் தானும் பதியோ டிருப்பார்'

*என்னும் முப்பத்தொரு பாடல்களில் சொல்லப்பட்டுள்ளனர். ஒரே ஒரு பாடலில் மட்டும், பின்னடிச் செய்தி ஒத்தும் முன்னடிச் செய்தி ஒவ்வாதும் வேறுபட்டிருப்பதால் அப்பாடலில், மெய்யுணர்வாளர் தன்மை சொல்லப்படவில்லை. அப்பாடல்,*

"தாவாரம் இல்லை தனக்கொரு வீடில்லை
தேவாரம் ஏதுக்கடி - குதம்பாய்
தேவாரம் ஏதுக்கடி"

*என்பது (244).*

*தாவாரமும் வீடும் இல்லாதவனுக்குத் தேவாரம் வேண்டுவ தில்லை என்பது போல் இப்பாடல் வெளிப்படத் தோன்றுகின்றது. ஆனால், இதன் உட்பொருள் வேறு.*

*'தா' என்பதற்குத் துன்பம் என்பதும், 'வாரம்' என்பதற்குப் பங்கு என்பதும் 'வீடு' என்பதற்கு விடுதலை என்பதும் பொருள்.*

இவற்றைக் கொண்டு இப்பாடற் பொருளைப் பார்த்தால் உண்மை விளங்கும்.

பிற உயிர்கள் படுகின்ற துன்பத்தில் தனக்கென ஒரு பங்கு இல்லை; ஆனால், எல்லாம் 'தனக்குத்' 'தனக்கு' என்ற பேராசையில் இருந்தும் விடுதலையும் இல்லை; இத்தகையவனுக்குத் தெய்வத்திருவருளால் பாடப்பெற்ற தேவாரத்தைச் சொல்லிக் கொண்டிருத்தல் மட்டும் என்ன பயனைச் செய்யும். செக்கு இரைச்சலென, தவளை இரைச்சலெனத் தெய்வப் பாடல்களைப் பாடுவதால் என்னபயன் எய்தும்? பிற உயிர்களுக்கு வந்து துன்பத்தைத் தன் துன்பமாகக் கொண்டு வடிக்கும் அருட் கண்ணீரே இறைவனுக்கு நீராட்டு; தனக்கெனப் பற்றுஇன்றிப் பிறர்க்கு உதவுதலே இறைவனுக்குச் செய்யும் வழிபாடு. இவற்றைக் கடைப்பிடிப்பதே 'சலம்பூவொடு' சார்த்திப்பண்ணோடு இசைத்து வாரம் பாடுதல், இல்லாக்கால் தேவாரப்பாட்டு திருப்பாட்டு அன்று! தெருப்பாட்டுப் பயனும் இல்லதாகப் போய்விடும் என்பதாம்.

தேவாரம் வேண்டும்; அத்தேவாரம் உயிர்களுக்கு இரங்கி உதவுவதாம். தாவாரத்தின் வழியும் - தனக்கெனப் பற்றறுத்த பான்மை வழியும் - விளங்கவேண்டும் என்பது இப்பாடற் கருவாம். இக் கருத்தோடு ஒட்டியதே,

"கண்டாரை நோக்கிக் கருத்தோ டிருப்பவர்க்குக்
கொண்டாட்ட மேதுக்கடி - குதம்பாய்
கொண்டாட்ட மேதுக்கடி"

என்பது,

இதில் 'கண்டாரை நோக்கி' என்பது வெளிப்படப் பார்ப்பின் கண்டவர்களைப் பார்த்து என்றும் கண்ட கண்ட காரிகையரைப் பார்த்து என்றும் பொருள் வரும். ஆனால், அதன் நுண்பொருள், 'கண் + தாரை + நோக்கி' கண்ணினின்று வழியும் அவலக் கண்ணீரை உருக்கத்தோடு பார்த்து என்பதாம். "அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ் ஆர்வலர், புன்கணீர் பூசல் தரும்" என்பதும், "கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேற், புண்ணென் றுணரப் படும்" என்பதும் எண்ணத்தக்கவை.

பிறர் வடிக்கும் கண்ணீரைத் தன் கனிவான உதவியால் துடைப்பதே இறைவனுக்கு நிகழ்த்தும் சிறப்பொடு பூசனை. இவ்வருட்பெருக்காம் கொண்டாட்டத்தையே இறைவன்

வேண்டிக்கிடக்கிறான். அதனை விடுத்துக் கண்டவர்களை வஞ்சகத்தோடு பார்த்துத் தன்னறிவிழந்த செயல்களைச் செய்தலில் ஈடுபடுவான் இறைவனுக்காகக் கொண்டாடுவது எதற்காக? அக்கொண்டாட்டம் இறைவனுக்கு உவகை தருவதாகுமோ? ஒரு போதும் ஆகாது என்பதாம்.

“பட்டணம் சுற்றிப் பகலே திரிவார்க்கு
முட்டாக் கேதுக்கடி - குதம்பாய்
முட்டாக் கேதுக்கடி”

என்பதும் மெய்ப்பொருள் மிக்கதாம்.

பட்டணம் சுற்றல், பகலில் என்ன இரவிலும் திரிதல், இன்னும் பட்டணம் என்ன, நாடு கடந்து நாடு சுற்றித்திரிதல் என்பனவெல்லாம் நாளும் நாளும் காணும் செய்திகளை. இவ்வாறு திரிவார் முட்டாக்குப்போட்டால் என்ன? போடா விட்டால் என்ன? முட்டாக்குப்போடல் வழக்கமாகவும், சமயச் சடங்காகவும் கூட இல்லையா? இவற்றைக் கருதியா குதம்பையார் பாடினார்?

பட்டணம் என்பது பட்டு + அணம் எனப் பிரியும். பட்டு என்பது துணி; அணம் இறுக்கிக் கட்டுவதாம் கோவணம்; ‘குறியிறை’என்பதும் அது! அதனைக் கட்டிக்கொண்டு மற்றும் ஆடையணிப் பற்றற்றுத் திரிய வேண்டிய துறவோர் அடிமுதல் முடிகாறும் முட்டாக்குப் போட்டுக்கொண்டு திரிவது எதற்காக? அவர்களுக்கு மூடுமறைவான வாழ்வு எதற்காக? என்பதாம். முட்டாக்காலும் முட்டும் முட்டுப்பாட்டை முழுத்துறவோர் கொள்ளார் என்பது குதம்பையார் கருத்தாம்.

‘அட்டாங்க யோகம்’ என்பதைக் குறிக்கிறார் குதம்பையார். அது எண்வகைத் தவநிலையாம். ‘அட்டாங்க யோகக் குறள்’ என்பது ஔவையார் இயற்றியதொரு நூல். அட்டாங்கம் என்பவை இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியா காரம், தாரணை, தியானம், சமாதி என்பனவாம். இவற்றை முறையே சால்பு, கடைப்பிடி, இருக்கை, மூச்சியம், உண்ணோக்கு, நினைநிலை, உள்குதல், தன்னையறிதல் எனத் தமிழில் கூறலாம்.

“அட்டாங்க யோகம் அறிந்தமெய்ஞ் ஞானிக்கு
முட்டாங்கம் ஏதுக்கு”

என வினாவுகிறார் குதம்பையார். முட்டாங்கம் என்பது முட்டுப்பாடான வேதாங்கமாம். அட்டாங்கம் அறிந்தவனுக்கு

*மறைநூல்களாம் முட்டாங்கம் வேண்டுவதில்லை என்பதாம். இதன் உட்பொருள் புரிவியல் வல்லானுக்குத் தெரிவியலால் ஆவது என்ன என்பதாம். (புரிவியல்-பிராக்டிகல்; தெரிவியல்-தியெரி)*

*முட்டாங்கம் மட்டுமோ முழுஞானிக்கு வேண்டா என்கிறார்? மந்திர நூல், தந்திர நூல், ஆகியனவும் வேண்டா; இலையும் மலரும் தூவுதலும் தேங்காய் பழம் படைத்து வழிபடலும் வேண்டா; சிவிகையும் ஊர்தியும் முட்டாக்கும் வேண்டா; கொண்டாட்டம் இசைமுழக்கம், வேண்டா; தனித் திருத்தல், விலக்கூண் (பற்றியம்) சாவாவுடல் தேடல் இவை யெல்லாம் வேண்டா என்கிறார்.*

*இவையெல்லாம் வேண்டாவா? என்று வினவுவார்க்கு மறுமொழியாக நூலின் நிறைவில்,*

"பத்தாவும் தானும் பதியோ டிருப்பார்க்கு
உத்தாரம் ஏதுக்கடி - குதம்பாய்
உத்தாரம் ஏதுக்கடி"

*என்பதன் வழியாக விடையிறுக்கிறார். உத்தாரம் என்பது மறுமொழி. பத்தாவாகிய தலைவனும் தானும் ஒன்றாகி இருப்பார்க்கு வினாவென்ன, விடையென்ன! 'சும்மா' இருக்க வேண்டுவது தானே! முற்றுணர்ந்தவர்க்குச் சொல்லியவற்றை மற்றைப்பொது நிலையர்க்கும் சொன்னதாகக் கொள்வதன் விளைவே பலப்பல தருக்கங்களுக்கு இடமாக இருப்பதாம். தன்னையே அறியத் தலைப்படாதவனுக்குப் பத்தாவும் தானும் பதியோடிருப்பவனுக்குச் சொல்லும் இயன்முறை ஏற்றுவருமா? பாலர் பள்ளிக்குள் கால்வைப்பவன், பண்டாரகன் ஆய்வைத் தலைப்பட்டுக் கருத்துக் கூறமுடியுமா?*

*எந்த நடைமுறையாயினும் சரி, ஒரு பாதியை எடுத்துக் கொண்டு மறுபாதியை எண்ணாது இருத்தல் அல்லது அப்புறப் படுத்திப் பார்த்தல் சீர்மையாகாது; செப்பமும் ஆகாது. ஆதலால் முழுதுணர் அறிவனுக்குரிய கடைப்பிடிகள் இவையென்றும், இவற்றைப் படிப்படியே பற்றிப் பிடித்துப் பரமேறவேண்டும் என்றும் கடைப்பிடியாகக் கொள்ளல் வேண்டுவதாம்.*

*குதம்பையர் எதிரும் புதிருமாக அல்லது முரண்தொடை படச்சொல்லுதலில் நனிவிருப்பர் என்பது புலப்படுகின்றது.*

*காணாமற்கண்டு (217). நித்திலைகெட்டு நினைவோடு இருத்தல் (220), வேவாமல் வெந்து வெளியொளி கண்டோர் (226), சாகாமல் தாண்டித் தனிவழி போவோர் (227) என்பவற்றில் இச்சொல்லாட்டைக் காண்க.*

*இறைமையில் ஒன்றிய அடியார் இறைவனைத் தலைவனாகவும், தம்மைத் தலைவியாகவும் கொண்டு அகத்துறைப் பாடல்கள் இயற்றல் பண்டுதொட்டே வரும் வழக்கு. இது தமிழில் கிழத்தி முறையாம். வடமொழியாளர் 'நாயகிபாவம்' என்பர். அந் நிலையில் இறையைத் தலைக்கூடியவர் குதம்பையார்!*

"பத்தாவும் தானும் பதியோடிருப்பார்"

*என்று கூறிய அவர் வாக்கு அதற்குச் சான்று. அவரைத் "தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள் தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே" என்னும் அப்பரடிகள் திருவாக்கோடு ஒப்பிட்டு உவகை கூரலாம்."*

உ

### குமரன் துணை

# குதம்பைச்சித்தர் பாடல்

## முதற்பகுதி

## காப்பு

### வெண்பா.

உலகிலஞ் ஞானம் ஒழிந்திட யார்க்கும்
இலகும் கடவுளை ஏத்தி - நலமார்
குதம்பாய்! மெய்ஞ்ஞானம் கூறுவேன் நன்கு
நிதம்பார்த்து நெஞ்சில் நினை.

### 1. கடவுள் வணக்கம்

பூரணம் கண்டோரிப் பூமியி லேவரக்
காரணம் இல்லையடி குதம்பாய்
காரணம் இல்லையடி. 1

போங்காலம் நீங்கநற் பூரணங்கண் டோர்க்குச்
சாங்காலம் இல்லையடி குதம்பாய்
சாங்காலம் இல்லையடி. 2

செத்துப் பிறக்கின்ற தேவைத் துதிப்போர்க்கு
முத்திதான் இல்லையடி குதம்பாய்
முத்திதான் இல்லையடி. 3

வத்து தரிசனம் மாட்சியாய்க் கண்டோர்க்குக்
கத்திசற் றில்லையடி குதம்பாய்
கத்திசற் றில்லையடி. 4

பற்றற்ற வத்துவைப் பற்றறக் கண்டோர்க்குக்
குற்றங்கள் இல்லையடி குதம்பாய்
குற்றங்கள் இல்லையடி. 5

காட்சி யகாட்சி கடந்த பிரமத்தைச்
சூட்சியாய்ப் பார்ப்பாயடி குதம்பாய்
சூட்சியாய்ப் பார்ப்பாயடி. 6

வெட்டவெளிக்குள் வெறும்பாழாய் நின்றதை
இட்டமாய்ப் பார்ப்பாயடி குதம்பாய்
இட்டமாய்ப் பார்ப்பாயடி. 7

எங்கு நிறைந்தே இருக்கின்ற சோதியை
அங்கத்துள் பார்ப்பாயடி குதம்பை
அங்கத்துள் பார்ப்பாயடி. 8

அண்டத்துக் கப்பால் அகன்ற சுடரினைப்
பிண்டத்துள் பார்ப்பாயடி குதம்பாய்
பிண்டத்துள் பார்ப்பாயடி. 9

ஆவித் துணையாகும் ஆரா அமுதத்தைச்
சேவித்துக் கொள்வாயடி குதம்பாய்
சேவித்துக் கொள்வாயடி. 10

தீண்டா விளக்கினைத் தெய்வக் கொழுந்தினை
மாண்டாலும் போற்றிடுவாய் குதம்பாய்
மாண்டாலும் போற்றிடுவாய். 11

அண்டமும் பிண்டமும் ஆக்கிய தேவனைத்
தெண்டனிட் டேத்தடி குதம்பாய்
தெண்டனிட் டேத்தடி. 12

எந்தை பராபர வத்தின் இணையடி
சிந்தையிற் கொள்வாயடி குதம்பாய்
சிந்தையிற் கொள்வாயடி. 13

விண்ணொளி யாகி விளங்கும் பிரமமே
கண்ணொளி யாகுமடி குதம்பாய்
கண்ணொளி யாகுமடி. 14

பத்திசற் றில்லாத பாமர பாவிக்கு
முத்திசற் றில்லையடி குதம்பாய்
முத்திசற் றில்லையடி. 15

எல்லாப் பொருளுக்கு மேலான என்றேவைச்
சொல்லாமற் சொல்வாயடி குதம்பாய்
சொல்லாமற் சொல்வாயடி. 16

எந்த வுயிர்க்கும் இரைதரும் ஈசனைச்
சந்ததம் வாழ்த்தடி குதம்பாய்
சந்ததம் வாழ்த்தடி. 17

காணக் கிடையாத கற்பாந்த கற்பத்தை
நாணமற் றேத்தடி குதம்பாய்
நாணமற் றேத்தடி. 18

அணுவாய்ப்பல் அண்டமாய் ஆனசிற் சோதியைத்
துணிவாய்நீ போற்றடி குதம்பாய்
துணிவாய் போற்றடி. 19

மாணிக்கக் குன்றிற்கு மாசற்ற சோதிக்குக்
காணிக்கை நன்மனமே குதம்பாய்
காணிக்கை நன்மனமே. 20

## 2. கடவுள் திறங்கூறல்

தேவரும் சித்தரும் தேடு முதலவர்
மூவரும் ஆவாரடி குதம்பாய்
மூவரும் ஆவாரடி 21

சத்தாகிச் சித்தாகிச் தாவர சங்கமாய்
வித்தாகும் வத்துவடி குதம்பாய்
வித்தாகும் வத்துவடி. 22

உருவாய் அருவாய் ஒளியாய் வெளியாய்த்
திருவாகி நின்றதுகாண் குதம்பாய்
திருவாகி நின்றதுகாண். 23

நீரும் நெருப்பும் நெடுங்காற்றும் வானமும்

பாருமாய் நின்றதைக்காண் குதம்பாய்
பாருமாய் நின்றதைக்காண். 24

புவனம் எல்லாம் கணப்போதே அழித்திடச்
சிவனாலே யாகுமடி குதம்பாய்
சிவனாலே யாகுமடி. 25

அவனசை யாமல் அணுவசை யாதென்றல்
புவனத்தில் உண்மையடி குதம்பாய்
புவனத்தில் உண்மையடி. 26

காரணம் சித்தென்றும் காரியம் சத்தென்றும்
ஆரணம் சொல்லுமடி குதம்பாய்
ஆரணம் சொல்லுமடி. 27

காரணம் முன்னென்றும் காரியம் பின்னென்றும்
தாரணி சொல்லுமடி குதம்பாய்
தாரணி சொல்லுமடி. 28

ஆதிசகத்தென் றநாதி மகத்தென்று
மேதினி கூறுமடி குதம்பாய்
மேதினி கூறுமடி. 29

ஐந்து தொழிற்கும் உரியோன் அநாதியை
மந்திரம் போற்றுமடி குதம்பாய்
மந்திரம் போற்றுமடி. 30

யானை தலையாயெறும்புகடை யாய்ப்பல்
சேனையைத் தந்தானடி குதம்பாய்
சேனையைத் தந்தானடி. 31

மண்ணளெ விட்டாலும் வத்துப் பெருமைக்கே
எண்ணள வில்லையடி குதம்பாய்
எண்ணள வில்லையடி. 32

ஆதியும் அந்தமும் ஆன வொருவனே
சோதியாய் நின்றானடி குதம்பாய்
சோதியாய் நின்றானடி. 33

சீவனும் புத்தியுஞ் சித்தமுந் தந்தவன்
தேவன் அவனாமடி குதம்பாய்
தேவன் அவனாமடி. 34

சுத்தம் சுயம்பு சுகுணம் சம்பூரணம்
சத்தியம் உள்ளானடி குதம்பாய்
சத்தியம் உள்ளானடி. 35

எங்கும் வியாபகம் ஈகை விவேகங்கள்
பொங்கமாய் உள்ளானடி குதம்பாய்
பொங்கமாய் உள்ளானடி. 36

தீர்க்க ஆகாயந் தெரியாத தன்மைபோல்
பார்க்கப்படா தானடி குதம்பாய்
பார்க்கப்படா தானடி. 37

ஆத்துமம் தன்னை அரூபமாய் எண்ணினாய்
கூத்தனவ் வாறல்லவோ குதம்பாய்
கூத்தனவ் வாறல்லவோ. 38

அண்டத்தைத் தேவனளிக்க எண்ணும் போதே
அண்டமுண் டாயிற்றடி குதம்பாய்
அண்டமுண் டாயிற்றடி. 39

வான முற்றாக வளர்ந்திடு சின்னங்கள்
தானவர் செய்தாரடி குதம்பாய்
தானவர் செய்தாரடி 40

ஒன்று மிலாவெளிக் குள்ளே பல்லண்டத்தை
நின்றிடச் செய்தானடி குதம்பாய்
நின்றிடச் செய்தானடி. 41

கருவிக ளில்லாமற் காணும் பல்லண்டங்கள்
உருவுறச் செய்தானடி குதம்பாய்
உருவுறச் செய்தானடி. 42

எவ்வுயிர்களும் எந்தவுலகமும்
வல்லானைப் போற்றுமடி குதம்பாய்
வல்லானைப் போற்றுமடி. 43

என்றும் அழியாமை எங்கு நிறைவாகி
நின்றது பிர்மமடி குதம்பாய்
நின்றது பிர்மமடி. 44

கண்டத்தை ஆள்கின்ற காவலர் போற்சோதி
அண்டத்தை ஆள்கின்றதே குதம்பாய்
அண்டத்தை ஆள்கின்றதே. 45

அண்டம்உண் டாகுமுன் னாக அநாதியாய்க்
கண்டது பிர்மமடி குதம்பாய்
கண்டது பிர்மமடி. 46

எந்த வுயிர்கட்கும் எந்த வுலகிற்கும்
அந்தமாய் நின்றானடி குதம்பாய்
அந்தமாய் நின்றானடி. 47

தணிவான புத்தியால் தாணு வறியாதோர்
அணுவேனும் இல்லையடி குதம்பாய்
அணுவேனும் இல்லையடி. 48

மூன்று தொழிலினை மூர்த்தி செய்யாவிடில்
தோன்றா துலகமடி குதம்பாய்
தோன்றா துலகமடி 49

சீரான தேவன் சிறப்பினைச் சொல்லவே
யாராலே ஆகுமடி குதம்பாய்
யாராலே ஆகுமடி. 50

## 3. வீடடையும் வழி

எல்லார்க்கு மேலான ஏகனைப் பற்றிய
வல்லார்க்கு முத்தியடி குதம்பாய்
வல்லார்க்கு முத்தியடி. 51

பற்றற நின்றானைப் பற்றறப் பற்றிடச்
கற்றார்க்கு முத்தியடி குதம்பாய்
கற்றார்க்கு முத்தியடி. 52

பந்தத்தை விட்டொளிர் பந்தத்தைப் பற்றினால்
சந்ததம் முத்தியடி குதம்பாய்
சந்ததம் முத்தியடி. 53

ஆமைபோ லைந்து மடக்கித் திரிகின்ற
ஊமைக்கும் முத்தியடி குதம்பாய்
ஊமைக்கும் முத்தியடி. 54

மந்தி மனத்தை வசப்படுத் திட்டார்க்கு
வந்தெய்தும் முத்தியடி குதம்பாய்
வந்தெய்தும் முத்தியடி. 55

அந்தக் கரணம் அடங்க அடக்கினால்
சொந்தம் பிரமமடி குதம்பாய்
சொந்தம் பிரமமடி. 56

தாய்குச் சரியான தற்பரம் சார்ந்திடில்
வாய்க்கும் பதவியடி குதம்பாய்
வாய்க்கும் பதவியடி. 57

சுத்த பிரமத்தைத் தொந்மென் றொட்டினால்
சித்திக்கும் முத்தியடி குதம்பாய்
சித்திக்கும் முத்தியடி. 58

கன்றை விடாதுசெல் கற்றாவைப்போல் வத்தை
ஒன்றினால் முத்தியடி குதம்பாய்
ஒன்றினால் முத்தியடி. 59

கைக்கனி போலவே காசறு பிர்மத்திற்
சொக்கினால் முத்தியடி குதம்பாய்
சொக்கினால் முத்தியடி. 60

நித்திய வத்துவை நீங்காது நாடினால்
முத்திதான் சித்திக்குமே குதம்பாய்
முத்திதான் சித்திக்குமே. 61

## 4. உடலைப் பழித்தல்

பேசரு நாற்றம் பெருகு முடலுக்கு
வாசனை ஏதுக்கடி குதம்பாய்
வாசனை ஏதுக்கடி. 62

துற்கந்த மாய்மலஞ் சோரு முடலுக்கு
நற்கந்தம் ஏதுக்கடி குதம்பாய்
நற்கந்தம் ஏதுக்கடி. 63

நீச்சுக் கவுச்சது நீங்காத மெய்க்குமஞ்சள்
பூச்சுத்தான் ஏதுக்கடி குதம்பாய்
பூச்சுத்தான் ஏதுக்கடி. 64

சேலை மினுக்கதும் செம்பொன் மினுக்கதும்
மேலை மினுக்காமடி குதம்பாய்
மேலை மினுக்காமடி. 65

பீவாச முள்ளவன் பீற லுடம்புக்குப்
பூவாசம் ஏதுக்கடி குதம்பாய்
பூவாசம் ஏதுக்கடி. 66

போராட்டம் செய்து புழுத்த வுடம்பிற்கு
நீராட்டம் ஏதுக்கடி குதம்பாய்
நீராட்டம் ஏதுக்கடி. 67

சீயும் நிணமும் திரண்ட வுடம்பினை
ஆயுவதேதுக்கடி குதம்பாய்
ஆயுவதேதுக்கடி. 68

காகங் கழுகு களித்துண்ணு மேனிக்கு
வாகனம் ஏதுக்கடி குதம்பாய்
வாகனம் ஏதுக்கடி. 69

கோவணத் தோடே கொளுத்தும் உடலுக்குப்
பூவணை ஏதுக்கடி குதம்பாய்
பூவணை ஏதுக்கடி. 70

## 5. மயக்கம் மாதரைப் பழித்தல்

நெடுவரை போலவே நீண்ட கனதனம்
நடுவாக வந்ததடி குதம்பாய்
நடுவாக வந்ததடி. 71

கையா லழைப்பது போல வுனதுகண்
மையால் அழைப்பதென்னை குதம்பாய்
மையால் அழைப்பதென்னை 72

முதிர்ந்த சுடுகாட்டில் முல்லையை ஒத்தபல்
உதிர்ந்து கிடக்குமடி குதம்பாய்
உதிர்ந்து கிடக்குமடி. 73

கழறுங் கிளிமொழி காலஞ்சென் றாலது
குழறி யழியுமடி குதம்பாய்
குழறி யழியுமடி. 74

வளர்ந்து முறுக்காய் வயதில் எழுந்தனம்
தளர்ந்து விழுந்திடுமே குதம்பாய்
தளர்ந்து விழுந்திடுமே 75

பொருக்கின்றி மேனியிற் பூரித் தெழுந்ததோல்
சுருக்கம் விழுந்திடுமே குதம்பாய்
சுருக்கம் விழுந்திடுமே. 76

கொள்ளைய தாகக் கொழுத்தே எழுந்தகண்
நொள்ளைய தாய்விடுமே குதம்பாய்
நொள்ளைய தாய்விடுமே 77

மஞ்சு போலாகி வளர்ந்திடும் கூந்தலும்
பஞ்சுபோல் ஆகிடுமே குதம்பாய்
பஞ்சுபோல் ஆகிடுமே. 78

பொன்னாலே செய்யாடி போன்ற வுன்கன்னங்கள்
பின்னாலே ஒட்டிவிடும் குதம்பாய்
பின்னாலே ஒட்டிவிடும் 79

நல்லாயுன் அங்கமு நன்கு நிமிர்ந்தாலும்
வில்லாய்ப்பின் கூனிவிடும் குதம்பாய்
வில்லாய்ப்பின் கூனிவிடும். 80

முந்தி நடக்கின்ற மொய்ம்புஞ்சின் னாளையில்
குந்தி யிருக்கச்செயும் குதம்பாய்
குந்தி யிருக்கச்செயும். 81

பிறக்கும்போ துற்ற பெருமையைப் போலவே
இறக்கும்போ தெய்துவிடும் குதம்பாய்
இறக்கும்போ தெய்துவிடும். 82

## 6. நிரய(நரக) நிலைமை

கோபம் பொறாமை கொடுஞ்சொல்வன் கோளிவை
பாபத்துக் கேதுவடி குதம்பாய்
பாபத்துக் கேதுவடி. 83

கள்ளங்கள்காமம் கொலைகள் கபடங்கள்
பள்ளத்தில் தள்ளுமடி குதம்பாய்
பள்ளத்தில் தள்ளுமடி. 84

பொருளாசை உள்ளவிப் பூமியில் உள்ளோருக்
கிருளாம் நரகமடி குதம்பாய்
இருளாம் நரகமடி. 85

கற்புள்ள மாதைக் சலக்க நினைக்கினும்
வற்புள்ள பாவமடி குதம்பாய்
வற்புள்ள பாவமடி. 86

தாழாமல் உத்தமர் தம்மை இகழ்வது
கீழாம் நரகமடி குதம்பாய்
கீழாம் நரகமடி. 87

சுத்த பிரமத்தைத் தோத்திரம் செய்யார்க்கு
நித்த நரகமடி குதம்பாய்
நித்த நரகமடி. 88

எப்பாரும் போற்றும் இறையை நினையார்க்குத்
தப்பா நரகமடி குதம்பாய்
தப்பா நரகமடி. 89

பாழாகப் பூசைகள் பண்ணும் மடையர்க்கே
ஏழாம் நரகமடி குதம்பாய்
ஏழாம் நரகமடி. 90

காயமெடுத் தாதி கர்த்தரை எண்ணார்க்குத்
தீயாம் நரகமடி குதம்பாய்
தீயாம் நரகமடி. 91

அன்போடு நற்பத்தி ஆதிமேல் வையார்க்குத்
துன்பாம் நரகமடி குதம்பாய்
துன்பாம் நரகமடி. 92

## 7. பொய்த்தவ வொழுக்கத்தைப் பழித்தல்

செங்காவி பூண்டு தெருவில் அலைவோர்க்கு
எங்காகும் நல்வழியே குதம்பாய்
எங்காகும் நல்வழியே. 93

மாத்திரைக் கோல்கொண்டு மாரீசஞ் செய்வார்க்குச்
சாத்திரம் ஏதுக்கடி குதம்பாய்
சாத்திரம் ஏதுக்கடி. 94

வெண்ணீறு பூசியே வீதியில் வந்தோர்க்குப்
பெண்ணாசை ஏதுக்கடி குதம்பாய்
பெண்ணாசை ஏதுக்கடி. 95

ஒப்பிலாத் தேவனை உள்ளத்தில் வைத்தோர்க்குக்
கப்பரை ஏதுக்கடி குதம்பாய்
கப்பரை ஏதுக்கடி. 96

சான்றோர் எனச்சொல்லித் தத்துவம் தேர்ந்தோர்க்கு
மான்றோல் ஏதுக்கடி குதம்பாய்
மான்றோல் ஏதுக்கடி. 97

நாடி மனத்தினை நாதன்பால் வைத்தோர்க்குத்
தாடிசடை யேனோ குதம்பாய்
தாடிசடை யேனோ. 98

நாதற் குறவாகி நற்றவம் சார்ந்தோர்க்குப்
பாதக் குறடுமுண்டோ குதம்பாய்
பாதக் குறடுமுண்டோ. 99

தபநிலை கண்டாதி தன்வழிபட்டோர்க்குச்
செபமாலை ஏதுக்கடி குதம்பாய்
செபமாலை ஏதுக்கடி. 100

பங்கொடு பங்கில்லாப் பாழ்வெளி கண்டோர்க்கு
லங்கோ டேதுக்கடி குதம்பாய்
லங்கோ டேதுக்கடி. 101

## 8. நிலையாப் பொருள்

தேடிய செம்பொன்னும் செத்தபோ துன்னோடு
நாடி வருவதுண்டோ குதம்பாய்
நாடி வருவதுண்டோ. 102

போம்போது தேடும் பொருளில் அணுவேனும்
சாம்போது தான்வருமோ குதம்பாய்
சாம்போது தான்வருமோ. 103

காசினி முற்றாயுன் பைவசம் ஆயினும்
தூசேனும் பின்வருமோ குதம்பாய்
தூசேனும் பின்வருமோ. 104

உற்றார் உறவினர் ஊரார் பிறந்தவர்
பெற்றார் துணையாவரோ குதம்பாய்
பெற்றார் துணையாவரோ. 105

மெய்ப்பணி கொள்ளாத மேதினி மாந்தர்க்குப்
பொய்ப்பணி ஏதுக்கடி குதம்பாய்
பொய்ப்பணி ஏதுக்கடி.. 106

விண்ணாசை தன்னை விரும்பாத மக்கட்கு
மண்ணாசை ஏதுக்கடி குதம்பாய்
மண்ணாசை ஏதுக்கடி.. 107

சேனைகள் பூந்தேர் திரண்ட மனுத்திரள்
யானையும் நில்லாதடி குதம்பாய்
யானையும் நில்லாதடி.. 108

செங்கோல் செலுத்திய செல்வமும் ஓர்காலம்
தங்கா தழியுமடி குதம்பாய்
தங்கா தழியுமடி. 109

கூடங்கள் மாடங்கள் கோபுர மாபுரம்
கூடவே வாராதடி குதம்பாய்
கூடவே வாராதடி. 110

## 9. உடன் வருவன

நல்வினை தீவினை நாடிப் புரிந்தோர்பால்
செல்வன நிச்சயமே குதம்பாய்
செல்வன நிச்சயமே. 111

செய்தவம் செய்கொலை செய்தன்மம் தன்னொடும்
எய்த வருவனவே குதம்பாய்
எய்த வருவனவே. 112

முத்தி யளித்திடு மூர்த்தியைப் போற்றிசெய்
பத்தியும் பின்வருமே குதம்பாய்
பத்தியும் பின்வருமே. 113

## 10. ஆசையையொழித்தல்

இச்சை பிறப்பினை எய்விக்கும் என்றது
நிச்சயம் ஆகுமடி குதம்பாய்
நிச்சயம் ஆகுமடி. 114

வல்லமை யாகவே வாஞ்சை ஒழித்திட்டால்
நல்ல துறவாமடி குதம்பாய்
நல்ல துறவாமடி. 115

ஆசை யறுத்தோர்க்கே ஆனந்தம் உண்டென்ற
ஓசையைக் கேட்டிலையோ குதம்பாய்
ஓசையைக் கேட்டிலையோ 116

தேக்கிய ஆசையைச் சீயென் றொறுத்தோரே
பாக்கிய வான்களடி குதம்பாய்
பாக்கிய வான்களடி. 117

இன்பங்கள் எய்திட இச்சையுறுவார்க்குத்
துன்பங்கள் உண்டாமடி குதம்பாய்
துன்பங்கள் உண்டாமடி. 118

துறவிகள் ஆசை துறந்து விடுவரேல்
பிறவிகள் இல்லையடி குதம்பாய்
பிறவிகள் இல்லையடி. 119

## 11. தவநிலைகூறல்

கொல்லா விரதம் குளிர்பசி நீக்குதல்
நல்ல விரதமடி குதம்பாய்
நல்ல விரதமடி. 120

தவநிலை யொன்றனைச் சாராத மாந்தர்கள்
அவநிலை ஆவாரடி குதம்பாய்
அவநிலை ஆவாரடி. 121

தவமதை எந்நாளும் சாதிக்க வல்லார்க்குச்
சிவமது கைவசமே குதம்பாய்
சிவமது கைவசமே. 122

காமனை வென்று கடுந்தவம் செய்வோர்க்கு
ஏமன் பயப்படுவான் குதம்பாய்
ஏமன் பயப்படுவான். 123

யோகந்தான் வேண்டி உறுதிகொள் யோகிக்கு
மோகந்தான் இல்லையடி குதம்பாய்
மோகந்தான் இல்லையடி. 124

காலங்கள் கண்டு கடிந்த துறவோர்க்குக்
கோலங்கள் உண்டாமடி குதம்பாய்
கோலங்கள் உண்டாமடி. 125

ஐம்புலன் வென்றே அனைத்துந் துறந்தோர்கள்
சம்புவைக் காண்பாரடி குதம்பாய்
சம்புவைக் காண்பாரடி. 126

மெய்யை வெறுத்திட்டு மெய்யை விரும்பினோர்
மெய்யவர் ஆவாரடி குதம்பாய்
மெய்யவர் ஆவாரடி. 127

யானென தென்னும் இருவகைப் பற்றற்றோன்
வானவன் ஆவானடி குதம்பாய்
வானவன் ஆவானடி. 128

அகம்புறம் ஆனபற் றற்றமெய்ஞ் ஞானிக்கு
நகுபிறப் பில்லையடி குதம்பாய்
நகுபிறப் பில்லையடி. 129

பற்றுறில் துன்பமும் பற்றறின் இன்பமும்
முற்றாக எய்துமடி குதம்பாய்
முற்றாக எய்துமடி. 130

## 12. அறிவுவிளக்கம்

பொய்ஞ்ஞானம் நீக்கியே பூரணம் சார்தற்கு
மெய்ஞ்ஞானம் வேண்டுமடி குதம்பாய்
மெய்ஞ்ஞானம் வேண்டுமடி. 131

பிறவியை நீக்கிடப் பேரின்பம் நோக்கிய
அறிவு பெரிதாமடி குதம்பாய்
அறிவு பெரிதாமடி. 132

சத்துவ மாகவே சத்துப்பொருள் கண்டால்
தத்துவ ஞானமடி குதம்பாய்
தத்துவ ஞானமடி. 133

அண்டத்தைக் கண்டதை யாக்கினோன் உண்டென்று
கண்ட தறிவாமடி குதம்பாய்
கண்ட தறிவாமடி. 134

முக்குற்றம் நீக்க முயலுமெய்ஞ் ஞானமே
தக்கமெய்ஞ் ஞானமடி குதம்பாய்
தக்கமெய்ஞ் ஞானமடி. 135

போதமி தென்றுமெய்ப் போதநிலை காணல்
போதம தாகுமடி குதம்பாய்
போதம தாகுமடி. 136

## 13. சாதிவேற்றுமை இன்மை

ஆண்சாதி பெண்சாதி யாகு மிருசாதி
வீண்சாதி மற்றவெல்லாம் குதம்பாய்
வீண்சாதி மற்றவெல்லாம். 137

பார்ப்பார்கள் மேலென்றும் பறையர்கள் கீழென்றும்
தீர்ப்பாகச் சொல்வதென்ன குதம்பாய்
தீர்ப்பாகச் சொல்வதென்ன. 138

பார்ப்பாரைக் கர்த்தர் பறையரைப் போலவே
தீர்ப்பாய்ப் படைத்தாரடி குதம்பாய்
தீர்ப்பாய்ப் படைத்தாரடி. 139

பற்பல சாதியாய்ப் பாரிற் பகுத்தது
கற்பனை ஆகுமடி குதம்பாய்
கற்பனை ஆகுமடி. 140

கட்டிடும் சாதிப்பேர் சுட்டுச்சொல் லல்லாமல்
தொட்டிடும் வத்தல்லவே குதம்பாய்
தொட்டிடும் வத்தல்லவே. 141

ஆதி பரப்பிர்மம் ஆக்கும்அக் காலையில்
சாதிகள் இல்லையடி குதம்பாய்
சாதிகள் இல்லையடி. 142

சாதிவே றென்றே தரம்பிரிப் போருக்குச்
சோதிவே றாகுமடி குதம்பாய்
சோதிவே றாகுமடி. 143

நீதிமான் என்றே நெறியாய் இருப்போனே
சாதிமான் ஆவானடி குதம்பாய்
சாதிமான் ஆவானடி. 144

சாதியொன் றில்லை சமயமென் றில்லையென்
றோதியுணர்ந் தறிவாய் குதம்பாய்
ஓதியுணர்ந் தறிவாய். 145

## 14. சமயநிலை கூறல்

தன்புத்தி தெய்வமாய்ச் சாற்றிய சார்வாகம்
புன்புத்தி ஆகுமடி குதம்பாய்
புன்புத்தி ஆகுமடி. 146

கல்லினைச் செம்பினைக் கட்டையைக் கும்பிடல்
புல்லறி வாகுமடி குதம்பாய்
புல்லறி வாகுமடி. 147

அண்டத்தைக் கண்டும் அநாதியி லென்பவர்
கொண்ட கருத்தவமே குதம்பாய்
கொண்ட கருத்தவமே. 148

பெண்ணின்ப முத்தியாய்ப் பேசும் பாடாண்மதம்
கண்ணின்மை யாகுமடி குதம்பாய்
கண்ணின்மை யாகுமடி. 149

சூரியன் தெய்வமாய்ச் சுட்டுஞ் சமயந்தான்
காரியம் அல்லவடி குதம்பாய்
காரியம் அல்லவடி. 150

மனந்தெய்வ மென்று மகிழ்ந்து கொண்டாடிய
இனமதி யீனமடி குதம்பாய்
இனமதி யீனமடி. 151

பற்பல மார்க்கம் பகர்ந்திடும் வேதங்கள்
கற்பனை யாகுமடி குதம்பாய்
கற்பனை யாகுமடி. 152

நீண்ட குரங்கை நெடிய பருந்தினை
வேண்டப் பயன்வருமோ குதம்பாய்
வேண்டப் பயன்வருமோ. 153

மெய்த்தேவன் ஒன்றென்று வேண்டாத பன்மதம்
பொய்த்தேவைப் போற்றுமடி குதம்பாய்
பொய்த்தேவைப் போற்றுமடி. 154

## 15. மந்திரநிலை கூறல்

நாற்பத்து முக்கோணம் நாடும் எழுத்தெலா
மேற்பற்றிக் கண்டறிநீ குதம்பாய்
மேற்பற்றிக் கண்டறிநீ. 155

சட்கோணத் துள்ளந்தச் சண்முக அக்கரம்
உட்கோணத் துள்ளறிநீ குதம்பாய்
உட்கோணத் துள்ளறிநீ. 156

ஐந்தெழுத் தைந்தறைக் கார்ந்திடும் அவ்வாறே
சிந்தையுள் கண்டறிநீ குதம்பாய்
சிந்தையுள் கண்டறிநீ. 157

## 16. வளிநிலை கூறல்

ஆறாறு காரமும் நூறுமே சேர்ந்திடில்
வீறான முப்பாமடி குதம்பாய்
வீறான முப்பாமடி. 158

விந்தொடு நாதம் விளங்கத் துளங்கினால்
வந்தது வாதமடி குதம்பாய்
வந்தது வாதமடி. 159

அப்பினைக் கொண்டந்த வுப்பினைக் கட்டினால்
முப்பூ வாகுமடி குதம்பாய்
முப்பூ வாகுமடி. 160

உள்ளக் கருவியே யுண்மைவாத மன்றிக்
கொள்ளக் கிடையாதடி குதம்பாய்
கொள்ளக் கிடையாதடி. 161

பெண்ணாலே வாதம் பிறப்பதே யல்லாமல்
மண்ணாலே யில்லையடி குதம்பாய்
மண்ணாலே யில்லையடி. 162

ஐந்து சரக்கொடு விந்துநா தம்சேரில்
வெந்திடும் லோகமடி குதம்பாய்
வெந்திடும் லோகமடி. 163

## 17. மருத்துவம் கூறல்

முப்பிணி தன்னை யறியாத மூடர்கள்
எப்பிணி தீர்ப்பாரடி குதம்பாய்
எப்பிணி தீர்ப்பாரடி. 164

எட்டெட்டுங் கட்டி யிருக்குமேற் றீயினில்
விட்டோடும் நோய்களெல்லாம் குதம்பாய்
விட்டோடும் நோய்களெல்லாம். 165

நாடியொருபது நன்கா யறிந்திடில்
ஓடிவிடும் பிணியே குதம்பாய்
ஓடிவிடும் பிணியே. 166

சத்தவகைத் தாது தன்னை யறிந்தவன்
சுத்த வயித்தியனே குதம்பாய்
சுத்த வயித்தியனே. 167

வாயு வொருபத்தும் வாய்த்த நிலைகண்டோன்
ஆயு அறிவானடி குதம்பாய்
ஆயு அறிவானடி 168

ஆயுள் வேதப்படி அவிழ்த முடித்திடில்
மாயும் வியாதியடி குதம்பாய்
மாயும் வியாதியடி. 169

## 18. கற்பநிலை கூறல்

பொற்பாந்த முப்பூவைப் போதம் பொசித்தவர்
கற்பாந்தம் வாழ்வாரடி குதம்பாய்
கற்பாந்தம் வாழ்வாரடி. 170

வேவாத முப்பூவை வேண்டியுண் டார்பாரில்
சாவாமல் வாழ்வாரடி குதம்பாய்
சாவாமல் வாழ்வாரடி. 171

விந்து விடார்களே வெய்ய சுடலையில்
வெந்து விடார்களடி குதம்பாய்
வெந்து விடார்களடி. 172

தொல்லைச் சடம்விட்டுச் சுட்ட சடங்கொண்டோர்
எல்லையில் வாழ்வாரடி குதம்பாய்
எல்லையில் வாழ்வாரடி. 173

தோற்பையை நீக்கிநற் சோதிப்பை கொண்டவர்
மேற்பைநஞ் சுண்பாரடி குதம்பாய்
மேற்பைநஞ் சுண்பாரடி. 174

மாற்றினை யேற்ற வயங்குமெய் யோர்களே
கூற்றிணை வெல்வாரடி குதம்பாய்
கூற்றிணை வெல்வாரடி. 175

## 19. திருத்தலங் கூறல்

கோயில் பலதேடிக் கும்பிட்ட தாலுனக்
கேயும் பலன்வருமோ குதம்பாய்
ஏயும் பலன்வருமோ. 176

சித்தத் தலம்போலத் தெய்வம் இருக்கின்ற
சுத்தத் தலங்களுண்டோ குதம்பாய்
சுத்தத் தலங்களுண்டோ. 177

மெய்த்தலத் தில்லாத மெய்ப்பொரு ளானவர்
பொய்த்தலத் தெய்வதுண்டோ குதம்பாய்
பொய்த்தலத் தெய்வதுண்டோ. 178

சிற்பர்கள் கட்டும் திருக்கோயில் உள்ளாகத்
தற்பரம் வாழ்வதுண்டோ குதம்பாய்
தற்பரம் வாழ்வதுண்டோ. 179

தன்னா லுண்டாஞ்சிட்டி தன்னாலே சிட்டித்த
புன்கோயி லுள்ளவன்யார் குதம்பாய்
புன்கோயி லுள்ளவன்யார். 180

அன்பான பத்தர் அகக்கோயில் கர்த்தற்கே
இன்பான கோயிலடி குதம்பாய்
இன்பான கோயிலடி. 181

## 20. தேவநிலை யறிதல்

தன்னுள் விளங்கிய சம்புவைக் காணாது
மன்னுந்தலத் தெய்வதென் குதம்பாய்
மன்னுந்தலத் தெய்வதென். 182

இருந்த இடத்தில்இருந்தே அறியாமல்
வருந்தித் திரிவதென்னோ குதம்பாய்
வருந்தித் திரிவதென்னோ. 183

காசி ராமேச்சுரங் கால்நோவச் சென்றாலும்
ஈசனைக் காணுவையோ குதம்பாய்
ஈசனைக் காணுவையோ. 184

பூவதில் நாளும் பொருந்தித் திரியினும்
தேவனைக் காணுவையோ குதம்பாய்
தேவனைக் காணுவையோ. 185

உள்ளங்கால் வெள்ளெலும் பாக வுலாவினும்
வள்ளலைக் காணுவையோ குதம்பாய்
வள்ளலைக் காணுவையோ. 186

போரினி லூசி பொறுக்கத் துணிதல் போல்
ஆரியற் றேடுதலே குதம்பாய்
ஆரியற் றேடுதலே. 187

சாதனை யாலே தனிப்பதஞ் சேரார்க்கு
வேதனை யாகுமடி குதம்பாய்
வேதனை யாகுமடி. 188

வேதனை நீங்கி விடாது தொடர்ந்தோரே
நாதனைக் காணுவர்காண் குதம்பாய்
நாதனைக் காணுவர்காண். 189

நாடிவழக்கம் அறிந்து செறிந்தவர்
நீடொளி காணுவரே குதம்பாய்
நீடொளி காணுவரே. 190

## 21. அறியாமை அகற்றல்

மீளா வியாதியில் மேன்மேலும் நொந்தார்க்கு
நாளேது கோளேதடி குதம்பாய்
நாளேது கோளேதடி. 191

தீட்டால் உடம்பு திறங்கொண் டிருக்கையில்
தீட்டென்று சொல்வதென்னை குதம்பாய்
தீட்டென்று சொல்வதென்னை. 192

செத்தபின் சாப்பறை செத்தார்க்குச் சேவித்தால்
சத்தமறி யாரடி குதம்பாய்
சத்தமறி யாரடி. 193

தந்தைதாய் செய்வினை சந்ததிக்காம் என்பார்
சிந்தை தெளிந்திலரே குதம்பாய்
சிந்தை தெளிந்திலரே. 194

பிள்ளைகள் செய்தன்மம் பெற்றோர்க் குறுமென்றல்
வெள்ளறி வாகுமடி குதம்பாய்
வெள்ளறி வாகுமடி. 195

பந்தவினைக் கீடாய்ப் பாரிற் பிறந்தோர்க்குச்
சொந்தம தில்லையடி குதம்பாய்
சொந்தம தில்லையடி. 196

பார்ப்பார் சடங்கு பலனின்று பாரிலே
தீர்ப்பாக எண்ணிடுவாய் குதம்பாய்
தீர்ப்பாக எண்ணிடுவாய். 197

அந்தணர்க் காவை யளித்தோர்க ளாவிக்குச்
சொந்தமோ முத்தியடி குதம்பாய்
சொந்தமோ முத்தியடி. 198

வேதியர் கட்டிய வீணான வேதத்தைச்
சோதித்துத் தள்ளடி குதம்பாய்
சோதித்துத் தள்ளடி. 199

தன்பாவம் நீக்காத தன்மையர் மற்றவர்
வன்பாவம் நீக்குவரோ குதம்பாய்
வன்பாவம் நீக்குவரோ. 200

வேள்வியில் ஆட்டினை வேவச்செய் துண்போர்க்கு
மீள்வழி இல்லையடி குதம்பாய்
மீள்வழி இல்லையடி. 201

வேதம் புராணம் விளங்கிய சாத்திரம்
போதனை ஆகுமடி குதம்பாய்
போதனை ஆகுமடி. 202

யாகாதி கன்மங்கள் யாவுஞ் சடங்குகள்
ஆகாத செய்கையடி குதம்பாய்
ஆகாத செய்கையடி. 203

சாற்றும் சகுனங்கள் சந்தியா வந்தனம்
போற்றும் அறிவீனமே குதம்பாய்
போற்றும் அறிவீனமே. 204

ஆனதோர் நாளென்றல் ஆகாத நாளென்றல்
ஞானமில் லாமையடி குதம்பாய்
ஞானமில் லாமையடி. 205

அஞ்சனம் என்ற தறியாமல் ஏய்க்குதல்
வஞ்சனை ஆகுமடி குதம்பாய்
வஞ்சனை ஆகுமடி. 206

மாயவித் தைபல மாநிலத்திற் செய்கை
தீய தொழிலாமடி குதம்பாய்
தீய தொழிலாமடி. 207

கருவை அழித்துக் கன்மத்தொழில் செய்குதல்
திருவை அழிக்குமடி குதம்பாய்
திருவை அழிக்குமடி. 208

மாரணம் செய்துபல் மாந்தரைக் கொல்வது
சூரணம் ஆக்குமடி குதம்பாய்
சூரணம் ஆக்குமடி. 209

பொய்யான சோதிடர் பொய்மொழி யாவுமே
வெய்ய மயக்கமடி குதம்பாய்
வெய்ய மயக்கமடி. 210

மெய்க்குறி கண்டு விளங்க அறியார்க்குப்
பொய்க்குறி ஏதுக்கடி குதம்பாய்
பொய்க்குறி ஏதுக்கடி. 211

நாயாட்ட மாடி நகைத்துழல் மூடர்க்குப்
பேயாட்டம் ஏதுக்கடி குதம்பாய்
பேயாட்டம் ஏதுக்கடி. 212

மந்திர மூலம் வகுத்தறியா தார்க்குத்
தந்திரம் ஏதுக்கடி குதம்பாய்
தந்திரம் ஏதுக்கடி. 213

வாதமென் றேபொய்யை வாயிற் புடைப்போர்க்குச்
சேத மிகவருமே குதம்பாய்
சேத மிகவருமே. 214

## குதம்பைச்சித்தர் பாடல் இரண்டாம் பகுதி

வெட்டவெளி தன்னை மெய்யென் றிருப்பாக்குப்
பட்டயம் ஏதுக்கடி குதம்பாய்
பட்டயம் ஏதுக்கடி. 215

மெய்ப்பொருள் கண்டு விளங்குமெய்ஞ் ஞானிக்குச்
கற்பங்கள் ஏதுக்கடி குதம்பாய்
கற்பங்கள் ஏதுக்கடி. 216

காணாமல் கண்டு கருத்தோ டிருப்பார்க்கு
வீணாசை ஏதுக்கடி குதம்பாய்
வீணாசை ஏதுக்கடி. 217

வஞ்சக மற்று வழிதனைக் கண்டோர்க்குச்
சஞ்சலம் ஏதுக்கடி குதம்பாய்
சஞ்சலம் ஏதுக்கடி. 218

ஆதார மான அடிமுடி கண்டோர்க்கு
வாதாட்டம் ஏதுக்கடி குதம்பாய்
வாதாட்டம் ஏதுக்கடி. 219

நித்திரை கெட்டு நினைவோ டிருப்பார்க்கு
முத்திரை ஏதுக்கடி குதம்பாய்
முத்திரை ஏதுக்கடி. 220

தந்திர மான கலந்தனில் நிற்போர்க்கு
மந்திரம் ஏதுக்கடி குதம்பாய்
மந்திரம் ஏதுக்கடி. 221

சத்திய மான தவத்தில் இருப்போருக்
குத்தியம் ஏதுக்கடி குதம்பாய்
குத்தியம் ஏதுக்கடி. 222

நாட்டத்தைப் பற்றி நடுவணை சேர்வோர்க்கு
வாட்டங்கள் ஏதுக்கடி குதம்பாய்
வாட்டங்கள் ஏதுக்கடி. 223

முத்தமிழ் கற்று முயங்குமெய்ஞ் ஞானிக்குச்
சத்தங்கள் ஏதுக்கடி குதம்பாய்
சத்தங்கள் ஏதுக்கடி. 224

உச்சிக்கு மேற்சென் றுயர்வெளி கண்டோருக்கு
இச்சிப்பிங் கேதுக்கடி குதம்பாய்
இச்சிப்பிங் கேதுக்கடி. 225

வேகாமல் வெந்து வெளியொளி கண்டோர்க்கு
மோகந்தான் ஏதுக்கடி குதம்பாய்
மோகந்தான் ஏதுக்கடி. 226

சாகாமல் தாண்டித் தனிவழி போவார்க்கே
ஏகாந்தம் ஏதுக்கடி குதம்பாய்
ஏகாந்தம் ஏதுக்கடி. 227

அந்தரம் தன்னில் அசைந்தாடும் முத்தர்க்குத்
தந்திரம் ஏதுக்கடி குதம்பாய்
தந்திரம் ஏதுக்கடி. 228

ஆனந்தம் பொங்கி அறிவோ டிருப்பார்க்கு
ஞானந்தான் ஏதுக்கடி குதம்பாய்
ஞானந்தான் ஏதுக்கடி. 229

சித்திரக் கூத்தைத் தினந்தினங் காண்போர்க்கு
பத்திரம் ஏதுக்கடி குதம்பாய்
பத்திரம் ஏதுக்கடி. 230

முக்கோணம் தன்னில் முளைத்தமெய்ஞ் ஞானிக்குச்
சட்கோணம் ஏதுக்கடி குதம்பாய்
சட்கோணம் ஏதுக்கடி. 231

அட்டதிக் கெல்லாம் அசைந்தாடும் நாதர்க்கு
நட்டணை ஏதுக்கடி குதம்பாய்
நட்டணை ஏதுக்கடி. 232

முத்திப்பெற் றுள்ள முயங்குமெய்ஞ் ஞானிக்குப்
பத்தியம் ஏதுக்கடி குதம்பாய்
பத்தியம் ஏதுக்கடி. 233

அல்லலை நீக்கி அறிவோ டிருப்பார்க்குப்
பல்லாக் கேதுக்கடி குதம்பாய்
பல்லாக் கேதுக்கடி. 234

அட்டாங்க யோக மறிந்தமெய்ஞ் ஞானிக்கு
முட்டாங்கம் ஏதுக்கடி குதம்பாய்
முட்டாங்கம் ஏதுக்கடி. 235

வேக மடக்கி விளங்குமெய் ஞானிக்கே
யோகந்தான் ஏதுக்கடி குதம்பாய்
யோகந்தான் ஏதுக்கடி. 236

மாத்தானை வென்று மலைமே லிருப்பார்க்குப்
பூத்தானம் ஏதுக்கடி குதம்பாய்
பூத்தானம் ஏதுக்கடி. 237

செத்தாரைப் போலே திரியுமெய்ஞ் ஞானிக்குக்
கைத்தாளம் ஏதுக்கடி குதம்பாய்
கைத்தாளம் ஏதுக்கடி. 238

கண்டாரை நோக்கிக் கருத்தோ டிருப்பார்க்குக்
கொண்டாட்டம் ஏதுக்கடி குதம்பாய்
கொண்டாட்டம் ஏதுக்கடி. 239

காலனை வென்று கருத்தறி வாளர்க்குக்
கோலங்கள் ஏதுக்கடி குதம்பாய்
கோலங்கள் ஏதுக்கடி. 240

வெண்காய முண்டு மிளகுண்டு சுக்குண்டோர்க்
குண்காயம் ஏதுக்கடி குதம்பாய்
உண்காயம் ஏதுக்கடி. 241

மாங்காய்ப்பா லுண்டு மலைமே லிருப்பார்க்குத்
தேங்காய்ப்பா லேதுக்கடி குதம்பாய்
தேங்காய்ப்பா லேதுக்கடி. 242

பட்டணஞ் சுற்றிப் பகலே திரிவார்க்கு
முட்டாக் கேதுக்கடி குதம்பாய்
முட்டாக் கேதுக்கடி. 243

தாவார மில்லை தனக்கொரு வீடில்லை
தேவாரம் ஏதுக்கடி குதம்பாய்
தேவாரம் ஏதுக்கடி. 244

தன்னை யறிந்து தலைவனைச் சேர்ந்தோர்க்குப்
பின்னாசை ஏதுக்கடி குதம்பாய்
பின்னாசை ஏதுக்கடி. 245

பத்தாவுந் தானும் பதியோ டிருப்பாருக்கு
உத்தாரம் ஏதுக்கடி குதம்பாய்
உத்தாரம் ஏதுக்கடி. 246

**குதம்பைச் சித்தர் பாடல் முற்றிற்று.**

# சிவஞானபோதம்

# உரையாசிரியன் முன்னுரை

**'சிவஞான போதம்'** மெய்கண்டார் அருளிய மெய்யுணர்வு நூல். அதன் மெய்யுணர்வுக் கொள்கைகள் எச்சமயத்தாரும் இனிதின் ஏற்கத் தக்க பொது நோக்குடையவை. அவற்றை ஓரளவே தமிழ்ப் பயிற்சியுடையாரும், சமயப் பயிற்சியில் புதுவாகத் தலைப்படுவாரும் எளிமையாக அறிதல் வேண்டும். இதற்குத் தக, **'உளிய-தெளிய-உரை'** யொன்று வேண்டும் என்னும் வேட்கை என்னுள் பல்கால் எழுந்தது. அவ்வேட்கையை நிறைவேற்றும் வாய்ப்பைத் திருவருள் ஒரு வகையால் கூட்டுவித்தது.

மதுரைத் திருநகர் சார்ந்த பாண்டியன் நகரில் அருள்மிகு **கலியாண விநாயகர்** திருக்கோயில் உள்ளது. அக்கோயிலில் சிவஞான போதத்தைப் பற்றிப் பதினைந்து பொழிவுகள் செய்தற்கு இசைந்து நடாத்தினேன். முதற் பொழிவு இறையருள்; இரண்டாம் பொழிவு மெய்ப்பொருள்; மூன்றாம் பொழிவு மெய்கண்டார்; எஞ்சிய பன்னிரு பொழிவுகளும் சிவஞான போதப் பன்னிரு நூற்பாக்களுக்கும் உரை விளக்கம் புரிதல் என்பதே. இதுவே பொழிவுத் திட்டமாம்.

போதப் பொழிவு கேள்வியரைக் கவர்ந்தது போலும்! இளையரும், முதியரும், ஆடவரும் பெண்டிருமாக ஆர்வத்தால் வந்து கேட்க வைத்தது. நாடித் தேடிவந்து ஒரு பொழிவைக் கூடத் தவறாமல் நயந்து கேட்குமாறும் வைத்தது. ஆதலால், அப் பொழிவுப் போக்கிலேயே போதத்திற்கு எளியதும் தெளிவானதுமாய உரையொன்று எழுதிவிடுதல் தகவாம் என உட்கொண்டேன்! என் பொழிவையும் பொழிவுப் பொருளையும் அதன் பயனீட்டையும் நன்கனம் அறிந்தனர் கழக ஆட்சியாளர் **திருமிகு இரா. முத்துக்குமாரசாமி** எம். ஏ., பி. லிப்., அவர்கள். அதற்கு எழுத்துருத் தந்துவிடின் நூலுருப்படுத்தலாம் என நுவன்றனர். அந்நுவற்சிப் பயனே சிவஞான போதத் தெளிவுரை விளக்கமாக இப்போது வெளிப்படுகின்றதாம். ஆதலின், பாண்டியன் நகர் பிள்ளையார் திருக்கோயில் ஆட்சிக் குழுவினர்க்கும், ஆர்வத்தால் பொழிவைக் கேட்டு மகிழ்ந்து

பாராட்டிய பெருமக்களுக்கும், நூலுருத் தந்து வெளிப்படுத்திய கழக ஆட்சியாளர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியுடையேன்.

இந்நூல் சிவஞான போதப் '**பாலபாட**' நூலே எனல் தகும். இதனைக் கற்பார் இதன் அடித்தளத்தில் இருந்து பிறர் பிறர் வரைந்த உரை விளக்கங்களையும், சிற்றுரை பேருரை முதலியவற்றையும் கற்றல் சிறக்கும் எனப் பரிந்துரைத்தலைக் கடனாகக் கொள்கின்றேன். எளியேனைக் கொண்டு இவ்வுரைப் பணியை நடாத்தும் தண்ணார் தமிழன்னையின் திருவருள் மேம்பாட்டை நினைத்து நெஞ்சாரப் போற்றுகின்றேன்.

தமிழ்த் தொண்டன்
**இரா. இளங்குமரன்**

பாவாணர் ஆராய்ச்சி நூலகம்,
தமிழ்ச்செல்வம்,
திருநகர், மதுரை - 6.

27-4-'94

# மெய்கண்டார்

*நடு நாட்டைச் சார்ந்தோர் நல்லூர்* ***திருப்பெண்ணா கடம்;*** *அப்பெண்ணாகடத்து வாழ்ந்த சைவப் பெருமகனார்* ***அச்சுதகளப்பாளர்.*** *அவர் நெடுங்காலம் மகப்பேறின்றி யிருந்தார். பின்னர்த் திருவெண்காட்டு இறைவர் திருவருளால் நன்மகப்பேறு வாய்த்தார்; அம்மகவுக்குத்* **'திருவெண் காடர்'** *என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார்.*

*திருவெண்காடர் சீறிளமைப் பருவத்திலேயே* **திருவெண்ணெய் நல்லூரில்** *இருந்த தம் மாமனாரிடத்து வளர்ந்து வந்தார். அப்பொழுது, நந்தியருள் பெற்ற நாதராம் பரஞ்சோதியார் திருவருள் கடைக் கூட்டப் பெற்றார். வெண்ணெய் நல்லூர்ப் பொல்லாப் பிள்ளையார் திருவருளும் வாய்க்கப் பெற்றார். அவர் தம் மெய்ப்பொருள் உணர்வு மேதக்க சிவநெறிச் செல்வர்களையும் ஆசிரியன்மார்களையும் வயப் படுத்தி ஆட்கொண்டது. அந்நிலையில், 'வெண்காடர்', திருப்பெயர் மெய்கண்டாராகத் திகழ்ந்தது! பொல்லாப் பிள்ளையார் அருளால்* ***'சிவஞான போதம்'*** *அருளினார் மெய்கண்டார். இவர்தம் தலைமை மாணவர் திருத்துறையூர்* ***அருணந்தி சிவனார்.*** *இவர் காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டு.*

*தாயுமானவப் பெருந்தகை,*

"பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித
மெய்கண்ட நாதனருள் மேவுநாள் எந்நாளோ?"

*என வேட்கை விளம்புவார்.*

# தெளிபொருள் விளக்கம்

## மங்கல வாழ்த்து

*திருவெண்ணெய் நல்லூரில் கோயில்கொண்ட பிள்ளை யார் பேரருள் பெற்றவர் மெய்கண்டார். ஆதலால் தாம் கண்டடைந்த சிவஞான போதச் செம்பொருளை ஓதத் தொடங்குங்கால், அப் பிள்ளையாரை வணங்கி வாழ்த்தினார்.*

*பிள்ளையார் உளியால் பொளியப்படாத தன்னிலையுருவர். (சுயம்புமூர்த்தி), ஆதலால், பொல்லப்படாத (பொளியப்படாத- செதுக்கப்படாத) அவர் பொல்லாப் பிள்ளையார் எனப் பட்டார். (பொல்லுதல் = பொள்ளுதல்)*

*பிள்ளையார், 'கல் ஆல் நிழல் மலவு இல்லார் அருளிய பிள்ளையார்' எனச் சொல்லப்பட்டார். தந்தை தகவு மைந்தர் தகவென உலகம் ஓதுதல் உண்மையால். 'கல் ஆல்' என்பது ஆலமரத்தின் வகையுள் ஒன்று. கல் என்பது அதன் வலிமை சுட்டியது. கல்அத்தி, கல்வாழை, கல்தாழை போல ஒருவகை என்க. கல்லால மரத்தின் நீழலில் இருந்து அறமுரைக்கும் 'மலைவு இல்லார்' என்று செம்பொருட் சிவத்தைக் குறித்தார். மலையை வில்லாக உடையவர் என்று பொருள் கொள்ளவும் இத்தொடர் கிடக்குமாயினும், மலைவு இல்லார் என்று பிரித்து 'மயங்குதல் எள்ளளவும் சேர்தல் இல்லாத முழுமுதல்' என்பதே தகுமாம். மயக்கம் நீக்குதல் நோக்கிலே அருளப்பட்ட நூல் இந்நூல் ஆகலின் அதற்கு ஏற்ப உரைத்தார் எனல் தகும். பற்றறுதல் வேண்டுவார் பற்றற்றானைப் பற்றுதல் நெறியாதல் போல, மயக்கம் நீங்க வேண்டுவார் மயங்குதல் சேராத இறைவனை நினைந்தொழுகுதல் நெறியாம். இனித் தன்னை யுணர்ந்த தகவாளர் மயக்கத்தை இல்லையாகச் செய்பவர் என்பதுமாம். அவர் தகவு கூறவே, பிள்ளையார் தகவு அறிய வருமாகலின் அவர்க்கு உரைத்தார்.*

**பொல்லார் இணைமலர் நல்லார் புனைவர்**

*பொல்லார்-பொல்லாப் பிள்ளையார்; பெயர்; அவர்தம் இணைமலர், இரண்டாகிய திருவடி மலர்கள். புனைதற் குரியவை மலர்கள். ஆதலால், 'நல்லார் புனைவர்' என்றார். அடிமலரைப் புனைதல் எவ்விடத்தோ என்பது புனைதலால் விளக்கினார். சூடுதல், வேய்தல், புனைதல் என்பவை தலைக் கணிதலைச் சுட்டுவன ஆகலின், ஆத்திசூடி கொன்றைவேந்தன் போலப் புனைதல் நின்றதாம். புனைவார் எவர் என்பதை விளக்குமுகத்தான் 'நல்லார்' என்றார், திருவருளால் நற்பேறு வாய்த்தார்க்கே அது கூடும் என்பது மெய்யுணர்வாளர் உரையாகலின்.*

"கல்லால் நிழல்மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே"

*என்பது கடவுள் வாழ்த்து.*

*சுருக்கமும் செறிவும் அமைய இயற்றப்போகும் நூற்கு, அதன் யாப்புரவையும் கோப்புரவையும் குறிப்பாய்ச் சுட்டு முகத்தான் அமைந்த கடவுள் வாழ்த்து இது.*

# அவையடக்கம்

மங்கலவாழ்த்துக் கூறிய ஆசிரியர் அடுத்து அவையடக்கம் கூறினார். அவையடக்கம் கூறுவது பழைமையான வழிமுறையே. ஆசிரியர் தொல்காப்பியர் அதனை 'அவையடக்கியல்' என்பார்.

"திறனற்றவற்றைக் கூறினாலும் அதனை ஆய்ந்து திறமானதாக அமைத்துக்கொண்டு உதவுக என்று நூலாசிரியன் எல்லார்க்கும் பொதுவாக வேண்டிக்கொள்வது அவையடக்கி யல்" என்பார் தொல்காப்பியர் (1370).

அவையடக்கின் அருமை பெருமையை அறிந்து, குறைவற்ற நூல், தாம் யாப்பது மெய்யேயாயினும், பழமரபு போற்றி வழிகாட்டுதல் நூலோர் நெறி என்பதால், அதனைத் தாமும் செய்வாராய்க் கூறினார். கூறும் கூற்றிலேயே, தாம் யாக்கப் புகுந்த செம்பொருள் சிறப்பின் ஊடகத்தைப் பற்றிக்கொண்டு உரைத்தருளினார்.

"தம்மை யுணர்ந்து தமையுடைய தன்உணர்வார்
எம்மை யுடைமை எமையிகழார் - தம்மை
உணரார் உணரார் உடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்"

"தம்மை உணர்ந்துகொண்டு தம்மை ஆளுடைய தலைவனை உணர்ந்தவர்கள் எம்மை உடைமையாக உடையவராம். ஆகலின், அவர்கள் எம்மை இகழார். ஆனால், தம்மை உணராதவரோ தம்மை ஆளுடைய தலைவனையும் உணராதவரே! அவர்கள் தமக்குள் ஒன்றுபட்டு ஒன்றைக் கூறமாட்டார். அத்தகையர் புறம்பான சொல்லையாம் ஒரு பொருளாகக் கொள்ள மாட்டோம்" என்பது இதன் பொருளாம்.

தம்மை உணர்ந்தவரே தலைவனை உணர்வர் என்றும், அவரைத் தலைவராகத் தாம் கொண்டிருத்தலால், தம்மை உடைமையாகக் கொண்ட அவர்கள் அன்பாற் பாராட்டுவரே யன்றி இகழமாட்டார் என்றும் அவரைப் போற்றி அவை யடக்கம் உரைத்தார்.

இனித், தம்மையுணரார் உளர்; அவரோ தம்மை யுணராமையால் தலைவனையும் உணராதவர்; அவர் தம்முள் ஒன்றுபட்டு உறவாடலும் ஒரு கருத்துக் கொள்ளலும் இலராய்த் தம்முள் முரண்பட்டு நிற்பர். அத்தகையர் சொல்லும் உண்மைக்குப் புறம்பான சொல்லை யாம் பொருட்டாகக் கொள்ளமாட்டோம் என்று அவர்க்கு அவையடக்கம் கூறாது வீறுமொழிந்தார்.

'எல்லா மாந்தர்க்கும் வழிமொழிதல்' என்று கூறிய தொல்லாசிரியர் நெறியை, மெய்கண்டார் புதுக்கிக்கொண்டு உரைத்த அவையடக்கம் இதுவாம்.

தக்காரை வழிபடுதலும் தகவிலரை ஒதுக்குதலும் தகவெனக் கொண்ட பெருமிதம் ஈது என்க.

# நூல்

## முதற் நூற்பா

உலகம் பெரியது; உலகத்திற்கு அண்டம் என்பது ஒரு பெயர்; அண்டம் ஒன்றா? இரண்டா? "நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன" என்பது மணிமொழி! "பன்னூறு கோடி அளவின அண்டம்" என்பது அறிவியல் ஆய்வு! இவ்வண்டங் களை யெல்லாம் சேர்த்து எப்படிக் குறிப்பது? 'பேரண்டம்' என்பது பெருமக்கள் குறிப்பு!

அண்டத்தில் உள்ள பொருள்களை எல்லாம் அறிந்து முடித்தாகிவிட்டதா? அவற்றுக்கெல்லாம் பெயர் வைத்தாகி விட்டதா? இத்தனை என்று எண்ணிக்கை யிட்டாகி விட்டதா? இல்லை! இன்று மட்டுமில்லை, என்றுமே முழுதுற அறிந்ததாக மனித ஆற்றலுக்கு இடமில்லை! "அறிதோறும் அறியாமை கண்டற்று" என்பது வள்ளுவம் !

"எத்தனைகோடி இன்பம் வைத்தாய் இறைவா இறைவா" என்று வியப்பது இயற்கை இறைமை! இத்தனை கோடி என்று இன்பச் சுரப்பையே எண்ண முடியவில்லையானால், இன்பச் சுரப்பின் மூலமாம் அண்டப் பொருள்களை எவரே எண்ணிக் கணக்கிடவல்லார்?

உலகப் பொருள்கள்தாம் எத்தனை எத்தனை வகை! பருப்பொருள் நுண்பொருள்; காட்சிப் பொருள் கருத்துப் பொருள்; நீர்ப் பொருள் ஆவிப் பொருள்; இயங்கு பொருள் நிலை பொருள்; கூட்டுப் பொருள் கலப்புப் பொருள்; அகப் பொருள் புறப் பொருள்; மூலப் பொருள் ஆக்கப் பொருள் - இப்படி இப்படிப் பொருள்களைப் பகுத்துப் பகுத்து எண்ணினாலும் அவ்வத் துறை வல்லாராலும் எண்ணிமுடிக்க முடிவதோ? 'யாவரே முழுதுறக் கண்டார்?' என்று கைவிரிக்கவே நேரும். ஆனால் ஒருவர், "உலகத்துப் பொருள்களை யெல்லாம் சுருக்கமாக எண்ணிவிட வேண்டும்" அதுவும் சுருக்க மென்றால் சுருக்கம். மூன்றே சொற்களில் எண்ணிவிட வேண்டும்" என்று ஒரு புதிர் போட்டால், ஆழ அழுந்திய புலமையில்லார் 'நடக்கும்

ஒன்றா' என்று திகைப்புறுவர். ஆனால், அறிவறிந்த பெரு மக்களோ வழிவழி வந்த அறிவு மாட்சியால் செவ்விய மறுமொழி சொல்லிவிடுகின்றனர். அவர்கள், பொய்யறியாப் புலமை யாளராய்-மெய்கண்டாராய்-விளங்குதலால் சொல்ல முடிகின்றது. அவர்கள் சொல்லும் மூன்று சொற்கள் தாம் எவை?

### "அவன் அவள் அது"

முழுதுலகையும் குறிப்பதற்கு அவர்கள் சொல்லும் சொற்கள் "அவன், அவள், அது" என்பனவேயாம்.

இம்முச் சொற்களால் சுட்ட முடியாத ஒரு பொருள் உண்டோ? உண்டோ? உலகில் எந்த மொழியில் இந்த முச்சுட்டுகள் இல்லை! எந்த இடத்தில் எந்தக் காலத்தில் இந்த முச்சுட்டுகள் இல்லை! மெய்ப்பொருள். காலம் இடம் மொழி இனம் எல்லாம் எல்லாம் கடந்த பொதுப்பொருள்! இறைமையும் இயற்கையும் எப்படிப் பொதுப் பொருள்களோ அப்படியே, மெய்ப்பொருள் மெய்யுணர்வு என்பனவும் பொதுப் பொருள்களே!

உலகம், 'அவன், அவள், அது' என்னும் முப்பொருள் களையுடையது எனின், 'அவர்' என்றும் 'அவை' என்றும் இணைந்து ஐந்தாக்கிச் சொல்வாரே தொல்லாசிரியர்? மெய் கண்டார் மூன்றாக்கிக் கொண்டதென்ன?

'அவன்' பலர், 'அவள்' பலர் - 'அவர்' அல்லரோ? 'அது' பல 'அவை' யல்லவோ? ஐந்தை மூன்றாக்கிக்கொண்ட அருமை விளங்குகின்றதே அன்றி, குன்றக் கூறிய குறைபாடு இல்லையாம்!

'அவன் அவள் அது' என்பவை படர்க்கைகள்! தன்மை முன்னிலைப் பெயர்களைச் சுட்டினால் என்னை?

சுட்டினால் குற்றமாம்! படர்க்கையாகிய அவனை, அவளை, அதை - அடைய விரும்புபவன், தன்மை முன்னிலையை விடாமல் முடியுமா? ஒருகிளையை விடாமல் மறுகிளையைப் பற்றுவது எப்படி?

"யான் எனது என்னும் செருக்கு அறுப்பான், வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்" என்பது மறைமொழி. "முகத்திற்கு முகம் புகழ்தல், நட்பிற்கும் கூடாது" என்பதும் மறைமொழி! அகப் பொருளைக் கூட, தன்மை முன்னிலை விலக்கிப் படர்க்கையால் சுட்டல் பழந்தமிழ் வழக்கு எனின், அகப்பொருளில் அகப் பொருளாம் மெய்ப் பொருளைச் சுட்டுவார் தன்னை முன்னிலை கருதுவரோ?

'அவனன்றி அணுவும் அசையாது!' என்பதை அறியார் எவர்? 'அவன் துணை' 'அவன் அருள்' 'ஒருவன் துணை', 'ஒருவன் பார்த்துக் கொண்டிருக்கிறான்' என்பவற்றில் வரும் அவனும் ஒருவனும் படர்க்கையே அல்லவோ? இன்னும் ஒன்று: நான், நீ என்பன போலும் தன்மை முன்னிலைச் சொற்களில் பால்வேறுபாடு காணக்கூடுவது இல்லையே!

அவனுக்காக அவள்; அவளுக்காக அவன்; ஆதலால் 'அவன் அவள்' எனப் பெற்றனர். அவர்களுக்காக எது எனின் 'அது' ஆதலால், 'அவன் அவள் அது' என்று கூறல் முறையா யிற்றாம்!

அவனை முற்படக் கூறுவானேன்? அவளை முற்படக் கூறக்கூடாதா? கூறலாம்; இடப்பக்கம் இருந்து வந்தால் என்ன? வலப்பக்கம் இருந்து வந்தால் என்ன? ஒன்றே! ஆனால், வலம் சுற்றலும், ஊர்வலம் நகர்வலம் வருதலும் வழக்காயிற்றே! அத்தகைய ஒரு வழக்கே, அவனை முற்படக் கூறிற்று! ஏற்றத் தாழ்வு காட்டுவது இல்லது தமிழ் வழக்கு! தலைவன் தலைவி, கிழவன் கிழத்தி, நம்பி நங்கை என்பவற்றைக் கருதுக. அம்மை அப்பன், தந்தை தாய் என்பவற்றையும், 'அன்னையும் பிதா'வும் 'மாதா பிதா' என்பவற்றையும் எண்ணினால் முன்பின் கூறல் பெருமை சிறுமை இல்லை எனத் தெளிவாக்கும்.

'சிறந்ததை முற்படக் கூறல்' என்பது ஓர் இலக்கண நெறியென்றால், சிறந்ததைப் பிற்படக் கூறல் என்பதும் ஓர் இலக்கண நெறியேயாம்.

மனையறம் பேணற்கு முன்னது மணம்; மணத்தை ஊரறியக் காட்டுதற்கு, மணச் சடங்கு; மணச் சடங்கிற்கு முதற்கண் வருபவன் 'அவன்'; பின்னே வருபவள் அவள்; பின்னே 'அது' நிகழும். உலகெல்லாம் ஆய்ந்தாலும் இந்நாள் வரை இதற்கு மாறாக நடைபெறும் காட்சி இல்லையே! ஏன்?

அவன், ஆடவன்; அவள் பெண்ணின் நல்லாள்; அவன் வன்மை மிக்கோன்; அவள் மென்மைப் பெட்டகம்; இயற்கை அவனுக்கு அருளிய 'வலம்' அது; இயற்கை அவளுக்கு அருளிய 'நலம்' அது! அவ்வலமும் நலமும் உலகை உய்ப்பன! இதில் ஏற்ற தாய்மையை அணுவளவேனும் தாழ்த்த நினைப்பனாயின், அவன் தாய் பெற்ற மைந்தன் அல்லன்! அவன், அவள், அது

எனல் பண்டு தொட்டுவந்த வழக்காதலின் அம்முறையே முறையாய்ச் சொல்லப் பெற்றதாம்.

**எனும் அவை :**

'அவன்' என்றும் 'அவள்' என்றும் 'அது' என்றும் சொல்லப்படுகின்றவை எவை? அவை, 'அவை'யாகின்றன! அது பலவாகிய அவையா இவ்வவை! இல்லை! உயர்திணையை அஃறிணைக்குரிய அவையாக்கிக் கூறுவரோ, அறிவறிந்தோர்? இவ்வவை, 'கூட்டம்' என்றும் பொருள்தரும் அவையாம். அவையும் அவைத் தலைவரும் இந்நாளில் பெருக வழங்கு கின்றனர். ஆனால் மெய்கண்டார் காலத்தும் அவை உண்டோ?

மெய்கண்டார் காலத்தில் என்ன? மெய்கண்டார்க்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே வாழ்ந்த தொல்காப்பியனார் அருளிய தொல்காப்பியநூல், 'நிலந்தரு திருவிற் பாண்டியன் **அவையத்துத்** தானே' அரங்கேறிற்று. அதங்கோட்டாசான் அல்லரோ அவைத் தலைவராகத் திகழ்ந்தார்! நிலந்தரு திருவிற் பாண்டியன் அல்லனோ அவையத்தைக் கூட்டுவித்தான்! கழக நூல்களெல்லாம் சான்றோர் அவைக்கண் அல்லவோ ஆராயப்பெற்றன! மூவர் முதலிகளும் ஆழ்வாராதி களும் திருக்கூட்டத்தார் தொடரவன்றோ பாமழை பொழிந்து பண்ணோடு இசைத்துப் பைந்தமிழ் வளர்த்தனர்! இவற்றை அறிவார் 'அவை' புதியது என்றோ புதிய பொருளது என்றோ கொள்வரோ?

அவை, தானே கூடுமோ? கூடாது! கூட்டக்கூடும்; கூட்டுவார் ஒருவர் இருந்து கூட்டுவார்; அவர் கூட்டக்கூடும்! ஒருமுறை மட்டும் கூடுமா? பலமுறை கூடுமா? எடுத்த பொருளாய்வு முடிவுறும் அளவும் கூடும். அதற்கு ஒரு முறையும் போதும்! ஒன்பது முறையும் வேண்டும்! எடுத்துக்கொண்ட பொருளையும், எடுத்துக்கொண்டு ஆய்வார் நிலையையும் பொறுத்தது அது. இந்த உலகமும் ஓரவையே! அதுவும் இறையால் கூட்டக் கூடுகின்றது; கூடி ஆய்கின்றது; ஆய்வு முடிந்ததும் அடையும் இடத்தை அடைகின்றது. அவையைக் கூட்டி ஆய்ந்து நிறை விப்பார் அவைத் தலைவர்; உலகைக் கூட்டி நிகழ்த்தி நிறைவிப்பார் இறைவர். 'அவை' என்னும் உவமையால் மெய்கண்டார் சுட்டும் பொருள் இதுவாம்.

**மூவினை :**

'மூவினை' எனினும் 'முத்தொழில்' எனினும் 'முச்செயல்' எனினும் ஒன்றே. மூவினை எதற்கு உண்டு? மேலே சுட்டிய அவைக்கு உண்டு! உலகுக்கு உண்டு! உலகியற் பொருள்கள் அனைத்துக்கும் உண்டு. மூவினை எவை? கூட்டக் கூடியது ஒன்று. நிகழ்த்த நிகழ்ந்தது இரண்டு; நிறைவிக்க நிறைந்தது மூன்று! அவைக்குரிய இம்மூன்றும் உலகுக்கும், பொருள்களுக்கும் உண்டென்பதெப்படி?

"உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும்"

என்னும் கம்பர் வாக்கு மூவினை விளக்கமும், மூவினை முதலாம் முதல்வன் விளக்கமும்தாமே! படைத்தல் காத்தல் அழித்தல் என்பவைதாமே மூவினை! ஆற்றின் செயலை அல்லது நீரின் செயலை மூவினைப்படுத்துதல் தமிழர் மரபு. நீர், படைப்பு, காப்பு, அழிப்பு வினைகளைச் செய்தலால் இறைவணக்கத்தை அடுத்து வான்சிறப்பு வைத்தல் தமிழர் மரபாயிற்று.

கடலுக்குப் 'புணரி' என்பதொரு பெயர். ஆறுகள் கூடிக் கலத்தலால் கடல் புணரியாயிற்று! நீர்க்கலப்பு, புணரி யாவதுபோல், சொற்கலப்பு 'புணர்ச்சி' எனப்பெறுவதா யிற்று. புணர்ச்சியின் வகையை இரண்டாகப் பகுப்பர். ஒன்று இயல்புப்புணர்ச்சி; மற்றொன்று 'விகாரப் புணர்ச்சி; விகாரப் புணர்ச்சி முக்கூறுபட்டது. அவை தோன்றல், திரிதல், கெடுதல் என்பன.

உலகும், இயல் நிலையில் இருந்து, விகார நிலைக்கு வருங்கால் தோன்றல் திரிதல் கெடுதல் ஆகிய மூவினைக்கு உட்படும்! தமிழர் தம் மெய்யுணர்வுக் கோட்பாடுகளே, அவர்தம் இலக்கணத்தில் பொதிந்து கிடத்தல் இத்தகைய ஆட்சிகளால் புலப்படும்.

ஆக, உலகாம் அவை மூவினைகளையுடையது என்பது கொள்க.

**தோற்றிய திதியே ஒடுங்கி :**

மூவினையை உளவாக்கல், நிலைபெறுத்தல், நீக்கல் என்றும், படைத்தல் காத்தல் அழித்தல் என்றும் பிறவாறும் பிறர்பிறர் கூறினாராக மெய்கண்டார், 'தோற்றிய திதியே ஒடுங்கி' என்றார்.

தோற்றம், திதி, ஒடுக்கம் என்பது அவர் ஆட்சி. திதியாவது உளதாதல்; காத்தல் என்பதும் அது. ஒடுக்கம் ஆவது அழித்தல்.

மிகக் கருத்தோடும் கவனத்தோடும் சொற்களை ஆள்கிறார் மெய்கண்டார். சின்னஞ் சிறிய சொற்களையே தேர்ந்தெடுத்துக் கொண்டு பென்னம் பெரிய பொருளைப் புகுத்துகிறார். திருவள்ளுவர் ஆட்சியில் திளைத்துத் திளைத்து, திருமூலர் முதலியோர் ஆட்சியில் அழுந்தி அழுந்தி, தமிழ் இலக்கண மூலவேரில் தோய்ந்து தோய்ந்து, 'தாமே போதமாக' நின்று அருள்கின்றார். ஆகலின், அவர்தம் சொல்லின் மாட்சிக்கு எல்லையொன்று இல்லையாம்!

தோன்றிய என்னாமல் 'தோற்றிய' என்று பிறவினை வாய்பாட்டால் அருளியது ஏன்? கூட்டம், தானே கூடாமை போலவும், பிறரொருவர் கூட்டக் கூடியது போலவும், இவ் வுலகமும் தானே தோன்றியதாகாமல் பிறர் ஒருவரால் தோற்று விக்கப்பட்டது என்பதை உணர்த்தவே 'தோற்றிய' என்றார். தோன்றுதல் தோற்றுதல் என்பவற்றில் ஒரோ ஓரெழுத்து மாற்றமே நேர்ந்துளது. எனினும் அதன் வினைப்பாட்டில் எத்தகைய வேறுபாடு? 'கழுவேறியது' என்பது பழைய திருவிளையாடல். 'கழுவேற்றியது' என்பது பரஞ்சோதியார் திருவிளையாடல். எழுத்து மாற்றத் திருவிளையாடல், எத்தகைய கொடுமாற்றத்திற்கு இடனாகிவிட்டது?

இறைவனால் தோற்றுவிக்கப்பட்ட உலகம், அவனால் காக்கப்படுதல் 'திதி' எனப் பெற்றது. தன்னால் தோற்றுவிக்கப் பெற்றுக் காக்கப்பெற்ற உலகத்தை, ஒடுக்குகிறான். அவன் வினை உலகத்தை ஒடுக்கிக் கொள்ளல் எனினும், அதனைத் தன்னுள் ஒடுக்கிக் கொண்டதால், அவ்வுலகம் ஒடுங்குவதற்குக் காரணமாக இருப்பவன் அவன் ஆகலின், ஒடுங்கி எனப் பெயர் பெற்றான்.

துறவோர் ஒடுங்கிய இடங்கள் ஒடுக்கம் எனப் பெறுகின்றன. அந்த ஒடுக்கங்கள் வேறு! அவை, ஒடுக்கம் செய்யப்பெற்ற இடங்கள். அவையே, உடலைத் தன்னுள் ஒடுங்க வைத்துக் கொண்டவை அல்ல! ஆனால், இறைவனோ உலகம் ஒடுங்கு வதற்கு இடனாக இருத்தலால் ஒடுங்கியாகின்றான். நடுக்கத்திற்கு இடமாக இருப்பவன் ஒடுங்கியானான் என்க. இறைவனின் மெய்யியல் அறிந்து சூட்டப் பெற்ற பெயர் 'ஒடுங்கி' என்க.

**மலத் துளதாம் :**

அவை கூடிற்று; கூடிய அவ்வவை மீண்டும் கூடுவானேன்? அவையில் எடுத்துக்கொண்ட பொருள் நிறைவுறவில்லை. நிறைவுற்றால் மீண்டும் கூடவேண்டுவது இல்லை. கூடிய ஒன்றே அவையின் ஆய்வுக் கருத்து முற்றுப் பெறவில்லை என்பதைக் காட்டும். முற்றுப் பெறாமையைத் 'தடை' எனலாம். அதுபோல் உலகம் மீண்டும் மீண்டும் தோன்றுதற்கும் காரணம் தடையே யாம். அத்தடையை 'மலம்' என்பது வழக்கு.

ஒடுங்கிய அவை அல்லது உலகு, மலத்தினால் உளதாகும் அல்லது தோன்றும்! மலத்தினால் அவை உண்டாக வேண்டுவ தென்ன! மல நீக்கத்திற்காகவே தோற்றம் உளதாகின்றதாம். கறையைப் போக்கப் பலமுறை வெளுப்பதில்லையா துணியை? களிம்பு போக்கப் பலமுறை விளக்குவது இல்லையா செம்பை? அழுக்குப் போக்கப் பலமுறை துடைப்பது இல்லையா கண்ணாடியை? அவைபோல் என்க.

**அந்தம் ஆதி :**

அண்டம் என்பது உலகம் எனக் கண்டோம். அண்டம் என்பதற்கு முட்டை, விதை முதலியன பொருள்கள். அதன் வடிவம், வட்டம் என்பதே. உலகின் வடிவமைப்பை உள்ளடக் கிய பெயர்கள் அண்டம், உலகம், பார் முதலியன. வட்டத்தில் முதல் எது? முடிவு எது? முதலும் முடிவும் ஒன்றே. தோன்றும் இடமே முடிவிடம்; முடிவிடமே தோன்றுமிடம். பிணையல் வரிசையில் எவ்வரிசை முதல் வரிசை? எவ்வரிசை இறுதி வரிசை? எதுவும் முதல்; எதுவும் இறுதி! இவ்வட்டச் சுற்றே படைப்பியல் சுற்று!

கடலில் இருந்த நீர் ஆவியாகவில்லை? ஆவி மேலே மேலே சென்று குளிரவில்லையா? குளிர்ந்து மழையாய்-அருவியாய்-ஆறாய்-காலாய் நடந்து கடலைச் சேரவில்லையா? புறப்பட்ட இடத்திற்கே போய்ச் சேர்ந்த நீரின் சுழல் நடை, முதலும் முடிவும் காட்டும் நடை! அந்தமும் ஆதியுமாம் கடல்போல், உலகின் அந்தமும் ஆதியும் ஆகின்றவன் இறைவன். நீர்க்கு அந்தத்தைச் செய்யும் இடமும், ஆதியைச் செய்யும் இடமும் வெவ்வேறல்ல! ஓரிடமே! அதுபோல் உலகுக்கு ஆதியும் அந்தமுமாக அல்லது அந்தமும் ஆதியுமாக இருப்பவன் ஓர் இறைவனே! அந்தமும்

ஆதியும் இல்லா அருளாளன். உலகின் அந்தமும் ஆதியுமாம் அமைவு இது! பாவகையிலே அந்தாதி கண்ட திறவோம், 'ஆதிபகவனை'க் கண்டு தெளிந்த வகை இது!

**என்மனார் புலவர் :**

இறைவன் உயிர் மலம் என்னும் முப்பொருள் கூறுகளையும் செந்தமிழ்ச் சிவஞான போதச் செல்வர் மெய்கண்டார்தாம் கண்டாரோ? அவர்க்கு முந்தையோர் கண்டிலரோ? கண்டவர் உளராயின் அவர்தாம் யாவர்? என வினவுவார்க்கு விடையாக 'என்மனார் புலவர்' என இயம்பினார் மெய்கண்டார்.

"என்று சொல்லுவர் மெய்ப்பொருள் வல்ல புலமை யாளர்" என்பது என்மனார் புலவர் என்பதன் பொருளாம். செழுஞ்செந்தமிழில் செம்பொருள் துணிவு நூல்கள் பல இருந்தன என்றும், அவற்றை ஆக்கிய அந்தண்மை மிக்க செந்தண்மையாளர் பலர் என்றும், அவர் கூறிய வழியே வழியாகக் கூறினேன் யான் என்றும் 'என்மனார் புலவர்' என்பதால் விளக்கினார் ஆசிரியர்.

இம்முழுப் பொருளையும் சுட்டும் முதல் நூற்பா :

"அவன்அவள் அதுவெனும் அவைமூ வினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்"

கடவுள், உயிர், மலம் என்பவை சமய நூலாரால் முப் பொருள்கள் எனப்படும். இவை 'பதி, பசு, பாசம்' என வட நூலாரால் சுட்டப்பெறும்.

கடவுள் என்று உண்டோ அன்றே உயிரும் உண்டு; அவ்வுயிருக்கு மலமும் உண்டு, மலமாவது என்ன? செம்பில் களிம்பு இருப்பதுபோல், உயிரிடத்தே மலம் இருக்கிறது! செம்பில் களிம்பு எப்பொழுது தோன்றியது? செம்பு தோன்றிய போதே களிம்பும் தோன்றியது. அதுபோல் உயிர் தோன்றிய போதே அதனுடன் மலமும் தோன்றியது. செம்பில் களிம்பு நீங்கினால் சுடர்விடும். உயிரில் மலம் நீங்கினால் ஒளியெய்தும்! உயிருக்கும் மலத்துக்கும் உள்ள தொடர்பு, செம்புக்கும் களிம்புக்கும் உள்ள தொடர்பே! இதனைத் தொல்பழந் தொடர்பு என்பர். 'அனாதி சம்பந்தம்' என்பர் வடநூலார்.

"அவன் என்றும் அவள் என்றும் அது என்றும் குறிக்கப் பெறும் அண்டத் தொகுதி படைப்பு, காப்பு, அழிப்பு என்னும் முத்தொழில்களை உடைமையால், ஒருவனால் படைக்கப்பட்ட உள்பொருளேயாம். அது மல நீக்கத்தின் பொருட்டு, தான் ஒடுங்குதற்கு இடனாக இருந்த கடவுளினின்றும் மீண்டும் தோன்றுவதாம். ஆதலால், அந்தமாக இருக்கும் அவனே, முதலும் ஆகிறான் என மெய்ப்பொருள் ஆய்வாளர் கூறுவார்" என்பது இந்நூற்பாவின் பொருளாம்.

# இரண்டாம் நூற்பா

அவன், அவள், அது என்றும் சுட்டப்பெறும் உலகுக்கு அந்தமும் ஆதியுமாக இருப்பவன் இறைவன் எனக் கண்டோம். அவன் எவ்வாறு இருப்பன்? எங்கு இருப்பன்?

'இறைவன்' என்னும் பெயராலேயே இறைவன் இருப்பை முன்னோர் தெளிவித்தனர். இறைவன் என்பதற்கு, 'எங்கும் தங்கி இருப்பவன்' என்பதே பொருளாம்.

'இறைவன் எங்கே இருக்கிறான்?' என வினாவுவார்க்கு, 'அவன் எங்கே இல்லை?' என்று எதிர்வினா வினாவுவர்! 'இறைவன் எங்கும் இருக்கிறான்' என்று உடன்பாட்டு விடையும் கூறுவர். இவை இறைவன் எங்கும் உளன் என்பதைத் தெளிவிப் பனவாம்.

"பாலில் நெய் எங்கே யுள்ளது? பழத்தில் சுவை எங்கே யுள்ளது? தேனில் இன்பம் எங்கே உள்ளது? எங்கும் உள்ளதே யன்றோ! இவற்றைப்போல், இறைவன் எங்கும் உள்ளவனே" என உவமையால் விளக்குவர் மெய்யுணர்வாளர். இறைவன் இருப்பை மிக நுண்ணிதாக விளக்குகிறார் மெய்கண்டார்.

### அவையே தானே ஆய்

இறைவன் அவையே ஆயும், தானே ஆயும், அவையே தானே ஆயும் இருக்கிறான் என்று கூறுகின்றார். 'அவையே தானே' என இரண்டு நிலையாய்க் கூறினும், அவ்விரண்டனை யும் இணைத்துக் காணும் முந்நிலைப்படத் தொடரை அமைத்துள்ளார்.

### அவையேயாய் நிற்றல்

உலகமாகிய அவை வேறு, தான் வேறு என்று இல்லாமல் ஒன்றாகக் கலந்து நிற்கும் நிலையே அவையேயாய் நிற்றலாம்.

உடலுக்குள் உயிர் வேறாய் இல்லாமல், அவ்வுடல் எங்கும் கலந்து இருப்பதுபோல உயிர்கள்வேறு தான்வேறு என்று இல்லாமல் உயிர்களில் எல்லாம் கலந்து நிற்றல் அவையேயாய் நிற்றலாம்.

"உயிர் தொறும் ஒளித்துநின்ற வஞ்சக்கள்வன்" என்பார் திருவிளையாடலார்.

வளர வளரும் வளர்ந்தநிலை, 'அவையேயாய் நிற்றல்' என்பது, முருகி உருகி நிற்கும் நிறைவாளர்க்கு உரிமையாதலை உணர்வார், இறைநிலை அஃதென எளிதில் அறிவர்.

"சுடும் உணவை உண்ணேன்; உண்ணின் என் உள்ளத் துறையும் என்னவரைச் சுடும்" என்பாள் ஒரு காதலி என்னின், **அவள் அவனாய் நிற்றல்** அன்றோ!

"என் உள்ளத்தைப் பிளந்து கண்டால் அங்கே என்ன காண்பாய்? நின்னைக் காண்பாய்" என்று ஒரு நண்பன் கூறினான் எனின், **அவன், அந்நண்பனாய் நிற்றல்** அன்றோ!

'என் உயிர் கொண்டும் இறைவா! இவனுயிர்தா' என ஒரு தந்தையோ தாயோ வேண்டிக் கிடப்பரேல், **அவர் அவனாய் நிற்றல்** அன்றோ!

"எங்கே புயல்; எங்கே நிலநடுக்கம்; எங்கே தொற்றுநோய்; எங்கே வன்முறைக்கேடு; எங்கே அச்சுறுத்தல்; எங்கே அரற்றுதல் அங்கே யாம்" என்று அருளாளர் நிற்பரேல், அவர் **அனைத்து யிராய் நிற்றல் அன்றோ!**

'ஆட்டைப் பலியிடவா ஆகாது ஆகாது' என்று சொல்லி நொண்டியாட்டைத் தோளில்மேல் போட்டுக்கொண்டு கால் கடுக்க நடந்த அருளாளர் வரலாறு சொல்வது என்ன? **அதுவாய் நிற்றலே** அன்றோ!

"இந்த ஆட்டை வரைந்த ஓவியன் ஆடாகவே மாறித்தான் வரைந்திருக்க வேண்டும்" என்றும், "இவன் வரைந்த சிறுமணிப் புறாவைப் பார்க்கும் போது கல்லைப் பொறுக்கித் தின்ன வேண்டும் என்று ஆர்வம் எனக்கு எழுகின்றது" என்றும் ஒரு கலைஞனை ஒரு கலைஞன் கூறினான் எனின், அவ்விருவரும் **அவையாய் நிற்றலே** அன்றோ!

பலப்பல குறைகளையுடைய மாந்தனே அவையாய் நிற்க இயலுமெனின், குறைவிலா நிறைவாம் இறைமை அவையாய் நிற்றற்கு ஐயுறவும் உண்டோ?

**தானாய் நிற்றல் :**

இறைவன் தானே ஆய் நிற்றல் என்பது உலகொடும் உயிர்களொடும் கலவாமல் வேறாகத் தனித்து நிற்கும் நிலையாம்.

கதிரோன் ஒளியால் கண் பார்க்கிறது; பார்த்தாலும், கதிரோனும் கண்ணும் ஒன்றோ? இல்லை! கதிர் வேறாகவும் கண்வேறாகவும் இருப்பது போல, இறைவனால் உயிர்கள் அறிந்தாலும் உயிரும் இறையும் ஒன்றல்ல. உயிர் வேறாம்; இறை வேறாம். உயிரையும் உலகையும் விடுத்து இறை தனித்து நிற்கும் நிலையே **தானாய் நிற்றலாம்.**

'கூத்தாட்டு' என்பது பழைமையானது. கூத்தாட்டு அவை வள்ளுவரால் பேசப்படுகிறது. 'கூத்தச் சாக்கையன்' இளங்கோவடி களாரால் இயம்பப்படுகிறான். இறைவனே 'கூத்தப் பெருமான்' எனக் கொஞ்சப்படுகிறான். "அவரவரைக் கூத்தாட்டுவானாகி" என்கிறார் மணி மொழியார்.

கூத்தாட்டுபவனும் கூத்தாடுபவனும் வேறு வேறானவர் என்பதை எவரே அறியார்? இதனை ஒருமுறை கூறினால் போதாது என்று தானே **நாவுக்கரசர்,** ஏழு முறை கூறினார் : 'வலியுறுத்தல் நிலைபெறுத்தும்' என்பது இந்த விளம்பர உலகம் அறியாத ஒன்றன்றே:

"ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே;
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்கா தாரே;
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடா தாரே;
உருகுவித்தால் ஆரொருவர் உருகா தாரே;
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடா தாரே;
பணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே;
காட்டுவித்தால் ஆரொருவர் காணா தாரே;
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே"

ஏழு காட்சிகளை விளக்கி, ஏழின் நிறைவாய்க் "காண் பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே" என்று கூறி, காண்பானும் காட்டுவானும் தனிமைப் பட்டிருத்தலை விளக்கினார்.

கொடும் போரின் இடையேயும் நெப்போலியன் ஒரு கணக்கிலே மூழ்கியிருக்க முடியுமானால், குண்டு வெடிக்கும் போதும் அதிர்வின்றி உரையாற்றிக் கொண்டிருக்க விவேகானந் தரால் முடியுமானால், தவநிலையில், கட்டையென அறியாரால் சுட்டெரிக்கப்படும் போது தம்மை உணரும் நிலைவந்து முற்று மெரித்துவிடச் சொல்ல ஒரு தாயுமானவரால் முடியுமானால், பெண்ணையாற்றின் இடைப்படு கல்லில் எரியூட்டிப் பாரியைப் பிரிந்திருக்க ஒண்ணாத கபிலரால் தாமே கனல் புக முடியுமானால் -

இறைவனால் தானாய் நிற்க முடியாதோ? அவன், அருளிப் பேற்றாளன்; அவன் அருட்கானோர் இவர்; அருட்கானோர் திறமே ஈதென்றால், அருளியோன் திறத்தை அளந்து காணவும், காட்டவும் வேண்டுமோ? படைப்பான், படைப்புப் பொருளுக்கு அப்பால் இருப்பவன் என்பதை எவரே அறியார்?

**அவையே ஆயும் தானே ஆயும் நிற்றல் :**

உயிரும் உடலுமாய்க் கலந்து நிற்கும் நம்மிடம், உயிர் வேறு உடம்பு வேறு எனப் பிரித்துக் காண முடிவதில்லையே! அவ்வாறு காணாதபடி, உயிர் உடலோடு கலந்து ஒன்றாய் நிற்கின்றது. அதுபோல், இறைவனும் உலகில் கலந்து ஒன்றாய் நிற்கின்றான் என்பதே, ‘அவையே ஆயும் தானே ஆயும்’ நிற்றலாம்.

கண் ஒரு பொருளைப் பார்க்கிறது. கண் மட்டுமோ பொருளைப் பார்க்கிறது? கண்ணொடும் உயிரின் அறிவும், அக் கண்ணொளியோடும் உடனாக இருந்தன்றோ காண்கிறது? உயிரறிவும் கண்ணொளியோடு இணையாக்கால் காட்சி யென்பதும் ஒன்று உண்டோ? உயிராகியும் - ஒளியாகியும் இருத்தல் அவையேயாயும் தானே ஆயும் நிற்றல் அன்றோ! ஒளிக்கு மட்டுமோ உயிரறிவு உடனாகின்றது? கேள்விக்கு, முகர்வுக்கு, சுவைக்கு, ஊற்றுக்கு, நினைவுக்கு எல்லாம் உடனாகி நின்று அவையேயாகியும் தானேயாகியும் உயிர் நிற்குமென்றால், உயிர்க்கு உயிராம் இறைவன் அவையேயாய், தானேயாய் நிற்றல் எளிதுற விளக்கமாகும் அன்றோ!

தொண்டராய் இருக்குங்கால் தொண்டராய், தலைவராய் இருக்குங்கால் தலைவராய் இருப்பார் இலரோ?

அலுவலராய் இருக்குங்கால் அலுவலராய், மற்றை இடங்களில் அன்பராய், நண்பராய், தாயாய், தந்தையாய், மக்களாய், ஊழியராய், உறவாய் இருப்பார் இலரோ?

மாணவரிடம் ஆசிரியராய் இருப்பார், மற்றை இடத்து மாணவராய் இருப்பார் இலரோ?

இவ்வாறு இருத்தல், ‘எந்நிலையில் இருந்தாலும் தம்நிலை மறவாது போற்றவல்லார்க்கு உடைமையாதல்’ கண் கூடே! இத்தகு திறம் வல்லார்க்கு இவை கூடுமெனின், கூடாதன வெல்லாம் கூட்டவல்ல, இறைவனுக்குக் கூடியிருப்பது அரிதாமோ? இவை, ‘அவையே தானே ஆய்’ இறை நிற்கும் முந்நிலையாம்.

**இருவினையின் :**

இருமைக்குப் பல பொருள் உண்டு. கருமை, பெருமை என்பனவும் இரண்டு என்பதும் குறிக்கத்தக்கன. இருவினை கருவினையாம். கருவினையாவது வல்வினை; கருங்கை என்பது வலியகை என்பது போல! இருவினையை 'வல்வினை' என்றும் மேலே ஆளுவார் (நூற். 10). இனி, இருவினை என்பது கடத்தற்கு அரிய பெரிய வினையாம்; இருள் வினையுமாம். இவையன்றி நல்வினை தீவினை எனப்பெறும் இரண்டு வினையுமாம். "இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு" என்பார் திருவள்ளுவர். "இறையருள் பெற்றார் வினைநீக்கமுற்றார் என்பது இதன் குறிப்பு. "வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்" என்பார் தொல்காப்பியர். இவற்றால், வினைநீக்கமே விடுதலை அல்லது வீடுபேறு என்றாம். வினைநீக்கம் என்பது செயலற்றுக் கிடத்தல் அன்று; பயன் கருதிச் செய்யாதிருத்தலே வினைநீக்கமாம்.

வினை நீக்கம் வேண்டுமோ என்றும், அதிலும் இரு வினையுள் ஒன்றாகிய நல்வினை நீக்கமும் வேண்டுமோ என்றும் வினவுவார் உளர். இருவினையால் பிறப்பும் இறப்பும் உண்டா தலால், பிறப்பறுக்க விரும்புவார் இருவினை நீக்கம் கொள்ளல் வேண்டுவதேயாம்.

தீவினையைக் கட்டாயம் நீக்கவேண்டும். நல்வினையையும் நீக்கவேண்டுமோ? ஆம்; நல்வினையை அதன் பயனீடு கருதி யன்றோ மாந்தர் செய்கின்றனர்; மறுமை நோக்கிக் கொடுப்பார் எடுப்பார் உள்ள உலகில் "மறுமை நோக்கியதன்று அவன் கொடை வண்மை; சான்றோர் செல்லும் நெறி என்பதை நோக்கியே கொடுப்பதை அன்றிப் பயனொன்று கருதிக் கொடான்" என்னும் புறப்பாட்டு நல்வினை செய்யும் பான்மையை நன்கு வலியுறுத்தும். புகழுக்கு விரும்பிக் கொடுக்கும் கொடையைப் "புறஞ்சுவர்க்கோலம் செய்தல்" என்று கூறும் வில்லிபாரதம்! ஆதலால் நல்வினையைப் பயன்கருதா உள்ளத்தோடு செய்ய வேண்டும் என்பதே மெய்ப்பொருளாளர் கருத்து. இரும்பு விலங்கானால் என்ன? பொன் விலங்கானால் என்ன? விலங்கு விலங்குதானே!

"ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்

ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்த மாமே”

என்பது திருமூலர் வாக்கு. ஈகனை எய்தும் எண்ணத்தோடுகூட, வழிபடல் ஆகாது எனின் பிறவினைகளைக் கூறவேண்டுமோ?

இருவினை நீக்கத்திற்கு வழியென்ன? முதற்கண் இருவினை யொப்புக் காணவேண்டும். இருவினை யொப்பாவது நல்வினை தீவினை நுகர்ச்சிகளை ஒப்பாகக் கருதும் ஒருநிலை. இன்பத்தை விரும்பும் நாம் துன்பத்தைக் கண்டு வெறுத்தல் ஆகாது! இன்ப விரும்பும், துன்ப வெறுப்பும் நீங்கி இரண்டையும் ஒன்றாகக் கருதி, “இன்பம் வரினும் வருக; துன்பம் வரினும் வருக; ஏற்றுத் துய்க்கத் தக்கனவே” என்னும் மனநிலை வந்துவிடின் அவனை வினை என் செய்யும்? விதி என் செய்யும்? விதிக்கு விதி அவனே ஆகலின், அவனிடம் விதி தோல்விகண்டு ஒதுங்கிப்போம்! வினையின் ஆட்சிக்கு இடமில்லா இடத்தில், வினைக்கு என்ன வேலை?

இருவினை உயிர்களைத் தொடர்வானேன்? அவனை மாசு நீங்கிய மணியாக்குதற்கு, கறைநீங்கிய கண்ணாடியாக்குதற்கு இருவினைகள் தொடர்கின்றன.

இருவினை என்ன செய்கின்றன? எப்படித் தொடர் கின்றன? இவற்றுக்கு விளக்கம் சொல்கிறார் மெய்கண்டார்:

**போக்குவரவு புரிய :**

இருவினையால் போக்குவரவு நிகழ்கின்றன. ‘போக்கு வரவு’ என்பது ‘போதல் வருதல்’ என்னும் பொருள்தரும் சொல்லாக இந்நாள் ஆளப்படுகின்றது. ‘போக்குவரவுத்துறை’ என்னும் அரசுத்துறையொன்று உண்மை இதற்குச் சான்று. ஆனால், மெய்கண்டார் போக்குவரவு என்பதனை ‘இறப்பு பிறப்பு’ என்னும் பொருளில் ஆட்சி செய்துள்ளார். போக்கு இறப்பு; வரப்பு பிறப்பு! பிறப்பு ஒழிதலும், இறப்பு வருதலும் ஒரு போக்குவரவுதானே! போக்குவரவு புரிவதற்காகவே இருவினைகள் தொடர்கின்றன என்று விளக்குகிறார். ஆகலின் வினையுள்ள வரை பிறப்பறுப்பு இல்லை என்றும், வினை நீக்கமே பிறப்பறுப்பு என்றும், அதுவே விடுதலை அல்லது வீடுபேறு என்றும் கொள்ள வைத்தார். “பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்” என்றார் திருவள்ளுவர்! “அற்றது பற்றெனில் உற்றது வீடு” என்றார் ஔவையார். உயிர் போக்குவரவு புரிய, இறைவன் தானே செயல்

*செய்கின்றனனா? பிறரைக்கொண்டு செயலாற்றுகின்றனனா? இதற்கு விளக்கம் தருவார் போலவே, 'ஆணையின்' என்றார் மெய்கண்டார்.*

**ஆணையின் :**

*இறைவன் ஆணையால் செயலாற்றும் திருவருளுக்கு 'ஆணை' என்பது பெயர். கட்டளையை நிறைவேற்றும் துறவிக்குக் 'கட்டளைத் தம்பிரான்' என்று பெயர் இருப்பதுபோல!*

*உயிர்கள் நினைக்கின்றன; சொல்கின்றன; செயலாற்று கின்றன. இவையெல்லாம் வினையே. நினைவு, சொல், செயல் ஆகிய இவ்வினைகள் அறிவுள்ளனவோ எனின் இல்லை; இவ் வினைகளின் பயனும் அறிவுள்ளனவோ எனின் இல்லை. வினைகளும் வினைப்பயன்களும் அறிவில்லாதவை ஆதலால், வினையுடையானை இவை தாமே தேடிச் சென்றடையமாட்டா! சென்றடையுமாறு கூட்டுதற்கே இறைவன் திருவருளாணையைச் செலுத்துகின்றான். அவ்வாணையால் உயிர்கள் உடல் கருவிகளைக் கொள்கின்றன. உடல்கருவிகளைக் கொள்வதே பிறப்பாகவும், அவற்றில் நீங்குவதே இறப்பாகவும் அமைகின்றன. இவற்றைத் திருவருள் ஆணையால் இறைவன் செய்விக்கின்றான் ஆகலின், 'ஆணையின் போக்குவரவு புரிய' என்றார் ஆசிரியர்.*

*பல்லாயிரம் ஆக்கள் ஓரிடத்து இருப்பினும் ஒரு கன்று தன் தாயைக் கண்டுகொள்வது போல, வினையும் வினையுடை யானைச் சேரும் என்பர்! ஆனால், "வினை, தானே வினையுடை யானைச் சேரும் தன்மைத்தன்று. இறையருள் கூட்டலால் சேரும்" என விளக்கினார் ஆசிரியர். செலுத்தும் ஒன்று இல்லை யேல், செலவென்பது ஒன்று இல்லையே! இயக்குவது அல்லது இயக்குவோன் இல்லையேல் இயக்கம் என்பது ஒன்று இல்லையே! ஆகலின் வினையை இயக்கும் திருவருளாணையைத் தெரிவித்தார் ஆசிரியர். ஆயின், இறை வேறு திருவருளாணை வேறு என்று ஆகின்றதே! இறை நிற்கும் நிலையென்ன? திருவருளாணை நிலை என்ன? என்று வினவுவார் உளராயின் அவர்க்கு விடை வேண்டுமே என்னுங்கருத்தால் மேலே சுட்டுகிறார் மெய்கண்டார்.*

**நீக்கம் இன்றி நிற்கும் :**

*இறையும் ஆணையும், நீக்கம் இன்றி-பிரிதல் இன்றி- நிற்குமாம். நீக்கம் இன்றி நிற்பது ஆணையா இறையா என்பார்க்கு, **'இறை'** என்று குறித்தற்காக ஆணையின் நீக்கம்*

இன்றி நிற்கும் என்றார். இறைவனே ஆணையை நீங்காமல் நிற்பான் என்பதாம்.

நீக்கம் இன்றி நிற்றல் என்பது எப்படி? தேன் வேறு இனிமை வேறு எனப் பிரிக்க முடியாதவாறு நிற்றல் நீக்கம் இன்றி நிற்றலாம். செந்தாமரைப் பூவின் செம்மை நிறம் வேறுபடுத்த முடியாதவாறு ஒன்றியிருத்தல், நீக்கம் இன்றி நிற்றலாம். பண்பும் பண்புடையதும் ஒன்றாகி இருப்பதுபோல் இறையும் திருவருளாணையும் என்றும் ஒன்றியுடனாகி இருத்தல் நீக்கம் இன்றி நிற்பதாம்.

**அன்றே :**

அன்றே என்பதற்கு 'ஆமே' என்பது பொருளாம். அல்லையாம் என்னும் பொருள் அதற்கு இங்கு இல்லையாம். 'அசைநிலை' என்று சொல்லி அமையும் பொருளும் அதற்கு இங்கு இல்லையாம். ஆமே என்னும் பொருளே அதற்கு இங்குக் கொள்ளல் சால்பு!

"வென்றி வேந்தன் பணிப்பவும் பணிப்பின்றியும்
சென்றிகன்முனை ஆதந் தன்று"

என்பது முதலாகப் புறப்பொருள் வெண்பாமாலையில் வரும் கொளுக்கள் எல்லாவற்றிலும் ஆளப்பெறும் 'அன்று' என்பதற்கு 'ஆம்' எனும் பொருளுளதாதல் அறிந்துகொள்க.

ஆக, இக்கருத்துகள் எல்லாமும் அடங்க,

"அவையே தானே ஆயிரு வினையின்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே"

என நூற்பா இயற்றினார் மெய்கண்டார்.

இறைவன் உயிர்களேயாயும், உயிர்களுக்கு வேறாகியும், உயிர்களுக்கு உயிராம் தன்மையால் உடனாகியும், உயிர்கள் தம் இருவினையின் காரணமாக இறத்தலும் பிறத்தலும் செய்யத் தன் ஆணையினின்றும் பிரிவின்றி என்றும் நிற்பன் என்பது இதன் பொழிப்புப் பொருளாம்.

இந்நூற்பாவின் பொருளருமையில் தோய்ந்து தோய்ந்து இன்புற்ற பேராசிரியர் ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் ஓர் எடுத்துக்காட்டால் விளக்கும் அருமை தனிப் பேரின்பம் பயப்பதாகும்.

*“அந்தமும் ஆதியுமாகும் போது வேறாய் நிற்பதும், உயிரியல் பொருளாகிய உலகியற் பொருள்களோடு ஒன்றாய் நிற்பதும் உயிர்களோடு உடனாய் நிற்பதும் உணர்த்த வந்த திருஞான சம்பந்தப் பெருமான்,*

‘ஈறாய் முதல் ஒன்றாய்இரு பெண்ணாண்குண மூன்றாய்
மாறாமறை நான்காய் வரு பூதம்மவை யைந்தாய்
ஆறார் ஏழோசையோ டெட்டுத்திசை தானாய்
வேறாய்உட னானான்இடம் வீழிம்மிழ லையே’

*என்று அருளிச் செய்துள்ளார். வேறாய் நின்று அந்தமும் ஆதியுமாம் திறத்தை, ‘வேறாய் ஈறாய் முதலாய்’ என்றும் ஒன்றாய் நின்று உலகியற் பொருள்களை இயக்கும் திறத்தை ஒன்றாய் இரு பெண்ணாணாய் குணமூன்றாய் மறைநான்காய் பூதமவை யைந்தாய் ஆறார் சுவையாய் ஏழோசையாய் எட்டுத் திசைதானாய்’ என்றும், உயிர்களோடு ஒன்றாகாமலும் வேறாகாமலும் உடனிருந்து கண்டும் காட்டியும் உதவியருளும் முதல்வன் திறத்தை ‘உடனானான்’ என்றும் இத்திருப்பாட்டில் திருஞான சம்பந்தப் பெருமான் அருளிச் செல்கின்றார். இவ்வாறு இறைவனது மூவகை நிலையினையும் திருவருளால் உணர்ந்து ஒருங்கே எடுத்து ஓதிய நூல் வடமொழியிலோ வேறு மொழி களிலோ இதுகாறும காணப்படவில்லை!”*

*தமிழர் சமயப் பிழிவு சிவஞான போதம் என்பதற்கு இத்தகைய இறையருள் பாடல்களைக் காட்டிலும் வேறு சான்றும் வேண்டுமா?*

# மூன்றாம் நூற்பா

உயிரைப் பற்றிய ஆய்விலே தொல்பழந்தமிழர் ஊன்றி ஈடுபட்டிருந்தனர் என்பது தொல்காப்பியத்தால் நன்கு தெளிவா கின்றது. செடி கொடி மரங்களுக்கு உயிர் உண்டு, உணர்வுண்டு என அறிவியல் அறிஞர் சகதீச சந்திரபோசு கருவிகள் கொண்டு மெய்ப்பித்துக் காட்டினார். ஆனால், அவர் கண்டுபிடித்ததற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழறிஞர்களால் கண்டுபிடிக்கப்பட்டு நாடறிந்த செய்தியாக விளங்கியது.

'உயிர்' என்னும் பெயர், 'உய்ப்பது உயிர்' என்னும் விளக்கம் தருவதாம். உய்த்தல் என்பது செலுத்துதல், இயக்குதல் என்னும் பொருட்டது. உயிரிலா உடல் இயக்கமற்றது என்பதை உவரே அறியார்? "செத்தாரைச் சாவார் சுமப்பார்" என்பதை எவரே உணரார்? இயக்கும் உயிர், உய்வுக்கும்-கடைத்தேற்றத்திற்கும்-வழிகாட்டும் என்றும் முந்தையோர் கண்டிருந்தனர். அவர்கள் உயிரை ஓரறிவுயிர் முதலாக ஆறறிவுயிர் இறுதியாகப் பகுத்துக் காட்டினர். இவை இவை ஓரறிவுயிர், இவை இவை ஈரறிவுயிர் என்றும் நிலைப்படுத்தியிருந்தனர். மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறிகளும், ஐயறிவுகளுக்கும் இடமானவை என்றும் மனம் ஆறாம் அறிவுக்கு இடமானது என்றும் தெளிந்திருந்தனர். அதனால்

"மாவும் மாக்களும் ஐயறி வினவே"

என்றும்,

"மக்கள் தாமே ஆறறி வுயிரே"

என்றும் சுட்டினர். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பவற்றின் வகையறிந்தார் வழியாகவே உலகம் இயல்கின்றது என்று தெளிந்தனர். ஓர் உயிர்மேல், மற்றோர் உயிர் செலுத்தும் அன்பாலும், அரவணைப்பாலும், உற்ற போது உதவும் உதவி யாலும் உயிர் தளிர்ப்புறும் என்றும் உணர்த்தினர்! இவற்றையும் தமக்கு முன்னே இருந்த மூதறிஞர்கள் கண்டு தெளிந்து உரைத்த தாக 'நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே' என்றும் குறித்தனர்.

உயிரை ஆய்ந்த பெருமக்கள் உடலையும் நன்கு ஆய்ந்தனர். உடல் என்னும் பெயரால் உழலுதலுக்கு-துன்புக்கு-இடமானது என்றும் தேர்ந்திருந்தனர். இருபதில் எழுச்சியும், முப்பதில் முறுக்கும், நாற்பதில் நழுவலும், ஐம்பதில் அசதியும், அறுபதில் ஆட்டமும், எழுபதில் ஏக்கமும், எண்பதில் தூக்கமும் எய்தும் எனப் பொது நிலையில் கணித்தும், 'நூறுவயது அல்லது இல்லை' என்று பொது நிலையில் குறித்தும் வைத்தனர். அழியும் உடலைக் கொண்டே அழியா நிலையைப் பெறக் கூடுமே யன்றி, உடலை விடுத்து அடையக் கூடாமையின் உடலுக்கு 'மெய்' என்று பெயரிட்டனர். நிலையாமைக்கு இடமாம் வாழ்வை நிலைக்கச் செய்வது பிறப்பின் பேறு ஆகலின் 'மெய்' என்று பெயரிட்டது தகவேயாம்! இதனை, மங்கல வழக்கெனக் கொள்வார் கொள்ளினும், உடலின் மெய்ந்நிலை கண்டு வைக்கப்பெற்ற பெயரே ஈதெனக் கொள்ளல் முறையாம்.

"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே"

என்னும் புறப்பாட்டு இதனைத் தெளிவிக்கும். நிலையாமை சுட்டும் இலக்கண இலக்கியச் செய்திகள் எல்லாம் பிற்காலப் போலித் துறவோர் கூறுவது போல, ஒப்பாரிப் பாட்டும் அன்று! புலம்பலும் அன்று! அழுகுணிச் செய்தியும் அன்று! அழியும் வாழ்வைக் கொண்டு அழியாப் பேற்றை அடைதற்கு வலியுறுத்திக் கூறிய வாய்மொழிகளேயாம். "சாவா உடம்பினவர்" என்றும், "உளதாகும் சாக்காடு" என்றும் மேலோர் ஆட்சிகள் உண்மை இதனை வலியுறுத்தும்.

இனி அந் நாளில் பிறர் பிறர் அறிவு ஐந்தின் மேல் இல்லை என்றாராக, ஆசிரியர் தொல்காப்பியனார். 'ஆறாம் அறிவு உண்டு' என ஆய்ந்து கூறியமை அருமைப்பாடு உடையதாம். மூலநூல் அவ்வாறு கூறியும், வழிநூல் செய்த நன்னூலார் ஐயறிவு அளவுடன் அமைந்தது அவர்மம் சமயக் கொள்கையில் நின்று உரைத்ததேயாம்!

உயிரியல் ஆய்வு இவ்வாறாக மெய்கண்டார் உயிர் உண்மையை வலியுறுத்த மேற்கொண்ட மேற்கோளைக் காணலாம். உயிர் உண்மையை வலியுறுத்துவதற்கு அவர், ஆழ்ந்து அகன்று நுணுகிச் செல்கிறார். உடலின் தோற்றரவை உரைத்து அதன் கண் உயிர் உறைகலை ஏழு வகையாகப் பகுத்துக் காட்டித் தெளிவிக்கிறார். அவர் கூறும் மூன்றாம் நூற்பா :

"உளதுஇல தென்றலின்; எனதுடல் என்றலின்;
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின்; கண்படில்
உண்டிவினை இன்மையின்; உணர்த்த உணர்தலின்;
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா".

'ஆன்மாவின் இருப்பிடம் இது' என்றும், 'ஆன்மா இருப்பை அறியும் வகை இவை' என்றும் இந் நூற்பாவில் உரைக்கிறார்.

**மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா :**

*ஆன்மா என்பது உயிர். அதனை ஆதன் என்றும் கூறுவர்; ஆதன் எங்கே உள்ளது? "மாயா இயந்திர தனுவினுள் உள்ளது". அதாவது, பொறிகளின் கூட்டத்தால் அமைந்த இவ்வுடலுக்கு முதற் காரணமாக இருப்பது மாயையாம். மாயையின் செயலால், பொறிகளையுடைய உடல் வாய்த்தது. அவ் வுடற்கண் ஆதன் உள்ளது என்பது இத் தொடரின் பொருளாம். இயந்திரம் = பொறிகள்; தனு = உடல்.*

*'இவ்வுடலே ஆன்மாவோ' என ஐயுறுவார்க்கு அல்லது கொள்கையாக உடையார்க்கு-இவ்வுடல் ஆன்மா அன்று; உடலினுள் வேறாக ஆன்மா உண்டு என்றார். உடற் பொறியே ஆன்மா எனின் பிணத்திடத்தும் கூட உடற்பொறி உண்டன்றோ! உயிரின் அறிவு விருப்பு செயல் அப் பிணத்தில் இல்லையே! ஆதலால் பொறிகளின் வேறானதே ஆன்மாவாம் என்றார்.*

**ஆன்மா உளது :**

*இந்நூற்பாவின் இறுதியில் நிற்கும் சொல் 'ஆன்மா; முதற் கண் நிற்கும் சொல் 'உளது'; இரண்டும் இணைய, 'ஆன்மா உளது' என்னும் முடிநிலை வரும். வில்லை வளைத்து அதன் முடியையும் அடியையும் நாணாற் பூட்டி வைத்தாற் போன்ற அமைப்புடையது இது!*

*அந்தம் ஆதியாம் இறைமையைச் சுட்டியுரைத்த ஆசிரியர், உயிருக்கும் முடிவின்மை யறிந்து அல்லது அழிவிலா வட்டச் சுழற்சியறிந்து அமைத்துக்கொண்ட அமைப்பு எனக் கொள்ளினும் கொள்ளத் தக்கதாம். இனி, இவ்விறுதி முதல் இணைப்பை, ஒவ்வொரு கருத்துத் தொடரொடும் இணைத்துக் கொண்டு சொற்சுருக்கிப் பொருள் பெருக்கி கொண்டமை மெய்கண்டார் யாப்பறி மேதகைமையை வெளிப்படக் காட்டுவதாம். இணைப்பு அழகை இனிது காண்க.*

### இலது என்றலின் ஆன்மா உளது :

'இல்லதற்கு இல்லை பெயர்' என்பது பழமொழி. இல்லாத ஒன்றற்குப் பெயர் எப்படி இருக்கமுடியும்? 'பாழ்' என வான் வெளியைக் குறிக்கின்றனர்! வெளியாக இருத்தல் உண்மை யால் தானே அதற்கொரு பெயர் வைத்தனர்? அவ்வாறே 'உயிர்' என ஒருபெயர் உண்மையாக இருக்கும்போது, அதனை 'இல்லை' என்று எப்படிச் சொல்லலாம்? 'இல்லை' என்று ஒன்று சொல்லு மானால், அதனைச் சொன்னது எதுவோ, அதுவே உயிர்தானே! இல்லை என்று சொன்னதே உயிர் உள்ளது என்பதனை விளக்கு கின்றது அல்லவா! இவ்வாறு 'இல்லை' என்பாரைக் கொண்டே, உயிர் உண்டு என்பதை எடுத்த எடுப்பிலே நிலைப்படுத்தினார் ஆசிரியர். இல்லை என்று கூறுவார் உளரா? உடல், உயிர் இல்லை; பொறிகள், உயிர் இல்லை; மனம், உயிர் இல்லை- இப்படி ஒவ்வொன்றாய்ப் பார்த்தால் 'உயிர் இல்லையே' என்று சொல்வார் இருந்தனர்! அதனால் அவர்க்கு மறுமொழியாக 'இலது என்றலின் ஆன்மா உளது' என்றார்.

### எனதுடல் என்றலின் ஆன்மா உளது :

உடலைப் பிரித்துப் பிரித்துப் பார்த்து ஆன்மா இல்லை என்பார் சிலராக, சிலரோ உடலையே ஆன்மா எனக் கொண்டனர். ஆனால், உடல் ஆன்மா ஆகுமோ எனின் இல்லையாம். உடலே ஆன்மாவாக இருந்தால், 'எனது உடல்' என்று சொல்ல வேண்டுவது என்ன? 'எனது' என்று உரிமை கொண்டது எதுவோ, அதுவே யல்லவோ ஆன்மா? ஆதலால், எனதுடல் என்று சொல்லுமுகத்தானே உடல், ஆன்மா இல்லை என்றும், அதனை உரிமை கொண்டாடும் ஒன்றே ஆன்மா என்றும், தெளிவாகின்றதே என்பாராய் 'எனதுடல் என்றலின் ஆன்மா உளது' என்றார்.

### ஐம்புலன் அறிதலின் ஆன்மா உளது :

ஐம்பொறிகள் என்பவை மெய் வாய் கண் மூக்கு செவி என்பன. ஐம்புலன்கள் என்பவை ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்பன. மெய்யில் ஓரிடத்தில் தேனை வைத்தால் அதன் இனிமை புலப்படுமோ? அதனை நாவில் வைத்தால் அல்லவோ சுவை தெரிகின்றது? கண்ணில் ஒளி தோன்றுகின்றது. அதே கண்ணில் சுவையோ நாற்றமோ கேள்வியோ தெரிவதில்லையே? செவியில் ஓசை கேட்கின்றது. ஒளியோ சுவையோ நாற்றமோ புலப்படுவது இல்லையே! ஒவ்வொரு புலனும் ஒவ்வொன்றைத் தானே உணர

வல்லனவாய் உள்ளன? ஆனால் ஐம்புல உணர்வையும் ஒருங்கே அறிந்துகொள்ளும் ஒன்று இருக்கிறதே! அதுவே ஆன்மாவாம்; என்பாராய் 'ஐம்புலன் அறிதலின் ஆன்மா உளது' என்றார்.

**ஒடுக்கம் அறிதலின் ஆன்மா உளது :**

ஆசிரியர், 'ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் ஆன்மா உளது' என்றாராயினும், அதன் பொருட்பாடு கருதி, 'ஐம்புலன் அறிதலின் ஆன்மா உளது' என்றும், 'ஒடுக்கம் அறிதலின் ஆன்மா உளது' என்றும், பிரித்து இணைத்துக் கொள்ள வேண்டியதாயிற்றாம்! செறிவாகவும் செம்மையாகவும் கூறுதல் ஆசிரியர் கடைப்பிடி யாகலின், அவர்தம் செந்நெறியுணர்ந்த உரையாசிரியர்கள் இவ்வாறு பிரித்து இணைத்துக் குறைவிலா நிறைவுரை கண்டன ராகலின் அவர் முறையே முறையாய் உரை வகுக்கப்பெற்ற தென்க.

ஒடுக்கம் என்பது நுண்ணுடல். அதனை வடமொழியாளர் 'சூக்கும உடம்பு' என்பர். கனவின்கண் பருவுடல் எங்கோ ஓரிடத்திருக்க, நுண்ணுடல் எங்கோ ஒரு காட்சியைக் கண்டு உணர்ந்து கொள்கின்ற தன்றோ! அந்நுண்ணுடல் காட்சியை விழித் தெழுந்த காலை, பருவுடல் கண்டதாகக் கூறுவது வழக்கம் அல்லவோ? அவ்வாறாயின் நுண்ணுடல் காட்சியைப் பருவுடற் காட்சியாக்கிக் காட்டத் தக்க ஒன்று உள்ளது அன்றோ! அவ்வொன்றே ஆன்மாவாம், என்பாராம் 'ஒடுக்கம் அறிதலின் ஆன்மா உளது' என்றார்.

**கண்படில் உண்டிவினை இன்மையின் ஆன்மா உளது :**

கண்படில் என்பது உறங்குதல்; உண்டிவினை என்பது இன்ப துன்ப நுகர்வுகள். உறங்காமல் விழித்திருக்கும் போதில், இன்ப துன்ப நுகர்வுகள் உண்டாகின்றன. உறங்கும்போது இன்ப துன்ப நுகர்வுகள் உண்டாவது இல்லை. ஆனால், விழித்திருக்கும் போது எந்த மூச்சுக்காற்றை உள்ளிழுத்து வெளி விட்டோமோ, அதே மூச்சுக் காற்றே உயிர் என்றால் விழிப்பின்னோது உண்டாகிய இன்ப துன்ப நுகர்ச்சிகள் உறக்கத்தின் போதும் தோன்ற வேண்டும் அல்லவோ? அவ்வாறு தோன்றாமையால் மூச்சுக் காற்றின் வேறாக உயிர் இருக்கவேண்டும் என்பது தெளிவாம். இதனைக் கருதியே உண்டிவினை இன்மையின் ஆன்மா உளது என்று ஆசிரியர் தெளிவித்தார். ஒடுங்கிய இடத்திலும் ஒடுங்காத இடத்திலும் இன்ப துன்பங்களை அறிவதே உயிர் என்பதால் மூச்சுக்காற்றே உயிர் என்பது பொருந்தாது என மறுத்தார்.

**உணர்த்த உணர்தலின் ஆன்மா உளது :**

"இறைவனுக்கு எண்ணிறந்த தன்னியல்புக் குணங்கள் உள. அவற்றுள் இரண்டு குணங்கள், தானே அறிகிற குணமும், ஆன்மாவிற்கு அறிவிக்கிற குணமுமாம்."

"ஆன்மாக்களுக்கு எண்ணிறந்த தன்னியல்புக் குணங்கள் உள. அவற்றுள் இரண்டு குணங்கள், அறிவித்தால் அறிகிற குணமும், தானாகப் பிறருக்கு அறிவிக்க மாட்டாத குணமுமாம்" என முப்பொருள் ஆய்வு நூல் (திரி பதார்த்த சிந்தனை) மொழியும். ஆதலால், உணர்த்தாமலே உணரவல்ல இறையறிவே (சைதன்யமே) உயிர் எனின், ஆன்மாவிற்கு எதையும் தானே அறியும் திறம் இல்லையே; அறிந்தோர் அறிவிக்கவே அறியும் குறையும் உடையதாமே? இவ்வாறாக இறையறிவே உயிர் என்பது பொருந்தாதாம். ஏனெனில் ஆன்மாவின் அறிவு, உணர்த்த உணரும் சிறுமையுடையது என்பாராய் 'உணர்த்த உணர்தலின் ஆன்மா உளது' என்றார்.

இவ்வாறு பகுத்தும் பிரித்தும் ஆசிரியர் உயிருண்மையை விளக்கவேண்டுவது என்ன?

சிலர், ஆன்மா என்பதொன்றே இல்லை என்றனர்; சிலர், உடலே ஆன்மா என்றனர்; சிலர், பொறிகளே ஆன்மா என்றனர்; சிலர், நுண்ணுடலே ஆன்மா என்றனர்; சிலர் மூச்சுக் காற்றே ஆன்மா என்றனர்; சிலர், இறையறிவே ஆன்மா என்றனர்; சிலர், உடல் முழுமையும் கூடிய ஒன்றே ஆன்மா என்றனர். இவ்வெழுவர் தம் கொள்கைகளை முறைமுறையே மறுத்து அவற்றின் வேறாம் ஆன்மாவின் உண்மை காட்டுவாராய் இந்நூற்பாவை மெய்கண்டார் அருளினார் என்க.

இதுவரை கண்ட மூன்று நூற்பாக்களிலும் இறைவன் ஒருவன் உளன் என்றும், அவன் உலகுக்கு அந்தமும் ஆதியுமாக இருக்கிறான் என்றும், இறைவன் உயிர்களேயாகியும், உயிர்களுக்கு வேறாகியும், உயிர்களுக்கு உடனாகியும் இருந்து திருவருள் ஆணையால் பிறப்பு இறப்புகளைச் செய்விக்கின்றார் என்றும், உயிரென்பது உளது என்றும், அவ்வுயிர் இல்லதோ, உடலோ, பொறியோ, நுண்ணுடலோ, மூச்சோ, இறையறிவோ, உறுப்புத் தொகுதிகளோ அன்று; அவற்றின் வேறானது என்றும் உரைத்தார். மேலும் உயிரைத் தொடர்ந்து ஆய்கின்றார்.

# நான்காம் நூற்பா

*உயிர்களுக்கு அமைந்துள்ள மெய், வாய், கண், மூக்கு, செவி என்பவை அறிவு பெறுவதற்காக அமைந்த கருவிகள். ஆகலின் இவ்வைந்தையும் 'அறிகருவி' என்பர். இவற்றின் வேறாகச் சில கருவிகளும் உள. அவை வாய், கால், கை, மலவாய், நீர்வாய் என்பன. அவை பேசுதல், நடத்தல், புரிதல் முதலிய செயல்களுக்கு உரியவை. ஆதலால் அவற்றைச் 'செயற்கருவிகள்' என்பர். உயிர்கள் அறிவுறுதற்கும் செயலாற்றுவதற்கும் இவ் வறிகருவிகளும், செயற் கருவிகளும் இன்றியமையாதவை.*

*இவ்விருவகைக் கருவிகளும் உருவுடன் வெளிப்படத் தெரிபவை. இவ்வாறு ஒருவுடன் வெளிப்படத் தெரியாமல், அருவமாய்த் தோன்றும் உட்கருவிகளும் உள. அவற்றையும், நுண்ணிய மெய்ப் பொருள் ஆய்வாளர்கள் கண்டறிந்து இவையெனக் கூறியுள்ளனர். அவை, 'மனம், நினைவு, முனைப்பு, அறிவு' (மனம், சித்தம், அகங்காரம், புத்தி) என்பன.*

*மெய் முதலிய அறிகருவிகளின் வாயிலாகக் காணப்படு பவற்றைப் பற்றுவது, மனம்; அவற்றை இவை எனச் சிந்திப்பது, நினைவு; சிந்தித்தவற்றை இவையெனத் துணிவது, முனைப்பு; துணிந்தவற்றைத் தன்னிடத்து அமைத்துக்கொள்வது, அறிவு. இவை ஒன்றின் ஒன்று வளர்நிலையில் அமைந்தவை.*

*அறிகருவி செயற்கருவிகளையுடைய உடற்பகுதி, 'உருமண்டலம்' என்றும், மணம், நினைவு, முனைப்பு, அறிவு ஆகிய உட்கருவிப் பகுதி, 'அறிவு மண்டலம்' என்றும் கூறப்படும். இவ்விரண்டையும் சேர்த்து 'ஆன்மவியல்' (ஆன்மதத்துவம்) எனப்படும். இவற்றின் வேறாகக் கலையியல் (வித்தியாதத்துவம்) இறையியல் (சிவதத்துவம்) என்பனவும் உண்டு.*

*கலையியல் நுண்ணுடலுக்கு உள்ளாய் உயிரைச் சூழ்ந்து நிற்பது என்றும், இறையியல் உயிர்க்கு மேலாய்த் திருவருள் தோய்தற்கு வாயிலாக இருப்பது என்றும் மெய்ப்பொருள் கண்டார் கூறுவர்.*

இனி, அவை தொழிற்படுமாற்றையுந் தெளிவிப்பர். "இறைவன் திருவருளாற்றல், இறையியல் வழியாக உயிரின் அறிவு விருப்பு செயல் என்னும் மூவகை ஆற்றல்களையும் விளங்கச் செய்யும்; இறையியல் வழியாக வரும் அவ்வருளாற்றலே உயிரியலையும் கலையியலையும் தொழிற்படுத்தும்" என்பது அது.

இவ்விடத்தே சில குறியீடுகளை அறிந்துகொளல் நலம். பொறிகளுக்குப் புறக்கருவிகள் என்பதும், மனம் முதலிய வற்றுக்கு அகக் கருவிகள் அல்லது உட்கருவிகள் (அந்தக்கரணம்) என்பதும், அவற்றிற்கும் உள்ளால் இருக்கும் கலையியலே 'உள்ளகக் கருவி' என்றும், அதற்கும் உள்ளால் இருக்கும் உயிரை 'உள்ளம்' (உள்ளகம் என்பதன் தொகுத்தல்) என்றும் கூறுவர்.

திருவருள் கூட்டலால் கலையியல் தொழிற்பட்டு உயிரியல் இயக்கமுறுதல், ஒன்றன் ஒன்று தொடர்புடைய சக்கரங்களைக் கொண்டு இயங்கும் கடிகார அமைப்புப் போன்றதாம். ஓரிடத்து ஏற்படுத்தும் முடுக்கம் அடுத்ததை இயக்கி, அது பிறிதொன்றை இயக்கித் தொழிற்படச் செய்வதுபோலாம். இவ்விடத்தே, உயிர்க்கலன் (Cell) நுண்மையும் அதன்படிப்படி விரிவாக்கமும் அதனுள் அடங்கிக்கிடக்கும் உறுப்புகளின் அமைதியும் எண்ணத் தக்கவையாம். ஆலம்விதையுள் அதன் அத்தனை பகுதிகளும் அடங்கிக் கிடக்கின்றன அல்லவோ! அதனால் அன்றே 'ஆலமர் வித்தின் அருங்குறள்' என்பதன் வழியாகக் கம்பர் திருக்குறளையும், திருமால் குறளையும் இணைத்து இரட்டுறலாக்கிக் கூறினார். இனி, நான்காம் நூற்பாவையும் அதன் பொருள் இயைவையும் காணலாம்.

அந்தக் கரண மவற்றினொன் றன்று; அவை
சந்தித்த தான்மா; சகசமலத் துணராது;
அமைச்சர சேய்ப்பநின் றஞ்சவைத் தைத்தே.

என்பது நூற்பா.

மூன்றாம் நூற்பாவிற் கூறிய ஆன்மா பற்றியதே இந்நூற் பாவுமாம். அந்நூற்பாவிற் கையாண்ட உத்தியையே இந்நூற்பா விலும் கையாண்டு உரைக்கின்றார் ஆசிரியர். ஈற்றில் நின்ற 'ஆன்மா' என்பதை, 'இலது என்றலின் ஆன்மா உளது' என்பன போல் இயைத்தவாறே. இந்நூற்பாவின் இடையில் நின்ற ஆன்மாவை முன்னும் பின்னும் இணைத்துக் கொள்கிறார். இடைநிலை விளக்கு என்னும் அணியின் வகையைச் சேர்ந்தது இவ்வமைப்பாம்.

**ஆன்மா அந்தக்கரணமவற்றுள் ஒன்று அன்று :**

'இதுவே ஆன்மா' 'இதுவே ஆன்மா' என்று பலவகையாய் உரைத்த மெய்ப்பொருளாய்வாளர்க்கு, 'அது அன்று'; 'அது அன்று'; 'அவற்றின் வேறானது ஆன்மா' என்று மறுமொழி தந்த ஆசிரியர், அகக் கருவிகளாம் அந்தக் கரணமே ஆன்மா என்று கூறுவாரை மறுத்தற்கு, "அந்தக் கரணமவற்றின் ஒன்று அன்று" என்றார்.

மனம் நினைவு முனைப்பு அறிவு என்னும் அகக் கருவிகளை ஆன்மா தன் செயலுக்குக் கருவியாகக் கொண்டுள்ளதேயன்றி, அவற்றில் ஒன்றாகவோ, அவையெல்லாமுமாகவோ அது அமைந்து விடவில்லை என்றார். ஆன்மாவின் அறிகருவியாய் இயக்கமாவதே அகக் கருவிகள் ஆகலான் அவற்றை ஆன்மாவெனல் ஆகாதாம் என்றார்.

**அவை சந்தித்தது ஆன்மா :**

அகக் கருவிகளைக் கூடிநின்றதே ஆன்மாவாம். கூடுவதும் கூடிநின்ற இடமும் வேறாவது போலவும், கருவியும் கருவியுடையானும் வேறாவது போலவும் அகக் கருவிகளும் ஆன்மாவும் வேறாம். ஆயினும் அவை கூடிநிற்கும் குறியால் மயங்கி அகக் கருவிகளே ஆன்மா என்பார் உளர் எனத் தெளிவித்தார். ஆன்மா அகக் கருவிகளைச் சந்தித்தலை 'அஞ்சவைத்தைத்தே' என்பார்; அதன் விளக்கம் மேலே காண்பாம்.

**ஆன்மா சகசமலத்து உணராது :**

ஆன்மா, என்று உளதோ அன்றே மலமும் உளது. அதனை 'மலத்துளதாம்' என்று முதல் நூற்பாவிலேயே ஓதினார் ஆசிரியர். அம்மலத்தின் அல்லது மறைப்பின் இயல்பை உணர்த்துவாராய்ச் 'சகச மலம்' என்றார். சகசமலமாவது தொல்பழந் தொடர்பான அல்லது இயற்கையான மலமாம். இதனைக் களிம்பு, மறைப்பு, மாசு, அழுக்கு, மாயை, இருள் எனப் பல சொல்லால் சுட்டுவர். ஆன்மாவுக்கு இயல்பான மலத்தால், தானே அறிதல் இல்லாமல் அறிகருவிகளைத் துணையாகக் கொண்டு அறியும் என்று கூறினாராம். அறிகருவிகளோடு ஆன்மா சந்தித்துக் கடமை புரிதலால் ஒன்றனைப் பற்றி, சிந்தித்து, துணிந்து, அறிந்து கொள்கின்றதாம்.

இம்மலம் தொல்பழந் தொடர்பினது எனினும், மாந்தர்தம் நிலைக்கு ஏற்ப மூன்று நிலைகளையுடையதாம். மயக்கம், எழுச்சி, அமைதி (தாமசம், இராசதம், சத்துவம்) என்னும் முக்குண

*நிலைப்பட்டார்க்குத் தக மலமும் மூன்று நிலைகளில் அமைகின்றது.*

*மயக்க நிலையுடையவர்க்கு மறைப்பு மிகத் தடிப்பானது. விறகில் உள்ள தீயைப்போல இவர்களுக்கு உண்மைப் பொருள் மிக மிக வெளிப்படாததாக இருக்கும்.*

*எழுச்சி நிலையுடையவர்க்கு மறைப்பு தடிப்பானது. கண்ணாடியின் ஒளியை மறைத்துள்ள அழுக்குப்போல்வது அது. முயற்சியால் அம் மறைப்பை நீக்கி உண்மைப் பொருளைக் காணக்கூடும்.*

*அமைதி நிலையுடைவர்க்குரிய மறைப்பு மென்மையானது. புகையின் நடுவே தீ இருப்பதுபோல இருப்பது. எளிய முயற்சி யால் மறைப்பை நீக்கி மெய்ப்பொருள் காணலாம்.*

*பசையூட்டிய இரட்டு, இயல்பான இரட்டு, துகில் என்னும் மூவகைத் துணிகளையும் முறையே ஊடுருவிப் பார்க்கும் பார்வை போன்றது. மயக்கம், எழுச்சி, அமைதி என்னும் முக்குண நிலைப்பட்டாருக்கும் உள்ள மறைப்பு எனலாம்.*

**அமைச்சு அரசு ஏய்ப்ப நின்று அஞ்சவைத்தைந்து :**

*அகக்கருவிகளும் ஆன்மாவும் அமைச்சர்களும் அரசனும் போல நின்று ஐந்து படிநிலைகளையுடைதாம். அமைச்சு- அமைச்சர்; அமைச்சு என ஒருமையாற் சுட்டினும் அகக் கருவிகள் பலவாயினாற் போல அமைச்சர் பலராதல் கொள்ளல் முறையாம். அவ்வவ்வமைச்சரைத் தழுவியும் நெருங்கியும் சூழ்ந்தும் அறிபொருளை அறிந்துகொள்ளும் அரசனைப்போல அறி கருவிகளை அடுத்து நெருங்கி ஆன்மாவும் அறிவினைக் கொள்ளும் என்பதாம்.*

*அவத்தை என்பது 'நிலை' என்பதாம். அஞ்சு = ஐந்து. உயிர் நிற்கும் நிலைகள் ஐந்து; புருவநடு, கழுத்து, மார்பு, உந்தி, மூலம் என்பன. இவ்விடங்களில் உயிர் நிற்கும் நிலை முறையே, நனவு (சாக்கிரம்), கனவு (சொப்பனம்), துயில் (சுழுத்தி), உறக்கம் (துரியம்), பேருறக்கம் (துரியாதீதம்) என்பனவாம்.*

*புருவநடு முதல் மூலம்வரை உயிர் கீழே இயங்கும் இயக்கமும், மூலம்முதல் புருவநடுவரை மேலே இயங்கும் இயக்கமும் என உயிர் இயக்கம் இருவகையாம். இவை முறையே கீழால் நிலை, மேலால் நிலை எனப்படும்.*

ஐந்துநிலை மாடத்தில் ஏறும் ஒருவன் மாடந்தொறும் நின்று நின்று ஏறியும், நின்று நின்று இறங்கியும் காணும் காட்சிபோல மேலால் நிலை, கீழால் நிலைகளைத் தெளிக. இந் நாளில், மாடிதோறும் நின்று நின்று இயங்கும் தூக்கி (Lift) யுண்மை தக்க எடுத்துக்காட்டாம்.

அரசன், படைத்தலைவர் முதலானவர்களோடு கூடி, உலாப்போந்து மாளிகை புகும்போது வாயில்கள்தோறும் அவரவர்களை நிறுத்தி, காவலும் வைத்து அந்தப்புரத்தினில் தனியே செல்வதைப் போல ஆன்மா உடலின் அகக் கருவிகளில் இருந்து நீங்கி உயிர்க் காற்றைக் காவலாக நிறுத்தி ஐந்துநிலை கொள்ளும் என்று முன்னை உரையாளர்கள் விளக்குவர்.

உயிர் அகக்கருவிகளில் படிந்து படிந்து செல்லுதலைத் தென்றல் காற்றொடும் இணைத்துக் காண்டலும் இன்பம் பயப்பதாம்.

தென்றல் சோலையில் நுழைந்து, குளத்துள்புகுந்து, தாமரை மலரைத்தழுவி, இருள்வாசி மல்லிகை முல்லை மலர்ப்பந்தர் களில் தாவி, தேனும் மணமும் நுகர்ந்து, தண்மை மென்மை நறுமையுடையதாய் அறிவன்போல் (ஆன்மாபோல்) இயங்கும் என்பதாம்.

ஆதன், ஓர்ப்பன், அறிவன் என்னும் பெயர்கள் ஆன்மாவுக் குரியன என்பதை உணர்வார், ‘அறிவனபோல் இயங்கும் தென்றலை’ மேலால்நிலை, கீழால்நிலை உயிர் இயக்கங்க ளொடு ஒப்பிட்டு மகிழ்வர்.

தேனீ, வண்டு, தும்பி முதலியவை மலர்தொறும் அமர்ந்து தேன் நுகர்தல் போன்றது, உயிரின் கீழால்நிலை, மேலால்நிலை என்பவை என எண்ணி இன்புறலாம்.

இந்நூற்பாவினால் ஆன்மா மனம் முதலிய அகக் கருவிகளுள் ஒன்றன்று என்றும், அவ்வகக் கருவிகளொடு கூடிநின்று கடனாற்றும் தன்மையது என்றும், அதுதன் தொல்பழ மலத் தொடர்பால் தானே அறிதல் இன்றி, அகக்கருவிகளின் துணை கொண்டு அறியும் என்றும், அது மேலால்நிலை கீழால் நிலை என்னும் நிலைகளில் ஏறி இறங்கி நிற்றல் அமைச்சர்களோடு அளாவி நிற்கும் அரசன்நிலை போல்வது என்றும் அறியப்பட்டதாம்.

ஐம்பூதம், ஐம்பொறி, ஐம்புலன், ஐந்துநிலை என்பவற்றின் ஒழுங்கு நிலையும் எண்ணத்தக்கதேயாம். ஐம்பேரவைக்கும் ஐம்பேரமைச்சிருந்த பண்டை ஆட்சிநிலையும் அறியத்தக்கதே.

## ஐந்தாம் நூற்பா

அறிந்த ஒன்றனைக் காட்டி அறியாத ஒன்றனை விளக்குவது, தெளிவுறுத்த விரும்புவார் எவருக்கும் வழக்கம். காட்டு எருமை காணா ஒருவனை, வீட்டு எருமை காட்டி 'இதுபோல்வது' என்று விளக்குவது போன்றதாம். இந்நெறியில் மெய்கண்டார் நான்காம் நூற்பாவில் சுட்டிக்காட்டிய பொருளை நினைவூட்டி அதன் வழியாகவே புதிய கருத்தை வலியுறுத்து வாராயினார்.

'விளம்புவது உள்ளத்து' என நூற்பாவைத் தொடங் கினார். 'சொல்லிய உள்ளத்தை'என்பது இதன் பொருளாம். உள்ளத்தையோ நான்காம் நூற்பாவில் கூறினார்? உயிரைப்பற்றி யல்லவோ கூறினார் எனத் திகைப்பு உண்டாகின்றது. இத் திகைப்பு கற்பார்க்கு ஏற்படல் ஆகாது என்றே 'தனுவினுள் ஆன்மா' என்று மூன்றாம் நூற்பாவில் குறித்தார். உள்ளின் உள்ளாக இருக்கும் உயிர்க்கு 'உள்ளகம்' என்று பெயர்; அது உள்ளம் எனவும் சொல்லப்படும். இதனை நான்காம் நூற்பா முகப்பிலும் உண்டோம்.

வையகம், வானகம், கானகம் என்பவை வையம், வானம், கானம் என வழங்குவனபோல், உள்ளகம் என்பது உள்ளம் என வழங்குகின்றதாம். 'ஓர்த்து உள்ளம் உள்ளது உணரின்' என்னு மிடத்தே பொய்யாமொழியாரும் உயிரை 'உள்ளம்' என ஆட்சி செய்துள்ள உண்மையை அறியலாம்.

ஆகலின், விளம்பிய உள்ளத்து என்பது முன்னே சொல்லிய உயிரை என்னும் பொருள்தருதல் விளங்கும்.

**"மெய் வாய் கண் மூக்கு அளந்து அறிந்து அறியா"**

வெற்றிலைபாக்கு என்ற அளவானே அதனொடு சுண்ணாம்பும் சேர்தல்போல, மெய் வாய் கண் மூக்கு என்ற அளவானே செவியையும் இணைத்துக்கொள்க. கற்பார் எளிமை யாகக் கண்டுகொள்ளத் தக்கவற்றைச் சுட்டிய அளவானே போதுமென்பதும், கற்பார் படிநிலை உயர்வைப் பளிச்சிடச் செய்தற்கும் இத்தகு உத்திகளை நல்லாசிரியர் கருதுவர் என்பதும் ஆய்வாளர் அறிந்ததே.

அறிகருவிகளாக இருக்கும் மெய், வாய், கண், மூக்கு, செவி என்பவை அளந்து அறிந்து அறியா என்றது என்ன? அறிந்தும் அறியாமை அதற்கு உண்டா? அறிவுறுதற்குக் கருவியாம் அவற்றுக்கே அறியாமை உண்டாயின், அறிந்துகொள்ள வகை தான் என்ன? என வினாவுதல் நிகழும். ஆயின் உண்மை ஈதேயாம்.

யானை, பெரியதே! வலியதே! விலைமானமும் மிக்கதே! ஏழைந்துக்குமேல் இரண்டு உயர்ந்த யானை-37 பெயர்களுடைய யானை-எனப் பாராட்டப்படுவதே! எனினும் என்ன? அதற்கு 'யானை' என்பது தன் பெயர் எனத் தெரியுமா? அவ்வாறே மெய் முதலியவையும் அளந்து அறிந்தும் அறியாவாம்.

இனி எதை அறியா? என்னும் வினாவுதல் எழும்.

மெய் வாய் முதலியவை உயிரின் துணையால் அல்லவோ ஒன்றை அறிகின்றன! உயிர்த் துணை இன்றி அறியக் கூடுமானால், உயிர் பிரிந்துபோன பின்னரும் மெய் வாய் முதலியவை ஊறு சுவை முதலியவற்றை அறிய வேண்டுமே! அவ்வாறு அறியக் காணாமையால் உயிர்த் தொடர்படைய அளவானே தாம். அவை அறி கருவிகளாக உள்ளன என்பது விளங்கும். ஆனால், அதனை மெய் முதலியவை அறிகின்றனவோ எனின் இல்லையாம். அன்றியும், தம்மையேனும் அறிகின்றனவோ எனின், அதுவும் இல்லையாம்! தம்மையும் அறியாமல் தம்மை இயக்கித் தொழிற் படுத்தும் ஆன்மாவும் அறியாமல் இருக்கும் குறைபாடு அவற்றுக்கு உண்மையால், ஆசிரியர் 'அளந்து அறிந்து அறியா' என்றார்.

விளம்பிய உள்ளத்து என்று உயிரைப்பற்றி உரைக்கத் தொடங்கிய ஆசிரியர் பொறிகளைப்பற்றி உரைப்பானேன் எனின், இப்பொறிகள் எப்படிக் குறையுடையனவோ அப்படிக் குறையுடையதே உயிரும் என்பதை நிறுவுவதற்காக உவமையாக எடுத்துக்காட்டப் புகுகின்றாராம். அதனை அடுத்துச் சுட்டு கின்றார்.

**ஆங்கவை போலத் தாம், தம் உணர்வின் தமி அருள் (அறியா) :**

மெய் வாய் முதலிய கருவிகள்போல உயிர்களாகிய தாம், தம் அறிவால் இறைவன் திருவருளை அறியமாட்டா என்பது பொருளாம். 'அறியா' என்பதை உயிருக்கும் கூட்டப் பெற்றதாம். ஊசல் இருபாலும் அசைவது போலவும், கடிகாரத் தொங்கல் இருபாலும் அசைவதுபோலவும், ஓரிடத்து நின்ற 'அறியா' என்னும் சொல், ஈரிடத்தும் சென்று இயைந்து பொருள் தந்ததாம். இதனை யாப்பியலார் 'தாப்பிசைப் பொருள் கோள்' என்பர்.

*மெய் முதலிய பொறிகள் தம்மையும் அறியா, தம்மை இயக்கும் உயிரையும் அறியா என இருவகை அறியாமை உடைத்தெனக் கண்டோமே; உயிருக்கும் அத்தகைய இருவகை அறியாமையும் உண்டோ எனின் உண்டு என்பதை உறுதி செய்வதற்காகவன்றோ ஆசிரியர் 'ஆங்கவை போல....அறியா' என்றார். உயிரும் தன்னையும் அறியாது, தன்னையுடைய தலைவனையும் அறியாது என்பதாம். ஆயின் எந்நிலையிலும் உயிர் தன்னையும் தன்னையுடையானையும் அறியாதோ எனின் மெய்ப் பொருளாய்வால் எத்தகு பயனும் இல்லையாம்; பிறவிப் பயனென ஒன்றும் இல்லையாம்; உயிர் அவற்றை அறியுமாற்றை மேல்வரு நூற்பாக்களில் உரைப்பார். இவண் உயிர்க்குள்ள இரண்டு தன்மைகளை அறிந்துகொள்ளல் சாலும். அவை : அறிவித்தால் அறிகிற தன்மை, தானாகப் பிறருக்கு அறிவிக்க மாட்டாத தன்மை என்பவை.*

*அறிவித்தால் அறிகிற தன்மை உயிருக்கு இருத்தலால், 'அறிவிப்பார் எவர்' என வினா வெழும். அதற்கு விடையாவார் இறைவனும், இறையருள் கூடினாருமாம் என்க.*

"தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தானிருந் தானே"

"அறிவு வடிவென் றறியாத என்னை
அறிவு வடிவென் றருள்செய்தான் நந்தி"

"என்னை யறிந்திலேன் இத்தனை காலமும்
என்னை யறிந்தபின் ஏதும் அறிந்திலேன்"

*என்னும் மறைமொழிகள் அறிய, அறிவிப்பாரும் அறிவுப்பேறும் அறியவரும்,*

"சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி
எனையாண்ட அத்தன்"

"தானேவந் தெனதுள்ளம் புகுந்
தடியேற் கருள் செய்தான்"

*என்னும் மணிமொழிகளும் அம்மறை மொழிகளை மெய்ப்பிக்கும்.*

**காந்தம் கண்ட பசாசத் தவையே :**

காந்தத்தால் கவரப்பட்ட இரும்பு போல ஆன்மாக்கள் இறையருளால் தம்மையும் தம்மையுடையானையும் உணரும் என்பதாம்.

காந்தம் இறையருளும், இரும்பு ஆன்மாவுமாம். கவர்வது காந்தம் என்பது கவரப்படுவது இரும்பு என்பது தெளிவே. கவரப் படுங்கால் காந்தம் அசைவுறுமோ இரும்பு அசைவுறுமோ என்பதை எண்ணின் காந்தம் அசையாதிருத்தலும், இரும்பு அசைதலும் விளங்கும். இறைவனின் அசைவின்மையையும், ஆன்மாவின் அசைவையும் உவமையால் ஆசிரியர் விளங்கச் செய்தார்.

காந்தத்தால் கவரப்பட்ட இரும்பை எண்ணும் நாம் கண்ணப்பரை எண்ணுதல் தகும். இறைவர் உறையும் மலைமேல் அவர் ஆர்வம் உந்த ஏறிச் செல்லும் செலவைச் சேக்கிழார், “பேணு தத்துவங்கள் என்னும் பெருகு சோபனம் ஏறி, ஆணை யாம் சிவத்தைச் சார அணைபவர் போல” என்றார். இறை வனைக் காணா முன்னே, “அருட்டிரு நோக்கம் எய்தத் தங்கிய பவத்தின் முன்னைச் சார்பு: விட்டகல நீங்கி”னார் என்று மேலும் தெரிவிக்கிறார். இறைவனைக் கண்ட பின்னர் “வங்கினைப் பற்றிப் போகா வல்லுடுப்பு போல” நீங்கா ராயினார் என உவமைப்படுத்துகிறார். இறை வழிபாட்டுப் பொருள் தேடுதற் குப் பிரிய நேருங்கால் “இனத்திடைப் பிரிந்த செங்கண் ஏறு” போலச் செல்வதையும், “மனத்தினும் கடிது மீள்வ”தையும் குறிக்கிறார். கண்ணப்பர் அருளில் தோய்ந்தமை, காந்தம் கண்ட பசாசம் போன்றதாம்.

தடுத்தாட் கொள்ளவந்த இறைவனைத் தொடர்ந்து சுந்தரர் செல்வதை,

“திருமுகக் காந்தஞ் சேர்ந்த வல்லிரும் பணைபு மாபோல்”

எனச் சேக்கிழார் கூறுவதும் இவண் கருதத் தக்கதாம்.

‘காந்தம் கண்ட பசாசம்’ என்பதற்கு காந்தத்தைக் கண்ட பசாசம் என்று பொருள் கொள்வதோ, காந்தத்தால் கண்டு கொள்ளப்பட்ட பசாசம் என்று பொருள் கொள்வதோ எனின், காந்தத்தால் கண்டுகொள்ளப்பட்ட பசாசம் என்பதேயாம். இறையருள் இல்லாக்கால் ஆன்மாவுக்குத் தன்னையறிதலும் தன்னையுடையானை அறிதலும் இல்லையென்பதைக் கண்டோமே?

“காண்பாரார், கண்ணுதலாய் காட்டாக் காலே”

என நாவரசர் நவின்றதை அறிந்தோமே!

"நானேயோ தவம்செய்தேன் சிவயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் னமுதமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானேவந்து எனதுள்ளம் புகுந்துஅடியேற் கருள்செய்தான்"

*என மணிமொழியார் கூறுவதும், அவரே,*

"இரும்புதரு மனத்தேனை ஈர்த்து ஈர்த்து"

*என்று உரைப்பதும் இவண் எண்ணத் தக்கனவாம்.*

*மரத்தில் இருந்து விழும் பழம், பக்கங்களிலோ மேலேயோ போகாமல் நிலத்தில் வீழ்தற்குப் பழமோ காரணம்? புவி ஈர்ப்பாற்றல் அன்றோ காரணம்! புவி ஈர்ப்பாற்றலே பழம் முதலியவற்றைத் தன்பால் ஈர்த்துக் கொள்ளுதல் போல் இறைவன் திருவருளே காந்தமாய், ஆன்மாவாம் இரும்பை ஈர்த்துக் கொண்டதாம்.*

*ஈர்ப்பாற்றல் ஒன்று இல்லை என்பதை எண்ணுவோம். அப்பொழுது செயற்பாடுகளும் இயக்கங்களும் எப்படி இருக்கும்? பொருள்கள் எல்லாம் எங்கே எப்படி இருக்கும்? ஈர்ப்பாற்றல் இல்லையேல் அண்டங்கள் எல்லாம் ஒன்றோடு ஒன்று மோதிக் கொள்ளாமல் இயலுமோ? உலகத் தோற்ற ஒடுக்கங்கள் தாமும் ஈர்ப்பாற்றல் இல்லையேல் நிகழ்வதுண்டோ? ஈர்ப்பாற்றல் தானே கோடி கோடிப்பேரை ஒருவர்பால் சேர்த்து அவர்வழி நிற்க வைத்து ஆளாக்குகின்றது?*

*இனி, இந்நூற்பா வருமாறு*

"விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்கு
அளந்தறித் தறியா; ஆங்கவை போலத்
தாம்தம் உணர்வின் தமியருள்
காந்தம் கண்ட பசாசத் தவையே"

*இதன் தொகு பொருள்; "மெய்வாய் முதலிய அறிகருவிகள் ஆன்மாவின் துணையால் பொருள்களை அறிகின்றன. அவ்வாறு அறியுமாயினும் அவை தம்மையும், தம்மை அறியச் செய்விக்கும் ஆன்மாவையும் அறியமாட்டா. அவற்றைப் போலவே ஆன்மாவும் திருவருள் துணையால் வினையாற்றி வினைப்பயனை நுகர்கின்றது. எனினும் அது, தன்னையோ, தனக்குத் துணையாய் உதவும் திருவருளையோ அறிதல் இல்லை, அருளால் செயற்படும் ஆன்மாவின் இயக்கம், காந்தத்தின் முன் இயங்கும் இரும்பின் இயக்கம் போல்வதாம்.*

# ஆறாம் நூற்பா

*இறைவன் இலக்கணம் இன்னதென இந்நூற்பாவில் கூறுகிறார் ஆசிரியர் :*

உணர்உரு அசத்தெனின் உணரா தின்மையின்
இருதிறன் அல்லது சிவசத் தாமென
இரண்டு வகையின் இசைக்குமன் உலகே.

*"உணர்உரு எனின் அசத்து; உணராது எனின் இன்மை (ஆதலின்) இருதிறன் அல்லது சிவசத்தாம்; என, இரண்டு வகையின் மன உலகு இசைக்கும்" என இயைத்துப் பொருள் கொள்ளுமாறு அமைந்து கிடக்கின்றது இந்நூற்பா. 'எனின்' என ஓரிடத்து நின்ற சொல்லை 'உணர் உரு எனின்' என்றும், 'உணராது எனின்' என்றும் ஈரிடத்தும் இயைக்கப்பெற்றதாம். இவர் இத்தகு உத்திகளால் நூற்பா யாத்தல் முன்னும் சுட்டப் பெற்றனவாம்; பின்னும் வருவனவாம்.*

**உணர் உரு எனின் அசத்து :**

*அசத்து என்பது சத்தற்றது; அதாவது நிலையற்றது. நிலையானது போல் தோன்றி நிலையற்று ஒழிவது அசத்தாம். அதனை 'அல்நிலை' எனலாம்; சத்து 'நிலை' யாகலின், சத்தாகிய 'நிலை' மெய்ப்பொருள் எனப்படும். ஆகலின், அசத்தாகிய 'அல்நிலை' பொய்ப் பொருள் என்பது தானே விளங்கும்.*

*ஒரு பொருளைக் கையால் தொட்டுணரவோ, வாயால் சுவைத்துணரவோ, கண்ணால் கண்டுணரவோ, மூக்கால் முகர்ந்துணரவோ, காதால் கேட்டுணரவோ கூடுமெனின் அப்பொருள் நிலையாத் தன்மையுடையதாய் அழிவதேயாம் என்பதைத் தெளிவிப்பதற்கு 'உணர் உரு எனின் அசத்து' என்றார் ஆசிரியர்.*

*புல்லின்மேல் படிந்த பனிநீர் தொட்டறியவும் கண்டறியவும் கூடுவது. அப்பனிநீர், கதிரொளி பட்ட அவ்வளவில் இல்லையாய் ஒழிதல் கண்கூடு. "மூங்கில் இலைமேல் தூங்கும் பனிநீரே; கதிரோன் உதயத்தால் வாங்கும் பனிநீரே" என்பது ஏற்றப்பாட்டு. "புல்நுனி மேல் நீர்போல் நிலையாமை" என்பது நாலடிப் பாட்டு.*

காலை அரும்பிப் பகலில் போதாகி மாலையில் மலர்ந்து மறுநாளில் மடிந்துபோகும் மலர் உணர் உரு உடையது. அது நாண்மலர் (ஒருநாள் வாழ்வுடைய மலர்; அன்று மலர்ந்த மலர்) ஆகி அழிவது கண்கூடு.

'காக்கைக்கே வந்தேன்' என ஆட்சியேற்றுக் கொண்டு இருக்கிறான் காவலன். ஆனால், அவன் தன் உடலைக் காத்துக் கொள்ளவும் இயலாமல் காக்கைக்கே இரையாகிப் போகின்ற காட்சி கண்டறியாததோ? ஊர்நோயெல்லாம் தீர்ப்பேன் என உறுதி கொண்ட மருத்துவனும், தன் நோயைத் தீர்க்கமாட்டாமல் பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச் சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிடக் காணல் நாம் அறியாததோ? நிலை பேறமைந்த உயிர் குடியிருந்த குடியிருப்பாம் உடல் நிலையே இவ்வாறாயின், ஏனையவற்றைச் சொல்ல வேண்டுமோ?

இறைவன் இவ்வாறு உணர் உருவாக இருந்தால் அவன் நிலை பொருள் (சத்துப் பொருள்) ஆவானோ? ஆதலால் உணர் உரு எனின் அசத்து என்று தெளிவித்தார் ஆசிரியர்.

**உணராது எனின் இன்மை :**

இன்மை யாவது இல்லாமை; அஃதாவது பாழ்; 'சூனியம்' என்பதும் அது.

எவரானும் எவ்வகையானும் இறைவன் உணரப் பெறா தவன் என்றால், அவன் இருப்பவன் என்று எப்படிச் சொல்ல முடியும்? அவன் இல்லாதவன் என்றே கொள்ள நேர்ந்துவிடும் அல்லவோ!

"வானப் பூ நாறிற்று என்றுழி அது சூடக் கருதுவாரும் இன்றி மயங்கக் கூறினான் என்னும் குற்றத்தின் பாற்படும்" என்று இலக்கண உரையாசிரியர்கள் சுட்டுவர். எவரும் கண்டறியாத பூவை இருப்பதென எவரே கொள்ளுவார்? அதனைப் பறித்துச் சூடுதற்கோ சூட்டுதற்கோ எவரே முயல்வார்?

முயற் கொம்பு உண்டு என்றாலோ, ஆமை மயிர்க் கம்பலம் உண்டு என்றாலோ ஏற்றுக்கொள்வார் எவர்? நாம் காணும் முயற்குக் கொம்பு இல்லை; ஆமைக்கும் மயிர் இல்லை; ஆதலால், எவர் சொன்னாலும் ஏற்றுக்கொள்ளத் துணிவது இல்லை.

இறைவன் உண்மையை எவருமே அறிந்திலர் எனின், அவன் இல்லாதவன் ஆய்விடுவான். ஆதலால், "உணராது எனின்

இன்மை" என்றார். அவன் உணரப் படாதவன் அல்லன்; அவன் உணரவும் படுவான் என்பது கருத்தாம்.

'இன்' என்பது ஆகலின் என்பதன் தொகுத்தலாய் நின்றது.

**இருதிறன் அல்லது சிவசத்தாம் :**

இறை, முற்படக் கூறிய உணர் உருவும் அன்று; பிற்படக் கூறிய உணரா உருவும் அன்று; ஒருவகையால் அறியப்படுவதும் ஒருவகையால் அறியப்படாததும் ஆகியது. ஆதலால் சுட்டப் பெற்ற இரு வகுப்பிலும் சேர்ந்த ஒன்றன்று இறை என்பாராய் "இருதிறன் அல்லது" என்றார்.

பொய்ப்பொருளாயும் இல்பொருளாயும் இல்லாத மெய்ப்பொருளாம் இறையை, எப்பொருள் எனச் சொல்வது என்பார்க்குப் பெயரீடாகச் 'சிவ சத்தாம்' எனக் கூறினார். 'இறை நிலை' என்பது சிவசத்து என்பதன் பொருளாம்.

**என மன் உலகு இரண்டு வகையின் இசைக்கும் :**

"என்று நிலைபெற்ற மெய்ப்பொருள் ஆய்வுடைய பெரு மக்கள், ஓராற்றான் அறியப்படுவதும் ஓராற்றான் அறியப் படாததும் ஆகிய இருவகையுடையது இறை என்று கூறுவர்" என்பது இதன் பொருளாம்.

**மன்னுதல், நிலைபெறுதல்;** உலகு என்பது முதல் நூற்பாவிற் சுட்டிய புலவரைக் கருதியது. "உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே, நிகழ்ச்சி அவர்கட் டாகலானே" என்பது தொல்லாசிரியர் குறியீடு ஆகலின்.

இவ்விடத்துச் சில கருத்துகளைத் தெளிவாக்கிக் கொள்ளல் வேண்டும்.

உயிர் அழிவற்றது ஆதலால் அது நிலை (சத்து) என்று கூறப்படும். தோற்ற ஒடுக்கம் இல்லாதவனாகவும் உலகுக்குத் தோற்ற ஒடுக்கம் செய்பவனாகவும் இருக்கும் இறைவனும் 'நிலை' என்பது தெளிவு. உயிரையும் உயிர்க்கு உயிராம் இறையையும் ஒத்த பெயரால் நிலை (சத்து) என்று சுட்டுவது தெளிவுடைய தன்று என்பாராய் இறைநிலை (சிவசத்து) என்று சொல்லாட்சி கொண்டார்.

உயிரில்லா உருவப்பொருள் அருவப் பொருள்களை மெய்ப் பொருளாய்வாளர்கள் அல்நிலை (அசத்து) என்று

வழங்குவர். அல்நிலையும் ஆகாமல், இறைநிலையும் ஆகாமல் இருக்கும் உயிரைத் தனிக்குறியீட்டால் வழங்கித் தெளிவுறுத்த விரும்பிய மெய்ப் பொருளாய்வாளர்கள் அதனை 'நிலையல் நிலை' (சதசத்து) என்று வழங்கினார்.

உயிர் தானே அறியாதது ஆதலாலும், அறிவிக்க அறியும் அறிவுடையது ஆதலாலும், அறிவிக்க அறியாத அல்நிலையும், அறிவிக்காமலே அறியும் இறைநிலையும் ஆகாமல் நிலையல் நிலையாக (சதசத்தாக)ச் சொல்லப்படும். நிலையின் இயல்வும், அல்நிலையின் இயல்வும் உடையதனை 'நிலையல்நிலை' என்று சொல்வது தக்கது தானே!

சத்து அசத்து சதசத்து என்பவை அந்நாளில் பெருக வழங்கியமையால் சான்றோர் அச்சொல்லாட்சிகளைப் பெருக வழங்கினர். திருமூலர்,

"சத்தும் அசத்தும் சதசத்தும் தான்கண்டு"

என்றும்,

"சத்தும் அசத்தும் சதசத்தும் தான்காட்டி"

என்றும்,

"சத்தும் அசத்தும் சதசத்தும் தான்கூடி"

என்றும் கூறுவர். (திருமந்திரம் 1420, 2058, 2328)

இவ்விளக்கங்கள் மேல்வரும் நூற்பாவின் பொருள் விளக்கத்திற்கு வேண்டுவன ஆகலின் விரித்துரைக்கப் பெற்றன வாம்.

உலகம், உயிர், இறை எனப் பொருள் மூவகைப்படுதல் மெய்ப்பொருள் ஆய்வாளர் கண்டது. இம் மூன்றன் அறிவும் உலக அறிவு, உயிர் அறிவு, இறையறிவு (பாசஞானம், பசுஞானம், பதிஞானம்) என்பன. கல்வி கேள்விகளால் உலக அறிவும், உண்மை அறிவாம். இயற்கை அறிவால் உயிர் அறிவும், இறையருள் கூட்டலால் இறையறிவும் ஆன்மா அடையக்கூடும். ஆதலால் உலக அறிவும், உயிர் அறிவும் கடந்து, இறையறிவு பெற்றார்க்கே இறை வெளிப்பாடுறும்! அவராலேயே இறைமை உணரப்படும் என்பதாம்.

*இந்நூற்பாவால், “இறைவன் உயிர்களால் உணரப்படும் உருவினன் அல்லன்; எவராலும் உணரப்படாது இருப்பானும் அல்லன்; ஆதலால், அவன் அல்நிலை (அசத்து)ப் பொருளும் அல்லன்; இல்லானும் அல்லன்; உயிர்களால் அறியப்பட்டும் அறியப்படாதும் இருக்கும் இறைநிலை (சிவசத்து)ப் பொருளாளனாம் என்னும் கருத்தை ஆசிரியர் வலியுறுத்தினார் என்க.*

# ஏழாம் நூற்பா

*உயிர்க்கு ஓர் இயல்வு. 'சார்ந்ததன் வண்ணமாதல்' என்பது. உயிர் எப்பொருளில் அல்லது எச்சூழலில் தோய்ந்தும் படித்தும் நிற்கிறதோ அதற்குத் தகத் தன்னை அமைத்துக் கொண்டிருத்தல் பொது விதியாம். அருவிச் சூழலை அடுத்துச் செல்வார் அகங் குளிர்ந்து அக்காட்சியில் தோய்தலும், அனற் கொதிப்பினை அடுத்து இருப்பார் அவ்வெப்புக்கு ஆட்பட்டு வெதும்புதலும் அறியாதவை அல்லவே!*

*மலர்க்காவில் இருப்பார் மகிழ்வும் மழலையர் மையத்தில் எய்தும் திளைப்பும் மற்றை மற்றை இடங்களில் எய்துவது உண்டோ? சார்ந்ததன் வண்ணமாதல் என்பதன்றோ இதன் அடிப்படை?*

*அறிவு நிலையில் வளர்ச்சியில்லாச் சிற்றறிவுயிரிகளும் தங்கள் உயிர்ப் பாதுகாவல் பொருட்டுச் சார்ந்த இடத்தின் வண்ணத்தைத் தமக்கெனக் கொண்டிருத்தல் கண்கூடாகக் காண்பார், அதன் உண்மை அறிவர். பளிங்குபோல விளக்குவது எது, சார்ந்ததன் வண்ணமாதலை?*

*சார்ந்ததன் வண்ணமாதல் உயிர்க்கு உண்மையை அறிவார். உயிர் உலகறிவிலே தோய்ந்து கிடக்கும்போது அதே அறிவும் பொருளாகவும், இறையறிவிலே தோய்ந்து கிடக்கும் போது அதே இறையறிவுப் பொருளாகவும் ஆகின்றது என்பதைத் தெளிவர். இத்தெளிவு இந்நூற்பாவின் விளக்கத்திற்குத் துணையாய் அமையும்.*

**யாவையும் சூனியம் சத்தெதிர்** (சத்து எதிர் யாவையும் சூனியம்) :

*சத்தாகிய இறையின் முன்னே எல்லாப் பொருள்களும் இல்லாப் பொருள்களேயாம் என்பது இத்தொடரின் பொருள்.*

*படைப்பாளி ஒருவனுக்குத் தான் படைத்த படைப்புப் பொருளின் உண்மைநிலை தெரியாமல் போகாதே! அவன்முன் பொய்ப்பொருள் மெய் பொருளாகவோ, போலிப்பொருள் உண்மைப் பொருளாகவோ தோன்ற முடியாதே! தேர்ந்த*

*வழக்காடிமுன் பொய்மைத் திரை கிழிபடல் காண்பார், இறைமுன் பொய்மை நிலைபெறும் என்பாரோ?*

*சிற்பி ஒருவன் ஒரு கல்லில் நாயுருவை வடிக்கின்றான். வடித்த அவனுக்குத் தான் வடித்த நாயுரு 'கல்' என்பது தெரியாதோ? மற்றையோர்க்கு நாயாகத் தோன்றக்கூடும். வடித்த சிற்பிக்கோ கல்லென்பது திட்டமாகத் தெரிந்த பொருளேயாம். மற்றையோர் அதனை நாயாகக் கருதினாலும், அவன் கல்லாகவே காணுகின்றான். இதனையே, "நாயைக்கண்டால் கல்லைக் காணோம்; கல்லைக் கண்டால் நாயைக் காணோம்" என்னும் பழமொழி சுட்டுகின்றது. இதனை அறியாராய் 'நாய்க்கடிக்கும் கல்லடிக்கும்' இப்பழமொழியை வழங்கி வருகின்றனர்.*

*இனிர் திருமூலர், மரத்தில் செதுக்கப்பட்ட யானையைச் சுட்டி இதே கருத்தை வலியுறுத்துகின்றார்,*

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே.

*என்பது அது (திருமந். 2290).*

*யானையாகக் காணும்போது மரம் என்பது தெரியவில்லை. மரமாகக் காணும்போது யானை என்பது தெரியவில்லை. பூதங்களாகக் காணும்போது இறைமை தெரியவில்லை; இறைமையாகக் காணும்போது பூதங்கள் தெரியவில்லை என்பது இதன் பொருளாம். இக்காட்சி உயிர்களின் காட்சியாம். ஆனால், இறையின் முன் சார்ந்ததன் வண்ணமாதல் இல்லையே! மெய்ப் பொருளின் முன் பொய்ப்பொருள் மெய்ப்பொருளாகத் தோற்றங் காட்டமுடியுமோ? ஆகலின், சத்தெதிர் யாவையும் சூனியம் என்றார். சூனியும் இவண் இன்மையைக் குறிக்காமல் நிலை பேறின்மையைக் குறித்ததாம்.*

**ஆகலின், சத்தே அறியாது :**

*ஆதலால் இறை பொய்ப்பொருளை மெய்ப்பொருளாக மயங்கக் கொள்ளாது என்பது பொருள். சொல்லிய இதனால் ஆன்மா மயங்கக் கொள்ளும் என்பதையும் வெளிப்படுத்தினார். இனி, உலகியற் பொருள்கள் தாம் இறையை அறியுமோ என்று வினவுவார் உளராயின், அவர்க்கு விடையாக 'அசத்து இலது அறியாது' என்றார்.*

**அசத்து இலது; (ஆகலின்) அறியாது :**

*அசத்து எனப்படும் உலகியற் பொருள்கள் நிலையில்லா தவை மட்டுமன்றி, உயிரில்லாதவையுமாம். உயிருடைய வைக்கன்றோ அறிவு நலப்பேறுண்டு. அறிவு நலப்பேறுக்கு இடமாகிய உயிர் தாமும் இல்லாத பொருள்கள், இறையை அறியுமோ என்று வினவ வேண்டுவதே இல்லை. அவை அறியமாட்டா என்பது தெளிவு.*

**இரண்டலா ஆன்மா :**

*உலகியற் பொருள்கள் என்றும், இறையென்றும் சுட்டப் பெற்ற இரண்டும் அல்லாதது ஆன்மாவாம். உலகியற் பொருள் களுள் ஆன்மா ஒன்று என்றால், அதற்கு உயிரில்லை. உயிரில்லை ஆகவே அறிவும் இல்லையாம். ஆன்மா இறையாம் என்னின், அறிவிக்க அறியும் சிறுமையுடையதில்லையாம். அது தானே அறியும் பெருமையுடையதாம். ஆதலால் இவ்விரண்டும் அல்லாதது ஆன்மா என்றார்.*

**இருதிறன் அறிவுளது :**

*ஆன்மாவின் அறிவுநிலை இன்னதென விளக்குவாராய் 'இரு திறன் அறிவுளது' என்றார் ஆசிரியர். இருதிறன் அறிவு என்பன உலகியல் அறிவும், இறையறிவுமாம்.*

*உலகியலில் அழுந்தி நிற்குங்கால் உலகியல் அறிவும், திருவருள் கூட்டுங்கால் இறையறிவும் ஆன்மா எய்துதல் உண்மையால், 'இருதிறன் அறிவுளது' என்றார்.*

*உயிர், உலகையும் அறியும்; இறையையும் அறியும் என்றும் உயிர் உலகாலும் அறிவுறும், இறையாலும் அறிவுறும் என்றும் கொள்ளக் கிடக்கின்றது. 'இருதிறன் அறிவுளது' என்னும் இத்தொடரமைதி.*

*இன்பத்தை இரண்டாக வகுத்தனர். அவை, இம்மை இன்பம் மறுமை இன்பம் என்றும், சிற்றின்பம் பேரின்பம் என்றும் குறிக்கப்படுவன. இவ்விருவகை இன்பமும் துய்த்தற்கு ஆன்மாவின்நிலை இடனாக உள்ளது. உலகியலில் தோய்ந்து நின்று இம்மையின்பம் எய்துதற்கும், இறையருளில் தலைப் பட்டுத் துறக்க இன்பம் அல்லது மறுமை இன்பம் எய்துதற்கும் ஆன்மாவால் கூடும் என்றும் முதல்நிலை குடும்ப இன்ப அளவே அளவாய் அமைதலும் நிறைநிலை உயிரெலாம் தளிர்ப்புற*

*இன்ப அன்புறும் அளவுக்குப் படியேறுதலும் கூடும் என்றும் அறிய வலியுறுத்தினார் ஆசிரியர் தொல்காப்பியர்.*

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

*என அவர் கூறுவார் (தொல். கற்பு. 51) இதில், தூயவாழ்வு நெறியின் முற்பகுதி, இம்மையின்பத் துய்ப்பும், பிற்பகுதி மறுமையின்பங்கருதிய கடைப்பிடியுமாதல் உணர்வார் ஆன்மாவின் இருதிறன் அறிவு நலங்களையும் அறிந்து மகிழ்வார்.*

*அசத்தை அறிவதும் சத்தால் அறிவிக்கப்பெறுவதும் ஆகிய ஆன்மா, 'சதசத்து' என்று சொல்லப்படும். சத்தும் அசத்தும் இணைதலால் பெற்றது அப்பெயர். அது தமிழில் 'நிலை அல் நிலை' என ஆறாம் நூற்பாவில் ஆளப்பெற்றது அறிக. நிலையாகிய சத்தும், அல்நிலையாகிய அசத்தும் இணைதலால் 'நிலை அல் நிலை' எனல் முறையாம்.*

*நூற்பா :*

யாவையும் சூனியம் சத்தெதிர் ஆகலின்
சத்தே அறியா(து) அசத்தில் தறியா(து)
இருதிறன் அறிவுள(து) இண்டலா ஆன்மா

*இறைவன் முன் உலகப் பொருள்கள் எல்லாமும் பொய்ப் பொருள்களேயாம். ஆதலால் இறை, அவற்றை மெய்யெனக் கொள்ளாது. அப்பொருள்களோ அறிவில்லாதவை; ஆதலால் அவை இறையையும் அறியமாட்டா. உலகியலில் தோய்ந்து உலகையும், இறையருளில் தோய்ந்து இறைமையையும் அறியும் தகவு ஆன்மாவுக்கே உண்டு என்பது இதன் பொருளாம்.*

*ஆன்மா அழிபொருள் அன்று; ஆயினும் அழிபொருளொடு கூடி அதனை அறியும். ஆன்மா இறையும் அன்று; ஆயினும் இறையருள் கூட்ட இறையறிவும் எய்தும். இத்தகும் அரிய ஆன்மநிலை வரப்பெற்றும் அதன் பயன் கொள்ளார் நிலை என்னே என்னும் ஆசிரியர் பேரிரக்கமே இப்'போத'மாய் முகிழ்த்ததாம் என்க.*

# எட்டாம் நூற்பா

ஆன்மா உலகியல் அறிவு பெறுதலையும் இறையறிவு எய்துதலையும் முன் நூற்பாவிலே ஆசிரியர் சுட்டினார். இறை யறிவை எவ்வாறு எய்தும் என்பார்க்கு விளக்கு முகத்தான் இந்நூற்பாவை அருளினாராம்.

அனுமன் தன் வலிமை இன்னதென அறியாதிருந்தான்; "நீ நினைத்தால் விண்ணில் தாவவும் திங்களைப் பற்றவும் வலிமை யுடையை" என்று கூறக் கேட்ட அளவில், மேலே தாவினான் என்பது ஒரு கதை.

அருச்சுனன் போர்க்களத்தில் அயர்ந்தான்; வில்லைக் கீழே போட்டுப் போரொழிந்தான். மெய்ப்பொருள் உரைத்து மேற்கொள்ள வேண்டிய கடமையைக் கண்ணன் ஓதினான்; அருச்சுனன் வீறுபெற்றுக் கடனாற்றினான் என்பது கீதைச் செய்தி.

"அரசன் அமைச்சன் சூழ்ச்சியால் கொல்லப்பட்டான்; அரசி மயிற்பொறியேறித் தப்பி இடுகாட்டில் ஒரு மகனைப் பெற்றாள்; அம்மகனை ஒருவன் எடுத்து வளர்த்துவருவான் ஆயினான்" என்று ஆசிரியர் அச்சணந்தி கூற "அவன் யாவன்?" என்று சீவகன் வினாவ, "நீயே அவன் என்று" ஆசிரியர் உரைக்கச் சீவகன் வீறுகொண்டு வெற்றிகொண்ட செய்தி சிந்தாமணிக் கண்ணது.

இத்தகு செய்தி ஒன்றைச் சுட்டிக்காட்டித் 'திருவருள் குருவரு'ளாக வருதலைச் சுட்டுகிறார் ஆசிரியர். குருந்தமர நீழலில் இறைவன் அருளாற்றலால் குருவினைக்கண்டு, கோயிற் பணியிலேயே ஊன்றி என்பெலாம் உருக்கவல்ல இன்ப அன்புத் திருப்பாடல் பொழிந்த மாணிக்கவாசகர் வரலாற்றுச் செய்தி இந்நூற்பாவின் பொருளாக அமைந்துள்ளதாம்.

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்(டு)
அன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே.

இதனைத் "தம்முதல் குருவுமாய், தவத்தினில் உணர்த்த, ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனவிட்டு, அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே" என இணைத்துப் பொருள்காணல் வேண்டுவதாம்.

**தம்முதல் குருவுமாய் :**

உயிர்கள், தமக்கு முதல்வனாகத் திகழும் இறைவனே, குருவுமாய் வந்தருளவும் பெறும் என்பது இதன் பொருள். ஆசிரியன் தன்னிடம் பயிலவரும் மாணவன் நிலைக்கு ஏற்ப இறங்கிவந்து கற்பிப்பது போலவும், தாய் தன் குழந்தையின் தளர்நடைக்கு ஏற்பத் தானும் தளர்நடையிட்டு அணைத்துச் செல்லுதல் போலவும், இறைவன் உயிர்களின் பக்குவநிலைக்கு ஏற்பக் குருவனாக வந்தும் திருவருள் நோக்காலும் திருவருள் வாக்காலும் பாலிப்பான் என்பதாம்.

**தவத்தினில் உணர்த்த :**

எல்லா உயிர்களுக்கும் குருவனாக வந்து இறைவன் உணர்த்துவனோ என வினாவுவார்க்கு மறுமொழியாகத் 'தவத்தினில் உணர்த்த' என்றார். பக்குவநிலையுற்ற ஆன்மாவுக்கே உணர்த்துதற்குக் குருவாக வருவன் இறைவன் என்றாராம்.

உலகியல் அறிவுச் செய்தியையே பக்கும் அறியார்க்குச் சொல்லுதல் இல்லையாகக் காண்கிறோம் அல்லவோ! எல்லாச் செய்திகளையும் எல்லாரிடத்தும் சொல்லுகின்றோமோ? பொதுமக்கள் செய்தியும் புலமக்கள் செய்தியும் ஒன்றாக இருப்பது இல்லையே! கீழ்நிலை அரிவரிக் கல்விக்கும் மேலை நிலை ஆய்வுக் கல்விக்கும் எத்துணை இடைவெளி? அவையறிதல் என்பது கேட்பார் நிலையறிந்து பேசுதல் அன்றோ! அவ்வாறாக இறைவன் குருவனாக வந்து அருளுதல் தவமுடையார்க்கு வாய்க்கும் என்றார். 'தவமும் தவமுடையார்க்கே ஆம்' என்றார் திருவள்ளுவர். தவத்தோர்க்கே இறைவன் குருவனாக வரப்பெறும் பேறு வாய்க்கும் என்றார் மெய்கண்டார். தவப்பேறு உடைமை யாலேதான் உணர்த்தவருமான் இறைவன் என்பதாம்!

இனித் தவப்பேறுதான் என்ன என்பார்க்கு, "உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை, அற்றே தவத்திற்குரு" என்பது தமிழ்நெறி. தன்துயர் பொறுத்தலும் பிறவுயிர்க்குத் துயர் செய்யாமையுமே உருவாக உடையது தவம் எனின், அத்தவம் உடையானே செந்தண்மை அந்தணன் அல்லனோ!

அவனே தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் அல்லனோ! அவனுக்கு இறைவன். 'புறம்புறம் திரியும் செல்வனாக' இருக்கும் போது குருவனாக அருள் பாலித்தல் அரிதன்றே!

கரட்டு நிலத்தே எவரே விதைப்பார்? காதுகொடுத்துக் கேளானுக்கு எவரே உரைப்பார்?

இறைவன் குருவனாய் என்ன உணர்த்துவன்?

**ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனை (உணர்த்த) :**

வேந்தன் மகன் ஒருவன் வேடரிடையே வளர்ந்து, தன்னை வேந்தன் மகன் என்பதைச் சிறிதும் உணரானாய் அவ்வேடன் உண்பன உண்டு, உடுப்பன உடுத்து, செய்வன செய்து, வளருமாறு வளர்வது போல, நீயும் ஐம்புலங்களாகிய வேடர்களிடேயே உன்னை மறந்து வளர்கின்றாய்; வேந்தன் மகன் தன்னை வேந்தன் மகன் என்பதை உணராது மயங்கிக் கிடப்பது போல, நீயும் ஐம்புல வேட்டைக் காட்டில் வேட்டையாடி அதிலேயே தோய்ந்து உன் அரிதில் அரிதாம் மானிடப் பிறப்பை மறந்தாய்; நீ செயற்கருஞ் செயல் செய்தற்கு உரிமையாளன்; உன்னை அறி; உடனை உடையானை அறி; உண்மை அறி என்று அறிவுறுத்திய காலை அவன் அறிவறிந்து மெய்யுணர்வு பெறுவன் என்பதாம்.

ஆதன், தன்னை அறியா நிலையில் புலங்களின் குறும்பு கட்கு ஆட்பட்டு, "புலக்குறும்புகளுக்கு ஆட்பட்டுளேன்" என்னும் எண்ணம் தானும் இல்லாமல் மயங்கிக் கிடத்தலை அறிந்தே 'அயர்ந்தனை' என்றும், அந்நிலையிலேயே தடிப்பேறி மேலும் மேலும் தோய்ந்து நிற்றலால் 'வளர்ந்து' என்றும் ஆசிரியர் உரைத்தார். "அடிமையுள் அடிமை, தான் அடிமை என்பதும் உணராத அடிமை" அல்லவோ! அவ்வடிமையே பெருமை என நினைவது அதனினும் வடிகட்டிய அடிமைநிலை அல்லவோ! 'உணர்ச்சி வாயில் உணர்வோர் வலிததே' என்னும் தொல்லாசிரியர் நல்லுரை போற்றத்தக்கதாம்.

ஆதன், பக்குவ நிலையறிந்து நற்குருவன் அவனை நண்ணி அவனுக்கு அருளுரைக்கப் பெறுவன் என்பதாம். அருளுரை பெற்ற பக்குவன் என செய்வன் என்பார்க்கு மேலே விளக்குவார்.

**விட்டு, அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே :**

விட்டு என்பது நீங்கி, விலகி என்னும் பொருள் தருவது ஆயினும், 'உணர்த்தவிட்டு' என்று முற்சொல்லோடு இணைந்தும், 'விட்டு அன்னியம் இன்மையின்' என வருஞ்சொற்களோடும்

இணைந்தும் பொருள் தருகின்றதாம். விட்டு அன்னியம் இன்மையாவது விடுத்து அயலாய் நில்லாமை. உயிரின் தன்மை அயலாய் நில்லமை அல்லது தனித்து நில்லாமையாம். உயிர் உலகைச் சார்ந்து நிற்கும்; அச்சார்பு விட்டால் இறையைச் சார்ந்து நிற்கும். இரண்டுள் ஒன்றைச் சாராமல் இருத்தல் அதற்கு இயல்வு இல்லையாம். இலையோ காயோ கனியோ மரஞ்செடி கொடிகளோடு ஒட்டிக்கொண்டிருக்கின்றன. அவற்றின் பற்று விட்டால் ஆங்கிருந்து வீழ்ந்து நிலத்தைச் சேர்கின்றன.

கயிற்றிலோ தொடரிலோ (சங்கிலியிலோ) பிணைப்புற்று ஆடிக்கொண்டிருக்கும் ஊசல், கயிறோ தொடரோ அறுந்தால் நிலத்தையே சேர்கின்றது. இவற்றைப்போல் உயிரும் உலகச் சார்பை விடுத்தால் இறைச்சார்பை எய்திநிற்கும். இதனை, ஒன்றி உடனாதல் என்பர். ஆளுடைய பிள்ளையார் இறைபடி எய்தியமை சுட்டும் சேக்கிழார். "போதநிலை முடிந்தவழிப் புக்கு ஒன்றி உடனானார்" என்று கூறினார். ஒன்றி உடனாதல் என்பதே. வடமொழியும் தமிழும் கூடிய இரு பிறப்பியாய். 'விட்டு அன்னியமின்மை' எனப்பட்டது. இதனை 'அநந்நியமாதல்' என வடமொழியால் குறிப்பர்.

முந்தை ஏழு நூற்பாக்களிலும் இறையை ஒடுங்கி, சிவசத்து, சத்து என்று கூறிய அளவின் அமைந்த ஆசிரியர், இந் நூற்பாவில் 'முதல்' என்றும், 'அரன்' என்றும் சுட்டுகிறார். ஒன்றி உடனாந் தன்மையால் உயிர். அரன் கழலில் ஒன்றும் என்றார். 'அரன்' என்பதும் 'சிவன்' என்பதும் 'சேய்' சேயோன் என்பனவும் ஒரு பொருள் தரும் சொற்களே. இச்சொற்கள் சிவப்பு என்னும் அடியில் பிறந்தனவே. சிவன், சேய், சேயோன் என்பவை சிவப்பின் அடியில் பிறந்தவை எனலாம்; ஆனால், அரன் என்பதுவும் சிவப்பின் அடியாகப் பிறந்ததுவோ எனின் 'ஆம்' என்பதே மறுமொழியாம்.

'அர்' என்பது சிவப்புப் பொருள்தரும் ஒரு வேர். அர்+அன் = அரன் என்பதும் சிவப்பன். சிவன் என்னும் பொருள் தருவதே. அரக்கு, அரத்தம், அரணம், அருணன், அரி முதலிய சொற் களெல்லாம் செம்மைப் பொருள் தரும் 'அர்' என்னும் வேர் வழிச் சொற்களே. அரக்காம்பல், அரத்தப்பட்டு, அரத்தம் முதலிய சொற்பொருளை அறிவார் அரன் என்பது சிவன் என்பதன் மற்றொரு வடிவச் சொல் என்பதை அறிவர். சேயோன் வழிபாடே சிவன் வழிபாடாய், செங்கதிர் வழிபாடாய் நிற்பதுவும் அறிவர். வேர்ச்சொல் பொருள் ஆயத் தலைப்பட்டார் 'ஹரன்'

என்பதே அரனாயிற்று என ஏமாற்றமுறார். முழுமுதல் இறைவனை ஒரு தொழிற்படுத்த ஒவ்வார். 'அர்' என்னும் வேர்வழிச் சொற்கள் மிகப் பலவாதலின் இந்நூற் பொருளமைதிக் கேற்ப இவ்வளவில் அமைவாம்.

இந் நூற்பாவில், "உயிரோடு உயிராய் இருக்கும் இறைவன் உயிர் செய்த தவப்பேற்றின் முருகுதலால் குருவுமாகி வந்து, "ஐம்புலன்களாகிய வேடருக்குள் நின்னை மறந்து வளர்ந்தாய்; நின் பெருமையை அறிக" என்று அறிவிக்க, அவ்வேடர்களை விடுத்துப் பண்டே ஒன்றியுடனாந்தன்மையால் முதல்வன் திருவடியை உயிர் அடையும் என்னும் கருத்துகளை ஆசிரியர் அறிய வைத்தார்.

# ஒன்பதாம் நூற்பா

உயிரை உய்ப்பதற்காக இறைவன் குருவாக வந்து அருள் தலையும், உயிர் இறைவன் திருவடி நிழலை அடைதலையும் சுட்டிய ஆசிரியர் இவ்வொன்பதாம் நூற்பாவில் உயிர் இறைவன் திருவடியை அடைதற்குரிய வழிமுறைகளைச் சொல்கின்றார்.

அறிவு மூவகைப்பட்டு நிற்றலை முன்னரே கண்டோம். அவை உலக அறிவு, உயிர் அறிவு, இறை அறிவு (பாசஞானம், பசுஞானம் சிவஞானம்) என்பன.

இவற்றுள் உலக அறிவு, செயற்கை அறிவென்றும், உயிர் அறிவு, இயற்கை அறிவென்றும் குறிக்கவும் பெறும்.

உலக அறிவாம் செயற்கை அறிவு, கல்வி கேள்விகளால் உண்டாவது. உயிரறிவாம் இயற்கை அறிவு, உடற்கூறு, வழிமுறை, சூழ்நிலை ஆயவற்றால் அமைவது.

இவ்விரு வகை அறிவுக்கும் மேம்பட்டது இறையறிவு. முன்னை இருவகை அறிவாலும் இறைவனை உணரமுடியாது. இறையறிவாலேயே இறைவனை உணரமுடியும். திருவருள் கூட்ட இறையறிவு வாய்க்கப்பெற்றார்க்கே அகநோக்கு நோக்குதலும், மலநீக்கம் ஆகுதலும் வாய்க்கும். இறையறிவு வாய்க்கப்பெற்றாரும் அவ்வறிவை நிலைபெறுத்திக் கொள்வதற் காக இறைவனின் திருவைந்தெழுத்தை இடையறாது ஓதுதல் வேண்டும் என்றும் ஆசிரியர் அருள்கின்றார்.

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினில் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்ணிழ லாம்பதிவிதி எண்ணுமஞ் செழுத்தே.

என்பது நூற்பா.

இதனை, "ஊனக்கண் உணரா பதியை; பாசம் உணரா பதியை; ஞானக் கண்ணினில் சிந்தை நாடுக; உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத் தண்ணிழலாம் பதி; எண்ணும்

அஞ்செழுத்தே விதி" எனப் பகுத்துப் பொருள் காண்டல் வேண்டுமாம்.

**ஊனக் கண் உணரா பதியை : (பதியை ஊனக் கண் உணரா)**

*ஊனம் = உடல்; குறையுடையது; கண் = அறிவு; குறை யுடைய உடலொடு பொருந்திய கண்ணால் அறியும் அறிவு இறையை அறியமாட்டா கண் என்பது கண்ணாற் பெறும் அறிவைக் குறித்ததாயினும், ஏனைப் பொறிகள் வழியாகவும் பெறும் அறிவுகளுக்கும் பொதுவாக நின்றதாம். பதியை அல்லது இறையை உயிரறிவாம் இயற்கை அறிவால் பெற இயலாது என விலக்கினார். மூவகை அறிவுகளுள் உயிரறிவு இறையை அறிவிக்கமாட்டாது எனத் தீர்த்தார். முகத்துக் கண்ணால் காணாவொண்ணாததை அகத்துக் கண்ணால் கண்டு களிக்க என்பார் திருமூலர் :*

"முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமா றெங்ஙனே"

*என்றார் அவர் (2944).*

*இனி, உலக அறிவால் பதியைக் காணமுடியுமோ என்பார்க்கு அதனாலும் இயலாது என்றார்.*

**பாசம் உணரா பதியை :**

*பாவமாவது உலகு. உலக அறிவாலும் இறைவனை உணர முடியாது. பாச அறிவாவது உலகு பற்றிய கல்வி. கேள்வி ஆய்வுகளாம். உயிரறிவால் காணப்பட்ட நூல்களும், பின்னே பாச அறிவாய் அமையும். உயிரறிவாலேயே காணவொண்ணாப் பதி உலக அறிவால் காணக்கூடுவன் என்பது அறவே இயலாததாம். ஆகலின் 'பதியைப் பாசம் உணரா' என்றார். உலக அறிவு, உயிரறிவுக் கூறுகள் பலவாகலின் 'உணரா' எனப் பன்மையிற் கூறினார். 'கற்பனவும் இனி அமையும்' என்றார் தாயுமானவர்.*

"நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்"

*என்பது திருக்குறள். நூலறிவை, உண்மை அறிவே விஞ்சும் என்றால், உண்மை அறிவாலேயே உணரமாட்டாப் பதியை நூலறிவு உணர்த்தாது அன்றே!*

இனி, இவ்விரு வகை அறிவாலும் அடைய முடியா இறையை அடையும் வழிதான் யாதோ என்பார்க்கு மேலே வழி கூறுகிறார்.

**ஞானக் கண்ணினில் சிந்தை நாடி :**

நாடி என்பது நாடுக என்னும் பொருட்டது. ஞானக் கண்ணாவது அகக்கண்; அருட்கண்; "அருளின் வழிவந்த அகக்கண்ணால் அகத்துள்ளே ஆய்க" என்றார்.

உயிரறிவாலும் உலக அறிவாலும் காண முடியாத இறையை, அகக்கண் கொண்டு காண்க என்று ஆசிரியர் அறிவுறுத்தினார்.

**ஞானக் கண்ணாம் அகக்கண்** ஆய்வு தலைப்பட்டபின் கண்ட காட்சியைப் பட்டினத்தார் பகர்வார் :

"தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின்
மாயப் படலம் கீறித் தூய
ஞான நாட்டம் பெற்றபின் யானும்
நின்பெருந் தன்மையும் கண்டேன்; காண்டலும்
என்னையும் கண்டேன்; பிறரையும் கண்டேன்;
நின்னிலை யனைத்தையும் கண்டேன்; என்னே!
நின்னைக் காணா மாந்தர்
தம்மையுங் காணாத் தன்னை யோரே"

என்று விளக்கினார்.

அகக்கண் கொண்டு ஆய்ந்த காலை நேர்வது என்ன என்பதை அடுத்துக் சுட்டுகிறார் ஆசிரியர்.

**உராத் துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவ :**

அகத்தைக் கண்கொண்டு ஆயும்போது பாசம் நீங்கும் என்பதை உவமையால் விளக்குகிறார் ஆசிரியர்.

'உரா' என்பது ஊரா என்பதன் முதற் குறுக்கம். 'துனை' என்பது விரைவு என்னும் பொருள்தரும் உரிச்சொல். 'தேர்' என்றது பேய்த்தேர் அல்லது கானல் நீர்; ஊர்தற்கு உதவாது விரைந்து செல்லும் கானல் தேர். 'உராத்துனைத் தேர்' எனப் பெற்றது. என்றது கானல் நீரை; கானல் நீர் எப்படி நெருங்கிய விடத்து இல்லையாய் அகல்கின்றதோ அவ்வாறு அகக்கண் கொண்டு நோக்குவார்க்கு மலநீக்கம் தானே நிகழுமாம் என்க. ஒருவுதல்-நீங்குதல்.

*பாயா வேங்கை என்பது வேங்கை மரத்தையும், ஓடாக் குதிரை என்பது குதிரை மலையையும் குறித்தாற்போல 'ஊராத் தேர்' என்பது பேய்த் தேரைக் குறித்த இதனை வெளிப்படை என இலக்கண நூலார் சுட்டுவர். கானல் நீரை இவ்வாறு சுட்டுதல் பண்டு தொட்டே பயிலும் வழக்கு என்பதை "உருவில் பேஎய் ஊராத் தேர்" எனவரும் அகப்பாடலால் (67) அறியலாம்.*

*பாசம் ஒருவிய பின்னை நிகழ்வு என்ன என்பார்க்குத் 'தண்ணிழலாம் பதி' என்றார்.*

**தண்ணிழலாம் பதி :**

*மலம் ஒருவிய பின்னே பதி தண்ணிய நிழலை அருளும் என்றார். இறைவன் திருவடி, 'நிழல்' எனப்பட்டதேன் எனின், பிறவியாம் வெம்மை நீக்கி, ஒன்றி உடனாகும் தன்மை அருளுதலால் தண்ணிழல் என்றார். வேந்தன் முடிமேல் அமைந்த குடைசெய்யாத நிழலை, இறைவன் அடிசெய்யும் என்பாராய்த் தண்ணிழலாம் பதி என்றார். முன்னை நூற்பாவில் 'அரன் கழல்' என்றமையால் நிழல் செய்வது அடி என்பதைப் பெறவைத்தார். அடியே தண்ணிழல் அருளும் எனின், திருவருள் நோக்கு முதலியவை தண்ணிழல் அருளலைச் சொல்ல வேண்டுவ தில்லையாய்ப் பெறப்படும்.*

*கொதிப்புறும் கொடுமைகளைப் பல்கால் பல்வகையில் வேந்தனால் செய்யப்பெற்றும், இறைவன் இணையடி தமக்குத் தண்ணிழல் அருள்தலைத் துய்த்த நாவுக்கரசர் "மாசில் வீணையும், மாலை மதியமும், வீசு தென்றலும், வீங்கு இளவேனிலும், மூசு வண்டு அறை பொய்கையும் போலிருத்தலை" அருளிச்செய்தார்.*

*அகக்கண் நாடுமேனும், பாசம் ஒருவுமேனும், தண்ணிழலாம் பதி அருளுமேனும் ஆன்மாவின் கடப்பாடு என்ன என்பதைக் கூறுவாராய் 'விதி எண்ணுமஞ் செழுத்தே' என்றார்.*

**விதி எண்ணும் அஞ்சு எழுத்தே :**

*வாராது வந்து வாய்த்த திருவருளை, வாளா ஒழித்துவிடல் கூடாது என்பாராய் அதனைச் சிக்கெனப் பற்றிக்கொள்ள வழியுரைக்கும் ஆசிரியர் 'எண்ணும் அஞ்செழுத்தே விதி' என்றார்.*

*பிடித்தால் போதாது; சிக்கெனப் பிடித்தல் வேண்டும்; 'வல்லுடும்பெனப் பிடித்தல்' வேண்டும் என்பர் அல்லவோ;*

*அவற்றைப்போல் அஞ்செழுத்தை எண்ணினால் போதாது; ஆணையாகக் கொண்டு ஓதி ஓதித் திளைக்க வேண்டும்.*

"நான் மறக்கினும் சொல்லுநா நமசிவாயவே"

"வழுக்கி வீழினும் சொல்லுநா நமசிவாயவே"

*என்பனபோல் சொல்லவேண்டும் என்றார்.*

*அழுத்தமில்லாத பற்று அடிக்கடி சறுக்கும்; சறுக்கல் முதிர்ந்து மறந்தும் துறந்தும் போம். பாசிபடிந்த நீரில் கைவைத்த அளவில் பாசி விலகுமாப்போல் பற்றும் விலகும். கையை எடுத்த அளவில் பாசி முன்னைப்போல் கூடிவிடும். அழுத்தமில்லாத பற்றுமையால் மலமும் அப்படியே விலகும்; மீண்டும் சேரும். மலநீக்கம் முற்றாக வேண்டுமானால், 'விதி எண்ணும் அஞ்சு எழுத்தே' என்றார்.*

*நமசிவாய என்பது ஐந்தெழுத்தோ? 'சிவயநம' என்பது ஐந்தெழுத்தோ?*

*'நமசிவாய' என்பது பெயர். 'நந்திநாமம் நமசிவாயவே' என்றார் ஆளுடையபிள்ளையார். 'நமச்சிவாய வாழ்க' என்றார் ஆளுடைய அடிகள். பெயர் மந்திரமாவதில்லை. எழுத்தே மந்திரமாம் என்பாராய் எண்ணுமஞ் செழுத்தே என்றார். 'சிவயநம' என்பதே ஐந்தெழுத்து மந்திரமாம்.*

"அஞ்செழுத் தாலே அமர்ந்தனன் நந்தியும்
அஞ்செழுத் தாலே அமர்ந்தபஞ் சாக்கரம்
அஞ்செழுத் தாகிய அக்கர சக்கரம்
அஞ்செழுத் துள்ளே அமர்ந்திருந் தானே"

*என்பது திருமந்திரம் (934).*

# பத்தாம் நூற்பா

*மலத்தாலும் மாயையாலும் கட்டுண்ட உயிர்க்குத் தன்முனைப்பு மிக எழும். அத் தன்முனைப்பு 'நான் எனது' என்னும் செருக்காகக் கிளரும். நான் என்னும் செருக்குள்ள இடத்திலே பிறரொருவர் ஒட்டுதற்குக் கூடுமோ? பிறரொடு ஒட்டி ஒழுகுதற்கு அச்செருக்குத் தானும் இடந்தருமோ? நான் என்னும் செருக்கை, இருக்கையாக்கி அமர்ந்தான் ஒருவன். தானே அவ்விடத்தன்றி பிறரொருவர்க்கு இருக்க இடந் தாரான். ஆனால் தன் முனைப்பாம் நான் ஒழித்தவனோ, தன் உள்ளமாம் இருக்கையில் உலகெல்லாம் இருக்க இடந்தருவான். உலகத்தை ஆங்கு இருத்தி உழுவலன்புடைய ஊழியனாகப் பணிபுரிந்தும் உவப்புறுவான்.*

*இனி 'எனது' என்பதோ பற்றுமை, இவறன்மை, கருமித்தனம் என்பவற்றின் கூட்டுறவால் அமைவதாம். எல்லாம் தனக்கே தனக்கே என்னும் தன்னலப் பேய்வெறியால் அரவணைக்கப்பெற்றுப் பிறவிப்பயனும் எய்தானாய்ப் பிறர் நலமும் பேணானாய் வறிதே ஒழிகின்றான். இவ்வாறு நான் என்றும் எனது என்றும் கொள்ளும் செருக்கை ஒழிக்காத நிலையில் நற்பேறு எய்தல் அரிது என்றும், அவற்றை ஒழித்தார் தெய்நிலையுறுவர் என்றும் திருவள்ளுவர் தெளிவிப்பார்.*

"யான்என தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்"

*என்பது அவர் வாக்கு.*

*யான் என்னும் செருக்குறையும் இடத்து இறைமை இறைப்பொழுதேனும் (நொடிப்பொழுதேனும்) இருத்தற்கு இடமுண்டோ? ஊனைத் திருக்கோயிலாக்கி, உணர்வை வழிபாடாக்கி, தொண்டை வணக்கமாக்கிக் கொண்டார்க்கே இறையருள் ஒன்றி உடனாகி நிற்கும் பேறு வாய்க்கும்? அந்நிலையை உயிர் எய்துதலை இயம்பி வழிகாட்ட எண்ணும் மெய்கண்டார், இப்பத்தாம் நூற்பாவில் அந்நெறிமுறைகளை முறைபெற ஓதுகின்றார் :*

"அவனே தானே ஆகிய அந்நெறி
ஏக னாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே"

*என்பது நூற்பா.*

*அவனே தானே ஆகிய அந்நெறியில் ஏகனாகி இறைபணி நிற்பார்க்கு, மலமாயைகளொடு வல்வினையும் இல்லையாம் என்பது. இதன் சுருக்கக் குறிப்பாம்.*

**அவனேதானே ஆகிய அந்நெறி**

*அவனாவான் இறைவன்; தானாவான் ஆன்மா. திருவருளால் மெய்ப்பொருள் அறிவு தலைப்பட்டு, உள்ளகம் நோக்கி ஆய்ந்து படிநிலையேனும் உயிர் தன் செயற்கும் பணிநலப் பேற்றுக்கும் மூலமும் முதலுமாகி, தம்முதல் குருவுமாகி, தவந்தலைக்கூட்டித் தன்னொடும் ஒன்றுவிக்கும் இறைவனே முழுமுதற் காரணன் என்பதை அறிந்து கொள்வன. அதனால் அவ்விறைவன் திருவருளே, தன்னை இயக்கும் தகவினை உருகி உருகி நினைந்து தன்னை மறந்து எல்லாம் அவனே, அவன் அருளே; அவன் செயலே; அவனன்றித் தான் என்றோ தனது என்றோ ஒன்றும் இல்லை என்னும் மேலீட்டைப் பற்றிக் கொள்வான். அந்நிலையில் அவனே தானே ஆகிய இறைநெறியில் ஒன்றிப்போவான். ஒன்றிய அவன், மேல் என் செய்வனோ எனில்,* **ஏகனாகி இறைபணி நிற்பனாம்.**

*அவன் என்றும் தான் என்றும் எண்ணப்பட்ட இருமை நீங்கி அவனே தான் என்னும் ஒருமைநிலை உறுவன். அதுகால் தன் சிந்தை. தன் சொல், தன் செயல் எல்லாமும் இறைபணி என்றே கடைப்பிடிப்பான்.*

*இவ்வினை யான் செய்தேன்; இதன்பயனீடு இன்னது என்று எண்ணும் ஆன்ம முனைப்பு அகன்று, இறையருளால் இதனைச் செய்தேன்; இதன் பயனீடு நன்றாயின் என்ன; அன்றாயின் என்ன; அவனே பொறுப்பாளி; வில்லை, வளைத்து ஏவுகின்றான் வில்லாளி; அம்பாய்ச் செல்கின்றேன் யான்; வில்லாளியின் குறியும் வினையுமே அம்பை இயக்குவது போல இறைவன் இயக்க இயங்கும். எனக்கென வினையொன்று இல்லை என்று அவன் மேல் சுமையைப் போட்டுவிட்டுச் செல்கின்றான். அவ்வாறு செல்வானுக்கு மலம் என்ன செய்யும்? மாயை என்ன செய்யும்? இருவினைதான் என்ன செய்யும்? எல்லாமும் சென்று, நெருங்கவும் மாட்டாத இடத்தில் நிற்பானை என்ன செய்துவிட*

*முடியும்? தோல்விகண்டு தொலைகின்றன. ஆகலின், ஆசிரியர், "மலமாயை தன்னொடு வல்வினை இன்றே" என்றார்.*

*சோரி உள்ள இடத்தே நீர் உள்வாங்கும்; அளறு உள்ள இடத்தே கால் உள்வாங்கும்; தொய்யும் நைவும் உள்ள இடத்தே காற்றுருளை (Tyre) வெடிக்கும். வலிய இடத்தே இவற்றின் வாலாட்டத்திற்கும் இடமில்லை அல்லவோ?*

*இறைவன் ஆட்கொள்ளப் பெறுதலால், "அவனே தானே ஆகிய அந்நெறியில் ஏகனாகி இறைபணி" நின்ற மாணிக்கவாசகர்.*

"அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னையாட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே"

*என்று பாடும் பாட்டிலே இந்நூற்பாவின் இலக்கியமாக அவர் வாழ்வு அமைந்திருத்தலைச் சுட்டியுள்ள அருமை எண்ணி எண்ணி இன்புறத்தக்கதாம்.*

*பசிப்பிணி தீர்க்கும் மருத்துவியாகத் திகழ்ந்த மணிமேகலையார் "காணார் கேளார் கால்முட மாயோர். பேணா மாந்தர் பிணிநோய் உற்றார் யாவரும் வருக" என்று அழைத்து உணவூட்டுங்காலை, 'ஆபுத்திரன்கை அமுதசுரபி இஃது' என்று கூறி அறப்பேற்றுப் பயனைத் தாம் கொள்ளாது ஆபுத்திரனுக்கு அருளிய திறமும், தம் கைப்பொருள் கொண்டு செய்தாராயினும் நாவுக்கரசர் நற்பெயராலேயே சாலை, சோலை, நீர்ச்சாலை எல்லாமும் அமைத்துப் புகழும் விரும்பாப் புகழ்மையில் இலங்கிய அப்பூதியடிகளார் திறமும் 'இறைபணி' நின்ற சீர்மைகட்கு எடுத்துக்காட்டுகளாம்.*

*ஓர் உயிர் துடிக்கும் துடிப்பைக் காண பொறுக்காமல் ஓர் உயிர் ஓடிச் செய்யும் உதவியே மருத்துவம் என்பதை மெய்ப்பித்துக் காட்டிய ஆல்பிரட்டு சுவைட்சரும், இடருக்கும் இன்னலுக்கும் ஆட்படுவோர் எங்கிருப்பினும் அங்கிருப்பேன் யானென ஓடிப்போய் உதவும் தெரசா அன்னையாரும் இறைபணி*

*செய்வார் நிறைநிலைக்கு என்றும் எடுத்துக்காட்டாய் இலங்கத் தக்கவர்களாம்.*

*அவனே தானே ஆகிய அந்நெறி ஏகனாதற்கு,*

"சீவனெனச் சிவ னென்னவே றில்லை
சீவ னார்சிவ னாரை அறிகிலர்
சீவ னார்சிவ னாரை அறிந்தபின்
சீவ னார்சிவ னாயிட் டிருப்பரே"

*என்னும் திருமந்திரப் பாடலை ஒப்பிட்டுக் காண்க.*

*என்கடன் பணிசெய்து கிடப்பதே எனக் குறிக்கொண்டு உழவாரப்படை ஏந்தி உறுபணி செய்த நாவுக்கரசர் இறைபணி செய்யும் படிமான வளர்ச்சியைச் சுட்டிக்காட்டும் அருமை திருப்பாட்டு இவண் அறியத்தக்கதாம்.*

"விளக்கினார் பெற்ற இன்பம்
    மெழுக்கினாற் பதிற்றி யாகும்
துளக்கில்நன் மலர்தொ டுத்தால்
    தூயவிண் ணேற லாகும்
விளக்கிட்டார் பேறு சொல்லின்
    மெய்ந்நெறி ஞான மாகும்
அளப்பில கீதஞ் சொன்னார்க்
    கடிகள்தாம் அருளு மாறே"

*என்பது அது.*

*இப்பத்தாம் நூற்பாவில், ஆன்மா இறைவனும் தானும் இரண்டலா நிலையை உணர்ந்து, எல்லாம் அவனே என்றும் எச்செயலும் அவன் செயலே என்றும் கொண்டு இறைபணியில் தலைப்பட அதற்கு மலம் மாயை என்பவை இல்லையாய் ஒழியும் என்று கற்பித்தார் ஆசிரியர்.*

# பதினொன்றாம் நூற்பா

திருவருளால் தன்னையுணர்ந்து, பின் தலைவனையுணர்ந்து, 'அவனே தானே' என ஆகிய ஆன்மா, தலைவன் திருவருளை நினைந்து நினைந்து அன்பில் முருகி முருகி அவனடி அடைதலையே குறியாகக் கொள்ளும் என்பதை இந்நூற்பாவில் ஆசிரியர் குறிக்கின்றார்.

ஒரு சிறிய உதவி ஒருவர் செய்தாலும் அதனைப் பெறுவார் 'நன்றி' எனக் கூறுவது 'நாகரிகம்' என்பது நானிலப் பொதுச் செய்தி.

தாய் தந்தையர் செய்த நன்றிக்கு எத்தனை எத்தனை பிறவிகள் எடுத்துத் தொண்டு செய்தாலும் ஈடாகமாட்டாது என்பது நயனறிந்தோர் உரை.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டு; ஆனால் செய்ந்நன்றி கொன்றார்க்கு உய்வில்லை என்பது பொய்யாமொழி.

ஒழுக்கத்தில் தலையாயது 'நன்றியறிதல்' என்பதை ஒழுக்க நூல்கள் சுட்டுகின்றன. இவ்வாறாக, இறைவன் செய்தருளும் நன்றிகள் இவ்வளவு அவ்வளவு என்று வரையறுத்தற் குரியவோ?

எண்ணெய் விளக்கோ ஆவி விளக்கோ மின் விளக்கோ ஆகட்டும், திரி விளக்கோ பொறி விளக்கோ ஆகட்டும், எவ்விளக் காயினும் கைக்காசு செலவிடாமல் கைக்கு வந்துவிடுமோ? அவை ஒளி செய்வதற்கென உரிய செலவு இல்லாமல் முடியுமோ? மாந்தன் படைத்த ஒளி விளக்குகளின் நிலைமை இவ்வாறு இருக்க, இயற்கை தந்த ஒளிவிளக்குகளின் நிலைமை என்ன? கோடி கோடி விளக்குகளை ஒருங்கே கொளுத்தி வைத்தாலும் ஒரு சிறு கோடிக்குக்கூட வாராத பேரொளிப் பிழம்பாம் திங்கள், ஞாயிறு, விண்மீன் ஆகியவை ஒளி வெள்ளப் பாய்ச்சு தலை அறிவோம் அல்லவோ? ஒரு சல்லிக் காசேனும் நாம் செலுத்துவது உண்டோ? 'கெடு(தவணை)' கடந்து விட்டது என்பதற்காகத் தொடர்பைத் துண்டித்தல் உண்டோ? பொறிக் கோளாறு என்று செயலற்றுப் போய்விட்டதுண்டோ? இவ்வியற்கைக் கொடையை எவ்வாறு நெஞ்சார நினைந்து போற்ற வேண்டும்?

ஒருகுட நீர் வேண்டுமானாலும் என்ன பாடு? ஆனால், கொட்டும் அருவிக்கும், கொழிக்கும் ஆற்றுக்கும் நாம் கொடுக்கும் காசென்ன? பொழியும் மழைக்கு நாம் தரும் கூலியென்ன? இயற்கைதரும் குடநீருக்கு ஒரு காசு என்று கணக்கிட்டாலும் எத்தனை எத்தனை கோடியாகக் கட்டணம் செலுத்தவேண்டும்?

இப்படியே இயற்கை வழங்கும் கொடைகளை எண்ணிப் பார்க்கும் நெஞ்சம் இயற்கையின் மேலும், இயற்கையை ஆக்கிய இறைவன் மேலும் எத்தகு பற்றுவைக்க நேரும்? இது போலிப் பற்றுமையோ? பொய்மைப் பற்றுமையோ? இல்லையே!

நிலம் வழங்கிவரும் வளங்கள் எவை எவை? அதன் கொடைக்கும் விளைவுக்கும் எல்லையுண்டோ? தன்னுள் பொதிந்து வைத்துக்கொண்டு காலமெல்லாம் கனிந்து உதவக் கிடக்கும் கருவூலமாம் நிலக்கொடையை முற்றாகக் கண்டுவிட் டோமோ? "இலமென் றசைஇ இருப்பாரைக் காணின் நிலமென் னும் நல்லாள் நகும்" என்னும் பொய்யாமொழி பொய்யாம் நாளொன்றும் உண்டோ? நெடுங்கடல் வாரி வழங்கும் நிறை வளங்களுக்கு எல்லையும் கண்டதுண்டோ? அள்ளி அள்ளியும், அள்ளவும் தொலையா அமுதக் கலனன்றோ கடல்! அக் கடலுக்கும் அந்நிலத்திற்கும் வரியாக அரசுக்குச் செலுத்துவதை அன்றி இயற்கைக்குச் செலுத்தும் கட்டணம் என்ன? நல்லதன் நலனைக் கண்டு நயக்கும் வேளையில், நன்றியுணர்வேனும் வேண்டாவோ?

எத்தனை எத்தனை எழில்! எத்தனை எத்தனை மலர்! எத்தனை எத்தனை சுவை! எத்தனை எத்தனை இசை! எத்தனை எத்தனை இன்பக் கொள்கலம் இவ்வுலகம்! இவற்றைப் படைத்த முதல்வனை நன்றியோடு நினைவு கூர்தல் கடனே யன்றோ? பேரருள் பெருக்காகத் திகழும் இறைவன்மேல் பேரன்பு கொள்ளவுமோ கூடாது?

இவற்றையெல்லாம் நினைகூரச் செய்கிறார் மெய் கண்டார். அவ்வளவோ?

குழந்தை, நிலவைக் காணவேண்டும்; காக்கையைக் காணவேண்டும்-காட்டுகிறாள் தாய். விரலை நீட்டி-கையைக் காட்டிக் காட்டுகிறாள். முகத்தைத் திருப்பித் தொலைக்காட்சித் தேர்ச்சியாளன் தொலைக் காட்சிப் பொறியில் கண்டு காட்டுவது

போல் காட்டுகிறாள்! விழியைத் துலக்கி விளக்கிக் காட்டுகிறாள்! இப்படிக் காட்டுகிறானே இறைவன், ஆன்மாவுக்கு! அவ்வான்மா அறிவறியா நிலையில் அறியா தொழியினும், அறிவறிந்த போதேனும் அவன் காட்டிய திறத்தை அறிந்து 'காதலாகிக் கசிந்துருக வேண்டும்' அல்லவோ!

"மூடமா-மடமா-ஆயின் என்ன? என்னால் இயன்ற மட்டில் அறிவுறுத்துவேன். வேண்டா வேண்டா என்று விட்டு விலகிப் போனாலும் விட்டுவிடாமல் விடாப்பிடியாய் அறிவுறுத்தியே தீர்வேன்" என்னும் அருளாசிரியன்போல, இறைவன் அறியாதன வெல்லாம் அறிவுறுத்திக் காட்டிய அருமையை நினைந்து நினைந்து 'காதலாகிக் கசிந்துருகுதல்' கட்டாயம் வேண்டும் அல்லவோ!

**காணும் கண்ணுக்குக் காட்டும் உளம் :**

கண்பார்த்தது என்கிறோம்; கண்ணோ பார்த்தது? ஆம்! கண்ணே பார்த்தது; அடுத்தும் வினா? கண்மட்டுமா பார்த்தது? இல்லை! கண்மட்டுமே பார்க்குமானால், உயிரிலா ஒருவனுக்கும் கண் உண்டுதானே? அவன் அக்கண்ணால் காணவேண்டும் அல்லவோ? காண முடியவில்லையே! அதனால் என்ன புரிகின்றது? கண்ணொடு சேர்ந்து உயிரும் காண்கிறது. உயிர் காட்டவே கண் காண்கிறது என்பது விளக்கமாம். இவ்விளக்கம் ஏற்பட்டால் மேலும் ஒரு விளக்கம் ஏற்படும் கண்டதைக் கொண்டுதானே காணாததை விளக்கவேண்டும்!

**காண உள்ளத்தைக் கண்டு காட்டல் :**

காணும் கண்ணுக்குக் காட்டும் உயிர் என்றால், அவ் வுயிரைக், கண்ணுக்குக் காட்டுமாறு செய்தது எது? அவ்வுயிரைக் காட்டுமாறு ஏவியதும், உடனிருந்து நடாத்தியதும் இறையே அன்றோ? இன்னும் சொன்னால் கண்ணுக்குக் காட்டுவதும் உடனிருந்து காண்பதும் உயிரறிவு என்பது மெய்யாவதுபோல், அவ்வுயிரறிவுக்குக் காட்டுவதும் உடனிருந்து காண்பதும் இறையறிவே அன்றோ! இறையறிவு உயிரறிவுக்கு உணர்த்த, உயிரறிவு கண்ணுக்குக் காட்டுகிறது என்றால் அவ்விறைமேல் எத்தகு பற்றுமை கொள்ளவேண்டும்?

**அயரா அன்பு :**

இறைவன்மேல் வைக்கவேண்டிய பற்றுமையை 'அன்பு' என்றார் மெய்கண்டார். எல்லாம் வல்ல அருளாளனுக்கு, உயிர்கள் அன்பேனும்-தொடர்புடையாரிடத்துக் காட்டும் அன்பேனும் -

*காட்டவேண்டாவோ என்றார். அவ்வன்பும் மாறும் அன்பாய்-மறக்கும் அன்பாய்-பட்டும் படாதும் தொட்டும் தொடாதும் அமைந்த அன்பாய் இருத்தல் கூடாதெனை, 'அயரா அன்பு' கொள்ளவேண்டும் என்றார்.*

*அன்பு செலுத்துதல் உயிரின் கடப்பாடு என்பதை வலியுறுத்துதற்கு மட்டுமன்றி, தன்னலத்தாலுங்கூட அன்பு செலுத்துதல் கட்டாயம் வேண்டும் என்பாராய்க் "காண உள்ளத்தைக் கண்டு காட்டலின் அயரா அன்பு செலுத்துக" என்றார்.*

*வேள்வித்தீயில் உயிரிகளின் உடலை அறுத்து ஊனையும் குருதியையும் சொரிந்து நோற்பர் உண்டே! அந்நோன்பைக் காட்டிலும், தன் என்பையே விறகாக்கித், தன் இறைச்சியையே அறுத்து, கனலில் இட்டுப் பொன்போல் பொரியுமாறு ஒருவன் வறுத்தான் ஆயினும், என்ன? இறைவனைக் காண்பனோ? காணான்! அவன் 'அன்போடுருகி அகங்குழைவானே' யானால் இறைவனைக் கண்டடைவான் என்பார் திருமூலர். மூலர் வழிவரு மூலனாராம் மெய்கண்டார். அந்நுட்பம் அறிந்தே, 'அயரா அன்பின் அரன்கழல் செலுமே' என்றார்.*

*அசைவு காணும் அன்பால் நட்பையும் காதலையுமே நிலைப்படுத்த முடியாது என்றால், இறையடியையோ அசையும் அன்பால் அடைந்துவிட முடியும்?*

*நூற்பா வருமாறு :*

காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே.

*"காட்சியையுடைய கண்ணுக்கு ஒன்றைக் காட்டித், தானும் காண்கின்ற உயிரைப்போல, ஒன்றைக் காணுமாறு அவ்வுயிர்க்கு இறைவன் காட்டியும் கண்டும் நிற்றலால், உயிர், மறவாது போற்றும் அன்பால் இறைவன் திருவடியை அடையும்" என்பது இதன் பொருளாம்.*

*உயிர் அயரா அன்பால் இறையடி அடையும் என்று வழிகாட்டிய ஆசிரியர், அயரா அன்பு கைவரப்பெறும் வழியை அடுத்த நூற்பாவில் அருள்கிறார்.*

# பன்னிரண்டாம் நூற்பா

இறைவன் திருவடி எத்தகையதெனச் சுட்டி, மலத்தின் தன்மை இன்னதெனக் காட்டி, பக்குவமுற்ற ஆதன் செயற்பாடு இன்னதென வரையறுத்து இந்நூற்பாவொடு நூலை நிறைவிக்கிறார் ஆசிரியர். மலநீக்கமுற்ற உயிர் இலங்கறிவு, வாலறிவு, விளங்கறிவு எனப்படும். மெய்யறிவுக்கு இடமான இறைவனை ஒன்றுங்கால் அவ்வறிவின் சாயலாய் அன்றோ ஒன்றும்; 'பனிமலை சார்ந்த பொல்லாக் கருநிறக் காக்கையும் பொன்னிறமாம்' என்று புகல்வரே! இறையடித் தண்ணிழல் எய்திய ஆதன் எத்தகு தூய பளிங்கு வண்ணமுறுவன் என்பதை நூற்பாச் சொல்லமைதி, நடையமைதியாகிவற்றாலே ஆசிரியர் காணவைக்கும் திறன் எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் இன்பஞ் சுரப்பதாம்.

**செம்மலர் நோன்தாள் :**

இறைவன் திருவடியைச் சுட்டும் ஆசிரியர் **'செம்மலர் நோன்தாள்'** என்றார். செந்தாமரை மலர் போன்றது செம்பொருட் பெருமான் திருவடி. அவனே சிவன்; சீவப்பன்; சேய்; சேயோன்; அரன்; அவன் முழுதுருவும் சிவப்பெனின் அடிமட்டும் வேறு நிறமாமோ? 'தாமரை புரையும் காமர் சேவடி' என்றாரே பெருந்தேவனார் (குறுந். கட). இவண் நிறத்தன்மை கருதியது மட்டுமன்று; குணத்தன்மையும் கொண்டது செம்மை!

பூ என்பதும் மலர் என்பதும் 'மென்மை' என்னும் பொருள் தரும் சொற்கள். 'பூவாக இருக்கிறது' என்றும் 'மலரினும் மெல்லியது' என்றும் கூறுதல் அறிக. செம்மலர் ஆகிய இறைவன் திருவடி மென்மையானது என்றவர், அதற்கு வன்மையே இல்லையோ என்பார்க்கு அதன் வன்மையைச் சுட்டுதற்கு 'நோன்தாள்' என்றார். நோன்மை - வலிமை; தான் - அடி; மென்மைக்கு மென்மை வன்மைக்கு வன்மை!

வன்மை மென்மை என்பவை முரண்பாடுகள். வன்மையில் மென்மையும், மென்மையும் வன்மையும் இருத்தல் அருமை. ஆனால் இல்லை என்று சொல்லிவிட முடியுமோ? பட்டவுடன்

துகள் துகளாக நொறுங்கிப்போகும் வயிரம், கண்ணாடியில் பட்டவுடன் அது நொறுங்கிப்போகின்றதே! மெலிதினும் மெலிய துகிலாடை வலிதினும் வலிதாக உழைக்கின்றதே! அஞ்சி நடுங்கும் மயில் படையையும் நடுங்கவைக்கும் பாம்பைக்கண்டு அஞ்சாது தாக்கி அதனை அஞ்சச் செய்கின்றதே! வேலை செய்தற்கு மென்மையாம் தேக்கு எத்தகு வன்மையானது! மென்மையில் அமைந்த வன்மை இவையல்லவோ?

இனி இறைவன் படைப்பு எல்லாம் 'அவன் அவள் அது' என்னும் முச்சுட்டால் உரைத்து முடிவன அல்லவோ?

'அவன்' வன்மையும், 'அவள்' மென்மையும் இணைந்து விளங்கும் ஈரடிகள், ஒன்று வன்மையாய் ஒன்று மென்மையாய்ச் சுட்டல் தகவே அன்றோ! 'பெண்ணுரு ஒருதிறன்' ஆகிய பெம்மான் திருவடியல்லவோ அவை? ஆதலால் மென்மையும் வன்மையும் அருளி உய்ப்பன எனலாமே! இரண்டு ஆற்றலும் இல்லாமல் உலகம் இல்லையே!

இனி, அவன் என நூலைத் தொடங்கிய ஆசிரியர், நூலின் இறுதியில் அவளைச் சுட்டுமுகத்தான் செம்மலர் மெல்லடியைச் சுட்டி, அடுத்து நோன்தாளைக் குறித்தாரோ? அவ்வாறாயின் மிகத் தகவேயன்றோ!

**சேரல் ஒட்டா அம்மலம் கழீஇ :**

இறைவன் 'செம்மலர்' நோன்தாளை ஆதன் சேரல் ஒட்டாது செய்வது எது? மலம்! மலம் என்பதற்கு 'அம்' என்னும் அடைமொழி தருவானேன்? அழகிய மலம் என்பதற்கோ? இல்லை-அம் என்னும் சுட்டு, அதன் தொல்பழந் தொடர்பு குறித்து வந்தது.

ஒரு கலத்தில் ஒரு பொருள் இருக்கிறது. அப்பொருள் கலத்தோடு ஒட்டிக் கலத்தோடு கலமாக இருந்த பொருள். அதனை முற்றாக எடுத்தபின்னும் கலத்தில் சிறிது சிறிது துகள் ஒட்டிக் கொண்டிருக்கும் அல்லவோ! ஒட்டிக்கொண்டிருப் பதைத் துடைத்து எடுத்தாலும் நுண்துகளும், மணமும் இல்லாமல் ஒழியாவே? பின்னும் கலத்தை நீர்விட்டு நன்றாகக் கழுவுதல் வேண்டும்! கழுவுதலும் ஒருமுறை கழுவுதல் போதாது; பல்கால் கழுவிக் கழுவித் தூய்மைபடுத்துதல் வேண்டும். அவ்வாறு கழுவாக்கால் கலத்தூய்மை கெடும். அவ்வாறே, உயிர்க்கு மலம் அகன்ற காலையும் அதன் எச்சமும் இல்லாமல் பல்கால் பன்முக முயற்சியால் மலம் இருந்த இடமும் தடமும் இல்லாவண்ணம்

அகற்றல் வேண்டும். இவற்றைத் தெளிவிக்க விரும்பும் ஆசிரியர் 'கழீஇ' என்னும் அளபெடைச் சொல்லாட்சியைப் படைத்துக் காட்டுகிறார். எடுத்தல், பொறுக்கல், துடைத்தல், கழுவல் என்பவை ஒன்றின் ஒன்று தூய்மையுறுத்தலில் விஞ்சிச் செல்லல் அறிக. பல்கால் கழுவல் என்பது சுட்டும் 'கழீஇ' என்பதோ மேலும் விஞ்சல் கொள்க.

**அன்பரொடு மரீஇ :**

முன்னை நூற்பாவிலேயே 'அயரா அன்பைச்' சுட்டினார் ஆசிரியர். 'அன்பலால் துணையும் இல்லை ஐயன் ஐயாறனார்க்கே' என்றார் நாவரசர்! அன்பே துணையாய் அமர்ந்த அரனடி அடைய, அன்பரொடு மருவுதல் வேண்டும் என்பது சொல்லா மலே அமையும். அயரா அன்பு ஆதனுக்கு வேண்டும் என்றவர், அன்பரொடு மருவுதலும் வேண்டும் என்றார் இந் நூற்பாவில்.

**மருவுதல் கலத்தல்;** நினைவிலும். சொல்லிலும், செயலிலும், கூட்டுறவிலும், வழிபாட்டிலும் எல்லாம் எல்லாம் அன்பரொடு மருவுதல் வேண்டும் என்றார். அக்கலப்பின் அருமை தோன்றுமாறே 'மருவுதல்' என்று கூறினார். இரண்டற்ற நிலையில் இயைவதே மருவுதலாம். 'மருவு இனிய காதல் மனையாள்' என்பதில் மருவுதல் பொருளருமை புலப்படும்.

'மரு', மணம் என்னும் பொருளது. மருதோன்றி, மருக் கொழுந்து மருந்து என்பவற்றில் மணமுண்டு. மருமகன், மருமகள், மருவீடு என்பவற்றில் மணம் உண்டு. இங்கே சொல்லிய கலப்பு 'மணக்கலப்பு;' அடியார் அன்பர் இடத்து மருவுதலோ 'மனக்கலப்பு.'

அன்பின் திறமும், அன்பரொடு மருவுதல் திறமும் ஒருங் கறிந்த வள்ளலார், அன்புருவாம் இறைவனை அன்பாலேயே அகப்படுத்த இயலும் என்பதைத் தெள்ளமுதம் அள்ளூறிச் சுரப்பது போலத் தீந்தமிழில் பாடினார்:

"அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே!
அன்பெனும் குடில்புகும் அரசே!
அன்பெனும் வலைக்குள் படுபரம் பொருளே!
அன்பெனும் கரத்தமர் அமுதே!
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே!
அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே!

அன்பெனும் அணுவுள் அமைந்தபே ரொளியே!
அன்புரு வாம்பர சிவமே!

என்பது அது.

கழுவுதலும் பல்கால் வேண்டும் என்ற ஆசிரியர், அன்ப ரொடு மருவுதலும் இடையீடின்றி வேண்டும் என்பாராய் 'மரீஇ' என அளபெடுத்தோதினார். கழுவுதல் 'கழீஇ' ஆயது; மருவுதல் 'மரீஇ' ஆயது!

அன்பர், அன்பரொடு மருவுதல் ஏன்? இனம் இனத்தோடு சேர்ந்திருத்தல் இயல்பே அல்லவோ? "சிற்றினம் அஞ்சும் பெருமை" என்ற வள்ளுவர்தாமே, "பெரியாரைத் துணைக் கோடல்" அருளினார்.

உணர்வால் ஒன்றுபடுதலுடன், உடையாலும் நடையா லும் ஒருமை காட்டுதல் உலகியல்! படைத்துறைக்கெனத் தனியுடை, தனிநடை! காவல்துறைக்கெனத் தனியுடை, தனிநடை! இவற்றைக் காணும் நாம், மெய்கண்டார் 'அன்பரொடு மரீஇ' என்பதன் பொருளை அறிவதுடன், மேலே சொல்லப்புகும் பொருளருமையையும் அறிந்துகொள்ளக்கூடும்.

**மாலற நேயம் மலிந்தவர் வேடமும் :**

மால் = மயக்கம்; அற = நீங்க; நேயம் மலிந்தவர் = இறைபணியில் தோய்ந்த துறவோர்; வேடம் = திருக்கோலம்.

அசைவு என்பது சிறிதேனும் இல்லாமல் இறைபணியில் தோய்ந்த அடியார் திருவேடமும் என்பது இதன் பொருள்.

வேடத்திலே 'தவ'வேடமும் உண்டு; 'அவ'வேடமும் உண்டு. ஆயினும் அடியார் திறம் வேடத்தை மதித்து, அவ் வேடத்திற்கு உரியவன் உள்ளீட்டைப்பற்றிக் கருதாமல், இறைமை அவனிடத்துத் தங்கியுளதாகக் கொண்டு வழிபடுவதே யாம் என்றார்.

'மெய்ப்பொருள் வேந்தன்' வரலாற்றுச் செய்தி இது: பொய்த் தவ வேடத்தான் புக்கபோதும், பொருந்தாச் செயல் செய்தபோதும், தவவேடமெனத் தாம் எண்ணிய எண்ணம் திறம்பாமல் வெற்றி கொண்டவர் அவர்! ஆட்சித் திறத்திலே வெற்றி கண்ட அவர், இறைவன் அடிமைத் திறத்திலும் வெற்றி கண்டவர்.

'கூடா ஒழுக்கம்' என்னும் அதிகாரத்திலே துறவோர் போலி வேடங்காட்டிச் செய்யும் புன்மைகளைக் கண்டித்தார்

வள்ளுவர். அவர், ஆய்ந்து அறங்கூறி நெறிப்படுத்தவந்த திறவோர். இவரோ, இறையடிப்பேறு எய்தும் வழி கூறவந்தவர். இவருக்கு, அவ்வாய்வு கருத்தன்று; ஆகலின் 'மாலற நேயம் மலிந்தவர் வேடம்' என்றார்.

எனினும், எவரையும் நம்பி ஏமாறுதல் கூடாதே என்று அருளுள்ளம் கொண்டோராய். மிகக் கருத்தாகப் பொய் வேடத்தாரை விலக்குமுகத்தான் "மாலற நேயம் மலிந்தவர் வேடம்" என்றார். அவரிடை 'வஞ்ச மனத்தான்' செய்கை வந்தொளியாதன்றே!

இறைவன் அடியாரை, இறைவனாகக் கொள்ளவேண்டும் என்பது சிவநெறிக்கு மட்டுமோ உண்மைச் செய்தி! உலகச் சமயங்கள் எல்லாவற்றுக்கும் பொதுச் செய்தி அல்லவோ! மெய்கண்டார். சிவநெறிச் சார்பாளர் என்னும் ஒன்றைக் கருதாமல், அவர்தம் கருத்தை மொழிபெயர்த்தால் எச்சமயத் தார்க்கும் பொருந்தும் பொதுமைநலம் உடையதேயன்றோ! ஆகலின் சமயச் சால்பையே அருளினார் என்பது சாலும்.

இனி, அடியார் கூட்டுறவும், அடியார் வேடமும் குறித்த ஆசிரியர், தெய்வத்திருக் கோயில்களையும் சுட்டி நூலை நிறைவு செய்வாராயினார்.

**ஆலயம் தானும் அரனெனத் தொழுமே :**

ஆலயம் = திருக்கோயில். திருக்கோயிலும் திருமதிலும் திருக்கோபுரமும் கல்லும் மண்ணும், மணலும், மரமும், செங்கலும், சுண்ணமும், வண்ணமும் என்று கருதுவார் கருதுக. ஆயின், ஆக்கப்பட்ட பொருளால் அவை அத்தகையவாயினும் அவற்றை ஆக்கியோர், ஆக்கத் தூண்டினோர், ஆக்கியதன் பயன் கொள்வோர் கல்லும் மண்ணும் பிறவும் என்றோ கருதுகின்றனர்? இறைவன் என்றே கருதி 'இறைப்பணி' தலைப்பட்டு நின்றனர். ஆதலால் "ஆலயத்தையும் அரனென்றே வழிபடுக" என்றார். திருக்கோபுரம் கண்ட அளவானே, தொழுதெழுந்த தொண்டர் பெற்றியைப் பெரிய புராணத்து அறிக.

பிறந்த மண்ணைப் பிரிந்து வேற்றூர் சென்ற மங்கை ஒருத்தி, பிறந்த மண்ணில் காலடி வைக்கின்றாள். வைத்தவுடன் வீழ்ந்து வணங்குகிறாள்! இது நேரில் கண்ட காட்சி; அவள் மண்ணை மண்ணாக மட்டுமோ நினைத்தாள்? அவள் அதில் தெய்வத் திருக்கோலம் கண்டல்லவோ வணங்கினாள்!

*"சீரடியார் பிறந்து வளர்ந்த இம் மண்ணிலே காலடியும் படுதல் ஆகாது" என்று புறம்போய்நின்று வழிபட்ட அடியார் வரலாறு பெரியபுராணத்தில் காணப்படுவதேயன்றோ! அவர் மண்ணை மதித்த மதிப்பு அத்தகையது. "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும், நற்றவ வானினும் நனிசிறந் தனவே" என்னும் எண்ணம், தெய்வநிலை எண்ணமேயாம்.*

*வாழ்வாங்கு வாழ்ந்தவராக மதிக்கப்பெறும், பெருமக்கள் வாழ்ந்த திருமனையை, அவர்தம் நினைவுக்குறியாக்கி, அவர்தம் புகழ் உடலாக அதனைப் போற்றி வருவதில் பெருமுனைப்புக் காட்டும் இந்நாள் நடைமுறையை எண்ணுவார், இறைவன் கோயில் கொண்ட இடத்தை இறைவனாகக் கருதி வழிபடுதல் புதுப் பொருளாகவோ, புதுமைப் பொருளாகவோ கொள்ளார்.*

*அன்பராதல் அன்பரொடு மருவுதல் (அடியார் குழாத்து உறைதல்) அடியாரையும் - ஆலயத்தையும் இறையாகவே கொண்டு வழிபடுதல் என்பவை ஒன்றின் ஒன்று உயர்ந்து சென்று ஒருபேரிறையோடு ஒன்றி உடனாந் திருவை அருளும் என்பதை உய்வார் உய்யும் வண்ணம் மெய்கண்டார் உரைத்தருளி நூலை நிறைவித்தார்.*

***"யாம்பெற்ற இன்பம் உலகும் பெறுக"** என்று வழி காட்டுவது பேரருளாளர் நிறைபெரும் இறைபணி யாம் ஆதலால் என்க!*

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

# நூல் விவர பட்டியல்


**1** **தொகுதி - 1**

1. வழக்குச் சொல் அகராதி

2. வட்டார வழக்குச் சொல் அகராதி

**2** **தொகுதி - 2**

1. இணைச் சொல் அகராதி

2. இலக்கிய வகை அகராதி

**3** **தொகுதி - 3**

1. சொற் பொருள் நுண்மை விளக்கம்

**4** **தொகுதி - 4**

1, இலக்கண அகராதி (ஐந்திலக்கணம்)

**புறநானூற்று கதைகள்**

**5** **தொகுதி - 5**

1.. புறநானூற்றுக் கதை 1

2. புறநானூற்றுக் கதை 2

3. புறநானூற்றுக் கதை 3

4. புறநானூற்றுக் கதை 4

5. புறநானூற்றுக் கதை 5

6. புறநானூற்றுக் கதை 6

7. புறநானூற்றுக் கதை 7

8. புறநானூற்றுக் கதை 8

9. புறநானூற்றுக் கதை 9

10. புறநானூற்றுக் கதை 10

11. அந்த உணர்வு எங்கே

12. பண்டைட் தமிழ் மன் றங்கள்

13. பெரும்புலவர் மூவர்

6 **தொகுதி - 6**

**திருக்குறள் ஆராய்ச்சி - 1**

1. வள்ளுவர் வழியில் நல்ல மாணவராக

2. வள்ளுவர் வழியில் நல்ல ஆசிரியராக

3. வள்ளுவர் வழியில் நல்ல கணவனாக

4. வள்ளுவர் வழியில் நல்ல மனைவியாக

5. வள்ளுவர் வழியில் நல்ல பெற்றோராக

6. வள்ளுவர் வழியில் நல்ல மக்களாக

7. வள்ளுவர் வழியில் நல்ல இல்லறத்தராக

8.வள்ளுவர் வழியில் நல்ல துறவராக

9. வள்ளுவர் வழியில் நல்ல ஊழ்

10. வள்ளுவர் வழியில் குறளாயட் திருமண முறையும் விளக்கமும்

11. வள்ளுவர் வழியில் நல்ல தோழராக

12. வள்ளுவர் வழியில் நல்ல தொழிலராக

13. வள்ளுவர் வழியில் நல்ல ஆட்சியாராக

7 **தொகுதி - 7**

**திருக்குறள் ஆராய்ச்சி - 2**

14. வள்ளுவர் வழியில் நல்ல அலுவலராக

15. வள்ளுவர் வழியில் நல்ல செல்வராக

16. வள்ளுவர் வழியில் நல்ல சான்றோராக

17. வள்ளுவர் வழியில் வினை

18. வள்ளுவர் வழியில் பிறப்பு

19. வள்ளுவர் வழியில் வறுமையும் வளமையே

20. வள்ளுவர் வழியில் தவம்

21. மங்கல மனையறம்

22. ஒரு குறள் ஒரு நூல் 1

23. ஒரு குறள் ஒரு நூல் 2

24. ஒரு குறள் ஒரு நூல் 3

25. ஒரு குறள் ஒரு நூல் 4

26. நினைக்கும் நெஞ்சம்

8 **தொகுதி - 8**

1. திருக்குறள் கதைகள் 10

9 **தொகுதி - 9**

1. திருக்குறள் கட்டுரைகள் 10

**தனி நூல்கள்**

10 **தொகுதி - 10**

1. காக்கைப் பாடினியம்

11 **தொகுதி - 11**

1. களவியற் காரிகை

12 **தொகுதி - 12**

1. தகடூர் யாத்திரை

13 **தொகுதி - 13**

1. யாப்பருங்கலம் (பழைய விருட்தியுடன் )

14 **தொகுதி - 14**

1, தமிழ்க் கா.சு. கலைக்களஞ்சியம்

15 **தொகுதி - 15**

1. தமிழ் வளம் சொல்

16 **தொகுதி - 16**

1. தமிழ் வளம் - பொருள்

**17** **தொகுதி - 17**

1. புறட்திரட்டு

**18** **தொகுதி - 18**

1. வாழ்வியல் வளம்

**19** **தொகுதி - 19**

1. தமிழர் வாழ்வியல் இலக்கணம்

**20** **தொகுதி - 20**

1.கல்விச் செல்வம் 2.இருசொல் அழகு 3.தனிப்பாடல் கனிச்சுவை 4.பொதுமக்கள் பேச்சில் பொய்யாமொழி

# குறிப்புகள்

தமிழகம் அறிந்த தமிழறிஞர். மாணவர், இளைஞர், மற்றவர் என்று அனைத்துத் தரப்பினர்க்கும் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர். தமிழ் என்றது தமிழத்தை. அறிஞர்க்கும் அவரது நூல்கள் தேனடைகள். வள்ளுவத்தை வாழ்வியலாக்கித் தமிழியத்தைத் தழைத் தோங்கச் செய்பவர்.

ஐம்பத்தெந்து ஆண்டுகளாக அரும்பணியாற்றி எண்பதில் நுழையும் இளைஞர்; ஓய்வறியா உழைப்பாளர். தமிழால் அவரும் அவரால் தமிழும் வளர்வது நம் பெருமை. தமிழுக்கு எத்தனை முகங்கள். ஆயிரம் முகங்களில் ஐயா ஒருமுகம்; தமிழ் வளர்க்கும் திருமுகம், தன்னைத் தாழ்த்திக் கொண்டு அவரே அவரைப் 'புல்' என்றாலும் அவர் புல் அல்லர்; புலி, தமிழ்ப்புலி இலக்கியப் புலி; இலக்கணப் புலி.

தமிழர் பற்ற வேண்டிய புளியங்கொம்பு இளவழகன் பற்றியுள்ளார். தமிழ்மண் செழிக்கும்!

– ந. அரணமுறுவல்

2, சிங்காரவேலர் தெரு
தியாகராயர் நகர்
சென்னை - 600 017